T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: XLII No: 1 and 2

FEB. 11th and 12

1983


211,31 N83
N83-42.1-2
125983

11—X—1983

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | i—vi |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவல்கள் .. .. .. | vii |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர் பட்டியல் (தொகுதிகள் உட்பட அகர வரிசையில்) .. .. .. | viii—xvi |
| 1. இரங்கல் குறிப்பு— | |
| முன்னாள் உறுப்பினர் திரு. ரா. கனகசபை மறைவு.. .. .. .. | 1—2 |
| 2. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 2—40 |
| 3. தகவல் கோரல்— | |
| உறுப்பினர் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள் | 40 |
| 4. உரிமைப் பிரச்சினை— | |
| ஆளுநர் உரையின் மூலம் பேரவைக்குத் தவறான தகவல் அளிக்க முயற்சி .. | 41—42 |
| 5. ஒழுங்குப் பிரச்சினை— | |
| ஒழுங்குப் பிரச்சினை—எழுப்ப அனுமதிப்பது | 42, 45, 49 |
| 6. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| ஏழுகிணறு காவல் நிலையத்தாரால் கைது செய்யப்பட்ட ஒருவர் மரணம் .. | 43—45 |
| 7. கவன ஈர்ப்பு— | |
| தூத்துக்குடி மாவட்ட தலைமை மருத்துவமனை அறுவை சிகிச்சை நிலையம் மூடப்பெற்றிருப்பது .. .. | 49—51 |
| 8. அறிக்கை அளித்தல்— | |
| மதிப்பீட்டுக் குழு .. .. .. | 52 |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## Governor of Tamil Nadu.

Thiru S. SUNDAR LAL KURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1, *Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.*

2. *Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)*—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps. Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN, (Minister for Electricity. Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY. (Minister for Rural Industries) Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue) Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments) Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM. (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agrtculture), Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIAN, (Minister for Co-operation and Law) Law, Courts, Prisons, Legislation on Weights and Measures. Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P, KULANDAIVELU. (Minister for Local Administration), Municipal Administration Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health) Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport) Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works and Khadi) Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports Public Works Department and Establishment matter relating to Public Works Department.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi-Dravidar Welfare, Stationery, and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத்தலைவர் ;

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

** மாற்றுத்தலைவர்கள் பட்டியல்.

1 திரு. க. பாலசுப்பிரமணியன்.

2 திரு. ஆர். ப. கோபாலன்

3 திரு. ப. பொன்னுரங்கம்.

4. திருமதி. தா. இராசம்பாள்

5 திரு. கு. ராமணி.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. கி.மு. அழகர்சாமி, பி.ஏ, பி.எல்.

துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.

திரு. ரா. பாலை, பி.ஏ.

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ பி.ஜி.எல்.

திரு. ா. சீனிவாசன் பி. எஸ். சி. (நமு அலுவலர்.)

திரு. வி. சீநாராமன், பி. காம்., பி.ஜி.எல். (சார்புச் செயலாளர்)

திரு. பெ. பள்ளிக்கொண்ட பெருமாள், பி. ஏ., பி. எல். (சார்புச் செயலாளர்.)

திரு. செ.சு. ஜானகிராமன், பி.ஏ, பி.எல் (சார்புச் செயலாளர்)

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி. கா. (சார்புச்செயலாளர்.)

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ. (சார்புச் செயலாளர்.)

திரு. கே. தியாகராஜன் பி.ஏ. பி. எல். (எஸ்டேட் அலுவலர்)

திரு. பி. கோதண்டராமன் (பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.)

திரு. சி. பாலசுப்பிரமணியன் (தலைமை நிருபர்). (விவாதப் பதிப்பாளர்.)

திரு. வி. இராமச்சந்திரன், எம். ஏ, எல். எல், பி.

---

*21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

** 27—1—1983 அன்று நியமனம் செய்யப் ^

8. மாண்புமிகு டாக்டர். கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்) — வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்

9. மாண்புமிகு திரு. ஆ. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்) சட்டம் நீதிமன்றங்கள் சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல் நிறுவனங்கள் பதிவு, கடன் வாங்கல் மீதான நிவாரண சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்) நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் நிவாரணம், பூமிதானம் கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) — தொழிலாளர் வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம் புள்ளிவிவரங்கள் தமிழ்நாடு, குடிநீர்வடிகால் வாரியம் நகரஅமைப்பு. இடவசதிக்கட்டுப்பாடு.

12 மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) —மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர் பாசனத்துறை அமைச்சர்) —வேளாண்மைப் பணி. கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத்திட்டங்கள், வக்ஃப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்)— அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக்கூர்திகள் சட்டம். துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு (தொழில்துறை அமைச்சர்)— பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள் நெசவாலைகள்,

16. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுபணித்துறை அமைச்சர்)-கதர், மது அனுமதிசீட்டு வழங்கல், நீங்கலாக மது விலக்கு பயண இசைவுச் சீட்டு பொதுப்பணித் துறை மற்றும் பொதுப் பணித் துறை அலுவலகள் சம்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுது பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சகம், தகிதக்க முடியாத, மலைவாழ்பழங்குடியினர் பிணைத்தொழிலாளர், வேலைவாய்ப்பு பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூகநலத்துறை அமைச்சர்)— மகளிர் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம் கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அநாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம் சீர்திருத்த நிர்வாகம்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை **உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர்ப் பட்டியல்.**

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 1. அங்குசாமி திரு. ச. | திருவாடானை |
| 2. அண்ணாதாசன் திரு. எம். | திருவரும்பூர் |
| 3. அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4. அப்பாதுரை, திரு. மு. | ஓட்டப்பிடாரம் (செ.வ) |
| 5. அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6. அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 7. அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ.) |
| 8. அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 9: அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 10. அருணகிரி, திரு. இரா. | திருப்புத்தூர் |
| 11. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ) |
| 12. அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13. அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 14. அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15. அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17. ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18. அறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 19. சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்—2 |
| 20. ஆறுமுகம், திரு. க. | அரியலூர் |
| 21. அனூர் ஜெகதீசன், திரு. பு.கோ. | செங்கல்பட்டு |
| 22. இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 23. இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 24 இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 25 இராசரத்திளம், திரு. து. | பூந்தமல்லி |
| 26 இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 27 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 28 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 29 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 30 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 31 | இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 | இராமச்சந்திரன், திரு கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 | இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 34 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி. ந. | செஞ்சி |
| 35 | இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 36 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 37 | இராமசுப்பிரமணியன் திரு. இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 39 | இராமலிங்கம், டாக்டர். கே.பி. | இராசிபுரம் |
| 40 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41 | இராஜசேகரன், திரு. வே. | இராதாகிருஷ்ணநகர் |
| 42 | இராஜாராம்நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43 | இராஜேந்திரன், திரு. எஸ்.எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 45 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 46 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செவ) |
| 49 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 | கணபதி, திரு. கே. ஆ. | சிதம்பரம் |
| 52 | கணேசன், திரு. இ. | எடப்பாடி |
| 53 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 54 | கந்தசாமி, திரு. கா.வே. | கிணத்துக்கடவு |
| 55 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 56 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 57 | கருணாநிதி, டாக்டர். மு. | அண்ணாநகர் |
| 58 | கருப்பசாமிப்பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 | கலித்தீர்த்தான், திரு. கோ. | சங்கராபுரம் |
| 63 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ. வ.) |
| 64 | கலையரசன், திரு. நன்னிலம். அ. | நன்னிலம் (செ. வ.) |
| 65 | காளிமுத்து, டாக்டர், கா. | திருப்பரங்குன்றம் |
| 66 | கிட்டப்பா, திரு. எஸ். | மாயவரம் |
| 67 | கிருஷ்ணசாமி, திரு. கா.கோ. | காங்கேயம் |
| 68 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 69 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டி மடம் |
| 70 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 71 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்—1 |
| 72 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன் சத்திரம் |
| 75 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி, (செ.வ.) |
| 76 | குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 77 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 78 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 81 | அமிர்தராஜ், திரு. (வெற்றிடம்) | திருச்செந்தூர் |
| 82 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 | கோபால கிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |

| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 85 | கோமதிசீனிவாசன், திருமதி | வலங்கை (செ.வ.) |
| 86 | கோவேந்தன், திரு. எம்.ஆர். | பேராவூரணி |
| 87 | கோவைத் தம்பி, திரு. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு.கி. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 93 | சத்தியமூர்த்தி, திரு.வ. | கடலாடி |
| 94 | சந்திரசேகரன், திரு.ஏ. | சோழவந்தான் |
| 95 | சபாபதி, திரு. சி. | ஆரூர் (செ.வ) |
| 96 | சமரசம், டாக்டர். கே. | காவேரிப்பட்டிணம் |
| 97 | சாகுல் ஹமீது திரு. ஏ. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 101 | சிவகாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (செ.வ |
| 104 | சிவப்பெருமாள், திரு. மு. | ஓமலூர் |
| 105 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு.ஏ. | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு.ப. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி திரு. ஆர். | முகையூர் |
| 114 | சுந்தரராஜ், திரு.நா. | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. | |



| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 118 | சுப்பிரமணியன், திரு.மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. அ. | கோபிசெட்டிப்பாளையம் |
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ.) |
| 125 | செல்வராஜன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 131 | சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சி-2 |
| 132 | டாக்டர். திரு. சௌரிராசன், கே. | தி. நகர் |
| 133 | தங்கமணி, திரு. | திண்டிவனம் |
| 134 | தங்கராசு திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி.எம். | கிருஷ்ணராயபுரம் செ.வ. |
| 136 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ.) |
| 138 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 139 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 140 | தாமரைக்கனி திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 141 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாச்சலம் |
| 142 | திருச்சி சௌந்திரராசன், ஆர். திரு. | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருயான், திரு. இரா. | ஏற்காடு (செ. வ.) |
| 146 | திருவேங்கடம், திரு.பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 149 துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 150 துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 துரைராஜ், திரு. பி. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 152 தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 153 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 154 நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 155 நல்லப்பன், திரு. நி. கா | பெருந்துறை |
| 156 நவநீதகிருஷ்ண, பாண்டியன் திரு. ஆர். | ஆலங்குளம் |
| 157 நாச்சிமுத்து, திரு.கே.பி, | மேட்டூர் |
| 158 நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 159 நாராயணன், திரு. பி. ரி. | பவானி |
| 160 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 161 நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 162 பக்கீர் முகமது, திரு. இ. என் எம். | கும்பகோணம் |
| 163 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 164 பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 165 பரமசிவ கவுண்டர், திரு. பி. எம். | பல்லடம் |
| 166 பலராமன், திரு. இல. | போளூர் |
| 167 பழனிசாமி, திரு, சு. | மேட்டுப்பாளையம் |
| 168 பழனிமுத்து திரு. சி. | ஆத்தூர் |
| 169 பழனியப்பன் திரு. கு. பா. | விழுப்புரம் |
| 170 பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 171 பாண்டியன், திரு. பி.எச். | சேரன்மாதேவி |
| 172 பாபு கோவிந்தராஜன், திரு, | கடலூர் |
| 173 பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 174 பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 175 பாலகிருஷ்ணன், திரு.ச, | மொடக்குறிச்சி |
| 176 பாலகிருஷ்ணன், திரு. பி. | சிவகாசி |
| 177 பாலசுப்பிரமணியன் திரு. கு. | சீர்காழி (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 180 பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 181 பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 182 பிரபாகரன், திரு. ஜே. சி.டி. | வில்லிவாக்கம் |
| 183 புருஷோத்தமன், திரு.து. | சைதாப்பேட்டை. சென். |
| 184 பூங்காவனம், திரு. என், ஏ. | காட்பாடி |
| 185 பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 186 பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ.) |
| 187 பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 188 பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 189 பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 190 பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 191 பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 192 மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 193 மலை மாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 194 மாணிக்கம், திரு. எம். எ. | வேதாரண்யம் |
| 195 மாரிமுத்து, திரு. த. | குளத்தூர்.(செ.வ.) |
| 196 முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 197 முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி-1 |
| 198 முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 199 முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 200 முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 201 முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ.) |
| 202 முத்தையா, திரு, இரா. | சேடப்பட்டி |
| 203 முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 முனுசாமி, திரு. மு ப. | பாலக்கோடு |
| 205 மூர்த்தி, திரு. ழி. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 206 மொக்கையன், திரு.பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207 யசோதா, திருமதி. டி. | ஸ்ரீபெரும்புத்தூர்(செ.வ. |
| 208 ரகுமான்கான். திரு. அ | சேப்பாக்கம் |
| 209 ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 210 ரங்கசாமி. திரு. ச. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 211 ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 212 ராம்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 213 ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி |
| 214 ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 215 வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 216 விசயலட்சுமி, செல்வி. வி. | வீரபாண்டி |
| 217 வின்செண்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 218 விஜயசாரதி, திரு. எம் | அரக்கோணம் (செ. |
| 219 விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 220 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 221 விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 222 வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 223 வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 224 வெங்கடசுப்பிரமணியம், திரு. ப | காஞ்சிபுரம் |
| 225 வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 226 வெங்கடேசன், திரு. பி. எம் | பெரணமல்லூர் |
| 227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. | ஆத்தூர் |
| 228 வேணுகோபால், திரு. த. | தண்டாரம்பட்டு |
| 229 வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை |
| 230 ஜெகத்ரட்சன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 231 ஜான் வின்செண்ட், திரு. மு. | நான்குனேரி |
| 232 ஜெயராமன், திரு. வே. ரா. | தேனி |
| 233 ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி | நியமன (உறுப்பினர்) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்

1 மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1983 பிப்ரவரி 11

தை 29, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு, 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்''

நாம் சொல்ல விரும்பும் கருத்துக்களை ஒழுங்குபெறத் தொகுத்து இனிமையாகச் சொல்லக் கூடிய ஆற்றல் உடையோரைப் பெற்றால் இவ்வுலகில் உள்ளோர் தாமே விரைந்து சென்று, அவருடைய கட்டளைகளை ஏற்று, அவற்றின்படி செயல்படுவார்.

## இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் திரு. ரா. கனகசபை மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ரா. கனகசபை அவர்கள் 9—2—1983 ஆம் தேதியன்று மறைந்ததை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கனகசபை அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தெரிந்தெடுக்கப்பெற்று நல்லமுறையில் பணியாற்றி உள்ளார்கள்.

நாடாளுமன்றம் மக்கள் அவையில் 1950 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையும் உறுப்பினராக சிறந்த முறையில் பணியாற்றி உள்ளார்கள். கூட்டுறவு இயக்கத்தில் மிகவும் ஈடுபாடு உள்ள அவர் இம்மாநிலத்திலுள்ள பல கூட்டுறவு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, 9 ஆண்டுகள் தமிழக கூட்டுறவு மைய வங்கியின் தலைவராக சிறந்த முறையில் செயலாற்றி வந்துள்ளார். அண்ணாமலை பல்கலைக் கழகத்திலும் செயலாட்சிக் குழு, தேர்வுக் கழகம் ஆகியவற்றிலும் உறுப்பினராக பணிபுரிந்துள்ளார்.

நாம் அதிகமாக குடும்பநல திட்டத்தை நிறைவேற்றுவதில் ஓரளவு வெற்றிபெற்றதன் காரணமாக 41 என்று இருந்தது 39 ஆக குறைந்துவிட்டது. ஆகவே தான் நாம் அடிக்கடி வற்புறுத்தி, இன்றைக்கும் வற்புறுத்தி வருகிறோம். ஆகவே குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தண்டனைப் போல் இது அமைந்து விடுகிறது. ஆகவே அப்போது 1950லே திட்டத்தை நிறைவேற்றினாலோ 1951-ம் ஆண்டு கணக்குதான் என்றென்றும் இருக்கவேண்டுமே தவிர 41 இடம் என்று 1951-ஆம் ஆண்டிலே ஒதுக்கப்பட்டது என்றால் அந்த 41 இடமே தொடர்ந்து இருந்தால் தான் ஒவ்வொரு மாநிலமும் குடும்பநல திட்டத்தை இன்னும் அதிகமாக கூட செய்வார்கள். இல்லாவிட்டால் அது நாளுக்கு நாள் குறைந்து 39லிருந்து 36 ஆக, 35 ஆக, 34 ஆக குறைந்து போகின்ற நிலைமை வரும்போது ஏன் மக்களை குறைக்க வேண்டும் என்ற எண்ணம் கூட மக்களுக்கு ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும். இதை இம்முறைக்கு வற்புறுத்தி வருகிறோம். ஆனால் மத்திய அரசு அதற்கு இசைவதாக இல்லை.

திரு. எஸ். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற தொகுதியின் எண்ணிக்கையை குறைக்கக்கூடாது என்பதற்காகத்தான் மத்திய திட்டக்குழு வையும் தேசிய அபிவிருத்திக் குழுவையும் எல்லாம் பார்த்தும், மத்திய அரசு நம் கோரிக்கையை நிராகரித்து இருக்கிறது. ஆகவே கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக இருப்பதால், தீவிரமாக குடும்பநல திட்டத்தை அமல்படுத்தியதால் 2 நாடாளுமன்ற தொகுதி எண்ணிக்கையை இழந்து இருக்கிறோம். ஆகவே அந்த 41 இடத்தை மீண்டும் கொடுக்காவிட்டால் நாங்கள் குடும்பநல திட்டத்தை அமல்படுத்தமாட்டோம் என்று மத்திய அரசுக்கு மாநில அரசு எச்சரிக்கை விடுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற உணர்வின் அடிப்படையில்தான் நாம் எடுத்து சொல்லியிருக்கிறோம். ஆகையால் 1951—ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கை கணக்கை மட்டும் வைத்துக்கொண்டு, அதே அளவில் பிரிக்கப்பட்ட எண்ணிக்கை அதே அளவில் இருக்குமானால் குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற மாநிலங்களுக்கு ஒரு பரிசு தந்தது போல் இருக்கும். இப்போது ஒரு தண்டனை தந்தது போல் இருக்கிறது. இதை திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். ஆகவே குடும்பநலத் திட்டத்தை விட்டுவிடுவோம் என்று சொல்வதற்கு இல்லை. ஆகவே திரும்பவும் வற்புறுத்தினோம். அரசியல் அமைப்பு சட்டத்தை மறுபடியும் ஒரு தடவை புனர் பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கருத்து கூட நாட்டில் எங்கும் இருந்து வருகிறது.



அப்படிப் பார்க்கிறபோது இப்படிப்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டால் தான் மக்களுக்கு ஒரு உற்சாகம், மற்ற நிலைமைகள் ஏற்படக்கூடும். குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்றுகிறது என்பதற்காக தண்டனை வழங்குவது போன்ற நிலைமை கூடாது. அதற்குப் பரிசு தருகின்ற வகையில்தான் இந்த 41 என்ற எண்ணிக்கை தமிழகத்தில் என்றென்றும் இருக்க வேண்டும் என்ற நிலை நிலைநாட்டப்பட வேண்டும் என்ற கருத்தை தமிழக அரசு இன்றைக்கும் கொண்டிருக்கிறது. வாய்ப்பு ஏற்படும்போது எல்லாம் சொல்லி வருகிறோம். சென்ற ஆண்டு மாண்புமிகு இந்திய தலைமை அமைச்சர் இங்கே வந்து ஐந்தாண்டுத் திட்டத்தைப் பரிசீலிக்கும்போது கூட இந்த கருத்தை நாம் மறுபடியும் வற்புறுத்தியிருக்கிறோம். இதை பிறகு யோசிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். முடிவு வருமா என்பது ஐயப்பாடாகத்தான் இருக்கிறது.

திரு பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான தமிழ்நாட்டின் பிரச்சனை. சில குறிப்பிட்ட நகரங்களிலே சில சமுதாயத்தவர் சரி பாதி இருக்கின்ற நேரத்திலே அந்த சமுதாயத்தினர் தமது கொள்கையாக குடும்பக்கட்டுப்பாடு அறுவை செய்து கொள்வது இல்லை. வேறு ஒரு சமுதாயத்தினர் அந்த குடும்பக் கட்டுப்பாடு அறுவையை செய்து கொள்வதால் அங்கே குடும்பக் கட்டுப்பாடு அறுவை செய்துக்கொள்ளும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுடைய மக்கள் தொகை குறைந்து குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளாத சமுதாயத்தினருடைய மக்கள் தொகை கூடி மெஜாரிட்டிக்கு வரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பலமுறை 197-4லே கூட இதை வற்புறுத்தியிருக்கிறோம், ஆகவே நம்முடைய பேரவை ஒரு தீர்மானம் நிறைவேற்றி பழைய நிலைமை அதாவது 41 நாடாளுமன்ற இடங்களைத் தரவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னால் குறிப்பிட்டபடி அதைத் தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் யாருக்கும் இதில் கருத்து வேறுபாடு கிடையாது. அவரவர்கள் எடுத்துச் சொல்லுகின்ற கருத்துக்களை மனதில் கொண்டு ஆவன செய்யப்படுகிறது. தேவைப்படுகிறபோது மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையையும் பரிசீலிக்கலாம்.

[1983 பிப்ரவரி 11

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சோதனைச் சாவடிகளின் அமைப்பு எல்லை ஓரங்களில் இல்லாததின் விளைவாக, நம்முடைய எல்லையின் உள்புறமாக தாண்டி 4, 5 மைல்களுக்குள்ளாக நம்முடைய பகுதியிலே அமைந்திருப்பதன் விளைவாக, கடைசிப் பக்கத்திலே இருக்கக் கூடிய மக்களுக்கு திறந்த மார்க்கெட்டிலே விற்கிற அரிசியை வாங்குவதற்கு இயலாத நிலை இருக்கிறது, அந்தக் காரணத்தினால் அந்தச் சோதனைச் சாவடிகளை, தமிழகத்தினுடைய எல்லை ஓரம், கேரளத்தினுடைய எல்லை ஓரம் அமைக்க அரசு ஆவனசெய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்து பொருத்தமான ஒரு கருத்துதான். எல்லைக்கும் சாவடிக்கும் இடையிலே இடைவெளி வரக்கூடாது. ஆனால் எல்லை ஓரத்தில் வேறு ஒரு மாநிலம் வரக்கூடிய நிலை இருக்கிறபோது, எல்லையினுடைய ஓரத்தில் சாவடிகள் இருந்தால்தான் திறம்படச் சோதனை இட முடியும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த இடங்களில் என்று குறிப்பிட்டுச் சொன்னாலும் சரி, அல்லது நாங்களே துறையினரை ஆராயச் செய்து, அப்படி 2 மைல் 3 மைல் இடைவெளி விட்டு சோதனைச் சாவடிகள் இருக்குமேயானால் அதை எல்லை ஓரத்திற்கு மாற்றி அமைக்கும் முயற்சிகளை மேற்கொள்ள துறையினை அரசு கேட்டுக் கொள்ளும். அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து 35 மைல் தொலைவில் உள்ள ஆந்திராவில் அரிசியின் விலை குறைந்திருப்பதாக செய்திகள் வருகின்றன. நமக்கோ அரிசி ஆனை விலை, குதிரை விலை விற்கிறது. இந்தியா முழுவதும் ஒரே நாடு..... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற இடங்களில் உள்ள எல்லை சோதனைச் சாவடிகளைப் போல, குமரி மாவட்டத்தில் உள்ள சோதனைச் சாவடிகளைப் பற்றி கேள்வி. அரிசியின் விலைக்கு எல்லாம் பிரச்னையைக் கொண்டு போகவேண்டாம். அனுமதி மறுக்கப்படுகிறது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது குமரி மாவட்டத்தில் உள்ள எல்லைச் சாவடிகளில் போதிய போலீஸ் பாதுகாப்பு இல்லாத காரணத்தால் கடத்தல் காரர்கள் வேகமாக லாரிகளை ஓட்டிச் சென்று குறுக்கே இடப்பட்டிருக்கும் கட்டைகளை அடித்துக் கொண்டு சென்றுவிடுகின்



1983 பிப்ரவரி 11]

றனர் என்பது அரசுக்குத் தெரியுமா? இப்படி பல லாரிகள் சென்று கொண்டிருப்பதைத் தடுக்க ஆயுதம் தாங்கிய போலீஸ் படையினரை அங்கே போட அரசு முன்வருமா? அதே போல கடத்தல்காரர்களை மினிமிசாவில் கைது செய்து அவர்களை ஜாமீனில் கூட வெளியே விடாத வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள எல்லையோரப் பகுதிகளிலேயும் பொள்ளாச்சி, உளுந்தூர்பேட்டை பகுதிகளிலேயும் மதுரை, இராமநாதபுரம் மாவட்டப் பகுதிகளிலேயும் அந்த எல்லைப் பாதுகாப்பிலோ, சவடிகளின் மீது தீவிரமாக இருக்கவேண்டும். அங்கே காவல் துறையினுடைய பாதுகாப்பு அதிகமாக இருக்க வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் போடப்பட்டுள்ள காவலர்களை ஒரே இடத்தில் நிரந்தரமாக வைக்கவேண்டாம் என்றும் அவர்களை கூடுமான வரை 1 மாத 2 மாத காலத்திற்குள்ளாக மாற்றவேண்டும் என்றும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆகவே கூடுமான வரையில் அங்கே முறைகேடுகளைத் தடுக்க வேண்டும் என்ற அளவுக்கு பல முயற்சிகள் எடுத்துக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பொள்ளாச்சி தொகுதியிலே எல்லாம் கூட அத்துமீறிச் சென்ற லாரிகள் தடுக்கப்பட்டிருக்கின்றன, மற்ற பகுதிகளிலும் சில லாரிகள் தடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே ஏமாற்றி விட்டுச் செல்கிறவர்களையெல்லாம் தடுக்கவேண்டும் என்றுதான் உத்தரவு போட்டிருக்கிறோம். அவர்கள் அப்படிச் சொல்வது அரசுக்குத் தெரியுமா என்று கேட்டார்கள். தெரிந்தால் ஏன் விட்டு வைத்திருக்கிறோம், தெரியாததன் காரணமாகத்தான் இப்படி நடந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் தடுப்பதற்கு இன்னும் தீவிரமாக நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

(முற்பகல் 9·10)

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே. இந்தச் செக் போஸ்டில் இருக்கின்றவர்கள் துணை வட்ட ஆட்சியாளர் அந்தஸ்து பெற்றவர்கள். எனவே சில நேரங்களில் லாரியில் அரிசியினைக் கடத்துகின்றவர்கள் இவர்களை மீறிக் கொண்டு செல்கிறார்கள். ஆகவே துணை வட்ட ஆட்சியாளர் அந்தஸ்திலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு லைசென்ஸ் பெற்ற கைத் துப்பாக்கிகளை வழங்கி அப்படி அரிசி கடத்தப்படுகின்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டால், செக்போஸ்டைத் தாண்டிச் சென்றால் சுடுவதற்குரிய அதிகாரத்தை அரசு அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1983 பிப்ரவரி 11

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக்கட்டுப்பாடு திட்டம் மிகப்பெரிய பிரதானமான திட்டம். நாட்டினுடைய பல குறைகளும் மக்கள் பெருக்கத்தால் வருகிறது. மக்கள் தொகையைக் குறைப்பது என்ற தொடர்ச்சியான குடும்பக்கட்டுப்பாடு திட்டம் இருக்கும்போது ஜனத்தொகை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அப்படி ஜனத்தொகை அடிப்படையில் பார்லிமெண்டு தொகுதிகள் பிரிக்கப்படுகின்றபோது அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வரவேண்டும் என்றும் பார்லிமெண்டு தொகுதிக்கு 7 லட்சம், 8 லட்சம் வோட்டர்கள் என்று தொகுதியை பிரித்து இருக்கிறார்கள். அதை மாற்றி 5 லட்சத்திற்கு உட்பட்ட வோட்டர்கள் இருக்கும்படியாக தொகுதியைப் பிரிக்க வேண்டும் என்ற ஆலோசனையையும் நமது அரசு சார்பில் மத்திய அரசுக்குக்கொடுத்து அதை வற்புறுத்துமா என்று அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 9·20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, டீலிமிட்டேஷன் கமிட்டி மறுபடியும் வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற யோசனையைக் கேட்கலாம். இந்தியாவிலே பாராளுமன்றம் தொடங்குகிறபோதே 500 உறுப்பினர்கள் இருக்கின்ற முறையில் தான் இருந்து இருக்கிறது, இன்றைக்கு 541 பேர்கள் என்ற அளவுக்கு அது விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்று 7, 8 லட்சம் மக்கள் தொகை கொண்ட தொகுதிகளாக இருப்பதை 5 லட்சம் மக்கள் தொகை கொண்ட தொகுதிகளாக மாற்றினால் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதிகமாகும். டீலிமிட்டேஷன் கமிட்டி மறுபடியும் வரும். அப்போது நாம் வற்புறுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

டாக்டர் கே. சமரசம் ; தலைவர் அவர்களே, உலகத்தின் பிரதான தலைவலியாக உள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு மக்கள் தொகைப் பெருக்கம்தான் முக்கியமான காரணமாக இருக்கிறது. அதை நாம் எந்த அளவுக்குக் குறைத்தாலும் அதற்கு பரிசு வழங்குவதற்குப் பதிலாக தண்டனை கொடுக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைத் தடுக்கக்கூடிய முறையிலே சர்வ கட்சிகள் கொண்ட கூட்டத்தைக் கூட்டி மத்திய அரசுக்கு கண்டனத்தைத் தெரிவிக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா? இந்த மன்றத்திலே அதற்காக ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற முன்வருமா? அதற்காக பிரதம அமைச்சர் அல்லது பாராளுமன்றத்தின் முன்பு உண்ணாவிரதம் இருக்கக்கூடிய நிலை வருமானால் அதற்கு அனுமதியளிக்கப்படுமா?



1983 பிப்ரவரி 11]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கண்டனத்திற்கு மசியக் கூடிய நிலைமை அங்கே இருக்கிறமாதிரித் தெரியவில்லை. எந்த எந்த வகையிலே முயற்சிகளைச் செய்யமுடியுமோ அந்த அந்த வகையிலே முயற்சிகளைச் செய்கிறோம். அந்த வகையில் தனியார் தீர்மானம் வந்திருப்பதைப் போன்று மாநிலங்களுக்கு அதிகமான அளவுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்படுகிற சூழ்நிலையில் மாநிலங்களின் கைகள் ஓங்கி மாநிலங்களின் கருத்தை மைய அரசு ஏற்கக்கூடிய சூழ்நிலை ஏற்படவேண்டும், சட்டத்திற்குட்பட்ட முறையிலே இப்போது நாம் அதில் வெற்றி பெறுவதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளலாம்.

நீதிமன்றங்களில் தமிழ்மொழியை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டம்.

*வினா எண் 227—திரு. வே. சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீதிமன்றங்களில் தமிழை ஆட்சி மொழியாக்க அரசு சிறப்புத் திட்டம் ஏதேனும் வைத்துள்ளதா?

(ஆ) இதை உயர்நீதி மன்றத்தில் விரைவாக அமுல் படுத்த அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 14-1-1970 முதல் உயர்நீதிமன்றத்திற்கு உட்பட்ட குற்றவியல், உரிமை வழக்கு நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் குத்தகை மற்றும் வருவாய்த் துறை நீதிமன்றங்களில் தமிழில் சாட்சியங்களைப் பதிவு செய்யும் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. 14-11-76 முதல் உயர் நீதிமன்றத்திற்குட்பட்ட குற்றவியல் நீதிமன்றங்களிலும் 1-2-1982 முதல் உரிமை வழக்கு நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள், குத்தகை மற்றும் வருவாய்த்துறை நீதிமன்றங்களிலும் தமிழ் தீர்ப்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) இது குறிதது கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

திரு. வே. சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்திலே நீதிமன்ற ஆட்சிமொழியாக தமிழை ஆக்கவேண்டுமென்று நிலைமை இருக்கிறபோது சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து உச்ச நீதிமன்றத்தற்கு மேல்முறையீடுகளுக்கு வழக்குகள் செல்கிறபோது உயர்நீதிமன்றத்திற்கும் உச்சநீதி மன்றத்திற்கும் தொடர்பு மொழியாக ஆங்கிலம் நீடிக்கவேண்டுமென்றும் அந்த வகையிலே செயல் படுத்தக்கூடிய முறையிலே அரசியல் அமைப்பு சட்டத்தின் பிரிவுகளைத் திருத்தவேண்டுமென்று மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா ?

[1983 பிப்ரவரி 11

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) ஏழாவது நிதிக் குழு அளித்துள்ள நிதி உதவியினைக் கொண்டு 1979—84 ஆண்டு காலங்களில் சிறைவாசிகளின் வசதியை பெருக்க, கூடுதல் இடவசதி, சத்துணவு வழங்கல், நவீன சுகாதார வசதிகள் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்திக் கொண்டு வருகின்றது.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தற்போது சிறைச்சாலைகளில் சுதந்திர தினம், பொங்கல் விழா போன்ற நாட்களில் அவர்களுக்கு சிறப்பு உணவு அளிக்க இரண்டு ரூபாய் என்றும், அதே போன்று கைதிகள் படிக்க ஒரு தினசரிப் பத்திரிகையும் வழங்கப்படுகிறது. இந்த வசதிகளை அதிகரித்துக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனம் : சிறைச்சாலைகளில், குறிப்பாக வேலூர் சிறைச்சாலையில் நெருக்கடி அதிகமாகயிருக்கிறது. ஆயுள் தண்டனைக் கைதிகள், நக்ஸலைட்ஸ் போன்றவர்கள் எல்லாம் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். ஆயுள் தண்டனைக் கைதிகள் தண்டனையை குறைத்து விடுதலை செய்தும்—அதே போல் நக்ஸலைட்ஸ், நிரபராதிகள் சிலபேர்கள் அதில் இருக்கிறார்கள். இதையெல்லாம் விசாரித்து அவர்களை யெல்லாம் விடுதலை செய்து அங்கே கூட்டத்தைக் குறைத்து சிறைச்சாலையில் சுகாதார வசதிகள் போன்ற வசதிகளைச் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : வேலூர் சிறைச்சாலையைப் பொறுத்தவரையில் கூடுதல் இடவசதி செய்யவும், நவீன கழிப்பறை கட்டவும், குடிநீர் வழங்குவதற்கும் வேண்டிய நல்ல நிரந்தரமான வசதிகளைச் செய்யவும் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறிய மற்றப் பிரச்சனைகளையும் அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. ஏ. உமாநாத் : சிறைச்சாலைகளில் இருக்கக்கூடிய கைதிகளுக்கு சத்துணவும் ஏற்கனவே கொடுத்துவரும் உணவை அதிகப்படுத்தவும் சமீபத்தில் அரசு உத்தரவிட்டிருக்கிறது. கைதிகள் எல்லாம் அதை வரவேற்கிறார்கள். ஆனால் அந்த உணவு திருடப்படாமல் அவர்களுக்குப் போய்ச் சேருவதற்கு சில சிறைச்சாலைகளில் ப்ரிஸனேர்ஸ் பஞ்சாயத்துக் கமிட்டி அமைத்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டி இருப்பது உண்மையிலே அவர்களுக்கு பாதுகாப்பு என்பதோடு திருடுவது கஷ்டம் என்பதால் கமிட்டி மெம்பர்கள்மீது பொய் குற்றச்சாட்டு சாட்டப்பட்டு ஜெயில் அதிகாரிகள் டிரான்ஸ்பர் செய்து கமிட்டியையே இன்ப்ரக்சுவஸ் ஆக்குகிறார்கள். மதுரையில் நடந்திருக்கிறது. ஆகவே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்ன



1983 பிப்ரவரி 11]

வென்றால்—இது ஜெனுவின் க்ரீவன்ஸ், உங்கள் பர்பஸே டிஃபீட் ஆகிறது. எனவே இந்தக் கமிட்டி மெம்பர்களை ப்ரொட்டெக்ட் செய்ய என்ன ஏற்பாடு? கமிட்டி மெம்பர்கள் பேரில் ஏதாவது சார்ஜஸ் சொன்னால் மினிஸ்டருடைய அனுமதியில்லாமல் கமிட்டி மெம்பர்கள் மேல் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று செய்ய அரசாங்கம் முன்வருமா?

[முற்பகல் 9.30]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு கொடுத்தல் என்ற திட்டத்தின் கீழ் சிறைவாசிகளுக்கு உணவு வழங்கப்படுகின்றபோது, அந்த நிர்வாகத்தில் இருக்கின்றவர்கள் தவறு செய்தால், அதைத் தடுப்பதற்கு பிரிசனர்ஸ் பஞ்சாயத்து கமிட்டி அமைக்க வேண்டும் என்ற ஆலோசனையைச் சொன்னவரே மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள்தான். அந்த ஆலோசனையைச் சொன்னவுடன், அரசு அந்த ஆலோசனையை ஏற்று, பஞ்சாயத்து கமிட்டியை அமைத்திருக்கிறது. அங்கே இப்படி பஞ்சாயத்து கமிட்டி செயல்படுவதற்குத் தடையாக அதிகாரிகள் இருப்பார்களானால், அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். உதாரணமாக, மதுரையில் நடந்ததைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். உடனடியாக அதைப்பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி ; பேரவைத் தலைவர் அவர்களே, சிறை சீர்திருத்தம் சம்பந்தமாக ஏற்கனவே ஒரு குழு போடப்பட்டு, அது பல பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அதிலே என்னென்ன பரிந்துரைகள், எவை எவை இதுவரையில் நடைமுறைப்படுத்தாமல் இருக்கிறது? சிறைக்கு குற்றம்செய்து செல்லக்கூடியவர்கள் அவர்கள் திரும்பும்போது, அவர்களை சீர்திருத்தி அனுப்புவதற்குரிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக தற்போது என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறை சீர்திருத்தக் குழு கூறியிருக்கின்ற பரிந்துரைகள் ஏராளமாக இருக்கின்றன. நாம் ஏழாவது நிதி உதவிக் குழுவினுடைய உதவியைப் பெற்று, சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, முதலில் இடவசதியை அதிகப்படுத்துதல், நவீன சுகாதார வசதியைப் பெருக்குதல் என்ற அடிப்படையில் ரூ. 8,62,000 ஒதுக்க வேண்டுமென்ற முறையில் பாளையங்கோட்டை, சென்னை, மதுரை, திருச்சி, வேலூர், சேலம் ஆகிய மத்திய சிறைகளில் கூடுதல் இடவசதியை செய்து

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தற்போதுள்ள அரசியலமைப்புச் சட்டத்தினுடைய பிரிவுகளின்படி உச்சநீதிமன்றத்திலே ஆங்கிலம் நடைமுறை மொழியாகவும் மாநிலங்களில் விருப்பப்பட்டால் மாநில மொழிகள் மாநிலங்களில் வரலாம் என்று இருக்கிறது. உச்சநீதிமன்றத்திற்கும் உயர்நீதிமன்றத்திற்கும் தொடர்பு மொழியாக ஆங்கிலம் இருந்து வருகிறது. உயர்நீதிமன்றத்தில் மாநில மொழிகள் வருகின்றபோது உச்சநீதிமன்றத்தில் ஆங்கிலம் தான் இருக்க வேண்டும், ஆங்கிலம் நீங்கலாக வேறு மொழிகள் நேரடியாக இந்தி மொழி வந்துவிடக்கூடாது என்பதில் அரசு அக்கறையாக இருக்கிறது. இதுகுறித்த சட்டம் வரும்போது மாநில அரசு எந்த விதத்தில் வற்புறுத்த வேண்டுமோ அந்த விதத்திலே அரசு வற்புறுத்தும்.

திரு. ஜோசந்நார் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சிவில் நீதிமன்றங்களில் 1982 ஆம் ஆண்டு முதல் ஆட்சிமொழியாக இருக்கும் என்று சொன்னாலும் கூட ஆங்கிலத்திலேயே நீதிபதிகள் தீர்ப்புக்களை எழுதிக்கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. ஒருமுறை பரமக்குடியிலே ஆங்கிலத்திலே தீர்ப்பு எழுதவேண்டுமென்று இருந்து தமிழில் தீர்ப்பு எழுத விதிகள் இல்லை என்ற சூழ்நிலையில்—தமிழிலே தீர்ப்பை எழுதியதற்காக செஷன்ஸ் நீதிமன்றம் ரத்து செய்தது. ஆக ஒரு கால கெடுவை நிர்ணயித்து அதற்குள்ளாக கீழ்நீதிமன்றங்களிலே தமிழிலே தீர்ப்பு எழுதவேண்டுமென்று ஆணையிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் கூறுவது சென்ற ஆண்டினுடைய நிலை. நடப்பு ஆண்டிலிருந்து தமிழில் தான் தீர்ப்புகள் எழுதவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் நீதிபதிகள் தமிழிலே தீர்ப்புகள் எழுதக்கூடிய அளவுக்கு சற்று பயிற்சியைப் பெறக்கூடிய நிலையிருப்பதால் அதையும் படிப்படியாக நாம் நிறைவேற்றி வருகிறோம். விரைவிலே முழுமையும் நிறைவேற்றலாம் என்று மாநில அரசு எதிர்பார்க்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தில் தமிழை ஆட்சிமொழியாக்கவேண்டும் என்பதை நம் அரசாங்கத்தின் கொள்கை. அதை வரவேற்கிறேன். ஆனால் அதற்கு குறுக்கே நிற்பது தமிழ் தெரியாதவர்கள் சீப் ஜஸ்டிஸ் ஆக வந்தால் அது நம்முடைய உயர்நீதிமன்றத்தில் ஆட்சிமொழியாக்க அந்த பாலிசிக்கு குறுக்கே நிற்கிறது. சீப் ஜஸ்டிஸ் டிரான்ஸ்பருக்கு நான் எதிர் அல்ல. இன்டர் ஸ்டேட் தெரிந்த ஒரு சீப் ஜஸ்டிஸை இன்னொரு மாநிலத்திலிருந்து அந்த மொழி கொண்டுவருவதில் ஆட்சேபணையில்லை. நமது அரசாங்கம் விடாமல் மத்திய அரசுக்கு எழுதியும் இப்போது மத்திய அரசு



ஸ்டேட்மென்ட் ஆப் பாலிசி என்று நாங்கள் அப்படித்தான் செய்வோம் என்று அறிக்கை விட்டிருக்கிறார்கள். இது தமிழ் மயமாக்குவதற்கு குறுக்கே நிற்கும் ஆகவே ஃபார்தராக எப்படிப் ப்ரொசீட் செய்யப் போகிறீர்கள்? உங்கள் பாலிஸியை எப்படி என்போர்ஸ் செய்யப் போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்தாலும் மற்ற ப்யூனி ஜட்ஜஸ் ஆக இருந்தாலும் எந்த நீதிபதியாக இருந்தாலும் அவர்கள் கண்டிப்பாக தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் தமிழ் மொழி தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். அந்தந்த மாநிலங்களைப் பொருத்தவரையில் அந்தந்த மாநில மொழி தெரிந்தவர்களே இருக்க வேண்டுமென்றுதான் தமிழ்நாடு அரசின் கொள்கை. அதை வலியுறுத்தி பலமுறை மையஅரசுக்கு நாம்கூறியிருக்கிறோம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதையும் மீறி மையஅரசு இந்தக் கொள்கையில் அவர்கள் தன்னிச்சையாக செயல்படும்போது இந்திபேசாத மாநிலங்கள் எல்லாம் ஒரு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென்ற ஒரு சிந்தனை இருக்கிறது. அதற்காகக் கூட நடவடிக்கைகள் எடுக்க நாம் யோசித்து வருகிறோம்.

திரு. மி. வின்சென்ட் : தென்னாட்டிலுள்ள உயர் நீதிமன்றங்களில் தமிழ் தெரியாத இந்தி பேசும் தலைமை நீதிபதியை நியமிக்கக்கூடாது என்று மைய அரசுக்கு வலியுறுத்த தென்னாட்டு சட்ட அமைச்சர்கள் மாநாடு ஒன்றைக் கூட்ட இந்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சட்ட அமைச்சர்கள் மாநாடு கூடியபோது அதில் அன்றைய நிலையில்கூட கர்நாடக மாநில சட்ட அமைச்சர் அவர்கள் இந்தி மொழி பேசுகிற மாநிலங்களைச் சேர்ந்த நீதிபதிகள் கர்நாடகம் போன்ற மாநிலங்களுக்கும் வருவதைக்கூட ஆட்சேபித்தார்கள். மாறிய இன்றைய சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதைப்போல் இந்தி பேசாத மாநிலங்களில் குறிப்பாக தென்னாட்டு மாநிலங்களைச் சார்ந்த அமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டி இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி பேசுகிற மாநிலத்தைச் சேர்ந்த நீதிபதிகள், மொழி தெரியாதவர்கள் நீதிபதிகளாக வருவது கூடாது என்று வற்புறுத்த தீர்மானம் போடுவது குறித்த அரசு முயற்சியினை மேற்கொள்ளும்.

சிறைச்சாலைகளில் வசதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

*வினா எண் 228—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிறைச்சாலைகளில் வசதிகளை அபிவிருத்தி செய்வது குறித்து மாநில அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

கொடுக்கவும், நவீன கழிப்பறைகள் கட்டுதல், குடிநீர் வழங்குதல், மரச் சாமான்கள் வாங்குதல் போன்றவற்றிற்கும், கடலூர், செங்கல்பட்டு ஆகிய கிளைச் சிறைகளில் அதே பணிகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலே இருக்கின்ற மைய சிறைச்சாலையைப் பொறுத்தவரை, மிகவும் நெருக்கமாக இருக்கின்ற காரணத்தினால், இடவசதி குறைவாக இருக்கின்ற காரணத்தினால் புதிய இடத்திற்கு மாற்ற வேண்டும் என்ற அடிப்படையில், புழல் பகுதியில் ஒரு புதிய சிறைச்சாலையைக் கட்ட ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அது செயல் முன்னேற்றத்தில் இருந்து வருகிறது. அது மட்டுமல்லாமல், ரூ. 6,31,000 நிதியை ஒதுக்கி, அந்த சிறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், நல்ல உணவு கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில், சிறைவாசிகளுக்கு சத்துணவு கொடுத்தல், கூடுதல் படுக்கைகள், பாத்திரங்கள் வழங்குதல், சிற்றுண்டி சாலைகள் ஒவ்வொரு சிறைச்சாலையிலும் இருக்க வேண்டும் என்ற முறையில் அதையும் கொண்டு வந்திருக்கிறோம். அவர்களுக்கு வேலைக்கு ஊதியம் அளிக்கும் திட்டம் என்ற பரிந்துரையின் அடிப்படையில், அதையும் நடைமுறைப்படுத்தி வந்திருக்கிறோம். அது மட்டுமல்ல 4,453 சிறைவாசிகளுக்கு கூடுதல் இடவசதி அளித்தல், நவீன நீரடிக் கழிப்பிடங்கள், குளிப்பறை வசதிகள், குடிநீர் வசதிகள், சுகாதார வசதிகள், மருத்துவ வசதிகள், மின் வசதி செய்தல் ஆகிய வகைளையும் அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில், அவைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறையில் நன்னடத்தையோடு இருந்து வேலை செய்கிறபோது) அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, அவர்களுக்கு சுகந்தொழில் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அந்தத் தொழிலில் அவர்கள் பயிற்சி பெற்ற பிறகு, சிறையிலிருந்து விடுதலை பெற்றபின், அவர்களுக்கு 4 பர்சன்ட் டிபரன்ஷியல் ரேட் ஆப் இன்டரஸ்ட், குறைந்த வட்டியில் அவர்களுக்கு கடன் வழங்கி, அவர்கள் சுய தொழில் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

## சென்னையிலுள்ள குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகள்.

*வினா எண் 229 —திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தொழிலாளர், நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கு சென்னையில் தற்போது வசூலிக்கும் மாத வாடகை எவ்வளவு?

(ஆ) சென்னையிலுள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் எத்தனை?

(இ) அவைகளில் எத்தனை குடியிருப்புகளுக்கு மின் விளக்கு, குடி நீர்க்குழாய் வசதி இல்லாமல் இருக்கிறது?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளுக்குத் தண்ணீர் வசதியும், மின் விளக்கு வசதியும் செய்து கொடுத்திருந்தால் மாத வாடகை ரூ. 25/— வீதமும், மின்வசதி மட்டும் செய்திருந்தால் அக்குடியிருப்பிற்கு மாத வாடகை ரூ. 23/—ம் குடிநீர் வசதி மட்டும் செய்திருந்தால் அக்குடியிருப்பிற்கு மாத வாடகை ரூ. 22/—ம் மேற்கண்ட இரண்டு வசதிகளும் இல்லாத குடியிருப்புகளுக்கு மாத வாடகை ரூ. 20/-ம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த வாடகை உரிமக் கட்டணம் (Licence fee) என்ற பெயரில் வசூலிக்கப்படுகிறது.

(ஆ) மொத்தக் குடியிருப்புக்கள் 38,186.

(இ) 33,075 குடியிருப்புகள் மின்வசதி இல்லாமலும், 7,754 குடியிருப்புகள் குடிநீர் வசதியில்லாமலும் இருக்கின்றன.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத்தலைவர் அவர்களே; குடிசை மாற்று வாரியத்தில் விதிக்கிற வாடகை 25 ரூபாய் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். எனக்கு கிடைத்த தகவல் எல்லாம் முன்னால் இருந்ததைவிட இரண்டு மடங்கு அதிகம் என்று சொன்னார்கள். சரியாகத் தெரியவில்லை 38,186 குடியிருப்புகளில் 33,075 குடியிருப்புகளுக்கு மின் விளக்குகள் இல்லை என்று தெரிவித்தார்கள். ஆகவே மின் விளக்குகள் இல்லாததுதான் அதிகமாக இருக்கிறது. இப்பொழுது மண்ணெண்ணெய் கூட சரியாக கிடைக்காமலிருக்கிற நிலையில் இருட்டில் தத்தளித்து மாடிக்கு ஏறி இறங்குவதில் அதில் இருப்பவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இந்த குடியிருப்புகளுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சென்னை நகரத்தில் மட்டும் தான் குடிசை மாற்று வாரியத்தினால் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறதா? அல்லது வேறு நகரங்களிலும் கட்டிக் கொடுக்கப்படுகிறதா? உதாரணமாக நெல்லை, கோவில்பட்டி, மதுரை போன்ற நகரங்களில் அதிகமான குடிசைகள் இருக்கின்றன. அவற்றை மாற்றி குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'லைசன்ஸ் பீ' என்பது தாங்கள் கேள்விப்பட்டதை விட நான் சொல்வது சரியாக இருக்கும் என்று ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். 20, 22, 23, 25 ரூபாய் அவ்வளவுதான். மின் வசதியை அவர்கள் சரியாக பராமரிக்காததால் நாமே அவர்களுக்கு ஏற்பாடு செய்யவில்லை. கேட்டால் 'நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்' தருகிறோம். அவர்கள் ஏற்பாடு செய்து கொள்ளலாம். இந்த பிரச்சனைகள் எல்லாம் விரைவில் தீர்ந்துவிடும் என்று கருதுகிறேன். காரணம் எல்லாக் குடியிருப்புகளையும் குடியிருப்பவர்களுக்குச் சொந்தமாக்கி விடுவது என்ற ஒரு திட்டம் அரசினுடைய தீவிர பரிசீலனையில் இருக்

ணியை மேற்கொள்ளலாம் என்ற முடிவைப் புரட்சித் தலைவர் தமிழக முதல்வர் எடுத்து ஆணையிட்டிருக்கிறார்கள். அதற்கு ஏற்ப—இந்தக் குடிசை மாற்று வாரியம் என்று இருக்கிறதே அது சென்னையில் உள்ள குடிசைகள் மட்டும் தான் கவனித்துக் கொண்டிருந்தது. சென்னைக்கு அப்பாலுள்ள திருச்சி, மதுரை, சேலம், கோயம்புத்தூர் போன்ற பகுதிகளிலுள்ளவைகளை வீட்டு வசதி வாரியம்தான் இதுவரை கவனித்துக் கொண்டு வந்தது. அதற்கு மாறாக குடிசை மாற்று வாரியமே தமிழகம் பூராவும் இருக்கக் கூடிய குடிசைப் பகுதிகளை மாற்றுவது, அபிவிருத்தி செய்வது, accelerated improvement scheme இப்பேர்ப்பட்ட improvement scheme எல்லாம் செய்வதற்கு, இதற்கே அதிகாரம் கொடுத்தும் புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதை எப்படி execute செய்வது என்பதைப் பற்றி அரசு பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது. எந்த நடைமுறையைக் கொண்டு வருவது என்பதைப் பற்றி அரசு ஆராய்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சியோடு இந்தப் பதிலை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கேள்விக்கும் சேர்ந்து பதில் சொல்லிவிட்டீர்கள்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடிசை மாற்று வாரியத்தின் வீடுகளுக்கு அருகாமையிலேயே கால்நடைகளைக் கட்டி வைத்து, அதன் காரணமாக, சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன. குறைந்தபட்சம் இந்த குடிசை மாற்று வாரியத்திற்கு அருகில் இருக்கக்கூடிய அந்தக் கால் நடைகளையாவது அப்புறப்படுத்துவதற்கு மாநகராட்சிக்கு அரசு உத்தரவிட்டு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்திற்கு அருகில் மட்டும் அல்ல பொதுவாகவே, சென்னையிலேயே வீடுகளுக்குள்ளே மாடுகளைக் கட்டிக் கொண்டு சிரமங்கள் எல்லாம் இருக்கின்றன. பம்பாயில் இருப்பதைப் போல் ஒரு ஏற்பாட்டைச் செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு குழு அமைத்து ஒரு பெரிய ஆலோசனை செய்து மாடுகள் எந்த இடத்திலே இருக்கவேண்டும், மனிதர்கள் எந்த இடத்திலே இருக்க வேண்டு மென்றல்லாம் ஒரு திட்டம் வகுத்துக் கொடுப்பார்களானால் அந்த நகரத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு உதவியாக இருக்கும் அந்த வகையில் உங்களுடைய மேலான ஆலோசனையை இந்த அரசு எதிர்பார்க்கிறது.



**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது இந்தக் குடிசை மாற்று வாரியம் சென்னை நகரத்திற்கு மட்டும் அல்ல, தமிழகம் முழுவதுமே அமைக்கப்படும் என்ற ஒரு நல்ல விஷயத்தைச் சொன்னார்கள். ஆனால் முழுவதுமே எடுக்கக்கூடிய சூழ்நிலையில் இந்தத் திட்டம் மதுரை போன்ற பெரிய நகரங்களுக்கு மட்டுமல்லாமல், கிராமப்புறங்களுக்கும் விரிவு செய்யப் படுமா? அப்படி இல்லையென்று சொன்னால், கிராமப்புறங்களுக்கு கடன் கொடுக்கிறார்களே, ரூ. 3,000, அதை உயர்த்தி, ரூ. 5,000 யாவது எங்களை மாதிரி உள்ளவர்களுக்குக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைகள் இருக்கக்கூடிய இடங்களுக்கெல்லாம் அதை மாற்றுவதற்கு, அபிவிருத்தி செய்வதற்கு, விரிவாக்கம் செய்வதைப் பற்றி அரசு முடிவெடுத்திருக்கிறது என்று நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது, ரூ. 3,000 லிருந்து ரூ. 4,000 ஆக்கியிருக்கிறோம்., ரூ, 5,000 ஆக்க வேண்டுமென்கிறார்கள. எப்பொழுதும் step by step தான் போக வேண்டும். ரூ. 4,000 ஆக்கியிருக்கிறோம். ரூ. 5,000 ஆக்க வேண்டுமென்கிறார்கள். கருத்தில் வேறுபாடு இருக்க முடியாது ஆனால் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதில் கருணை வைக்கவேண்டும். எனவே, நீங்கள் கேட்கும்பொழுது இந்தக் கேள்விகளை நிதியமைச்சரவர்களிடம் கேட்டு, அவரிடம் சொல்லி கொஞ்சம் கருணை வையுங்கள் என்று அவரிடத்தில் நீங்கள் சொல்லி, அதை அவர்கள் ஏற்றுக் கொண்டால் ரூ 5,000க்கு உயர்த்தலாம். அதுவும் நிதி ஆதாரத்தைப் பொறுத்தது, அதை அவர்தான் சொல்ல வேண்டும்.

**திரு. சா. கா. திருவேங்கடம் :** பேரவைத் தலைவரவர்களே, தங்கள் உடம்பைத் தாங்களே கவனித்துக் கொள்வதைப்போல நலிந்த பிரிவினர் அவர்கள் இருக்கின்ற வீடுகளுக்குச் சுண்ணாம்பு அடிப்பது, சுத்தம் செய்வது போன்ற காரியங்களைச் செய்து கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். சமுதாயத்திலேகூட நலிந்த பிரிவினரைப் பிறர்தான் கவனிக்க முடியும். எனவே பொருளாதாரத்தில் நலிந்த அந்த ஏழை மக்களுக்கு அந்தக் காரியங்களைச் செய்து கொள்ள இயலாது. ஆகவே, அரசாங்கச் செலவிலேயே அவைகளைச் சுத்தம் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் முன்பே சொன்னேன். 80 இலட்சம், 90 இலட்சம் வரையில் மெயின்டினென்ஸ் சார்ஜ் என்று செலவு செய்யப்படுகிறது, In addition to that

றது. எனவே அது விரைவில் செயல்பட்டுவிடுமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற எல்லாப் பிரச்சனைகளும் அதிலே தீர்ந்துவிடும் என்று கருதுகிறேன்.

திரு. ஆ. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கிற குடிசை மாற்று வாரிய வீடுகளுடைய வாடகை பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது சென்னையிலே தான் இந்த வாடகை என்று நினைக்கிறேன். கோவையிலே 4 ஆயிரம் வீடுகள் இருக்கின்றன; அதற்கு ரூ. 15 தான் வாடகை; இப்படி சொல்வதினால் அமைச்சர் அவர்கள் ஏற்றிவிடமாட்டார் என்று கருதுகிறேன். இதில் விஷயம் என்னவென்றால் குடிசைவாசிகளாக இருந்தவர்களை நல்ல நிலையில் அவர்களுக்கு வீடு கொடுத்து வாழ்விக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை முக்கியமாக மிகவும் நல்ல நடவடிக்கை. இந்த நடவடிக்கை எடுத்து குடிசையில் இருந்தவர்களுக்கு உரிமையாக கொடுக்கப்பட்டுள்ள அந்த வீடுகளிலிருந்து அவர்களை வெளியேற்றி பணம் சம்பாதிக்கும்படியாக ஒரு கூட்டம் பல நூற்றுக்கணக்கான வீடுகளை இன்றைக்கு கோவையில் 20 ஆயிரம் ரூபாய் வரைக்கும் பத்திரம் எழுதி, கை மாற்றி, இல்லீகலாக விற்பனை செய்து கொண்டிருப்பதை தடுத்து நிறுத்தி, அந்த குற்றவாளிகளை பிடித்து தண்டிப்பதற்கு ஏற்பாடு செய்து, ஏழைகளுக்குத் தான் அந்த வீடு சொந்தமாக இருக்க வேண்டும் என்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெத்த மகிழ்ச்சியோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றியை இந்த அரசின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பேர்ப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அரசு மிகத்தீவிரமாக செயல்படும்போது, அவர்களை வெளியேற்றாதீர்கள் என்றெல்லாம் பிரச்சனைகள் வருகின்றன. ஆனால் மாண்புமிகு ரமணி அவர்கள் ஆரம்ப காலத்திலேயிருந்தே ஒரு ஸ்டாண்ட் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். யாருக்காக இந்த வீடு கொடுக்கப்பட்டதோ அந்த ஏழைகள் தான் இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நானும் இதை ஐந்து ஆண்டுகளாக பார்க்கிறேன். அதற்காக பாராட்டு தல்களை அரசின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக அரசு எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளும். உடனடியாக அதற்கு கதவைத் தட்டி போட்டு உரிமை உள்ளவர்கள் தான் இருக்கிறார்களா? அல்லது வேறு யாரும் இருக்கிறார்களா என்று பரிசோதனை செய்து, தவறாக அங்கே பினாமி டிரான்ஸ்பார்க்ஷன் நடந்திருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது கொடுத்து வருவதைப்போல அப்போதும் ஆதரவு தருவார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.



திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தினால் கொடுக்கப்பட்டிருக்கிற குடியிருப்புகள் இரண்டு, மூன்று ஆண்டுகளில் பார்க்கிறபோது மிக அசிங்கமாக, அசிங்கமாக தோற்றமளிக்கிறது: ஆண்டிற்கு ஒரு முறையாவது வெள்ளையடித்து, சிறு சிறு மராமத்துகளை செய்தால் நலமாக இருக்கும். அதற்கு அரசு நடவடிக்கை எடுத்து செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெயின்டனன்சுக்காகவே ரூ. 80, 90 இலட்சம் நாம் செலவு செய்து வருகிறோம். நம்முடைய வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வது நம்முடைய பொறுப்பு. நம்முடைய உடைமையாக இருந்தாலும், உடைமையாக இருந்தாலும், தலையாக இருந்தாலும், முடியாக இருந்தாலும், பல்லாக இருந்தாலும், முகமாக இருந்தாலும், நாம் குடியிருக்கும் வீடாக இருந்தாலும், அவை எல்லாவற்றையும் நாமேதான் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். பிறரை நாம் எதிர்பார்க்கக்கூடாது. அந்த வீட்டில் குடியிருப்பவர்களை எந்த நேரத்திலும் வெளியேற்றுவதில்லை. இப்பொழுது லைசென்ஸ் பீ என்று வாங்கினால்கூட, They are almost the owners. அவர்கள் கடைசிவரையிலே அங்கேயிருந்து கொண்டிருக்கலாம். எனவே இயன்றவரை அரசு தன்னுடைய முயற்சியை எடுத்துக்கொள்ளும். குடியிருக்கக் கூடியவர்களும் அந்தச் சுவற்றிலே சாணி தட்டுவது, பக்கத்திலே உட்கார்ந்து மலஜலம் கழிப்பது இந்த மாதிரி காரியங்களில் ஈடுபடாமல் 'சிவிக் சென்சோ'டு இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. அரங்கசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிசை மாற்று வாரிய வீடுகளைச் சென்னை நகரம் தவிர வேறு நகரங்களிலே அமைக்க உத்தேசம் இருக்கிறதா? இப்பொழுது பல நகரங்களில் தாழ்த்தப்பட்டவர்கள், நகரசுத்தித் தொழிலாளிகள் வீடுகள் இல்லாமல் குடிசைகளில் சுகாதாரக் கேடான நிலைமையிலே குடியிருக்கிறார்கள். நகரத்தைச் சுத்தப் படுத்தக்கூடியவர்கள் சுகாதாரம இல்லாத குடிசைகளில் வசிக்கிறார்கள். ஆகவேதான் கேட்கிறேன், முக்கியமாக நகரங்களில் எல்லாம் இப்படி குடிசை மாற்றுக் வாரியக் குடியிருப்புகளை அமைக்க அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தடுத்த கேள்விகளில் இந்தப் பதில் வருகின்றது. அதனால் தான் பதிலை அப்பொழுது சொல்லலாம் என்று இருந்தேன். இப்பொழுதே சொல்லிவிட்டால் நேரம் குறைந்துவிடும் என்ற காரணத்தால், இப்பொழுது சொல்லிவிடுகிறேன். தமிழகம் பூராவும் குடிசைகள் எங்கெங்கு இருக்கின்றனவோ, அங்கெல்லாம் இந்தக் குடிசை மாற்று வாரியம்

[1983 பிப்ரவரி 11

சலவைத் தொழிலாளர் 'துணியைத் துவைத்து நம்மிடம் திருப்பிக் கொடுக்கிறான். அதைமட்டும் போட்டுக்கொண்டு அப்படியே விட்டு விட முடியுமா? உள்ளே பனியன் போட வேண்டியிருக்கிறது. அந்தப் பனியனை நாம் சுத்தம் செய்துதான் போட்டுக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் வியர்வை நாற்றம் அடிக்கும். எனவே எல்லாவற்றிற்குமே சலவைத் தொழிலாளியை நம்பியிருக்கமுடியுமா? பனியனை நாம் துவைக்க வேண்டும்; சட்டையை மாற்ற வேண்டும். ஆகவே, அரசு செய்ய வேண்டிய காரியங்களை அரசு செய்யும். அதற்கு அங்கே குடியிருப்பவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தெருவைச் சுத்தம் செய்வது, பள்ளி [illegible] சுத்தம் செய்வது ஆகிய இவைகளையெல்லாம் அரசு செய்து கொண்டுதான் இருக்கிறது. இன்னும் என்னென்ன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்குவார்களேயானால்,

It is receptive to public suggestions என்பதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

திரு. கு. மணி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பேசும்போது * * என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். அதை அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அந்த வார்த்தையை எடுத்துவிட்டு, சலவைத் தொழிலாளி என்று வைத்து விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * என்ற சொல் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு, சலவைத் தொழிலாளி என்று மாற்றப்படுகிறது.

***வினா எண் 230**—திரு. சி. கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டிக் கொடுக்கப்படும் ஒரு வீட்டின் மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சென்னை நகரில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டி கொடுக்கப்படும் ஒரு வீட்டின் தற்போதைய மதிப்பு ரூ. 14,400 ஆகும்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1983 பிப்ரவரி 11]

## நகர்ப்புறங்களில் குடிசை மாற்று வாரியப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதி ஒதுக்கீடு

***வினா எண் 231**—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு தமிழகத்தில் உள்ள நகர்ப்புறங்களில் குடிசை மாற்று வாரியப் பணிகளை மேற்கொள்வதற்காக வீட்டு வசதி வாரியத்திற்கு நிதி ஒதுக்கீடு கொடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) அதனால் பயன்பெறும் நகரங்கள் எவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) இப்பணிக்கென நடப்பு நிதியாண்டு 1982-83 நிதிநிலை அறிக்கையில் ரூ. 300 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

(இ) சென்னை நகருக்கு வெளியே மற்ற எல்லா மாவட்டங்களிலும் குடிசைப்பகுதிகள் நிறைந்த அனைத்துப் பகுதிகளும் இதனால் பயன்பெறும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகருக்கு அடுத்துள்ள எல்லா மாவட்டங்களிலும் பயன்படும் என்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். எல்லா மாவட்டங்களிலும் என்று சொல்லும்பொழுது முக்கியமான நகரங்களை அறிவிப்பார்களா? முதலில் எந்தெந்த நகரங்கள் என்று தேர்ந்தெடுக்கும் பொழுது எந்தத் தகுதியின் அடிப்படையிலே இந்த நகரங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சொன்னது, ''எல்லா மாவட்டங்களிலும் குடிசைப் பகுதிகள் நிறைந்த அனைத்துப் பகுதிகளும் இதனால் பயன்பெறும்'' என்பது. தகுதியின் அடிப்படையிலே, ஆங்காங்கு இருக்கும் பொது மக்களுக்குத் தொண்டு செய்கின்ற தங்களைப் போன்ற மாண்புமிகு உறுப்பினர்கள், மற்றவர்கள், கட்சிகளைச் சேர்ந்தவர்கள் முறையீடுகளை ஆங்காங்கே உள்ள குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம் ஆகியவைகளிடத்தில் சொல்லி, அவர்கள் பரிந்துரை செய்து, அரசு அதைப் பரிசீலித்து, எதற்கு பிரையாரிட்டி கொடுக்க வேண்டுமென்பதையெல்லாம் பார்த்து, அந்தந்த நிலைமைக்கேற்ப, நிதி ஆதாரத்தையும் மனதில் வைத்துக்கொண்டு அவ்வப்பொழுது பணிகளை எடுத்துக்கொள்ளும்

[1983 பிப்ரவரி 11

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்காக அரசு 300 இலட்சங்கள் ரூபாயை ஒதுக்கியிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். தமிழகத்திலே இருக்கின்ற எல்லா மாவட்டங்களிலேயும் உள்ள குடிசைப் பகுதிகளில் இதுபோன்ற வீடுகளைக் கட்ட, ஏதாவது ஐந்தாண்டுத் திட்டம் மாதிரி போட்டு, இத்தனை ஆண்டுகளுக்குள் கட்டப்பட வேண்டுமென்று குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா? மொத்தம் கட்டிக் கொடுப்பதற்கு எவ்வளவு ரூபாய் தேவைப்படும் என்பதை அரசு அறிந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9·50)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் , மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமாக கட்டுவதற்கு எவ்வளவு ரூபாய் தேவைப்படுகின்றது என்பதற்கான ஆய்வு இன்னும் மதிப்பிடப்படவில்லை. இந்த குறிப்பிலேயும் அது இல்லை. இப்போது மதுரை, சேலம் போன்ற இடங்களில் ' ஹட்கோ உதவியோடு பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்களுக்கான குடியிருப்புகளும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர்களுக்கான குடியிருப்புகளும் உயர் வருவாய்ப் பிரிவினர்களுக்கான குடியிருப்பும் கட்டுவதற்கு ஒரு கூட்டுத் திட்டத்திற்கு' காம்போசிட் ஸ்கீம் ' அரசு ஒப்புதல் அளித்துள்ளது. (குறுக்கிடு) அது இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை. இப்போது நான் உத்தரவுகள் போட்டுக்கொண்டிருக்கின்றனை என்று சொன்னேன்

குடிசைமாற்று வாரியத்தினுடைய பணிகளை மற்ற இடங்களுக்கு விரிவாக்கும் உத்தரவு சென்றுக்கொண்டிருக்கிறது. இட் இஸ் ஆன் தி வே. அதை கன்சிடர் செய்து அனுப்பிக் கொண்டிருக்கிறோம். அது முடிந்தபிறகு எந்தெந்த இடத்தை எடுத்துக் கொள்வது என்று நான் ஏற்கனவே சொன்னதைபோல கொஞ்சம் புஷ். கொஞ்சம் பிரஷர். இதெல்லாம் பாலிடிக்ஸ்லே இருக்க வேண்டும். அதை அங்கே இருக்கக்கூடியவர்கள் எடுத்து அரசுக்கு சொல்வதன் மூலமாக, அரசு கவனத்திற்குக் கொண்டுவருவதன் மூலமாக, அந்தந்த இடங்களுக்கு முன்னுரிமை பெற்று காரியத்தை முடித்துக் கொள்ளவேண்டும். பணம் இன்னும் அதிகமாக தேவை என்று தெரிந்தால் அரசை அணுகி பணத்தைப் பெறுவதற்கும், ஹட்கோ—விலிருந்து நிதி பெறுவதற்கும், அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும்.

திரு. கோவைத்தம்பி , பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடிசைகள் நகரின் மையப் பகுதியிலே அமைந்திருக்கின்றன. அப்படி இந்த குடிசைகள் இருக்கும் இடங்கள் மிகவும் விலை உயர்ந்த பகுதியாக இருக்கின்றன. சென்னை நகரில் அலந்து தியேட்டர் பின்புறத்திலும், கோவையில் பஜாரிலும் இப்படிப்பட்ட குடிசைகள் இருக்கின்றன. அங்கே ஒரு கிரவுண்டு ஒரு லட்சம் 2 லட்சம் என்று விற்கின்ற நிலையில் இருக்கின்றன. ஆகவே குடிசை



1983 பிப்ரவரி 11]

மாற்று வாரியம் புதிய வீடுகளைக் கட்டுகின்றபோது நகரத்தை விட்டு கட்டிக் கொடுக்குமா ? இந்த மையப் பகுதியிலே உள்ள நிலத்தை விற்றுவிட்டு, அதையே முதலீடாக வைத்துக் கட்டினால் அரசின் செலவும் குறையும். எனவே இதை ஆலோசித்து அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வியை சரியாகப் புரிந்துக்கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன். இதிலுள்ள சிக்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த குடிசைப்பகுதிகளை குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடு கட்டித்தருவதற்கு நாம் எடுத்துக்கொள்ளும்போது, அரசு நிலம், கார்ப்பரேஷன் நிலம், நகராட்சிக்குச் சொந்தமான நிலம் இப்பேர்ப்பட்ட நிலங்களை எடுத்துத்தான் முதலில் கட்டுவது உசிதமாக இருக்கிறது. இதற்கு மாறாக தனியார்களுக்குச் சொந்தமான இடங்களிலே குடிசைகளைப் போட்டிருக்கிறார்கள். அந்தக் குடிசைவாசிகளிடம் இருந்து ஒரு பைசாகூட அந்தத் தனியாருக்கு வருவதில்லை. 10 ஏக்கர் இருக்கிறது என்றால் அந்த பத்து ஏக்கர் நிலத்தை யாராவது குடிசைவாசிகள் ஆக்ரமித்து அவர்கள் காலணா கூட அந்த முதலாளிகளுக்குத் தருவதில்லை. அந்த இடத்தை எடுத்து நாம் குடிசைமாற்று வாரிய வீடுகள் கட்டலாம் என்று சொல்லி இந்த நிலச்சுவான்தாரர்களிடம் அணுகினால், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல ஒரு கிரவுண்டு 2 லட்ச ரூபாய் என்று விலை சொல்லுகிறார்கள். எப்படி முடியும் ? ஒரு பைசா கூட அவர்களுக்கு இப்போது கிடைப்பதில்லை. எனவே ஒரு நியாயமான விலையாக ஒரு கிரவுண்டு 5 ஆயிரம், 4 ஆயிரம் என்று இப்படிப் பேசித் தீர்ப்பதற்கு அவர்க முன் வருவார்களேயானால் பணத்தைக் கொடுத்து அந்த நிலத்தை எடுத்து நாம் வீடுகளைக் கட்டலாம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஆங்காங்கு இருக்கக் கூடிய ஊரிலே செல்வாக்குள்ள பெரிய மனிதர்கள் இடத்தில், தங்களுடைய செல்வாக்கை உபயோகப்படுத்தி அவர்கள் குறைந்த விலையில் இந்த நிலங்களை அரசுக்குக் கொடுக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தை உபயோகித்து அரசின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விலைக்குக் கொடுத்தால் அவரவர்களே வாங்கிக் கொள்வார்கள். அரசாங்கத்திற்குத் தர மாட்டார்கள்.

## சென்னை பட்டினப்பாக்கத்திலுள்ள அரசு அலுவலர் குடியிருப்புகள்.

* வினா எண் 232—திரு. மு. அம்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் பின்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பட்டினப்பாக்கம் அரசு அலுவலர் குடியிருப்புகளில் கழிவுநீர்க் குழாய்கள் பழுதடைந்து கழிவுநீர் எப்போதும் சாலைகளில் தேங்கிக் கிடப்பதை அரசு அறியுமா ?

(ஆ) அக்குழாய்களை மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) கழிவு நீர்க் குழாய்கள் தற்போது மாற்றி அமைக்கப் பட்டுள்ளது.

திரு. மு. அம்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் இந்த பதிலை அளிப்பார் என்பதை நான் நன்றாக அறிவேன். ஆகவே தான் இந்தக் கேள்வி இன்றைக்கு வரும் என்று தெரிந்து அந்தப் பகுதியை நேற்றுப் பார்வையிட்டேன். இன்றைக்கும் அங்கே தெருவில் சாக்கடை ஓடிக் கொண்டு தான் இருக்கின்றது. எனவே அமைச்சர் அவர்கள் இன்றைக்காவது அங்கே சென்று பார்த்து, உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தக் குறையை நீக்குவதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் உள்ள குறிப்பை நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அக்கறையோடு இன்றைய தினம் சென்று பார்வையிட்டு, அப்படித்தான் இருக்கிறது என்று சொல்லுகிறார். அந்தத் தொகுதியிலேதான் நானும் வசிக்கிறேன். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரோடு கலந்து பேசி நிச்சயமாக ஆவன செய்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பாதுரை : தலைவர் அவர்களே., அந்தத் தெருவிலே இருக்கக்கூடிய குழாய்களில் இருந்து கழிவு நீர் கசிந்து கொண்டு இருக்கிறது. வீடுகளிலும், மாடிகளிலும் உள்ள குழாய்களில் இருந்து இந்த கழிவு நீர் கசிகிறது. இவைகளை மாற்ற சிமெண்ட் குழாய்கள் போடப்படுகின்றன. அவைகளை மாற்றி உறுதியான குழாய்களை அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, எந்த குழாய் உறுதியானது என்று இன்ஜினியர்களைக் கலந்து ஆவன செய்யப்படும்.



## *Vehicles to Labour Court Judges.*

* Q. No. 233– Thiru J. HEMACHANDRAN : Will the Hon. the Minister for Labour be pleased to state .

(a) Whether Government vehicles have been provided for the Judges of Labour Courts : and

(b) if not, whether steps will be taken by the Government to provide vehicles to them ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை. (ஆ) மாவட்ட கூடுதல் நீதிபதிகளாகவும் தொழில் நீதிமன்றங்கள் மற்றும் தொழிற் தீர்ப்பாய நடுவர்களாகவும் மற்றும் உயர்நீதி மன்ற பதிவாளராகவும் பணிபுரியும் மாவட்ட நீதிபதி நிலைமையில் உள்ள நீதித்துறை அலுவலர்களின் உபயோகத்திற்காக வாகனம் கொடுப்பது பற்றி கருத்து அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. ஜெ. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஒரு தொழில் நீதிமன்றத்தில் 4 மாவட்டங்கள், 5 மாவட்டங்களில் உள்ள கேஸ்கள் நடக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு மாவட்டத்திற்கு அவர்கள் ஒரு கேம்ப் கோர்ட்டாக மாதத்திற்கு ஒரு தடவைதான் வந்துகொண்டிருக்கிறார்கள். அதிலேயும் பல பழைய ரிஜீஸ்டர்கள் எவிடென்சாக மார்க் பண்ணக்கூடிய நேரத்திலே அந்த ரிக்கார்டுகள் கொண்டு போவதற்கு வசதியில்லை என்று சொல்லி பல நேரங்களிலே, பல ரிக்கார்டுகள் இல்லாமல் சாட்சிகளை விசாரிக்க முடியாமல் வாய்தா கேட்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், நாகர்கோவிலிலிருந்து மதுரைக்கு வந்து வழக்கு நடக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே இப்படி தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளிலே காலதாமதம் ஏற்படுவதற்கு காரணமாக இருப்பதாலே இந்த நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கு வாகனம் கொடுப்பதற்கு அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கூடுமான வரையில் தாமதம் இல்லாமல் தான் இருக்கிறது. எங்கே அதிகமாக வழக்குகள் தேங்கியிருக்கின்றன என்று கருதப்படுகிறதோ அந்தப் பகுதியில் கூடுதலாக தொழில் நீதி மன்றங்கள் நியமிக்கப்படுகிறது. உதாரணமாக கூடுதல் தொழில் நீதிமன்றம் மதுரைக்கு 6 மாதத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. எனவே வழக்குகள் அதிகம் தேங்கிவிடாமல் பார்ப்பதற்கு அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல வாகனம் கொடுப்பதற்கு அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

[1983 பிப்ரவரி 11

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூடுதல் நீதிமன்றம் நியமிக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் அந்த நீதிமன்றத்தினுடைய தலைமை ஸ்தானம் மதுரைதான். ஆகவே கூடுதல் நீதிமன்றம் நியமிக்கப்பட்டாலும் இந்த அடிப்படையான பிரச்னைகளுக்கு ஒரு தீர்வு ஏற்படவில்லை. அதுமட்டுமல்ல, பத்திரிகையிலே கூட படித்தோம். மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு கூட வாகனம் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னதாக. ஆகவே அந்தப் பின்னணியில் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு வாகனம் கொடுப்பதற்கு முன்னாலே இந்தத் தொழில் நீதிமன்ற நீதிபதிகளுக்கு வாகனம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு வாகனம் கொடுப்போமேயானால் நம்முடைய கேஸ்கள் ரொம்ப ஸ்ட்ராங்காகிவிடுகிறது. எனவே அதைக் காண்பித்து தொழிற்சங்கத் தலைவர்கள் என்ற முறையில்—எனக்கு அனுபவம் இருக்கின்ற காரணத்தால்—இங்கே இருக்கக்கூடிய பிரைசைடிங் ஆபீசர்களுக்கு வாங்குவதற்கு சுலபமாக இருக்கும். அப்படி அது வந்துவிட்டால் அதையும் வாங்கலாம். ஆனால் இப்போது, அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. மதுரையிலே ஏற்கனவே தொழில் நீதி மன்றம் இருக்கிறது. அடிஷனல் ஆக மதுரையிலே இன்னொன்று போட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அதை திருநெல்வேலி போன்ற இடங்களில் இருக்கவேண்டுமென்று கருதுகிறார்கள் என்று கருதுகிறேன். இவைகளில் எல்லாம் வழக்குகள் தேங்கிவிடும் என்ற அச்சம் ஏற்படுமானால் அப்பேற்பட்ட யோசனைகளைப் பரிசீலனை செய்யலாம்.

*Gunampa'lam Ajjancha.li Tank in P nnaga: am taluk.*

* Q No. 200 THIRU T. VENKATA REDDY ; Will the Hon. the Mfnister for irrigaton be pleased to state—

(a) whether the Government will take up the construction of "Gunampallam Ajjanahalli Tank" in Pennagaram Taluk, Dharmapuri Distric : and

.. (b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) தருமபுரி மாவட்டம், கூனம்பள்ளத்தின் குறுக்கே மூங்கில்மடுவு கிராமத்தின் அருகில் ஒரு ஏரி அமைப்பதற்கு அரசு ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. சில வேலைகளும் நடந்துள்ளன

(ஆ) இத் திட்டத்திற்கான திருத்திய மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்து இருக்கிறது.



1983 பிப்ரவரி 11]

திரு. மு. ப. முனுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் இந்த திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டிலே இந்த திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு இந்த திட்டத்தை நிறைவேற்றுகின்ற ஒப்பந்தக்காரர்கள், சரியான முறையில் நிறைவேற்ற முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டது. எனவேதான் திருத்திய மதிப்பீடுகளுக்கு அரசு ஒப்புதல் அளித்து உள்ளது. அந்த திட்டம் விரைவாக நடத்தி முடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10.30)

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, பென்னாகரம் வட்டத்தில் கூனம்பள்ளம் அஜ்ஜனஹள்ளி ஏரியை அமைக்கும் பணியை இந்த ஆண்டு எடுத்துக்கொண்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதற்கான மதிப்பீடு எவ்வளவு? அந்த ஏரியின் கீழ் பாசனம் பெறும் நிலங்கள் எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, 1970-ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டபோது ரூ. 7.20 லட்சம் என்று முதலில் மதிப்பிடப்பட்டது. பிறகு அது ரூ. 20.50 லட்சம் என்கிற அளவிற்கு மாற்றப்பட்டு, இப்போது ரூ. 26 லட்சம் என்று திருத்திய மதிப்பீட்டை அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிறது.

மேற்கு நோக்கிப்பாயும் நதிகளின் நீரைப்பயன்படுத்துவது குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட 'கமிஷன்'

* வினா என் 201—திரு. ப. நெடுமாறன் ; மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மேற்கு நோக்கிப்பாயும் நதிகளின் நீரைப்பயன்படுத்துவது சம்பந்தமாக மத்திய கமிஷன் ஏதேனும் அமைக்கப்பட்டதா?

(ஆ) அந்த கமிஷன் அளித்துள்ள பரிந்துரைகள் என்ன?

(இ) இது சம்பந்தமாக தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

பற்றியது. அதற்கான முழு விபரத்தையும் சொல்லியிருக்கிறேன். எடுத்து வருகின்ற முயற்சிகளையும் சொல்லியிருக்கிறேன். மீண்டும் சொல்ல வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட வேண்டும்.

உத்தப்பநாயக்கனூர் அருகிலுள்ள மலட்டு ஓடையின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

*வினா எண் 202—திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தொகுதி உத்தப்ப நாயக்கனூர் அருகில் உள்ள மலட்டு ஓடை நீர்ப்பாசன அணைக் கட்டுத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ)மற்றும்(ஆ); மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தொகுதி உத்தப்பநாயக்கனூர் அருகில் மலட்டு ஓடையின் குறுக்கே ரூ. 22·71 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு ஏரி அமைக்கும் திட்டத்திற்கு அரசு நடப்பு ஆண்டு மே மாதம் ஒப்புதல் அளித்துள்ளது. வேலை விரைவில் துவங்கப்படும்.

பெரியாறு வைகை பாசனத் திட்டம்.

*வினா எண் 234—திரு. மெ. ஆண்டிஅம்பலம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார்—வைகை நீர்ப்பாசன புதுப்பிக்கும் திட்டத்தின்கீழ் புதுப்பிக்கப்பட்ட நீர்ப்பாசன வசதியின் அளவு என்ன?

(ஆ) இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் கிராமங்கள் எத்தனை?

(இ) இந்த திட்டத்தின் மேம்பாட்டிற்கு குழு ஒன்று அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) 25,463 ஏக்கர் நிலங்களுக்கு புதிதாகப் பாசன வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) இத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் கிராமங்கள் 302.

(இ) பெரியாறு—வைகை பாசனத் திட்டத்தை ஆய்வு செய்யும் பொருட்டும் கண்காணிக்கவும் அலுவலர் கொண்ட குழு ஏற்கனவே 1979-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு பெரியாறு மேம்பாட்டுத் திட்ட வேலைகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து, திட்ட சம்பந்தப்பட்ட குறைகளை நீக்க ஆலோசனைகள் வழங்குகிறது.





திரு. க. பாரமலை: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 25,463 ஏக்கர் நிலத்திற்கு புதிதாக பாசன வசதி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். இந்த வைகை நீர்ப்பாசன ஆயக்கட்டுகளைப் பொறுத்தவரையில், இப்போது தண்ணீர் வரத்து குறைந்துவிட்ட காரணத்தால் ஏற்கனவே பாசனம் பெற்ற பகுதிகள் முழுமையாகப் பயன்பெற முடியவில்லை. இரண்டாவதாக இந்த பெரியாறு பாசனம் மூலம் பல்வேறு புதிய விஸ்தரிப்புப் பணிகள் நடைபெறுகிற காரணத்தால் வைகையில் அதிகமான தண்ணீர் வரும்போது 'சர்பிளஸ் வாட்டர்' பெற்று பயன்பட்ட கிருதுமால் நதி பாசன பகுதிகளுக்கு இனிமேல் அந்தப் பயன் கிடைக்காமல் போய்விடும். ஆகவே வைகை அணைக்கட்டுக்குக் கீழே இருக்கிற பகுதியைப் பொறுத்தவரையில், பெரியாறு—வைகை என்று பிரித்துப் பார்க்காமல் ஒட்டு மொத்தமாக பெரியாறு—வைகை பாசனப் பகுதி ஆயக்கட்டுகள் என்று கணக்கில் எடுத்துக் கொண்டு, அவைகளை பாதிக்காமல் புதிய திட்டங்களைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது தெரிவித்திருக்கக்கூடிய கருத்தை அரசு ஏற்கனவே தெளிவாக பரிசீலனை செய்திருக்கிறது. வைகை நதி நீர் பாசனம் பெற்று வருகிற நிலம் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்ற யோசனையை கூறியிருக்கிறார்கள், பொதுவாக நாம் புதுத் திட்டங்களைச் செயல்படுத்தும்போது ஏற்கனவே பயன்பெறும் பகுதிகள் பாதிக்காமல் பார்த்து வருகிறோம். இங்கும் இந்த இரண்டு பிரிவு நிலங்களும் பாதிக்காமல் பார்த்து வருகிறோம். இருந்தாலும் தனி சட்ட திட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வை ஏற்றுக்கொள்கிறேன். அது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த பெரியாறு—வைகை நீர்ப்பாசனத்தைப் புதுப்பிக்கும் திட்டத்தின்கீழ் அதிகமான கிராமங்கள் பயன்பெறும் என்று சொன்னார்கள். அந்த கிராமங்கள் எந்த எந்த வட்டாரத்தைச் சேர்ந்தவை? ஒவ்வோரு வட்டாரத்திலும் எத்தனை கிராமங்கள் பயன்பெறும்? ஏற்கெனவே இந்த புதுப்பிக்கும் திட்டத்தின் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் தண்ணீர் கொண்டு போகலாம் என்ற கருத்து சொல்லப்பட்டது. அந்தக் கருத்து அல்லது யோசனை ஏதாவது இப்போது நடைமுறைக்கு வந்திருக்கிறதா அல்லது நடைமுறைக்கு வரும் சாத்தியக்கூறு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்,

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** தலைவரவர்களே, 302 கிராமங்கள் பயன்படும் என்று சொன்னேன். குறிப்பாக மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி, திருமங்கலம், நிலக்கோட்டை, மேலூர் வட்டங்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர், சிவகங்கை, கிழக்கு இராமநாதபுரம் வட்டங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த கிராமங்கள் இதிலே இடம்பெறுகின்றன. பெரிய பட்டியலாக இருப்பதால் எந்த எந்த கிராமங்கள் என்று பிரித்து சொல்ல முடியவில்லை.

## மதுராந்தகம் ஏரி

***வினா எண் 235—திரு. எஸ். டி. உகம்சந்த்:** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் பெரிய ஏரியில் ஆக்கிரமிப்புகள் உள்ளதா?

(ஆ) மதுராந்தகம் பெரிய ஏரியிலிருந்து தனியார்களால் பம்புசெட்டுகள், Oil Engine மூலம் நீர் எடுக்கப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில் அவைகளை அப்புறப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) மற்றும் (ஆ) : ஆம்.

(இ) ஆக்கிரமிப்புக்காரர்களை அகற்றுவதற்கு வருவாய்த் துறை அதிகாரிகளின் உதவியுடன், அவர்களுக்கு நோட்டீசுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

(முற்பகல் 10.10)

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி சட்ட விரோதமாக ஆக்கிரமிப்புச் செய்தவர்கள் மிகவும் வசதி படைத்தவர்கள். அவர்கள் ஆக்கிரமிப்பு செய்த இடத்தில் ஆயில் எஞ்ஜினைக் கொண்டு விவசாயம் செய்து கொண்டு வருவதோடு, இறைக்கும் தண்ணீரைக் கூட மற்றவர்களுக்கு கட்டணம் வசூலித்துக் கொண்டு கொடுத்து வருகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இந்தச் சட்ட விரோதமான காரியத்தை தடுக்கும் வகையில் அந்த ஆயில் என்ஜினைக் கைப்பற்ற அரசு முன்வருமா? மேலும் அந்த இடங்களில் மரங்களை நட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகளில ஆக்கிரமிப்பு செய்பவர்களை அகற்றி அந்த இடங்களுக்கு அருகாமையில், சமூக காடுகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மரங்களை நடுகிற பணிகளில் வனத்





துறையோடு சேர்ந்து, இந்தத் துறை ஈடுபட்டிருக்கிறது. அந்தப் பணியை இந்தப் பகுதிக்கும் விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல் ஆக்கிரமிப்பு செய்தவர்கள் சில தனியார்கள் 5 குதிரை சக்தி உள்ள ஆயில் என்ஜினை வைத்துக் கொண்டு பாசனம் செய்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. அதை அப்புறப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட விரோத ஆக்கிரமிப்பால் ஏரியின் கொள்ளளவு குறைந்துள்ளது. அதனால் ஏரியைத் தூர்வார அரசாங்கத்தில் திட்டம் ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது,

**திரு. எஸ். ஏ. பூங்காவனம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான இடங்களில் தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து பல்வேறு காரணங்களுக்கு அதனைப் பயன்படுத்துகிறார்கள். அதுவும் வசதி படைத்த சிலரும் இதில் ஈடுபடுகிறார்கள். ஆனால் அவர்களை அப்புறப்படுத்துகையில் வேறு பல இடங்களில் அரசு நோட்டீஸ் கொடுக்காமலேயே அப்புறப்படுத்துகின்ற நடவடிக்கை எடுக்கின்ற நிலை இருக்கையில், இந்த வசதி படைத்தவர்களுக்கு மட்டும் ஏன் நோட்டீஸ் கொடுக்க வேண்டும்? அப்படி நோட்டீஸ் கொடுப்பதினால் அவர்கள் கோர்ட்டுக்கு செல்லக்கூடிய நிலை ஏற்படுகின்றதே, அதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சில இடங்களில் இப்படி ஆக்கிரமிப்பு செய்தவர்கள் நிரந்தரமாக பயிர் செய்கிற சூழ்நிலையில் இருக்கிறது. ஆகவே நோட்டீஸ் கொடுத்து விட்டு, அவர்களை அப்புறப்படுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. வேறு சில இடங்களில் ஏரிகளின் கொள் அளவு நிரம்புகிற காலத்தில், ஆக்கிரப்பாளர்கள் அவர்களாகவே வெளியேறுகிறார்கள், திரும்பவும் அவர்கள் வருவதற்குள்ளாக வனத்துறையின் உதவியோடு அங்கே மரங்களை நடுகிற பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். அப்படி உடனே வந்து விட்டால் அவர்களை, நோட்டீஸ் கொடுக்காமலேயே அப்புறப்படுத்துகிறோம். சில இடங்களில் அவர்கள் நிரந்தரமான ஏற்பாடுகளை செய்யக்கூடிய நிலை ஏற்பட்டிருந்தால், அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கிறோம்.

[1983 பிப்ரவரி 11

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) ஆம் ஒரு தொழில் நுட்பக் குழு அமைக்கப்பட்டது.

(ஆ) கேரளத்தில் உள்ள அச்சன்கோவில் ஆறு, கல்லட வேம்பனாபுரம் ஆகிய படுகைகளில் கிழக்கு நோக்கி தமிழகத் துக்குத் திருப்ப உபரிநீர் உள்ளது எனவும் இப்படுகைகளில் உள்ள உபரி நீரைத் திருப்பிவிடுவதற்கான திட்டங்களின் ஆய்வு மேற் கொள்ள கேரள அரசுடன் தமிழக அரசு பேச்சு வார்த்தைகள் தொடங்கலாமெனவும் தொழில்நுட்பக் குழு பரிந்துரைத்துள்ளது.

(இ) மேற்படி பரிந்துரைக்கிணங்க கேரள அரசுடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

**திரு. எ. பி. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கு நோக்கிப் பாயும் நதிகள் மூலம் நமக்குக் கிடைக்கும் நீர் அளவு பற்றிச் சொன்னார்கள். தமிழகத்தை நிரந்தரமான முறையில் வறட்சி நிலையில் இருந்து காப்பாற்ற வேண்டுமானால், கங்கையையும் காவிரியையும் இணைக்கும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக்கேள்வி மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் நீரைப் பயன்படுத்துவது பற்றியதாகும். கங்கையும் காவிரியும் மேற்கு நோக்கிப் பாயும் நதிகள் அல்ல.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் ;** தலைவர் அவர் களே, மாநில அரசு நியமித்த தொழில் நுட்பக்குழு எத்தனை முறை கூடியது? அந்த தொழில் நுட்பக் குழுவுக்கு மாநில அரசு வழங்கிய ஆலோசனை என்ன? அதன் அடிப்படையில் தொழில் நுட்பக்குழு இறுதியாக எடுத்த முடிவுகள் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, மேற்கு நோக்கிப் பாயும் நதிகளில் உபரி நீரை கிழக்கு நோக்கிப் பாயச் செய்யும் சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்வதற்காக மத்திய அரசு 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் கேரளம், கர்நாடகம், மற்றும் தமிழகம், ஆகிய மாநிலங்களின் தலைமைப் பொறியாளர் மற்றும் மத்திய அரசின் நீர் வளக்குழுவின் நிபுணர் அடங்கிய குழுவை அமைத்தது. அந்தக் குழு கிட்டத்தட்ட 10 முறை கூடியது. ஏற்கனவே அந்தக் குழுவிற்கு தமிழக அரசு ஒரு குறிப்புரை அளித்து இருக்கிறது. அதன்படி 82 டி. எம். சி. நீரை திருப்பி கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் பாய்வதற்கு வழி செய்வதன் மூலம் 8.20 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்க முடியும் என்று நாம் ஏற் கனவே பரிந்துரை கொடுத்து இருக்கிறோம். அதற்குப் பிறகு அந்தக் குழு கூடி இறுதியாக 46:73 டி. எம். சி. நீர் உபரியாக



1983 பிப்ரவரி 11]

உள்ளது என்று தோராயமாக ஏற்றுக் கொண்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் இப்போது பேச்சு வார்த்தைகள் நடந்து வரு கின்றன.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே. இந்தத் தொழில் நுட்பக் குழுவின் இறுதி அறிக்கை எப் போது கிடைத்தது? அந்த அறிக்கையின் மீது நாம் இப்போது அமல்படுத்த சிபாரிசு செய்து இருக்கிற திட்டத்திற்கு என்ன செலவு மதிப்பிடப்பட்டு இருக்கிறது? அதை விரைவாக நடத்து வதற்கு என்ன நடவடிக்கைகளை அரசு எடுக்க இருக்கிறது என் பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது ,** தலைவர் அவர்களே, இதுபற்றி ஏற்கனவே நான் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறேன். அந்தக் குழு பல்வேறு வகைகளில் பரிசீலனை செய்தது, ஒவ் வொரு மாநிலத்தின் குறிப்புரை என்ன என்று கேட்டறிந்தார்கள். தமிழ்நாடு ஏற்கனவே மிகத் தெளிவாக கூறியிருக்கிறது 82 டி. எம். சி. தண்ணீரை திருப்பி விடலாம், அதனால் இன்னின்ன மாவட்டங்கள் பயன்பெறும், 8.20 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிருக்கிறோம். ஆரம்பத்தில் இந்தக் குழு கூட்டங்களில் கலந்து கொள்ளாத கேரள அரசு பின்னர் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்த பின்னர், மொத்தம் 46·73 டி. எம். சி. தண்ணீர் உபரியாகக் கிடைக்கும் என்று தோராயமாகக் கணக்குச் சொல்லியிருக்கிறார் கள். அந்த அடிப்படையில் இப்போது பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டு இருக்கிறோம்.

**திரு, பாபு ஜனார்த்தனன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் மூலம் கிடைக்கும் உபரி நீரின் அளவு 46·73 டி. எம். சி. என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதிலே எவ்வளவு நமக்குக் கிடைக்கும் என்று தெரியாது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில நாட் களுக்கு முன் மகாநதி, கிருஷ்ணா, காவேரி, தாமிரவருணி போன்ற நதிகளை ஒருங்கிணைக்கும் திட்டத்தை எல்லா மாநில அரசு களுடனும் கலந்து நிறைவேற்றினால் சிறப்பாக இருக்கும் என்று சொன்னார்கள். ஆகவே, இந்த மேற்கு நோக்கிப் பாயும் நதி களைத் திருப்பிவிடும் திட்டம் சரியானதா அல்லது மகாநதி, கிருஷ்ணா, தாமிரவருணி போன்ற நதிகளை இணைக்கும் திட்டம் சரியானதா, இதில் எது சரியானதாக இருக்குமோ அதை விரை வில் அமல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவரவர்களே, இந்தியாவிலேயே ஓடுகின்ற நதிகள் மட்டுமல்ல; அண்டை நாடு களில் ஓடுகின்ற நதிகளை எல்லாம் திருப்பி விட்டால் கூட தமிழ் நாட்டின் தேவைக்குப் போதாது; அந்த அளவுக்கு நமக்குத் தேவை இருக்கிறது. இப்போது இங்கே வந்திருக்கக்கூடிய கேள்வி; மேற்கு நோக்கிப் பாயும் நதிகளை கிழக்கே திருப்பிவிடுவது

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் வழங்கப்படும் கடனுதவி

*வினா எண். 236—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் புதிதாக தொடங்கப்படும் தொழிற்சாலைகளுக்கு வாங்கப்படும் புதிய இயந்திரங்களுக்கு மட்டுமே கடன் வழங்குகிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதை மாற்ற அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** (அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் பொதுவாக உபயோகப்படுத்தப்பட்ட இயந்திர தளவாடங்களை வாங்குவதற்கு தொழிற்சாலைகளுக்கு கடனுதவி வழங்குவதில்லை. எனினும், தொழில்களுக்கு தேர்வு அடிப்படையில் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியால் வரையறுக்கப்பட்ட குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் உபயோகப்படுத்தப்பட்ட இயந்திர தளவாடங்களை வாங்குவதற்கு கடனுதவி அளித்து வருகிறது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட இயந்திரங்கள் கிடைக்காத நிலை இருப்பதன் காரணமாக பல ஆயிரக்கணக்கில் தொழில்கள் தொடங்கப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக வேடசந்தூர் தொகுதியிலும் திண்டுக்கல் பகுதியிலும் 15-க்கும் மேற்பட்ட நூற்பாலைகள் இருக்கின்றன. அவர்கள் நூற்பாலைகள் ஆரம்பிப்பதற்கான லைசன்சுகளை வாங்கி வைத்து இரண்டாண்டுகள் ஆகியும் கூட தொழிலை தொடங்க முடியாத நிலை இருக்கிறது. ஏன் என்றால், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் புதியதாக வாங்கப்படும் இயந்திரங்களுக்கே கடன் கொடுக்க முன் வருவதால் பழைய இயந்திரங்கள் மிக சகாய விலைக்கு வந்தாலும் கூட வடநாட்டிலுள்ள பெரிய மில்காரர்கள் இந்த மில்களுக்கு வேண்டிய இயந்திரங்களை வாங்கி ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள்ளாக விற்பனை செய்கின்றனர். ஆகவே அத்தகைய இயந்திரங்களை வாங்க முடியாத நிலை ஏற்படுகிறது.

எனவே ஒரு குறிப்பிட்ட காலம் நிர்ணயித்து இவ்வளவு ஆண்டுகளுக்குள் இருந்தால் பழைய இயந்திரங்களை வாங்கினாலும் கடன் கொடுக்கப்படும் என்கிற வகையில் கொடுப்பதற்கு அரசு முன்வருமா, பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக செகண்ட் ஹேண்ட் மெஷின்கள் வாங்குவதற்கு ஐ.டி.பி.ஐ. நிறுவனம் அனுமதி வழங்குவதில்லை. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் நாம் கொடுக்கும் கடன்களை ஐ.டி.பி.ஐ. ரீஃபைனான்ஸ் செய்கிறது. ஆனால் ஒட்டு மொத்தமாக எல்லா தொழிற்சாலைகளிலும் செகண்ட் ஹேண்ட் மெஷின்களை உபயோகப்படுத்தக் கூடாது என்று ஐ.டி.பி.ஐ. நிறுவனம் முடிவெடுத்திருக்கிறது. ஆனால் நூற்பாலைகளுக்கு உபயோகப்படுகிற இந்த மஷின்களுக்கு மட்டும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல செகண்ட் ஹேண்ட் மெஷினை உபயோகப்படுத்த முடியுமா என்பது குறித்து, அதனுடைய தரம் எவ்வளவு ஆண்டுக்கு முன் வாங்கப்பட்டது, எவ்வளவு நாட்கள் பயன்படுத்தப்பட்டது, இன்னும் எவ்வளவு ஆண்டுகள் ரிப்பேர் ஆகாமல் உபயோகப்படுத்த முடியும். அப்படி செகண்ட் ஹாண்ட் மிஷின் போடுவதன் மூலம் ப்ராஜக்ட் காஸ்ட் எவ்வளவாகும், புது மிஷினுக்கும் பழைய மிஷினுக்கும் உள்ள டிஃபரன்ஸ் எவ்வளவு என்பதைப்பற்றி எல்லாம் ஆய்ந்த பிறகுதான் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் அதனை ஆய்வு செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். டி. உகம்சந்த்;** தலைவர் அவர்களே, இந்தத் தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக ஒரு சில தொழில்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் மருத்துவத் தொழிலைச் செய்கின்ற மருத்துவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் ஏதாவது கடன்கள் வழங்க அரசு ஆலோசனை செய்திருக்கின்றதா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் தொழிலுக்கு பொதுவாக டிஸ்பென்சரி கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒருசில பேர் மனு செய்திருந்ததாகத் தெரிகிறது. ஆனால் ஒரு தொழில் என்ற வரம்புக்குள்ளே டிஸ்பென்சரி கட்டிடம் கட்டுவது வரவில்லை, எனவே ஐ. டீ. பீ. எல். நிறுவனம் அதற்கு ரீஃபைனான்ஸ் கொடுப்பதில்லை. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமும் அதற்குக் கடன் வழங்குவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழ்நாட்டில் தொழில் நுட்ப ஆலோசனை நிறுவனம் ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண். 237—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழில்துறையில் தகுந்த தொழில் நுணுக்க ஆலோசனை வழங்குவதற்கான நிலையம் ஒன்று நிறுவும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு மதிப்பீடு, எப்பொழுது செயலுக்கு வரும்?

[1983 பிப்ரவரி 11

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு தொழில் மற்றும் தொழில் நுட்ப ஆலோசனை நிறுவனம் என்ற நிறுவனம் ரூ. 10 இலட்சம் மூலதனத்தில் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மற்றைய நிறுவனங்களுடன் சேர்ந்து தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு தமிழ்நாட்டு வளர்ச்சி நிறுவனம் தமிழ்நாடு சிறுதொழில் ஆகியவை மூலதனப்பங்கு கொண்டுள்ளன. தமிழக அரசு நேரிடையாக எந்தப் பங்கும் பெறவில்லை. தமிழக அரசினுடைய கார்ப்பரேஷன் நிறுவனங்கள் இதிலே இடம் பெற்றிருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் அதிபர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அடங்கிய தொழில் நுட்ப ஆலோசனைக் குழு நிறுவப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். எப்போது அந்த ஆலோசனைக் குழு அமைக்கப்படும், அதில் யார் யார் உறுப்பினர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி இண்டஸ்ட்ரியல் டெக்னிக்கல் அண்ட் கன்சல்டன்சி ஆர்கனைசேஷன் பற்றியது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இப்போது அட்வைசரி போர்ட் பற்றிக் கேட்கிறார்கள். தொழில் துறையின் மானியக் கோரிக்கை வருகின்றபோது மாநில அளவிலே ஒரு தொழில் ஆலோசனைக் குழு அதாவது ஸ்டேட் லெவல் அட்வைசரி கமிட்டி அமைக்கப்பட இருக்கின்றது. அதிலே 40 முதல் 45 வரை தொழில் வல்லுநர்களும் தொழில் அதிபர்களும் இடம் பெறுவார்கள். சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இடம் இருக்காது. அவர்கள் தங்களுடைய மேலான ஆலோசனையை இந்த மாமன்றத்திலேயே எடுத்து வைக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தமிழகத்தைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானிகள், டாக்டர்கள், இன்ஜினியர்கள் போன்றவர்கள் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்குப் போய் அங்கே புது கண்டுபிடிப்புகளையும் சாதனைகளையும் நிகழ்த்துகிறார்கள் அவர்களை எல்லாம் இங்கே நல்ல சம்பளம் கொடுத்து அவர்களிடத்திலிருந்து தொழில் நுட்ப ஆலோசனையைப் பெற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி யாராவது அங்கே இருந்து இங்கே வர முன் வருவார்களேயானால் அப்படிப்பட்ட ஏதாவது வேண்டுகோள் வந்தால் அரசு அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1983 பிப்ரவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 238,239 240 241 ஆகியவை மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்பெறுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

### 3. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் சிமெண்ட் விலை 100 ரூபாய்க்கு மேலே போய் இருக்கின்றது. அது குறித்து 54-வது விதியின் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எல்லாம் வராது. இன்றைக்கு அரிசியே கிடைக்கவில்லை, சிமெண்ட் இல்லை என்றால் 10 நாட்கள் கழித்துக் கூட கட்டிடத்தைக் கட்டிக் கொள்ளலாம்.

(முற்பகல் 10·20)

திரு இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் ஒரு ஆலையத்தில் ஒரு காவலர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் அது குறித்து............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறைப்படி கொடுத்திருந்தால் வரும்.

### 4 உரிமைப் பிரச்சினை

### ஆளுநர் உரை மூலம் பேரவைக்கு தவறான தகவல் அளிக்க முயற்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 9—2—1983 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் பேரவையில் 246-ம் விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையைப் பேரவையில் எழுப்ப என் அனுமதி கேட்டு அதற்கான விளக்கமும் அளித்தார். மாண்புமிகு பேரவை முன்னவர் விளக்கம் அளித்தபின், எனது தீர்ப்பு பின்னர் அறிவிக்கப்படும் என்று நான் கூறியிருந்தேன்.

24—1—1983 அன்று மேதகு ஆளுநர் உரையில் ''தமிழகத்தில் நிலவும் வறட்சி குறித்து மத்திய அரசுக்கு அறிக்கை ஒன்று அனுப்பி விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால் 27-1-1983 அன்று தான் எழுப்பிய ஒரு ஒழுங்குப் பிரச்சனைக்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அளித்த குறிப்புரையில் ''இந்த அரசு 24—1—1983 அன்றுதான் அரசு அதிகாரி மூலம் அனுப்பப் பட்டது'' என்று கூறினார் என்றும், எனவே இதில் முரண்பாடு இருப்பதால், ஆளுநர் உரைமூலம் தவறான தகவலை இப் பேரவைக்குத்தர அரசு முயன்றிருப்பது அவை உரிமை மீறிய செயலாகும் என்று திரு. துரைமுருகன் குறிப்பிட்டார்.

பல்வேறு துறைகளின் மூலம் எடுக்கப்பட வேண்டிய நடவடிக் கைகளுக்காக ரூ. 190 கோடி நிதி தேவை என்று மதிப்பிடப்பட்டு அரசுக்குத் தேவையான நிதியின் அளவை முன்கூட்டியே மத்திய அரசுக்குத் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு, தொகையின் அளவு குறித்தும், விரிவான அறிக்கை, 'மெமோராண்டம்' அனுப்பப்படும் என்றும் மத்திய அரசு விவசாயத் துறை கூடுதல் செயலாளருக்கும், மத்திய அரசு நிதித் துறை இணைச் செயலா ளருக்கும் 13—1—1983 அன்று டெலக்ஸ் மூலம் தெரிவிக்கப் பட்டது என்றும், மாவட்ட ரீதியான பயிரிடப்படாத நிலங்கள் பரப்பு, விளைச்சலின் விளைவுகள், பாதிப்புக்கள், பாதிக்கப்பட்ட மக்கள் தொகை இவை கொண்ட அறிக்கையும் அட்டவணையும் 24—1—1983 அன்று அதிகாரி மூலம் நேரடியாகக் கொடுக்கப் பட்டது என்றும், எனவே, ஆளுநர் உரையில் எந்தவிதத் தவறான தகவலும் கொடுக்கப்படவில்லை என்றும் மாண்புமிகு பேரவை முன்னவர் விளக்கினார்.

முதல் அறிக்கை 13—1—1983 அன்று டெலக்ஸ் மூலம் தெரிவிக் கப்பட்டது என்றும், விரிவான பல விவரங்கள் அடங்கிய இரண்டா வது அறிக்கை 24—1—1983 அன்று அதிகாரி மூலம் நேரடியாகக் கொடுக்கப்பட்டது என்றும், மேலும் ஆளுநர் உரையில் குறிப்பிட் டிருப்பது மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது என்று தானே ஒழிய மெமோராண்டம் அனுப்பப்பட்டது என்று குறிப் பிடப்படவில்லை என்றும் பேரவை முன்னவர் கூறியுள்ள விளக் கத்திற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பில் மேலெழுந்தவாரியாகக் கூட அவை உரிமை மீறல் எழவில்லை என்ற காரணத்தால் இதனைப் பேரவையில் எழுப்ப இசைவு மறுக்கப்படுகிறது.



## 5. ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப வரைமுறைகள்

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எல்லாம் முடிந்து விட்டது. என்னுடைய தீர்ப்பிலா பாயிண்ட் ஆப் ஆர்டர் ?

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் தீர்ப்பில் இல்லை. நான் சொல்வதை தயவு செய்து கேட்கவேண்டும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது தான் அவைக்கு வருகிறீர்கள். வந்தவுடன் பாயிண்ட் ஆப் ஆர்டரா? தயவு செய்து அமருங்கள்.

திரு அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட புத்தகத்தில் எப்போது பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கவேண்டும் என்று இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட புத்தகத்தில் எத்தனையோ இருக்கிறது.

## 6. ஒத்திவைப்புத் தீர்மானம்

### ஏழுகிணறு காவல் நிலையத்தாரால் கைது செய்யப்பட்ட ஒருவர் மரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். வரத ராஜன். டி. மணி ஜே. ஹேமச்சந்திரன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ப. பொன்னுரங்கன், பாபு ஜனார்த்தனன் ஆகியோர் ''ஏழு கிணறு காவல் நிலையத்தாரால் திரு. ஜெயகோபால் என்பவர் கைது செய்யப்பட்டதற்குப் பின் 3—2—1983 அன்று இறந்துள்ளதால் மக்கள் மத்தியில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையில் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களை மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

+திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனவரி மாதம் 26ம் தேதி ஜெயபால் என்ற ஜெயகோபாலை ஏழுகிணறு போலீஸார் கைது செய்து கொண்டு சென்றனர். 27ம் தேதி அன்று அவர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. 3 ஆம் தேதி அன்று பல காயங்களோடு ஸ்டேன்லி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இறந்துபோன தாக போலீஸ் நிலையத்தில் கூறப்படுகிறது. போலீஸ் நிலை யத்திலே திடகாத்திரமாக செல்லுகின்றவர்கள் சாதாரணமாக போலீஸார் விசாரணைக்கு அழைத்து செல்லப்படுகின்றவர்களை

போலீஸ் நிலையத்திலே கடுமையாக தாக்கப்பட்டு, இறந்து போனார் என்று ஒரு துயரமான, துக்கச் செய்தியைத்தான் நாம் கடந்த 2 ஆண்டு காலமாக பல்வேறு போலீஸ் நிலையங்களில் பார்க்கிறோம். குறிப்பாக இந்த நிகழ்ச்சியிலே அவர்கள் மேல் பல வழக்குகள் இருக்கின்றன என்று கூறப்பட்டாலும் கூட விசாரணை நேரத்தில் அதை விசாரிப்பதற்காக உரிமை பெற்றது கோர்ட்டே தவிர போலீஸ் நிலையத்திலே அவர்களுக்கு தண்டனை வழங்குவது என்பது ஒரு அநியாயமான காரியம் ஆகும். சொளச்சவிலே, குலசேகரன்பட்டினத்திலே எல்லாம் போலீஸ் தனி நபர்களை கைது செய்து போலீஸ் ஸ்டேஷனிலே அவர்கள் இறந்துபோவது சர்வ சாதாரண நிகழ்ச்சியாக இருக்கிறது. இந்த ஜெயகோபால் என்பவரும் போலீஸாரால் அடித்துத் துன்புறுத்தப்பட்டு ஸ்டான்லி மருத்துவமனையிலே இறந்துவிட்டார் என்பதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் போலீஸ் ஸ்டேஷனில் நடப்பதைத் தவிர்ப்பதற்கும் தெளிவாக விசாரிப்பதற்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடிவுகளை மேற்கொள்வதற்கும் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்; தலைவர் அவர்களே. ஏழுகிணறு பகுதியிலே இப்போது நடைபெற்றிருக்கின்ற இந்த சம்பவம் போன்று பல சம்பவங்கள் இந்த நாட்டிலே நடப்பது என்பது சர்வ சாதாரணமாக இருக்கிறது என்பதை மிகுந்த வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். போலீஸ் குற்றஞ்சாட்டப் பட்டவர்களை அழைத்துச் சென்று வழக்குப் போடுவதற்குப் பதிலாக போலீஸ் ஸ்டேஷனிலேயே அவர்களுக்கு தீர்ப்பு வழங்கி விடுகிறார்கள். அடித்துக் கொல்வது என்பது கன்னியாகுமரி மாவட்டத்திலே நடைபெற்றிருக்கிறது, கடலூரிலே நடந்திருக் கிறது, சென்னையிலே பல இடங்களிலே நடந்திருக்கிறது. பரவலாக நடந்துவரும் தொடர்கதையாக இருக்கிறது. வழக்குமன்றத்திலே நிறுத்தப்பட்டு தூக்குத்தண்டனை விதிக்கப் பட்டவர்களுக்குக்கூட கோர்ட்டு ஆயுள் தண்டனையாகக் குறைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. விஜயஊசி வழக்கிலே கூட தூக்குதண்டனை அளிக்கப்பட்டு, உச்ச நீதிமன்றத்திலே அவர்களுக்கு ஆயுள்தண்டனையாக அது குறைக்கப்பட்டிருக் கிறது என்பதைப் பார்க்கிறோம். ஆனால் இன்றைக்கு போலீஸ் ஸ்டேஷனிலே உள்ள இன்ஸ்பெக்டரோ, சப்இன்ஸ் பெக்டரோ, கான்ஸ்டபிளோ தாங்களே நீதிபதிகளாக மாறி தண்டனை கொடுத்துவிடுகிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. இது தொடர்ச்சியாக இருக்கக்கூடாது. இதைத் தவிர்க்க வேண்டிய காலகட்டத்திலே இருக்கிறது. இந்த ஆட்சியிலே இது அடிக்கடி நடப்பது சர்வசாதாரணமாக இருக்கிறது. இதுபோன்ற சம்பவங்கள் தொடர்கதையாக மாறக்கூடாது என்பதற்காக இப்போதாவது இதைப்பற்றி விளக்கமாக





விவாதிக்கவேண்டும். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பல ஜெயகோபால்களை நாம் உருவாக்கக்கூடாது. குற்றவாளிகள், ஒன்றிரண்டு குற்றங்களைச் செய்தவர்களாக இருந்தாலும்கூட அவர்களை பி. டி, ஏ. யிலே அல்லது என். எஸ். ஏ. யிலே ஒரு வருஷம் உள்ளே போடலாம். ஆனால் போலீஸ் ஸ்டேஷனிலேயே தீர்ப்பு வழங்கக்கூடிய முறை சரியான தல்ல, ஆகவே இதைப்பற்றி விளக்கமாகப் பேசுவதற்கும், விவரங்களைத் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் முகத்தான் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவர் அவர்களே, சென்னை ஏழு கிணற்றைச் சேர்ந்த இராமையா மகன் தருமையா என்பவர் தன்வீட்டில் ஜெயகோபால் என்பவர் அத்துமீறி நுழைந்து தாக்கியதாக ஏழு கிணறு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் 23—1—83 அன்று 22.15 மணிக்கு நிலைய குற்ற எண். 52/83 இந்திய தண்டனைச் சட்டம் 448 மற்றும் 323 பிரிவுகளின்கீழ் ஜெயகோபால் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பி. 3 காவல் நிலைய உதவி ஆய்வாளர் அன்று இரவே ஜெயகோபால் அவர்களை கைது செய்ய காவல் படையுடன் சென்றார். ஜெயகோபாலை பிடிக்கச் சென்ற காவலர் 6088 பட்வர்ட் என்பவரை கத்தியை காண்பித்து மிரட்டிவிட்டு ஜெய கோபால் தப்பிவிட்டார் என்றும் இது குறித்து மீண்டும் பி 3 காவல் நிலைய குற்ற எண். 53/83-ல் இந்திய தண்டனைச் சட்டம் 307-வது பிரிவின்கீழ் ஜெயகோபால் மீது வேறு ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. தகவல் கிடைத்தும் 27—1—83 அன்று சுமார் மாலை 6·30 மணிக்கு ஸ்டான்லி மருத்துவ மனைக்கு அருகில் ஜெயகோபாலை உதவி ஆய்வாளர் காவல் படையுடன் சென்று கைது செய்தார். ஜெயகோபால் 25—1—83 அன்று 23·30 வாக்குமூலத்தின்படி மணிக்கு அதாவது இரவு 11-30 மணிக்கு சென்னை ஏழுகிணறு முத்துசாமி மேஸ்திரி தெருவில் கட்டப் பட்டுக் கொண்டிருக்கிற ஒரு வீட்டிலேயிருந்து தற்செயலாக விழுந்த காரணத்தால் உடலில் காயங்கள் ஏற்பட்டன என்று தெரிகிறது, உடனே அவர் ஸ்டான்லி அரசினர் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கே அவசர பிரிவு மருத்துவ அதிகாரியிடம் தனக்கு மேற்கூறியவாறு காயங்கள் ஏற்பட்டதாக ஜெயகோபால் கூறினார். ஜெயகோபால் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டார் என்றும் சென்னை ஜார்ஜ் டவுன் எட்டாவது பெருநகர் குற்றவியல் நீதிபதி அவர்கள் 28—1—83 அன்று மருத்துவமனைக்கு சென்று ஜெயகோபாலை 10—2—83 வரை காவலில் வைப்பதற்கு உத்தரவிட்டார்.

நீதிபதி அவர்களிடமும் ஜெயகோபால் காயங்கள் குறித்து அதே உண்மைகளை கூறியுள்ளார். 3—2—83 அன்று சிகிச்சையில் இருக்கும் போது ஜெயகோபால் மரணம் அடைந்தார். அன்றே குற்றநடைமுறைச் சட்டம் 176-வது பிரிவின்படி சென்னை மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளரால் பிரேத விசாரணை நடத்தப்பட்டது. பிரேத பரிசோதனை 4—2—83 அன்று நடத்தப்பட்டது. விசாரணையின் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது. ஜெயகோபால் இறந்ததை ஒட்டி அப் பகுதியில் எந்தவிதமான பீதியும் இல்லை. அந்தப் பகுதியில் நிலைமை தற்போது அமைதியாக உள்ளது. ஆகவே இந்த நிலையில் இதுகுறித்து விவாதிக்க அவையை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதை கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு மின்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது

## 5. ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப அனுமதிப்பது—தொடர்ச்சி

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்டதை குறித்து . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒன்றை சொல்லி விடுகிறேன். பாபு ஜனார்த்தனம் அவர்கள் ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்டார், அதை அனுமதித்தேன், இராசமாணிக்கம் அவர்கள் அடுத்து ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டரை கேட்டார், அதில் இருக்கிற பொருள் சபையின் முன்னால் இல்லை, ஆகவே அது தேவையில்லை என்று கூறினேன். அடுத்து உத்திராபதி அவர்கள் ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டரை கேட்டார்கள். அது தேவையில்லை என்று சொன்னேன். நீங்கள் 10-30 மணிக்கு வருகிறீர்கள். வந்த உடனே பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கிறீர்கள். சபையிலே நடப்பது என்னவென்று தெரிந்து கொண்டு வருகிறீர்களா, இல்லையா என்பது எனக்கு தெரியாது. நேரே று வந்தவுடன் கேட்கிறீர்கள். அது எப்படி முறை என்பதை எனக்கு விளக்கி விட்டு நீங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்டால் நலமாக இருக்கும்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கும்போது விதிகள் சம்பந்தமாக, அல்லது விதிகளுக்கு புறம்பாக நடக்கிறபோதோ, அல்லது சட்டசபை நடவடிக்கைகளுக்கு உள்ளிட்டு எப்போது வேண்டுமானாலும் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கலாம். ஒத்திவைப்பு போன்ற தீர்மானம், உரிமைப் பிரச்னை, அல்லது தாங்கள் தீர்ப்பு வழங்குவது சம்பந்தமாக, இதுபோன்ற இடங்களில்தான் ஒழுங்கு பிரச்னை,





எழுப்ப முடியாதே தவிர, உறுப்பினர்கள் சட்டசபை நிகழ்ச்சிகளை ஒட்டி எப்போது வேண்டுமானாலும் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கலாம். ஆனால் தீர்ப்பு வழங்குகிற உரிமை உங்களுக்கு இருக்கிறது, அதை அனுமதிப்பதும், அனுமதிக்காததும் உங்களுடைய விருப்பம். அது வேறு விவகாரம். ஆனால் சட்டசபையிலே 9 மணியிலிருந்து $1\frac{1}{2}$ மணி வரையில் இருந்தால்தான் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்க முடியும் என்பது சட்டசபை விதிகளில் இல்லை. நிகழ்ச்சிகள் சம்பந்தமாக, பிரச்னைகள் சம்பந்தமாக எப்போது வேண்டுமானாலும் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கலாம். நான் 10 மணிக்கு வரலாம், $10\frac{1}{2}$ மணிக்கு வரலாம், ஒரு மணிக்கு வரலாம்; என்னுடைய பிரச்னை வேறு விதமாக இருக்கலாம். அதை என்னவென்று கேட்காமல் வந்தவுடனே பாயிண்ட் ஆப் ஆர்டரை கேட்கிறாய் என்று சொன்னால், தலைவர் அவர்களே நான் தவறாகச் சொல்லவில்லை, ஏதோ ஒரு எண்ணத்தோடு, தடுக்கவேண்டுமென்ற உணர்வோடு நீங்கள் சொல்வதாகக் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தலைவர் மீது நீங்கள் 'Aspersions' எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லுங்கள். நான் அது பற்றி கவலைப்படவில்லை. நான் ஒரு தீர்ப்பு அளித்து முடித்தேன். முடித்த பிறகு பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்டீர்கள். தீர்ப்பின்மீது பாயிண்ட் ஆப் ஆர்டரா என்று கேட்டேன். நீங்கள் தீர்ப்பையே கேட்கவில்லை. ஏனென்றால் தீர்ப்பு அளித்துக் கொண்டிருக்கிற சமயத்தில்தான் வந்து கொண்டிருந்தீர்கள். எப்போது வேண்டுமானாலும் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கிற விருப்பம் உங்களுக்கு இருக்கலாம். பாயிண்ட் ஆப் ஆர்டர் எந்த சமயங்களில் கேட்பது என்பதெல்லாம் விதிகளில் மிக விளக்கமாக இருக்கிறது. எல்லா விதிகளையும் படியுங்கள், நீங்கள் சட்டத்தை படித்தவர்கள், விதிகளை படித்துவிட்டு சொல்லுங்கள். ஏனென்றால் எந்த நேரத்திலும், எப்போது வேண்டுமானாலும் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கலாம் என்று இருப்பதாக எனக்கு தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால் மாண்புமிகு லட்சுமணன் அவர்கள்தான் பார்லிமெண்டில் துணை சபாநாயகராக இருக்கிறார். அவர்கள் வருகிறபோது அவரிடத்திலேயும் கேளுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, திரும்பவும் கேட்கிறேன், ஒழுங்கு பிரச்னை நான் கேட்டது எப்படி தவறு என்பதை தயவு செய்து சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைத்தான் சொன்னேன். A point of order may be raised in relation to the business before the House at the moment. இப்போது என்ன பிசினஸ், நீங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கிறபோது அட்ஜெர்ன்மெண்ட்

பேசுவதை எடுத்துக்கொண்டிருந்தேன். அதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கிறீர்களா? அப்படி என்றால் சொல்லுங்கள். விதிகள் 112 (4)-ல் வெளிவாக இருக்கிறது.

A point of order may be raised in relation to the business before the House at the moment.

என்று இருக்கிறது. பாயிண்ட் ஆப் ஆர்டர் குறித்த விளக்கம் பூராவும் விதி 112—ல்தான் இருக்கிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : List of business எடுக்கும்போது தான் அது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரே பதில் சொல்வார். நீங்கள் ஏன் பதில் சொல்கிறீர்கள்? பாயிண்ட் ஆப் ஆர்டர் பற்றிய விளக்கம் பூராவும் 112-ல் தான் இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது பற்றி நீங்கள் சொல்கிற பிரச்சினையே வேறு. அதுவல்ல நான் சொல்வது அந்தப் பிரச்சனைக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. உரிமை மீறல் பிரச்சனைக்கும் நீங்கள் கொடுத்த தீர்ப்பு சம்பந்தமாக நான் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கவில்லை. எழுப்பப்பட்ட பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கிறேன் என்பதையே நீங்கள் கேட்கவில்லை. பாயிண்ட் ஆப் ஆர்டரே கேட்கக் கூடாது என்று சொல்லுகிறீர்கள். அதுதான் என்னுடைய வருத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைக் கேட்க வில்லை. வினாக்கள்-விடைகள் நேரம் முடிந்தவுடனே எல்லோ ருமே பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கிறீர்கள். பலவற்றைக் கேட்கிறீர்கள்.

திரு. அ. ரகுமான்கான் : அது பாயிண்ட் ஆப் ஆர்டரிலே வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ற உரிமையை வைத்துத்தான் அதைக் கேட்கிறீர்கள். (குறுக்கீடு) மன்றத்திலே எல்லாமே நடக்கிறது. அப்படிக் கேட் கும்போது பல அனுமதிக்கப்படுகின்றன; பல என்னுடைய கவ னத்திற்கு ஏற்கனவே வந்திருக்கும். நான் எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்கிறேன் சிலவற்றையெல்லாம் நான் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். என்று சொல்கிறேன். இன்றுகூட திரு. பாபு ஜனார்த் தனம் கேட்டார், நான் அலவ் பண்ணினேன். திரு. இராஜ மாணிக்கம் என்னிடம் வந்து சொன்னதைக் கேட்க நான் அனுமதி அளித்தேன். திரு. உத்திராபதி கேட்க முற்பட்டார். ஆகவே, வினா-விடை நேரம் முடிந்தவுடன் அவர்கள் சொல்கின்ற அந்த மாதிரி பாய்ண்ட் ஆப் ஆர்டரைத்தான் அனுமதிக்க



முடிகிறதே தவிர, நான் ஒரு தீர்ப்பைக் கூறிவிட்டு, ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டபோது, பாய்ண்ட் ஆப் ஆர்டர் கேட்கிறீர்கள் என்றால், கொடுத்த தீர்ப்புக்காக பாய்ண்ட் ஆப் ஆர்டர் கேட்பதாக நினைக்கட்டுமா? அல்லது ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது நீங்கள் பாய்ண்ட் ஆப் ஆர்டர் கேட்கிறீர்கள் என்று நினைக்கட்டுமா? எதை நினைக்கச் சொல் கிறீர்கள்? ஆனால், ஒரு புது பிரச்னையை அப்பொழுது எப்படி கேட்க முடியும்? ஒரு புதுப் பிரச்னையைக் கொண்டு வந்து அப் பொழுது எப்படிக் கேட்க முடியும்? அதற்கு எனக்கு விளக்கம் சொல்லுங்கள்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order raise பண்ண அனுமதிப்பதிலே, உண்மையிலே comparatively நீங்கள் ரொம்ப Liberal என்பது எங்களுடைய கருத்து. you are allowing. we welcome it. நீங்கள் சொன்ன மாதிரி, Question hour முடிந்தவுடனே பலருக்கும் Point of order raise செய்வது daily feature ஆக வந்திருக்கிறது. you are allowing it. That is good. But point of order raise பண்ணலாமா என்றால், raise பண்ணலாம். ஆனால் ஒரு காலம் நேரம் பார்க்க வேண்டாமா? ஒரு உயிர் போலீஸ் கஸ்டடியிலே செத்துப் போனதைப் பற்றி adjournment motion எடுத்துக் கொண் டீர்கள் it is an important issue. நாம் யாரும் raise பண்ணும்போது Public issue இருக்கிறது என்று சொன்னல் We must be patient கொஞ்சம் பொறுமையாக இருந்து அந்த Public issueக்கு முக்கியத்து வம் கொடுத்து, பிறகு raise செய்து கேட்பதில் எனக்கு ஆட்சே பனை இல்லை. அதை உடனே raise செய்கிறபோழுது என்ன ஆகிறது? இன்றைக்கு நீங்கள் control பண்ணியதாலே அந்த issue முன்னுக்கு வந்தது. இல்லையென்று சொன்னால் தகராறு நடந்து இருக்கும் என்று சொன்னால், ஒருவருடைய death பற்றிய விவாதமே போயிருக்கும். நேற்றைக்கு முந்தைய நாள் தகரா றிலே C.P.I. chance போயிற்று. இன்னொருவர் chance போயிற்று அரிசி விஷயத்திலே. It is a major important issue ஆகவே, நான் சொல்வது, மாண்புமிகு colleague இடத்திலே சொல்வது raise பண்ணுவோம், தலைவருடைய அனுமதியோடு raise பண்ணுவோம். But raise பண்ணுவதோடு விஷயம் என்ன எந்த நேரம் என்றெல்லாம் பார்த்து, without affecting the chances of ours — நாங்களும் elected members தான், இங்கே எங்களுடைய chance-ஐ பாதிக்காமல், public cause பாதிக்கப்படா மல், you raise the point of order. We have no objection. That is our grievance.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத் தலைவர் அவர்களே, ஒழுங்குப் பிரச்னையைக் கேட்டு ஏதாவது பிரச்னையை உண்டாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நாங்கள் கேட்கவில்லை எப்போ துமே. விஷயத்தை பொறுத்த மட்டில்தான் ஒழுங்குப் பிரச்னை எழுப்புகிறோம். (குறுக்கீடுகள்) சார், இதே நிலைமை நீடிக்கும் என்று சொன்னால் என்னையும் அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதிக்கிறேன் அமைதியாக இருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : ஒழுங்குப் பிரச்சினை நேற்று ஆரம்பத்திலே நான் கேட்டேன். ஆனால் நீங்கள் மறுத்துவிட்ட காரணத்தினால், இந்த ஒழுங்குப் பிரச்சினை சம்பந்தமாக ஒரு தீர்ப்பு கிடைத்தால் போதும். நான் மேலே ஒழுங்குப் பிரச்சினை கேட்பதற்கு தயாராகத் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் சொன்ன கருத்தைத்தான் நான் சொல்கிறேன். நீங்கள், வினா-விடை நேரம் முடிந்தவுடனே வந்து கேட்டிருந்தால் எனக்கு ஆட்சேபணை கிடையாது. நான் ஏன் நடைமுறை தவறி நடக்கிறேன்? எனக்குத் தனிப்பட்ட கோபதாபங்கள் என் இருக்கின்றது? சபையை நடத்துவதற்கு எல்லோரும் தேர்ந்தெடுத்ததால்தான் இங்கே உட்கார்ந்திருக்கிறேன். இல்லாவிட்டால் இதையும் விட்டு நான் பாட்டுக்குப் போய்விடுவேன். எனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை. அரசியல் காலத்தையெல்லாம் முடித்துவிட்டுத்தான் நான் இங்கே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். ஆதலால் எனக்கு யார் மீதும் வெறுப்போ, விருப்போ கிடையாது.

## 7. கவன ஈர்ப்பு

### தூத்துக்குடி மாவட்ட தலைமை மருத்துவமனை அறுவை சிகிச்சை நிலையம் மூடப்பெற்றிருப்பது.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, "தூத்துக்குடியிலுள்ள மாவட்டத் தலைமை மருத்துவ மனையிலுள்ள அறுவைசிகிச்சை நிலையம் கடந்த இரண்டு மாதங்களாக மூடப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டெட்டனஸ் கிருமிகள் பரவி இருக்கிறது என்பதற்காக 2—11—1982 முதல் மாவட்ட தலைமை மருத்துவமனை, தூத்துக்குடியில் அறுவை அரங்கு மூடப்பட்டு இருக்கிறது. டெட்டனஸ்கிருமிகள் உள்ளதா என்பதை கண்டறிய இரண்டு முறை சுவாப் எடுக்கப்பட்டு ஆராய்ந்ததில் அவைகள் காணப்படவில்லை. மூன்றாவதாக ஆராய்ந்ததில் கிருமிகள் வளர்ந்திருப்பது தெரியவந்தது. மேலும் அறுவை அரங்கில் ஜெனரேட்டர் பொருத்துவதற்கான கட்டிட வேலை நடந்து கொண்டு வருகிறது. இந்தக் காரணத்தினாலே



அறுவை அரங்கு செயல்படவில்லை: இருந்தபோதிலும் அவசர அறுவை சிகிச்சைகள் போஸ்ட்பார்டம் அரங்கில் நடைபெற்று வருகிறது. அறுவை சிகிச்சை செய்வதற்காக தேர்வு செய்யப்பட்டு நிச்சயிக்கப்பட்ட நோயாளிகள் அருகாமையிலுள்ள, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

[முற்பகல் 10-40]

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடும் பொழுது இப்பொழுது அங்கே ஒரு பகுதியில் அறுவை சிகிச்சை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுவதாகச் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதுமட்டுமல்லாமல், ஏறத்தாழ இன்றைக்கு மூன்று மாத காலம் ஆகிவிட்டது. இது மாவட்டத் தலைமை மருத்துவமனை. ஜெனரேட்டர் பொருத்துவதற்கான புதிய கட்டிடம் கட்டப்படுவதாகச் சொன்னார்கள். இதைக் காலதாமதப்படுத்தாமல், உடனடியாக அந்த ஆப்பரேஷன் தியேட்டரைப் பழுதுபார்த்து அறுவை சிகிச்சை நடத்துவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, காலதாமதம் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான், இந்தவொரு வாய்ப்பை நாம் பயன்படுத்திக்கொண்டு ஜெனரேட்டர் பொருத்தக்கூடிய இந்த நேரத்திலேயே இரண்டு வேலைகளையும் செய்துகொண்டிருக்கிறோம். ஆப்பரேஷன் தியேட்டர் இயங்க ஆரம்பித்த பிறகு ஜெனரேட்டருக்காக மேலும் மூன்று மாதங்கள் மூடக்கூடாது என்பதற்காகத்தான், காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான், ஒரே நேரத்தில் இந்த இரண்டு வேலைகளையும் செய்து கொண்டிருக்கிறோம். இதன் விளைவாக நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் விரும்பியபடி அந்தக் காலதாமதம் இல்லாமல் இருக்கக்கூடிய நிலைமை உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அறுவை சிகிச்சை நிலையத்தில் இறுதியாக அறுவை சிகிச்சை செய்யப்பட்ட ஒரு நோயாளி மரணம் அடைந்து இருக்கிறார். அவர்கள் வாழ்க்கையில் மிகவும் பின் தங்கியவர். அவர் மரணம் அடைந்ததற்குக் காரணமே அந்தக் கருவிகளில் உள்ள குறைபாடுதான் என்று சொல்லப்படுகிறது. இறந்த அந்த நபரின் குடும்பத்திற்கு அரசு உதவித்தொகை வழங்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. கோ. அழகர்சாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய சபையின் விதிகளின்படி 54-வது விதியின்கீழ் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அப்பாதுரை அவர்கள் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். வழக்கமாக இதற்கான பதிலை விவர அறிக்கையாக வைப்பது வழக்கம் ஆனால் இன்றைக்கு அம்மாதிரி எழுத்து பூர்வமான அறிக்கையை வைக்கவில்லையே, அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் பல்லாண்டுகளாக சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய இனிய என் உடன்பிறப்பு சட்டத்தில் உள்ள விதிகளை நான் மனப்பாடம் செய்து வைத்துத்தான் இருக்கிறேன். விதிகள் என்றால் காலிங் அட்டென்ஷன் நோட்டீஸ் வந்தவுடனே, உடனடியாக நாம் பதிலை அளிப்பது. அந்தப் பதில் நீண்ட பதிலாக இருந்தால் பேரவைத் தலைவர் அவர்கள் நம்முடைய அவையின் நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கருதி அறிக்கையாக வைத்து விடுங்கள் என்று சொல்வது வழக்கம், ஆனால், இது சுருக்கமாக இருக்கிறது. ஆகவே, சுருக்கமாக இருக்கக்கூடிய இந்த பதிலைக் கூட இங்கே அறிக்கையாக வைப்பது நியாயமாக இருக்காது. நீங்கள் என்ன வற்புறுத்த வேண்டுமென்றால், அவையிலே படிக்க வேண்டுமென்று வற்புறுத்தினால் நன்றாக இருக்கும். நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் அந்த முறையில்தான் வாதாடிக் கொண்டிருந்து இருக்கிறோம். எனவே, அவையிலே எந்த விதிகளையும் மீறவில்லை. இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்னையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான், நிதானமாக, ஒழுங்காகப் படித்து, ஒவ்வொருவருக்கும் கருத்து மனத்தில் பதிய வேண்டுமென்பதற்காக நிறுத்தி படித்தேன். நிச்சயமாக அவர்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் துணைக் கேள்வியின் கேட்டபொழுது நிச்சயமாக இதைப் புரிந்து கொண்டுதான் கேட்டிருக்கிறார்கள் என்பது நம்முடைய அனைவருக்கும் தெரியும். ஆகவே, இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்னையும் இருப்பதாகத் தெரியவில்லை,

## 8. அறிக்கை அளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத் துறையில் மதிப்பீட்டுக் குழுத் தலைவன் என்ற முறையில், பாசனத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் பதினைந்தாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.



600 008.

## 9. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1983.

(ஆ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1983—தொடர்ச்சி

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குத் தேர்தல் நடத்தப்படாமல் பல்லாண்டுகாலமாக ஒவ்வொருமுறையில் ஆளுநரை விட்டு தனி அதிகாரிகளுடைய காலத்தை நீடிப்பதும், பிறகு பேரவையிலே அனுமதி பெறுவதும், இந்த அரசுக்கு ஒரு வாடிக்கையாக இருந்து வருகின்றது. சென்ற முறையும் இதோடு கடைசி என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த முறையும் இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறது. இந்த முறையே கடைசியாக இருக்க அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என உங்கள் மூலமாக அரசாங்கத்தையும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றையதினம் கூட நான் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னேன். இன்றையதினம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் பல்வேறு பொறுப்புகளுக்கு இடங்கள் காலியாக இருக்கின்றன. எழுத்தர் வேலை மற்றும் பல்வேறு பொறுப்புகளுக்கு இருக்கும் காலியான இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதற்கு ஒரு தகவலை சொல்கிறார்கள். அரசாங்கம் காலியான இடங்களை நிரப்ப வேண்டாம். என உத்தரவிட்டு இருப்பதாகவும், அதன் காரணமாக அந்த இடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதாக சொல்லப்படுகிறது. அது உண்மையாக இருக்குமானால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் தளர்த்தவேண்டும். நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு பக்கத்தில் குடும்பத்திலே ஒருவருக்கு வேலை உண்டு என்று அறிவிக்கிறார்கள். படித்தவர்கள் நாட்டிலே எத்தனையோ பேர்கள் வேலை இல்லாமல் இருக்கின்ற இன்றையதினம், இந்த நேரத்தில் காலியாக உள்ள இடங்களை உடனடியாக நிரப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் நீங்கள் உடனடியாக அங்கே தேர்தலை நடத்துகின்ற வரையில் இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ஏற்கனவே ஒரு அட்வைசரி கமிட்டியைப் போட்டிருக்கிறீர்கள் அது இப்போது பணியாற்றுகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்லப்படுகிறது. இன்று இப்போது ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் இருக்கின்ற தனி அதிகாரிகள் மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் கூட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில்

[திரு. கே. ஆர். சுந்தரம்] [1983 பிப்ரவரி 11]

களை அமைத்து அங்கே உள்ள விவசாயிகள் தாங்கள் பொருள்களை எடுத்துச் சென்று சேமித்து வைப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் இப்படி சேமிப்புக்கிடங்கிலே விவசாயிகள் தங்கள் பொருள்களை வைக்கிற நேரத்தில், அவர்களுடைய பல்வேறு பொருள்களான வெல்லமானாலும் சரி, நெல்லானாலும் சரி, இதரப் பொருள்களானாலும். ஓரளவு முன் பணம் கொடுக்கக்கூடிய முறையை இன்றைக்கு அமுல்படுத்தினால் அது விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அந்த முன் பணம் கிடைக்காத காரணத்தால் தான் விவசாயிகள் மண்டிகளுக்குச் சென்று முன் பணம் பெறுகின்ற காரணத்தால் அவர்களுக்கு ஒரு நியாயமான விலை கிடைக்கமுடியாத நிலை இருக்கிறது, எனவே அரசு இதை ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கே வளருகின்ற ரப்பர், மிளகு, ஏலக்காய் போன்ற பொருள்களுக்கு அதனுடைய விலைகள் இன்றைக்கு சமீபத்திலே வீழ்ந்து உள்ளன. இப்படிப்பட்ட அங்காடிகள் மூலமாக அந்தப் பொருள்களை அரசே பெற்று வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியுமா என்பதையும் ஆராயவேண்டுமென்றும் இந்த அங்காடிகளுக்கு விரைவிலே தேர்தல் நடத்தவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வேளாண் விளைபொருள் அங்காடிகள் திருத்த சட்டமுன்வடிவின் மேல் சில கருத்துக்களை நான் கூற ஆசைப்படுகிறேன் ஏற்கனவே இதே மாமன்றத்தில் நான் 2 முறை இந்த திருத்த சட்ட முன்வடிவில் பேரில் பேசியிருக்கிறேன். வருடம் ஒரு முறை இந்தச் சட்டத்தை, இந்த சட்டமன்றத்திலே கொண்டு வந்து, அடுத்த முறை இது நீடிக்காது என்று கூறி மீண்டும் இது ஒரு தொடர்கதையாக வருடா வருடம் வந்து கொண்டிருக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். ஏனைய கூட்டுறவு இயக்கங்களுக்கு அல்லது ஊராட்சி மன்றங்கள் போன்று இருக்கக்கூடிய இவைகளுக்கு தேர்தல் நடத்த வேண்டும் என்றால் பல்வேறு சூழ்நிலைகளில் காரணமாகவும் கூட்டுறவுகளுக்கு பல மாநிலங்களில் இருக்கக்கூடிய சட்டத்தினையும் கொண்டு வந்து இந்த மாநிலத்திலே எவ்வாறு ஒரு கூட்டுறவு இயக்கத்தை இயக்க வேண்டும் என்ற ஒரு நிலையிலே ஒரு காலத்தை கடத்துவதாக சம்பந்தப்பட்ட துறையிலிருந்து சம்பந்தப்பட்ட அமைச்சரிடமிருந்து பதில் வருகிறது.



[1983 பிப்ரவரி 11] [திரு. கா. நல்லப்பன்]

இந்த வேளாண் விளைபொருள் அங்காடிகளைப் பொறுத்தவரைக்கும், இது ஆரம்பிக்கப்பட்ட நோக்கம், கிராமங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்த விளைபொருள்களுக்கு ஒரு நியாயமான விலை கிடைக்கச்செய்ய வேண்டும். கட்டுப்படியான விலை கிடைக்கச்செய்ய வேண்டும் அதுவும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் நமது நாட்டிலே இருக்கிற அரசியல் அமைப்புப்படி விவசாயிகள் உற்பத்தி செய்த விளைபொருள்கள் கைக்கு வருகிறபோது விலை இறங்குவதும், பின்னர் அந்த விலை ஏறுவதும் நாம் கண்கூடாக பார்க்கிற ஒரு காட்சியாகும். இந்தச் சூழ்நிலையில் தான் விவசாயிகள் உற்பத்தி செய்த காலத்திலேயே தங்களுடைய விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வதற்காக இந்த வேளாண் விளைபொருள்கள் அங்காடியில் அதை விற்று, ஒரு கணிசமான தொகையைப் பெற்று அதன் மூலம் மேற்கொண்டு அவன் அடுத்த போகத்திற்கு உண்டான நடவடிக்கைகளை கவனிக்கவும், மற்ற இரு பொருள்கள் வாங்கிக் கொள்வதற்கும் அந்தப் பணத்தைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். அங்கேயுள்ள தலைவர் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்று சொன்னால், அங்கே உறுப்பினராக இருக்கின்ற ஒருவர் அதன் தலைவராக இருக்கவேண்டும், அந்தச் சூழ்நிலையில் தான் அவர் பொறுப்புடன் நடவடிக்கைகளை வனிப்பார். இதற்காக ஒவ்வொரு வருஷமும் தேர்தல் நடத்தவேண்டும் என்ற நல்ல அடிப்படையில் தான் ஒவ்வொரு ஆண்டும் இந்த தலைவர் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று சட்டம் கொண்டு வரப்பட்டது. இப்படிப்பட்ட நல்ல நோக்கத்தோடு அங்கே இருக்கும் அதிகாரிகள் நடப்பார்களானால் அந்தக் கூட்டுறவு அங்காடி சிறந்த முறையில் விவசாயிகளுக்கு பயனுள்ள காரியங்களை செய்யமுடியும் விவசாய விளைபொருள்களுக்கு நல்ல முறையில் விலை பெற்றுத்தரமுடியும். ஆனால் தேர்ந்தெடுக்கப்படாத தலைவர் இல்லாத காரணத்தால்' அங்கே இருக்கும் தனி அதிகாரிகள் தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்பு காரணமாக விவசாயிகளின் நலன் பாதிக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலை இன்றைக்குப் பல்வேறு அங்காடிகளில் நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, இம்மாதிரி ஒவ்வொரு ஆண்டும் தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீடித்துக் கொண்டு இராமல் அடுத்த ஆண்டாவது தேர்தலை நடத்துங்கள் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவை தற்காலிக தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு மாதத்திற்கோ அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மாவட்ட அளவில் பல்வேறு இலாக்காக்களைப் பற்றி ஆய்வு செய்கின்ற கூட்டங்களில் கலந்து கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிடவேண்டும். மக்கள் பிரதிநிதிகள் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில நியமிக்கப்படுகின்ற வரையில் இந்தத் தனி அதிகாரிகள் அல்லது அவர்களது செயலாளர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் கலந்து கொண்டு இந்த ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் ஏற்படுகின்ற பிரச்சினை பற்றியும் விவாதிக்கின்ற நிலைமையை உடனடியாக ஏற்படுத்தினால், ஓரளவுக்கு அவர்களைக் கட்டுப்படுத்துகின்ற ஒரு பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்கு வரும், என்று இந்த நேரத்தில் ஆலோசனையாக கூற விரும்புகிறேன்.

அதேபோன்று இன்னும் பல்வேறு இடங்களில் இதுபோன்ற ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் கிளைகள் ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றது. சென்ற முறை இந்த மன்றத்திலே பேசுகின்றபோது ஜவ்வாது மலையிலே இருக்கின்ற ஜம்னாபுதூர் பல்வேறு பொருள்கள் உற்பத்தியாகின்றன. அங்கே உள்ள மலைவாழ் மக்கள் அவைகளை விற்பதற்கு கடைகள் இல்லாத காரணத்தால் அவர்கள் ஆலங்காயம், திருப்பத்தூர், வாணியம்பாடி போன்ற இடங்களுக்கு வருகின்ற நிலை இருக்கின்றது. எனவே ஜவ்வாது மலையிலே இருக்கிற ஜம்னாபுதூரிலே விற்பனை கடையைத் திறந்து அந்த மலையிலே இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்த மார்க்கட்டிங் வசதியைப் பெறுவதற்குண்டான வாய்ப்பை அந்த மக்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உடனடியாக தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும், ஏற்கனவே நாம் கூறியபடி தப்போல பல்வேறு ஒழுங்கீனங்கள், லஞ்ச லாவண்யங்கள் அதிகாரிகள் மட்டத்திலே நடந்து வருகின்றது. அவைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இப்போது வியாபாரிகளிடத்திலே செஸ் வசூலிக்கிறார்கள். வியாபாரம் செய்கின்றவர்கள் லைசன்சு பெறுகிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விவசாயிகளைக் கூட, தங்களுடைய பொருள்களை நகரங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனைக் கூடங்களுக்கு தனியார் கடைகளுக்கு எடுத்துச் செல்லும்போது, வழியிலே அதிகாரிகள் லாரிகளை மறித்து, ஏதோ வியாபாரிகள் தான் எடுத்து வருகிறார்கள் என்று அதற்கும் அபராதம் விதிக்கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் நடக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.





(முற்பகல் 10-50)

ஆகவே இவைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொண்டு அதேபோன்று செங்கற்பட்டு மாவட்டத்திலே உள்ள பூவிருந்தவல்லி நகரம் சென்னைக்கு அருகாமையிலே இருந்தாலும்கூட பெரிய நகரமாக, ஒரு தொகுதியினுடைய தலைநகரமாக இருக்கிறது. அந்த நகரத்திலே இந்த விற்பனைக் கூடம் இல்லை என்று தெரிய வருகிறது, எனவே உடனடியாக பூவிருந்தவல்லி நகரத்திலே ஒரு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, விரைவாக நீங்கள் தேர்தலை நடத்த வேண்டுமென்றும், அப்படி நடத்தாததற்கு என்னுடைய கண்டனத்தைக்கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண் விளைபொருள் அங்காடிகளுக்கு விரைவிலே தேர்தல் நடத்துவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முறையான சட்டங்கள் கொண்டு வருவதற்கான கால அளவை நீட்டிக்கின்ற முறையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள், உண்மையிலே இவைகள் ஜனநாயக முறையிலே நடத்தபடவேண்டுமென்றால். பல்வேறு முறைகளை ஆராய்ச்சி செய்து தக்க சட்டங்களைக் கொண்டு வரவேண்டியது மிகவும் அவசியமானது. இப்படிப்பட்ட வேளாண்மை அங்காடிகளுக்கு தேர்தல் நடத்துகின்ற நேரத்திலே சாதாரண ஏழை மக்களும் பங்கேற்றுக் கொள்கிற முறையில் இந்தச் சட்டத்திலே மாறுதல் செய்ய வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அப்போது
தான் சாதாரண ஏழை எளிய விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்
கின்ற பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் என்ற ஒரு
நம்பிக்கையை நம்மால் ஏற்படுத்த முடியும், இன்றைக்கு தமிழகத்
திலே எடுத்துக் கொண்டால் இந்த அங்காடிகள் மூலமாக வாங்கி
சாப்பிடுகின்ற பொதுமக்கள், விவசாயிகள் பயன் பெறாத நிலை
யில் இடைத்தரகர்கள் ஆன வியாபாரிகள் தான் இன்றைக்கு விவ
சாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை மலிவான விலை
யிலே வாங்கி அதிகமான விலையிலே விற்கின்ற நிலைமைகள்
இருக்கின்றன. அந்த வியாபாரிகள் தாங்கள் மூலம் விற்பனை
செய்கின்ற அந்தப் பொருள்களுக்கு மகிமை என்றும் தர்மம் என்
றும் பல்வேறு பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். இடையிலே
கூட பல தவறுகள் நடப்பதாகப் பேசப்படுகிறது. அவைகளை
தடுத்து உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நியாயமான விலை
கிடைக்கும்படியான முயற்சிகளை நாம் மேற்கொள்ளவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து பல்வேறு மாவட்டங்களில்
இந்த விற்பனைக் கூடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. விற்
இடத்திலே விற்பனைக் கூடங்
பனைக் கூடங்களை அமைக்காத

களை அமைத்து அங்கே உள்ள விவசாயிகள் தாங்கள் பொருள்களை எடுத்துச் சென்று சேமித்து வைப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் இப்படி சேமிப்புக்கிடங்கிலே விவசாயிகள் தங்கள் பொருள்களை வைக்கிற நேரத்தில், அவர்களுடைய பல்வேறு பொருள்களான வெல்லமானாலும் சரி, நெல்லானாலும் சரி, இதரப் பொருள்களானாலும். ஓரளவு முன் பணம் கொடுக்ககூடிய முறையை இன்றைக்கு அமுல்படுத்தினால் அது விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அந்த முன் பணம் கிடைக்காத காரணத்தால் தான் விவசாயிகள் மண்டிகளுக்குச் சென்று முன் பணம் பெறுகின்ற காரணத்தால் அவர்களுக்கு ஒரு நியாயமான விலை கிடைக்கமுடியாத நிலை இருக்கிறது, எனவே அரசு இதை ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கே வளருகின்ற ரப்பர், மிளகு, ஏலக்காய் போன்ற பொருள்களுக்கு அதனுடைய விலைகள் இன்றைக்கு சமீபத்திலே வீழ்ந்து உள்ளன. இப்படிப்பட்ட அங்காடிகள் மூலமாக அந்தப் பொருள்களை அரசே பெற்று வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியுமா என்பதையும் ஆராயவேண்டுமென்றும் இந்த அங்காடிகளுக்கு விரைவிலே தேர்தல் நடத்தவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. தி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வேளாண் விளைபொருள் அங்காடிகள் திருத்த சட்டமுன்வடிவின் மேல் சில கருத்துக்களை நான் கூற ஆசைப்படுகிறேன். ஏற்கனவே இதே மாமன்றத்தில் நான் 2 முறை இந்த திருத்த சட்ட முன்வடிவின் பேரில் பேசியிருக்கிறேன். வருடம் ஒரு முறை இந்தச் சட்டத்தை, இந்த சட்டமன்றத்திலே கொண்டு வந்து, அடுத்த முறை இது நீடிக்காது என்று கூறி மீண்டும் இது ஒரு தொடர்கதையாக வருடா வருடம் வந்து கொண்டிருக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். எனவே கூட்டுறவு இயக்கங்களுக்கு அல்லது ஊராட்சி மன்றங்கள் போன்று இருக்கக்கூடிய இவைகளுக்கு தேர்தல் நடத்த வேண்டும் என்றால் பல்வேறு சூழ்நிலைகளில் காரணமாகவும் கூட்டுறவுகளுக்கு பல மாநிலங்களில் இருக்கக்கூடிய சட்டத்தினையும் கொண்டு வந்து இந்த மாநிலத்திலே எவ்வாறு ஒரு கூட்டுறவு சங்கத்தை இயக்க வேண்டும் என்ற ஒரு நிலையிலே ஒரு காலத்தை கடத்துவதாக சம்பந்தப்பட்ட துறையிலிருந்து சம்பந்தப்பட்ட அமைச்சரிடமிருந்து பதில் வருகிறது.





இந்த வேளாண் விளைபொருள் அங்காடிகளைப் பொறுத்த வரைக்கும், இது ஆரம்பிக்கப்பட்ட நோக்கம், கிராமங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்த விளை பொருள்களுக்கு ஒரு நியாயமான விலை கிடைக்கச்செய்ய வேண்டும். கட்டுப்படியான விலை கிடைக்கச்செய்ய வேண்டும் அதுவும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் நமது நாட்டிலே இருக்கிற அரசியல் அமைப்புப்படி விவசாயிகள் உற்பத்தி செய்த விளைபொருள்கள் கைக்கு வருகிறபோது விலை இறங்குவதும், பின்னர் அந்த விலை ஏறுவதும் நாம் கண்கூடாக பார்க்கிற ஒரு காட்சியாகும். இந்தச் சூழ்நிலையில் தான் விவசாயிகள் உற்பத்தி செய்த காலத்திலேயே தங்களுடைய விளை பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வதற்காக இந்த வேளாண் விளைபொருள்கள் அங்காடியில் அதை விற்று, ஒரு கணிசமான தொகையைப் பெற்று அதன் மூலம் மேற்கொண்டு அவன் அடுத்த போகத்திற்கு உண்டான நடவடிக்கைகளை கவனிக்கவும், மற்ற இரு பொருள்கள் வாங்கிக் கொள்வதற்கும் அந்தப் பணத்தைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். அருகேயுள்ள தலைவர் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்று சொன்னால், அங்கே உறுப்பினராக இருக்கின்ற ஒருவர் அதன் தலைவராக இருக்கவேண்டும், அந்தச் சூழ்நிலையில் தான் அவர் பொறுப்புடன் நடவடிக்கைகளை கவனிப்பார். இதற்காக ஒவ்வொரு வருஷமும் தேர்தல் நடத்தவேண்டும் என்ற நல்ல அடிப்படையில் தான் ஒவ்வொரு ஆண்டும் இந்த தலைவர் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று சட்டம் கொண்டு வரப்பட்டது. இப்படிப்பட்ட நல்ல நோக்கத்தோடு அங்கே இருக்கும் அதிகாரிகள் நடப்பார்களானால் அந்தக் கூட்டுறவு அங்காடி சிறந்த முறையில் விவசாயிகளுக்கு பயனுள்ள காரியங்களை செய்யமுடியும் விவசாய விளை பொருள்களுக்கு நல்ல முறையில் விலை பெற்றுத்தரமுடியும் ஆனால் தேர்ந்தெடுக்கப்படாத தலைவர் இல்லாத காரணத்தால்' அங்கே இருக்கும் தனி அதிகாரிகள் தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்பு காரணமாக விவசாயிகளின் நலன் பாதிக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலை இன்றைக்குப் பல்வேறு அங்காடிகளில் நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, இம்மாதிரி ஒவ்வொரு ஆண்டும் தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீடித்துக் கொண்டு இராமல் அடுத்த ஆண்டாவது தேர்தலை நடத்துங்கள் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. எஸ். இராசு:** மாண்புமிகு சட்டப் பேரவை தற்காலிக தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜே. எஸ். இராசு] [1983 பிப்ரவரி 11

அடுத்து இந்தக் கால நீட்டிப்பு என்பது ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் நல்லது. பாராளுமன்றத்திலே கூட 5லிருந்து 6 ஆக ஆக்கினார்கள். பிறகு வேறு ஒரு ஆட்சி வந்து அதை மறுபடியும் 6லிருந்து 5 ஆக ஆக்கிவிட்டார்கள். எந்த ஒரு காரியமும் அளவப் போது செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறந்த கல்விமான் ஒரு பெரிய ஸ்புட்னிக்கைக் கூட ஒரு வருட காலத்திற்குள்ளாக ரஷ்யாவிலே அமெரிக்காவிலே பறக்க விடுகிறார்கள். ஸ்புட்னிக்கிலே இருக்கிற டெக்னிக்கல் வேலை விட அங்கே சயன்டிஸ்ட் எடுத்துக் கொள்கிற சிரமத்தை விட ஒரு சின்ன சட்டத்தை 3 வருடத்திற்குள்ளாக நம்முடைய ஆட்சியிலே போடமுடியவில்லை என்றால், ஆட்சியிலே இருப்பவர்களின் மனத்திலே அக்கறை இல்லையா அதிகாரிகளிடத்திலே திறமையில்லையா. இல்லை உலக அதிசயமான கோவாப்பரேட்டிவ் ஆக்டை நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா அதை யாருமே படித்துப்புரிந்து கொள்ளமுடியாதா?

மேற்கொண்டு எப்போது நீங்கள் தேர்தலை நடத்தப்போகிறீர்கள்? எவ்வளவோ பெரிய காரியத்தை எல்லாம் சுருக்கமாக நடத்திக் கொடுக்கிற அதிகாரிகள் தானே, அவர்களிடத்திலே நீங்கள் நல்ல முறையிலே இன்ஸ்டிரக்ஷன் கொடுக்கவில்லையா அல்லது இன்டியூஸ் செய்யவில்லையா என்பதிலே எல்லாம் நிச்சயமாக எங்களுக்கு சந்தேகம் வருகிறது. ஏன் அதைக் கொண்டு வரக்கூடாது. கொண்டு வரலாம். நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூடபோன ஆண்டு பேசும்போது அடுத்தபருவ காலத்தில் அதாவது மழை பெய்கிற சீசனில் இடி இடித்தாலும் மழை பெய்தாலும் புயல் அடித்தாலும் ஊராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெற்றேத்தீரும் என்றார்.

இடி இடித்தது. மழையும் பெய்தது, புயலும் கொஞ்சம் வீசியது. ஆனால் எலக்ஷன் இன்னமும் வரவில்லை. அவர் மறுபடியும் கால நீட்டிப்புக் கேட்டார். இன்னமும் கேட்பார் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த ஒரு துறையிலே மட்டும் அல்ல வேறு எந்த துறையாக இருந்தாலும், தேர்தலை காலம் கடத்துவது என்பது நமக்குத்தான் நட்டம். நம்மை நம்பியிருக்கிற பொது மக்களுக்குத்தான் நட்டம். நமக்கு சோறு போடுகிற நம்மை பசியிலிருந்து பாதுகாக்கிற விவசாயிகளுக்குத்தான் நட்டமே தவிர வேறு யாருக்கும் இல்லை. ஆகவே அந்த நட்டத்தை எல்லாம் நீங்கள் சுருக்கமாக போக்க வேண்டும்.

(முற்பகல் 11.10)

தமிழ்நாடு விவசாயிகளுக்கு நல்லது செய்யக்கூடிய காரியங்களைச் செய்யவேண்டுமானால் இத்தகைய கால நீட்டிப்பினை நீட்டிக்கொண்டே போகாமல் இப்போது ஓராண்டுக்கு எக்ஸ்டென்ஷன் கேட்டிருக்கிறார்கள், மேலும் அடுத்த ஆண்டும் எக்ஸ்டென்ஷன் கேட்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். எனவே மேலும் மேலும் நீட்டிக்கொண்டு போகாமல் ஒரு நல்ல மனப்



1983 பப்ரவரி 11] [திரு. ஜே.எஸ். இராசு]

பான்மையோடு இந்த சட்டத்தைக் கொண்டு வந்தால் அதை மட்டும் வரவேற்று இப்போது கொண்டுவந்திருக்கின்ற முறையில் நீட்டிக்கக்கூடாது என்ற கண்டனத்தைத் தெரிவித்து இந்த அளவோடு என்னுடைய உரையினை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே. அங்காடிக் குழுக்களின் பதவிக்காலத்தை நீட்டிப்பது தொடர்பாகக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவுகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய எண்ணங்களை எடுத்து விளக்கி இருக்கிறார்கள். நான் ஏற்கனவே இந்தப் பேரவையிலே தெரிவித்ததைப் போல அங்காடி குழுக்களின் சட்டம் 1959ஆம் ஆண்டிலே இயற்றப்பட்ட சட்டம். இன்றைக்கு வளர்ந்திருக்கின்ற சூழ்நிலைக்கேற்ப அந்த சட்டத்திலே விரிவான பல திருத்தங்களைச் செய்ய வேண்டியது அரசினுடைய கடமை. இன்றைக்கு இருக்கின்ற இதே அமைப்பை வைத்துக்கொண்டு அங்கே தேர்தலை நடத்த வேண்டும் என்று கருதினால் ஒவ்வொரு அங்காடி குழுவிற்கும் 10 இலட்சம் ரூபாய்க்கு மேலே தேர்தல் நடத்த செலவாகும். ஆகவே அதை அங்காடிகளினுடைய வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிடலாமே தவிர தேர்தலிலே இவ்வளவு பெரிய பணத்தைச் செலவு செய்வது அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற விவசாயப் பெருமக்களுக்கு நலம் செய்வதாக ஆகாது. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டுதான் நாம் இதிலே விரிவான சட்டதிருத்தங்களைச் செய்யக் கோருகிறோம். வர இருக்கின்ற வரவு-செலவுக் கூட்டத் தொடரிலேயே அந்தத் திருத்தம் அவைக்கு வரும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தத்துறையைப் பொறுத்தவரையில் அஸ்ஸாமில், ஆந்திராவில், இருப்பதைப் போன்ற சட்ட முறைகளைப்பார்த்து அவற்றை எந்த அளவுக்கு நம்முடைய சட்டத்திலே ஏற்றுக்கொள்ள முடியும் என்று கருதி அதற்கான திருத்தங்களைச் செய்து அது சட்டத்துறையின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. இப்போது அது சட்டத்துறையின் பரிசீலனையில்தான் இருக்கின்றது. ஆகவே அந்தத் திருத்தங்கள் வந்து அவை சட்டமன்றத்திலே நிறைவேறுகின்ற காலம் வரையில் நாம் தனி அதிகாரிகளுடைய பதவி நீட்டிப்பு கொடுக்கவேண்டியது தவிர்க்க முடியாத கடமையாக ஆகிறது என்ற காரணத்தால் தான் இத்தகைய சட்டமுன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவெங்கடம் அவர்கள் இந்த ஒழுங்கு முறை அங்காடிகளில் இருக்கின்ற சில குறைபாடுகளைக் கோடிட்டுக் காட்டினார்கள். அவற்றைத் திருத்துவதற்கும், சீர்படுத்துவதற்கும் அரசு நிச்சயமாக முயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் மொட்டைக் காதன் குட்டையிலே விழுந்தான் என்பதைப்போல் எங்கே

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 11/1983) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## (ஆ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன் வடிவு, 1983.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. பாலசுப்பிரமணியன்):** பேரவை முன்னுள்ள கேள்வி "தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 12/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகவுரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 12/1983) நிறைவேற்றப்பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

*1983ம் ஆண்டு பிப்ரவரி 8ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



## 10. அரசினர் தீர்மானம்.

### அலுவல் வரிசையில் மாற்றம்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். "இன்று நிகழ்ச்சி நிரலிலே அரசினர் சட்டமுன்வடிகளிலே 3-வது இனமாக கொடுக்கப்பட்டுள்ள "1983-ஆம் ஆண்டு இந்திய முறை மருத்துவர்கள் மாநிலப் பதிவேடு ஏற்பளிப்புச் சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1983) மற்ற சட்ட முன்வடிவுகளுக்கு முன்னால் எடுத்துக்கொள்ள வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

## 9. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (இ) இந்திய முறை மருத்துவர்கள் மாநிலப் பதிவேடு ஏற்பளிப்பு சட்ட முன் வடிவு 1983

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே;** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1983-ஆம் ஆண்டு இந்திய முறை மருத்துவர்கள் மாநிலப் பதிவேடு ஏற்பளிப்புச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

(முற்பகல் 11.20.)

இங்கே கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் இந்த விஷயத்தைப்பற்றி கொஞ்சம் விவரமாக விளக்கினால் நாங்கள் பேசுவதற்கு சௌகரியமாக இருக்கும் என்று சொன்னார்கள். ஏற்கெனவே இந்திய முறை மருத்துவர்கள், சித்த மருத்துவர்கள், ஆயுர்வேதம் படித்தவர்கள், யுனானி படித்தவர்கள் ஆயிரக்கணக்கிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் தனியாக ஒரு ரிஜிஸ்தர் வைத்து இருக்கிறோம். ஆனால் அது சட்டபூர்வமாக இல்லை. அதைச் சட்டபூர்வமாக்கினால் நல்லது என்று மத்திய அரசாங்கம் கேட்டுக் கொண்டார்கள். அதற்குக் காரணம் மத்தியில் ஒரு தேர்தல் நடக்கிறது. அந்தத் தேர்தலில் நம் மாநிலத்திலே உள்ள இந்திய முறை மருத்துவர்கள், சித்த மருத்துவர்கள் போன்றவர்கள் எல்லாம் பங்கு எடுத்துக்கொள்ளக்கூடிய முறையிலே இந்தப் பட்டியலையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாம் சொன்னோம். சொன்னவுடன் அவர்கள்

*1983ம் ஆண்டு பிப்ரவரி 10ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

இதை கவ்டை நட்டரியாக, ... பூர்வமாக அங்கீகரிக்கக்கூடிய முறையிலே ஒரு லிஸ்டாக இருக்குமானால் அவர்களை நாம் தேர்தலுக்கு உட்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கும். அந்த ...ரியாகக் கொண்டு வந்தால் நல்லது என்றும் எடுத்துக்கொள்கிறோம் என்றும் சொன்னார்கள். இந்தத் தேர்தல் மார்ச் மாதம் 1-ஆம் தேதி நடந்தாலும் நடக்கலாம் அல்லது மார்ச் முதல் வாரத்தில் நடந்தாலும் நடக்கும், ஆகவே இந்த மாதத்திற்குள்ளாக இந்த சட்ட முன்வடிவை நாம் கொண்டு வந்து நிறைவேற்றிவிட்டால் அத்தனை பேர்களும் தேர்தலில் ஈடுபடுவதற்கு வாய்ப்பு இருக்கும். அது மட்டுமல்ல, அந்த மெயின் ஸ்ட்ரீமிலே, தேசிய நீரோட்டத்திலே—நாம் மக்கள் வாழ்வுத் துறையைப் பொறுத்த வரையில் சொல்கிறேன்– அதிலிருந்து விலகிப்போகக் கூடிய நிலைமை இல்லாமல் அத்தனை பேர்களுக்கும் வாய்ப்பு அளிக்கக்கூடிய முறையிலே நாம் இதைக் கொண்டுவந்திருக்கிறோம். இதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்தால் நான் பதில் அளிப்பதற்கு சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த பதிவேடுச் சட்டத்திலே the Register of Indian Medicine as maintained by the Tamil Nadu Board of Indian Medicine has no statutory basis and is based on only executive orders issued by the State Government from time to time என்று போடப்பட்டிருக்கிறது. பதிவு செய்கிற இந்தக் காரியத்தை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வரவேற்கிறேன். பொதுவாக தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கானவர்கள் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். சித்தம், யூனானி போன்ற முறைப் படித்தவர்கள் ஆயிரக்கணக்கில் ஈடுபட்டிருக்கிறார்கள், அப்படி ஈடுபட்டிருக்கின்றவர்களிலே சிறந்த சித்த வைத்தியர்கள் இருக்கிறார்கள். சிறந்த யுனானி வைத்தியர்கள் இருக்கிறார்கள். சிறந்த ஆயுர்வேத வைத்தியர்கள் இருக்கிறார்கள். ஆனால் அதிலே பேர் ...ந்தவமாக ஏதோ அந்தப் பரம்பரையில் வந்தவர் என்றும் வேறு விதத்திலே வந்தவர் என்றும் பயிற்சியிலே வந்தவர் என்றும் பதிவு செய்து கொண்டு வைத்தியம் செய்யக்கூடியவர்கள் பல கிராமங்களிலே இருக்கிறார்கள், அவர்களையெல்லாம் முறைப்படுத்துவதற்கும் மத்தியில் உள்ள சங்கத்திலே தேர்தலிலே பங்கு கொள்வதற்கும் இதைப் பதிவு செய்ய வேண்டுமென்ற முறையிலே கொண்டுவந்திருக்கிறார்கள். இதை முறைப்படுத்த வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.



நேற்றைய தினம் கூட முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சித்த வைத்தியத் துறை பற்றி இங்கே மிக சிறப்பாக எடுத்துக் கூறினார்கள். சித்த வைத்திய முறையில் ஆங்காங்கே அமைப்புகளை ஏற்படுத்தவேண்டுமென்று முன்னாள் அமைச்சர் கோரிக்கை விடுத்தார்கள். அதையும் ஏற்றுக்கொள்வதாக இந்நாள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு அங்கீகாரம் அளித்தார்கள். சித்த மருத்துவத்தைப் பொறுத்த வரையில் சிறப்பான அம்சம் பல உண்டு. ஆங்கில வைத்திய முறையில் தீராத நோய்கள் எல்லாம் சித்த முறையிலே தீரக் கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு முறை மட்டும் நான் தற்போது குறிப்பிடுவது என்னுடைய கடமையாகும். சுகர் கம்ப்ளெய்ண்ட் இன்ஸுலின் போன்ற ஆங்கில மருந்து ஊசிகளைப் போட்டால்தான் சரிப்பட்டு வரும் என்கிறார்கள். சித்த வைத்திய முறையிலே நாகக்கொட்டைத் தூளை 40 நாட்களுக்கு இருவேளையும் சாப்பிட்டாலே சுகர் நிச்சயமாக குறைவதற்கு மட்டுமல்ல, முழுவதும் ஒழிக்கக்கூடிய சக்தி அதிலே இருக்கிறது. அதைப்போலவே சிறியநங்கை இலை: இந்த சிறியாநங்கை செடி இருக்கிற இடத்திலே நாகப்பாம்பு கூட போகாது. அப்படிப்பட்ட இலை அது. அந்த இலை, முட்டைக்கரு, குங்குமப்பூ ஆகிய மூன்றையும் கலந்து சாப்பிட்டால் அதற்கு நாகப்பாம்பு விஷத்தையும் ஒழிக்கக்கூடிய சக்தி அதிலே இருக்கிறது. அதைப்போல ஹார்ட்-அட்டாக் ஏற்படுகிறதே, அதைப் போக்குவதற்கு நம்முடைய தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி வெங்காயம். வெங்காயம் என்று சொல்வார்களே, அந்த வங்காயத்தை தினசரிசாப்பாட்டிலே சேர்த்து வந்தால் ரத்தத்தில் கொலஸ்ட்டல் குறைந்து. அதன் காரணமாக ரத்த அழுத்தமும் ஏற்படாது. ஏன் இதை எல்லாம் சொல்கிறேன் என்றால் சிறந்த மருந்துகள் சித்த வைத்தியத்தில் இருக்கின்றன. ஆகவே அரசாங்கம் சித்த வைத்தியத்தை என்கரேஜ் செய்யவேண்டும். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த போது நல்லமுறையிலே இந்த வைத்தியத்தை அபிவிருத்தி செய்தார்கள். எங்களுடைய வட்டத்திலே கூட சித்தநிலையங்களை கொடுத்தார்கள். ஆகவே பல இடங்களுக்கும் சித்த வைத்திய நிலையங்களை கொடுத்து அபிவிருத்தி செய்வதற்கு வழி செய்யவேண்டும்.

சித்த வைத்தியத்தை ஆராய்ச்சி செய்து எந்த எந்த வகையில் அந்த மருந்துகளைச் சாப்பிட்டால் மக்களுக்கு நல்லமுறையில் பயனளிக்க கூடியதாக இருக்கும் என்பதைப் பார்க்கவேண்டும். அதை நல்லமுறையில் விளம்பரப்படுத்தி, இன்னும் சொல்லப் போனால் ஒவ்வொரு ஒன்றியத்திலும் கிராமங்கள் தோறும் பயிற்சி பெற்ற டாக்டர்களை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த வகையில் சித்த, யுனானி, ஆயுர்வேதிக் ஆகியவற்றில் பதிவு செய்தவர்களை மத்திய சங்க தேர்தலில் வாக்களிக்கிறஉரிமை அளிக்கிற இந்த சட்டத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

[திரு. பாபு ஜனார்த்தனன்] [1983 பிப்ரவரி 11

அதைப்போல ஆங்கில மருந்துகளில் கூட இன்றையதினம் போலி மருந்துகள் தாராளமாக வந்திருக்கிறது. போலி மருந்துகளின் ஏஜென்சியாக இருக்கிறவர்கள் ஒரு குறிப்பிட்ட சிலராக இருப்பதால் எளிதில் கண்டுபிடிக்கலாம், அவர்களின் மருந்துகள் கடைகளில் கிடைக்கிற நேரத்தில் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், யுனானிசம்பந்தப்பட்ட வரையில் முஸ்லீம் சமுதாயத்தினருடைய முறையாக இருக்கிறது: இந்த முறையில் ஆஸ்துமாவை போக்குவதற்கு நல்ல மருந்துகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சித்த யுனானி ஆயுர்வேத மருந்துகளை நல்ல முறையில் என்கரேஜ் செய்ய வேண்டும். நாட்டில் ஏழ்மை இருக்கிற காரணத்தால் ஏழை மக்கள் மிகச்சுலபமாக குறைந்த செலவில் நல்ல வைத்தியம் செய்து கொள்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த சட்ட முன்வடிவை வரவேற்று விடைபெறுகிறேன்.

* **திரு. கு. ரமணி:** மதிப்பிற்குரியமாற்றுத் தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த இந்திய முறை மருத்துவர்கள் பதிவேடு 1970-ம் வருட 49.வது வட்டத்திலுள்ள பதிவேட்டினுடைய ஒரு பகுதியாக தமிழகத்திலுள்ள எல்லா ஆயுர்வேதிக் யுனானி சித்த வைத்தியர்களும் டாக்டர்களாக அந்த பதிவேட்டில் பதிந்தாக வேண்டும் என்பதற்காகத்தான் அவர்களுக்கு மத்திய கவுன்சில் தேர்தலுக்கு ஓட்டுரிமை மட்டுமல்ல, அவர்களும் தேர்ந்தெடுக்கப்படவும் உரிமை அவர்களுக்கு கிடைக்க வேண்டுமென்பதற்காக கொண்டுவரப்பட்டிருக்கிறஇந்தச்சட்டம் நாம்எல்லோரும் வரவேற்கக்கூடிய ஒரு சட்டம். ஏற்கெனவே நம்முடைய தமிழகத்தில் சிலவருடங்களுக்கு முன்பு எழுதப் படிக்கத் தெரியாத பல டாக்டர்கள் ஆயுர்வேத சித்த மருத்துவர்களுக்கு வெறும் வாய்மொழியாக தேர்வை ஏற்படுத்தி அதில் சில ஆயிரம் இப்படிப்பட்ட வைத்தியர்கள் அங்கீகரிக்கப்பட்டு அவர்களுக்கு அதற்கான சர்டிபிகேட்டுகள் கூட வழங்கப்பட்டுள்ளன. எழுதப் படிக்கத்

(முற்பகல் 11·30)

தெரியாதவர்களுக்கே டாக்டர் என்ற சர்டிபிகேட் வழங்கப்பட்டுள்ளதை நான் பார்த்திருக்கிறேன். அந்த வைத்திய முறைகளைத் தப்பான வகையில் பயன்படுத்திக் கொள்ளக்கூடியவர்களைத் தடுப்பதற்கும் உண்மையாக நமது நாட்டு மருத்துவர்கள், திறமையுள்ளவர்களாக இருப்பவர்கள் படிக்கவோ, நவீன முறைக்கோ வர முடியாவிட்டாலும், அவர்களுடைய திறமையைப் பயன்படுத்திக்கொள்ள அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பது நல்லது. இன்னும் பலர் அந்தப் பட்டியலில் சேரத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் அப்படிப்பட்ட முறைகளில் தேர்வுகளை நடத்தி, அவர்களை டாக்டர்களாக அங்கீகரிக்கவேண்டும். அந்த முறையில் இந்த சட்டம் நல்ல சட்டமாக வரவேற்கத்தக்கதாக உள்ளது.



1983 பிப்ரவரி 11] [திரு. கு. ரமணி]

அதே சமயத்தில், வைத்தியர்களுடைய நிலைமை இப்படி இருக்கிறது என்று சொன்னால், இந்த வைத்திய முறைகளுடைய நிலைமை நம் தமிழ் நாட்டில் எப்படி இருக்கிறது என்பதை நமது அரசு கொஞ்சம் கவனமாகப் பார்க்க வேண்டியுள்ளது. நம் நாட்டு மருத்துவ முறை, சிறப்பு, விசேஷ அம்சங்களைக் கொண்ட மருத்துவ முறையாக உள்ளது. நம் நாட்டு மூன்று மருத்துவ முறைகளிலும் இப்படிப்பட்ட தன்மைகள், உண்டு. ஆனால் உண்மை நிலைமை, இன்றைக்கு உலகத்திற்கும் நமது நாட்டிற்கும் மக்களுக்கும் விளங்காமல்தான் இருக்கிறது பெரும் பகுதி. அது மக்களுக்குத் தெரிந்தாக வேண்டும். ஒரு சாதாரண நோய்க்கும் கூட சிறு அளவிலிருந்து பெரிய அளவுக்கு இந்த முறைகளைப் பயன்படுத்தக்கூடிய ஒரு அறிவும் நோக்கமும் கருத்தும் மக்களுக்கு மத்தியிலே பரப்பப்பட வேண்டும். அதைப் பரப்ப வேண்டியது அரசாங்கத்தினுடைய முக்கியமான கடமை என்று நாம் கருதுகிறோம். அந்த முறையிலே அதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது,

ஆஸ்பத்திரிகளிலே இந்த வைத்திய முறையிலே வைத்தியங்கள் செய்வதற்கான சில பகுதிகளை ஏற்பாடு செய்து அதுபற்றிய கணக்குகளை, எந்தெந்த மருத்துவ மனைகளிலே, இந்தப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதுபற்றி இதே மாமன்றத்தில் அமைச்சர் அவர்களால் சென்ற ஆண்டு தனியான ஒரு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் அப்படி யல்லாம் செய்துள்ளபோதிலும், ஆங்கில வைத்தியத்திற்கு இருக்கும்படியான ஒரு சிறப்பும் பயரும் பிரத்தியேகமும் புகழும் இதற்கில்லை. இதைப் பயன்படுத்துகிற ஜனங்களுக்கும் வெகு துரிதமாகப் போய்ச் சேரும்படியான சாதனைகள் அப்படிப்பட்ட ஒரு ஆகர்ஷணம் இந்த முறைகளுக்கு இன்னும் ஏற்படவில்லையென்பது உண்மை. இந்த முறைகளை ஆஸ்பத்திரிகளில் புகுத்திய அப்படிப்பட்ட நிலைமை ஏற்படவில்லையென்பது உண்மை. உதாரணமாக, நம்முடைய இந்திய மருத்துவ சவுன்கிலின் ஆதரவின்கீழ் அவர்களுடையஅனுமதியோடு இங்கே சென்னை நகரத்தில் இருக்கும் படியான பெரிய ஆஸ்பத்திரியில் 10 படுக்கைகள் கொண்ட ஆயுர்வேத பிரிவு ஏற்படுத்தப்பட்டு ஆயுர்வேத வைத்தியம் அதிலும் குறிப்பாக வாதநோய் இரத்த வாதம் என்று சொல்லக்கூடிய (Rh matic Blood) என்று சொல்லக்கூடிய வாத நோய்களுக்கு சிகிச்சை பெறும் நோயாளிகள் அங்கே வந்து அவர்களுக்கு உயர்ந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆனால் அதற்கென ஒதுக்கப்பட்டிருக்கிற இடம் சுற்றிலும் ஆங்கில முறை வைத்தியத்திற்கு மத்தியில் இதை வைத்திருப்பதால் அதைப் பார்க்கிற மாதிரி இதைப் பார்க்காத நிலை உள்ளதும் இதைப் பார்க்கக்கூட ஜனங்கள் விரும்பவில்லை, அவர்களுக்கு அளிக்கப்படுகிற உணவு இவர்களுக்கு அளிக்கப்படுகிற உணவு மிக வித்தியாசமானதுஅவர்களுக்குப் பத்தியமின்மை இவர்களுக்குப் பத்தியம்.இதையெல்லாம் பார்க்கும்

போது ஒரு போராட்டம் நடத்தியே அந்த 10 படுக்கைகளுக்கு வருகிற நோயாளிகளைக் காப்பாற்ற வேண்டிய நிலைமை இருக்கிறது.

நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். உலகத்திலே வளர்ந்து வரக்கூடிய நாடுகளில் சீன நாட்டுக்குச் சென்று ஒரு மாதத்துக்கு மேல் நாங்கள் சுற்றுப் பயணம் செய்த காலத்தில் இந்த முறைகள் பற்றி அங்கே கேட்டோம். அவர்கள் அந்த நாட்டுக்கு சிறப்பான இன்டிஜினஸ் உள்நாட்டுமருத்துவ முறைகளைப் பிரதானமுறையாக வைத்துக் கொண்டு, அதோடு பக்க பலமாக, ஆங்கிலமுறைகளை வைத்திருக்கிறார்கள். எந்த ஆஸ்பத்திரிக்குப் போனாலும் இரண்டு முறைகள் டாக்டர்களின் இருப்பார்கள், வருகின்ற நோயாளிகளை இரண்டு டாக்டர்களும் பரிசோதிக்கிறார்கள். அதற்குப் பிறகு எந்தச் சிகிச்சை அளிக்க உத்தரவிட வேண்டுமோ அதுபற்றி இறுதியிலே முடிவுசெய்து, அந்த முறையை அவர்கள் கையாள்கிறார்கள். இன்றைக்கு உலகத்திலே அவர்களுடைய உள்நாட்டு மருத்துவமுறை பிரபலமடைந்து இருக்கிறது.

சோவியத் நாட்டிலும் அதே மாதிரிதான். பூமிக்கடியில் இருந்து கிடைக்கிற கந்தகத் தண்ணீரைப் பயன்படுத்தி—அதற்கு ஆங்கிலத்தில் வேறு பெயர் இருக்கிறது. பெரிய ஆஸ்பத்திரி மாதிரி உருவாக்கி. அதிலே பல நோயிலிருந்து சகலவிதமான நோய்களுக்கும் சிகிச்சை செய்கிறார்கள். அவர்களுடைய சொந்த உள்நாட்டு ஏற்பாடு அது.

அப்படிப்பட்ட முறைகள் பல நாடுகளில் இருக்கின்றன. நம்முடைய நாட்டிலே இருக்கின்ற சிறந்த மருத்துவமுறைகள், மருந்துகள், மூலிகைகள் ஆகியவைகளுக்கு பெருமை தேடித் தரும் முறையில், மக்கள் இதைப் புரிந்து கொண்டு பயன்படுத்துகின்ற அளவில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரிசர்ச்சிற்காக எந்த அளவிற்குப் பணம் செலவு செய்ய வேண்டுமோ அதை செலவு செய்ய வேண்டும். கையிலே உள்ள பணத்திற்கேற்ப இதைச் சிறிதாக ஆக்கக்கூடாது. ஆங்கில முறையைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. அதில் இருக்கின்ற அறுவைச் சிகிச்சை அற்புதமானது, உலகத்தில் மிகப்பெறும் சோதனைகளை அன்றாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய முறையிலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமா இல்லையா? அதை முன்னேற்றுவதற்கான பிரத்யேகமான கடமை நம்முடைய அரசுக்கு இருக்கிறது. அதற்கு வேண்டிய ரிசர்ச்சையும், விளம்பரத்தையும் செய்ய வேண்டும். ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறை பெயரளவிற்கு மட்டும் இருந்தால் போதாது





இதற்காகப் பல காலேஜுகளையும் நிறுவி, டாக்டர்களுக்குப் பயிற்சி கொடுத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மருந்துகளைப் பொறுத்தவரையில், பேட்டண்ட் மெடிசன் என்று ஆங்கில மருத்துவ முறையிலே இருக்கிறது. அந்த முறையிலே இந்திய முறை மருத்துவத்திலேயும் மருந்துகளை உற்பத்தி செய்து, அணுபிரமாணத்திலிருந்து எவ்வளவு தேவையோ அந்த அளவிற்கு அதிகமாகவோ, குறைந்தோ பெற்றுக்கொள்ளும் வகையில் ஒவ்வொரு கடையிலும், ஒவ்வொரு ஊரிலும் கிடைக்கின்ற வகையில், ஒவ்வொரு வியாதிக்கும் பயன்படுத்தும் முறையில் நல்ல மருந்துகளாகத் தயாரிக்க வேண்டும். நல்ல முறையில் கண்காணித்துத் தயார் செய்யப்படும் மருந்துகள் எந்தச் சமயத்திலும் மக்களுக்குக் கிடைக்கும் முறையை உருவாக்க வேண்டும். இந்த முறையில் நாம் எடுக்கின்ற முயற்சிகள் போதாது. மிகமிகக் குறைவாகவே அந்த முயற்சி இருக்கிறது. அப்படிப்பட்ட மருந்துகள் அதிக அளவில் தயாரிக்கப்படுவதும், விநியோகிக்கப்படுவதும் இருக்க வேண்டும். இந்த முறைகளை அரசு கையாண்டால் நிச்சயமாக இந்த மருந்துகள் மிகப்பெரிய செல்வாக்கைப் பெற்றுவிடும். ஆனால் இன்றைக்கு இந்த மருந்துகளின் செல்வாக்கு, வெளியே தெரியவில்லை. இதன் பெருமை வெளியே தெரிய வைக்க வேண்டிய பிரதான கடமை நமக்கு இருக்கிறது. அகில இந்திய அளவில் நமக்கு இதில் பங்கிருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் விவரம் தெரிந்த மருத்துவராக இருப்பதால் நிச்சயமாக இந்த முறையிலே திட்டவட்டமாக அரசாங்கத்தின் சார்பில் சகல சந்தர்ப்பங்களிலேயும் பரிசீலனை நடத்திச் செய்வார்கள் என்று நம்பி, செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற, அதாவது 1970-வது வருடத்தில் 48-வது மத்திய சட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ள மத்திய மன்றத்தில் நம்முடைய ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கக்கூடிய முறையில் அவர்களைப் பதியக் கூடிய முறையிலே இந்த சட்டத்தைக்கொண்டு வந்திருக்கிறார்கள். இதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று ஒரு சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்

இந்திய வைத்திய முறைப்படி சில அலோபதி முறையில் குணப்படுத்த முடியாத சில வியாதிகளைக் கூட குணப்படுத்தும் சில முறைகள் இப்போதுள்ள இந்திய ஆயுர்வேத, சித்த, யுனானி முறையில் செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு மஞ்சள்காமாலை போன்ற, ஆஸ்துமா

[திரு. சோ. அழகர்சாமி] 1983 பிப்ரவரி 11]

போன்ற வியாதிகளுக்கு, சிலபேர் சொல்கிறார்கள். அதுபற்றி நம்முடைய டாக்டர்கள் அல்லது மருத்துவத்துறையில் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள்தான் முடிவு சொல்ல வேண்டும். ஆனால் சிலர் சொல்கிறார்கள், அலோபதி முறையில் பல ஊசிகள் போடப்பட்டோ அல்லது பலவிதமான சிகிச்சைகள் பெற்றோ குணமாகவில்லை. ஆனால் இந்தச் சித்த வைத்திய முறையில் அல்லது ஆயுர்வேத முறையில் சில மாத்திரைகளையும் பச்சிலைகளையும் சாப்பிட்டு மஞ்சள் காமாலை போன்ற வியாதிகள் குணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கிறார்கள்.

**திரு. பா. ஜனார்த்தனன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இடையிலே குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். மஞ்சள் காமாலைக்கு மஞ்சள் கரிசலாங்கண்ணி போன்ற இலைகள் மூலம் வைத்தியம் செய்யும் முறை சித்தவைத்தியத்தில் இருக்கிறது. ஆங்கில மருத்துவ முறையைவிட இந்த வேர் போன்றவைகளைப் பயன்படுத்துவதில் நல்ல பயன் இருக்கிறது. இதைப் பற்றி மேலும் நான் சொல்லலாம். மஞ்சள் காமாலைக்கு சித்த வைத்தியம் நல்ல முறையாகும். ஆங்கில வைத்தியத்தில் [illegible] இல்லாமல் பலர் மரணம் அடைந்திருக்கிறார்கள். எனவே, மஞ்சள் காமாலை நோய்க்குச் சித்த வைத்தியம்தான் சிறந்தது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.40)

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்லவேண்டிய விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் பா. ஜனார்த்தனன் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

அதோடு கோவையிலே ஒரு தனியார் வைத்து நடத்தக்கூடிய பார்மசி இருப்பதாகவும், அங்கே ஏற்கனவே வெளிநாட்டுக்காரர்கள் எல்லாம் பலபேர்கள் வந்து, சிகிச்சை பெற்றுப் பலன் அடைந்திருக்கிறார்கள் என்றும், இங்கே உள்ளவர்களும் அங்கே போய் சிகிச்சை பெற்று வந்திருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. எனவே அதை பரிசீலனை செய்து அதைப்போலவே இங்கேயும், இது சம்பந்தமாக ஆராய்ச்சிகள் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப்போது பல தாலுக்கா மருத்துவமனைகளிலும் மாவட்ட தலைமை மருத்துவ மனைகளிலும் இந்திய மருத்துவத்தில் தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். மேலும் பல மருத்துவமனைகளிலே இந்தப் பிரிவு இல்லை. கூடுமான வரையில் எல்லா தாலுகா மருத்துவ மனைகளிலும், மாவட்ட தலைமை மருத்துவ மனைகளிலும் இந்திய மருத்துவத்தில் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1983 பிப்ரவரி 11] [திரு. சோ. அழகர்சாமி]

இன்றைக்கு சித்த மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டையிலும், சென்னையிலும் இருக்கிறது. அங்கே பார்மஸி கோர்சுகள் பயிற்சி துவங்கப்பட்டதாகத் தெரிகிறது. இப்போது இந்த பயிற்சி எந்த நிலையிலே இருக்கிறது என்பது தெரியவில்லை. அதை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு இந்திய முறை மருத்துவத்தை கூடுமான வரையில் நன்றாக அபிவிருத்தி செய்யவேண்டும். ஆரம்பத்தில் சற்று வேகமாகச் செய்தார்கள். இப்போது சுணக்கமாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவையிலே உள்ள அந்த மருத்துவமனையிலே பல ஆண்டுகளாக தீராமல் இருந்த வியாதிகள் எல்லாம் இந்த இயற்கை வைத்தியத்தாலே தீர்ந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதையும் பரிசீலனை செய்யவேண்டும். இந்த முறையில் சரியான அளவுக்குப் பயிற்சி கொடுக்க முயற்சி செய்ய வேண்டும். டெல்லியிலே இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தில் சில பச்சை இலைகள் எல்லாம் ஆராயப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டு வந்திருக்கிறார்கள். அதை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று கேட்டு, இந்த மசோதாவை வரவேற்று முடித்துக்கொள்கிறேன்.

***திரு. க. பாரமலை :** மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் கொண்டு வந்த 1983 ஆம் ஆண்டு இந்திய முறை மருத்துவர்கள் மாநிலப் பதிவேடு ஏற்பளிப்புச் சட்ட முன்வடிவை ஆதரித்து என்னுடைய கட்சியின் சார்பிலே வரவேற்று சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

ஏற்கனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்ததைப் போல இந்திய முறை மருத்துவம் கிடைக்க முடியாத ஒரு போக்கிலும் என்று சொன்னால் அது மிகையாகாது. 20 ஆண்டுகளுக்கு முன்பு சின்ன குழந்தைகளுக்கு அலோபதி மருந்து கொடுத்தது கிடையாது. ஐந்து வயது வரை உள்ள ஆயுர்வேதம் சித்தம் என்று சொல்லப்படுகின்ற வைத்தியத்தைத் தான் கிராமங்களிலே இருந்து கிடைக்கின்ற மருந்துகளை வைத்துதான் வைத்தியம் பார்த்து வந்தார்கள். இது மிகச் சிறப்பான ஒரு மருத்துவமாக இருந்து வந்தது. ஆனால் இந்த முறையை முறைப்படியான பயிற்சியைப் பெறாதவர்கள் அந்த வைத்தியத்தை செய்து வந்தார்கள். அவர்கள் மறைந்து விட்ட பின்னாலே கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து இன்றைக்கு நாட்டிலே சித்தம் ஆயுர்வேத மருத்துவம் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு வந்துவிட்டது.

ஆனால் தமிழகத்திலே இருக்கின்ற பல மூலிகைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி அதிலே இருந்து எக்ஸ்டிராக்ட் எடுத்து மீண்டும் இங்கே அனுப்பி அலோபதி மருந்தாக நாம் உப

யோசித்துக்கொண்டு இருப்பதை பல நாட்களாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மக்களுக்கு இப்படிப்பட்ட மருந்துகளை குறிப்பாக மூலிகைகள் இலைகள் மூலமாகக் மருந்துகள் கிடைக்கும் முறையைத் தீவிரப்படுத்தவேண்டும்.

இன்றைக்கு திருநெல்வேலி மற்றும் சென்னையிலும் இந்திய மருத்துவம் படித்துப் பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். மேலும் தனிப்பட்ட இன்ஸ்டிட்யூட்களிலே படித்து சான்றிழ் பெற்றவர்களும் இருக்கிறார்கள், அவர்கள் கிராமங்களுக்குப் போனால் யார் அரசாங்கக் கல்லூரிகளில் படித்தவர்கள் யார் தனியார் இன்ஸ்டிட்யூட்டிலே படித்தவர்கள் என்று புரியாமல் இருக்கிறது. எனவே தனியாக உள்ள இன்ஸ்டிட்யூட்டில் படித்த வர்களுக்குமுறையாகப் பயிற்சி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்,

குறிப்பாக, ஐந்தாண்டுகள் மருத்துவக் கல்லூரியில் படித்த வர்களைக் கூட பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் இன்டர்வியு வைத்து அவர்கள் திறமைகள் சோதிக்கப்பட்டு பின்புதான் நிரந்தரமாக்கப்படுகின்றார்கள். அதைப்போலவே தனிப்பட்ட இன்ஸ்டிட்யூட்டிலே படித்தவர்களை இதற்கென்று இருக்கின்ற கவுன்சில் அவர்களுக்குத் தகுதி இருக்கிறதா என்பதைப் பார்த்து நிர்ணயிக்கவேண்டும் என்று அரசைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய மஞ்சள்காமாலையைப் பற்றிக்கூட மாண்புமிகு உறுப்பினர் சோ அழகர்சாமி அவர்கள் சொன் னார்கள். இன்றைக்கு அலோபதி வைத்தியத்தை பண்ணிக் கொண்டிருக்கிறபோது, இங்கே இருக்கக்கூடிய டாக்டர்களே அலோபதி மருந்தோடு சேர்த்துச் சாப்பிடுங்கள் என்று சொல் கிறார்கள், ஆகவே அப்படிப்பட்ட நல்ல மருந்துகளை எல்லாம் முறையாக பயன்படுத்துகிற ஒரு சீரான முயற்சியை அரசு மேற்கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டுகோள் விடுத்து, இந்த சட்ட முன்வடிவை ஆதரித்து நான் அமர்கிறேன். வணக்கம்.

திரு. பருத்தி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவை யின் மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்திய மருத்துவர்கள் பற்றிய இந்த சட்டமுன்வடிவைக் கொண்டு வருவதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். இந்திய மருத்துவத்துறை என்பது கடலிலே புதைந்து கிடக்கிற அற்புதங்களை எப்படி கணக்கிடுவதற்கு நீண்ட காலமாக ஆராய்ச்சி நடத்திக்கொண்டு இருக்கிறார்களோ அதைப்போல இந்திய மருத்துவத்துறையிலே புதைந்து கிடக்கிற பல நல்லவைகளை வெளியே காண்டுவருவதற்கு நாம் ஆராய்ச்சிகளை நடத்தியாகவேண்டும். எனக்கு முன்னாலே பேசிய





உறுப்பினர்கள் அத்தனை பேரும் இந்த மருத்துவத்துறையிலே இருக்கின்ற பல்வேறு சிறப்புகளை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக இன்றையதினம் மனித சமுதாயத்திலே வளருகின்ற பிறந்த குழந்தைகளுக்குக்கூட இன்றையதினம் டயாபடிஸ் நோய் வந்துவிடுகிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். இப்படி வருவதற்குக் காரணம் நல்ல ஊட்டச் சத்தையும், நோயை எதிர்க்கின்ற தன்மைகளையும், இந்தக் குழந்தைப் பருவத்திலே கொடுக்காத காரணத்தால், இன்றைக்கு கிராமப் புறத்திலே இருக்கிற மருத்துவர்கள் அதாவது பாரம்பர்யமாக வந்த இந்திய மருத்துவர்கள் இதைக் குறிப்பிட்டுக் கூறுகி றார்கள். குழந்தை பிறந்தவுடன் அந்தக் குழந்தைக்கு கஸ்தூரி கோரோஜனம் போன்றவைகள் முன்பு கொடுத்து வந்தார்கள். ஆனால் இன்றைக்கு கடைகளிலே விற்கின்ற அந்த கஸ்தூரி கோரோஜனம் போன்றவைகள் உண்மையானவைகளாக இருப் பதில்லை. ஆகவே முன்பு கொடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தரப்பட்ட அந்த மருந்தினுடைய தரம் இன்றைக்கு தரப்படுகிற அதே மருந்தில் இல்லாத காரணத்தால்தான் நோயை எதிர்க் கின்ற ஆற்றல் குழந்தைகளுக்கு இல்லாமல் போகும் என்பதை இன்றைக்கு கிராமப்புறத்திலே இருக்கின்ற மருத்துவர்கள் சொல்கிறார்கள். ஆகவே அந்த கஸ்தூரி கிடைக்கின்ற விதத்தில் அதேபோல் கோரோஜனம் கிடைக்கின்ற விதத்தில் அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யவேண்டும்.

காஷ்மீர் பகுதியில்தான் கஸ்தூரி மான் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது அத்தகைய மான்களைக் கொண்டு வந்து நம்முடைய கொடைக்கானல், ஊட்டி போன்ற பகுதிகளில் வளர்ப் பதன் மூலமாக இந்திய மருத்துவத்துறையினுடைய வளர்ச்சிக்கு ஒரு மிகப் பெரிய சாதனையை உருவாக்கித்தருவதற்கான வழிவகைகளை நாம் உருவாக்கித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் அலோபதி முறையைக் குறை சொல்கி றேன் என்று நீங்கள் நினைக்கக்கூடாது. அலோபதி மருத்துவ முறைக்கும் சித்த மருத்துவ முறைக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன, அலோபதி மருத்துவ முறையில் ஒரு மருந்தைக் கொடுத்தால் திரும்ப அந்த மருந்தைக் கொடுக்கவேண்டுமானால் முதலிலே கொடுத்த அந்த மருந்தைவிட அதிகமான சக்தி உள்ள தாக மீண்டும் கொடுக்கவேண்டும். காரணம் அதை தடுக்கின்ற ஆற்றல் நம்முடைய உடம்பிலே ஏற்பட்டுவிடுகிறது ஆனால் சித்த மருந்தை பொறுத்தவரையில், மற்ற இந்தியத் துறையிலே தரப்படுகின்ற மருந்துகளைப் பொறுத்தவரையில் அத்தகைய தன்மைகள் ஏற்படுவதில்லை நோய் இல்லாமல் அந்த மருந்தை சாப்பிட்டால்கூட இதனால் எந்தவிதமான ரியாக்ஷனும், ஆப்டர் எபெக்ட்ஸ்களும் அதிலே வருவதில்லை என்பதை பலரும் கண்டறிந்திருக்கிறார்கள். இங்கே குறிப்பாக நீரிழிவு நோயைப் பற்றி சொல்லுகின்றபோது அதைத் தடுப்பதற்கு நம்முடைய

(திரு. ஆர். சௌந்திரராஜன்) [1983 பிப்ரவரி 11

இந்திய மருத்துவத் துறையில் குறிப்பாக ஹோமியோபதி, அதைப் போல் நம்முடைய சித்த மருத்துவத்தில், ஆயுர்வேதத்தில் அதற்கான தனியான மருந்துகள் இருக்கின்றன. இங்கேகூட சொன்னார்கள். கிழாநெல்லியைப் பற்றியும், அதைப்போலவே பல்வேறு விதமான மருந்துகளைப் பற்றியும், மஞ்சலாங்கரிசினிக் கிரைபற்றியும் எல்லாம் இங்கே சொன்னார்கள். அதைப் போலவே சக்கரைக் கால்லி என்ற ஒரு மருந்து நம்முடைய சித்தயை மருந்துவத்தில் ஏற்கனவே இருந்துகொண்டிருக்கிறது அந்த சர்க்கரைக் கொல்லி என்ற அந்த இலையைப் பயன்படுத்தினால் சர்க்கரை நோயைத் தடுக்கமுடியும் என்பது மட்டுமல்லாமல் பேன்கிரியாஸ்களையும் ரீ ஜெனரேட் செய்யமுடியும் என்றுகூட இன்றைக்கு அந்த சித்த மருத்துவத்துறையிலே இருக்கிறவர்கள் சொல்கிறார்கள். ஆகவே அந்த சர்க்கரைக் கொல்லி நம்முடைய தமிழகத்தினுடைய கிராமங்களிலே இங்கொன்றும் அங்கொன்றுமாக இருப்பதை நாம் சிறைப்படுத்தி அதை எல்லா இடங்களிலும் விளைகின்ற அந்த முறையை உருவாக்கினால்தான் அந்தச் சர்க்கரைக் கொல்லியை நாம் இன்றைக்கு உருவாக்கமுடியும்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு தலையிலே இருக்கின்ற வழுக்கையைப் போக்கவேண்டு மென்பதில் மேல்நாடுகளில் இருந்து எல்லா நாடுகளிலும் இருப்பவர்கள் ஆசைப்படுகிறார்கள். காரணம் இந்த வழுக்கை பெரியவர்களுக்கு மட்டும் வருவதில்லை. இளைஞர்களுக்கும் வந்துவிடுகிறது. ஆகவே அவர்கள் அதைப் போக்கிக்கொள்ள விரும்புகிறார்கள்

(முற்பகல் 11·50)

ஆனால் அந்த வழுக்கையைப் போக்குவதற்கு சித்த மருத்துவத்திலே 'ஞானவெட்டியான்' என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்தப் புத்தகம் வெளிவந்து நீண்ட நாட்களுக்கு மேலாகிவிட்டது. இன்று அந்தப் புத்தகத்தின் பதிவு தற்போது கிடைக்கவில்லை. ஆகவே அந்தப் புத்தகம் கிடைப்பதற்காக வழிவகைகளை அரசாங்கம் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு அந்த வழுக்கையைப் போக்க அதிலே குறிப்பிட்ட முறையை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அந்தப் புத்தகத்தில் அதைப்பற்றி சொல்கிறபோது செங்கழுநீர் பூ என்ற பூவை எடுத்து அதில் உள்ள கிழங்கை எடுத்து தைலம் செய்து தடவினால் அது போய்விடும் என்று சொல்கிறார்கள். அந்தப் பூவை எவ்வளவு பேர் பார்த்து இருப்பார்கள் என்று எனக்குத் தெரியாது. நான் அந்தப் பூவை ஒரே ஒரு இடத்தில் சிதம்பரத்தில்—பார்த்து இருக்கிறேன். அந்த பூவிலே ஒரு கிழங்கு இருக்கிறது. அந்தக் கிழங்கை பயன்படுத்தி தைலம் தயாரித்து,



1983 பிப்ரவரி 11] (திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்)

அந்தத் தைலத்தை விரலால் தொட்டால்கூட தொட்ட இடத்தில் முடி வளர்ந்துவிடும் என்பதால் சிறகால் எடுத்துத் தடவவேண்டும் என்று அதிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். (சிரிப்பு) இதைச் சிரிப்பதற்காக நான் இங்கே சொல்லவில்லை அந்த செங்கழுநீர் கிழங்கு நம்முடைய நாட்டிலே இல்லை. எங்கோ ஒன்றிரண்டு இருந்தாலும் கூட அதை ஆஸ்திகர்கள் கோவிலுக்குப் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். நாம் அவர்களிடத்தில் போய் கேட்டால் அவர்கள் தருவதற்கு மறுக்கிறார்கள். ஆகவே அரசாங்கமே அதை அதிகமாக வளர்ப்பதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மேல்நாடுகளில் இருந்து தயாரிக்கப்பட்டு வருகின்ற மருந்துகள் எல்லாம், நம்முடைய நாட்டிலே இருந்து எடுத்துச்செல்லப்பட்ட மருந்துகள் தயாரிப்பை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும். இங்கே நாம் ஆடாதொடை பாகு என்று கொடுத்தால் அதை யாரும் வாங்கிச் சாப்பிட விரும்புவது இல்லை. அதையே மேல்நாட்டில் இருந்து 'சிறப் வாசகா' என்று கொடுத்தால் அதை மக்கள் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். நாம் பாகு ரூபத்தில் தயாரித்த மருந்துகளை எல்லாம் இன்றைக்கு அவர்கள் சிறப் என்ற முறையில் தயாரித்து அனுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். அழகான பாட்டில்களில் அவற்றைப் பார்த்தவுடன் நாமும் அதை வாங்கிக் குடிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. ஆனால் நம்முடைய நாட்டிலே தயாரிக்கும் பாகை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இது எப்படியிருக்கிறது என்று சொன்னால், அக்கரைக்கு இக்கரைப் பச்சை என்பதுபோல் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தின் காரணமாக ஆயிரக்கணக்கான அல்ல, பல்லாயிரக்கணக்கான இந்திய மருத்துவர்கள், சித்த மருத்துவர்கள் பயன்படுவார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாய்க்கடி, பெருச்சாளிக்கடி போன்றவற்றிற்கு மருந்துகள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. பெரிய பெரிய மருத்துவ மனைகளில் வேண்டுமானால் கிடைக்கும் நிலைமை இருக்கிறது. 10 ஊசி அல்லது 40 ஊசி போடவேண்டிய நிலைமை இதிலே இருக்கிறது. ஆகவே, இப்படி ஊசி போட்டுக்கொள்வதை விட இறந்தாலும் பரவாயில்லை என்று எண்ணி சிலர் நாய்க்கடிக்கும் பெருச்சாளிக் கடிக்கும் ஊசிப்போட்டுக் கொள்ள முன்வருவது இல்லை. ஆனால் எங்களுடைய திருச்சி மாவட்டம், மணச்சநல்லூர் என்ற இடத்தில் ஒரு அம்மையார் நாய்க்கடிக்கும், பெருச்சாளி கடிக்கும் ஒரு பச்சிலை தருகிறார்கள். அந்த பச்சிலையின் பெயரை அவர்கள் சொல்ல மறுக்கிறார்கள்.

நிலைமை, ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அந்த சூழ்நிலையைப் போக்கிய பெருமை இந்த அரசுக்கு உண்டு. அந்த வகையிலே நம்முடைய இந்திய மருத்துவத்தின் பெருமையை மீண்டும் தக்க வைத்துக்கொள்ள இன்றைக்கு கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்தை நான் வரவேற்று, பாராட்டி அமைகிறேன். நன்றி வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. பா. ஜனார்த்தனன் : துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம். முன்னாள் அமைச்சர் அவர்கள் தலை வழுக்கைக்கு மருந்து இருக்கிறது என்று சொன்னார்கள். அது என்ன மருந்து என்று சொன்னால் பலருக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதெல்லாம் அறிவு முதிர்ச்சியால் வருவதே தவிர வேறு ஒன்றும் அல்ல.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், பல நண்பர்கள் குறிப்பாக இறுதியாகப் பேசிய நம்முடைய மாண்புமிகு முன்னாள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் உபயோகமான பல நல்ல கருத்துக்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இந்த சட்ட முன்வடிவை ஒட்டி சொல்லப்பட்ட இந்த கருத்துக்களை எல்லாம் நிச்சயமாக நம்முடைய அரசாங்கம் சிறப்பாக கவனிக்கும், கவனிக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக இந்தச் சட்ட முன்வடிவினுடைய நோக்கம் என்ன என்பதை நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர் சௌந்திரராஜன் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால் நம்முடைய இந்திய மருத்துவ முறையில் பயிற்சி பெற்றிருக்கிற மருத்துவர்களுக்கு, சித்த மருத்துவமாக இருந்தாலும் சரி, ஆயுர்வேத மருத்துவமாக இருந்தாலும் சரி, யுனானி மருத்துவமாக இருந்தாலும் சரி, அவர்களுக்கெல்லாம் வாய்ப்புத் தராமல் இருந்து கொண்டிருக்கிற நிலைமையை மாற்றி இப்போது அவர்களுக்கு அருமையான வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. அதை அழகாக சுட்டிக்காட்டினார்கள்.

அதிலே குறிப்பாக நான் சொல்ல வேண்டுமென்றால், உங்களுக்கு சில புள்ளி விவரங்களைக் கொடுப்பது பயனுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏற்கனவே நம்முடைய சித்த மருத்துவத்தைப் பொறுத்தவரையில் 9,874 பேர்கள் பயிற்சி பெற்றியிருக்கிறார்கள். அந்த 9,874 பேர்களும் ஏற்கனவே நம்முடைய தமிழக சர்க்காரின் சார்பாக தயாரிக்கப்பட்ட பட்டியலிலே இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள்



சித்த மருத்துவத்திலே பயிற்சி பெற்று, சித்த வைத்திய முறையைக் கையாண்டு, நடைமுறைப்படுத்திக் கொண்டு, பிராக்டிஸ் செய்து வரக்கூடியவர்கள். அவர்கள் இந்த லிஸ்டிலே இடம் பெற்றிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, ஆயுர்வேத வைத்தியத்தைப் பொறுத்தவரையில் 1,957 பேர்கள், அதற்குப் பின்னாலே 653 பேர்கள்—ஆகமொத்தம் 2,610 பேர்கள் பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். 'ஸ்டாச்சுட்டரி' என்று சொல்வார்கள்; அதாவது சட்டப்பூர்வமாக எந்த விதமான அதிகாரத்தையும் பெறாமல் அவர்கள் இருந்துகொண்டு வருகிறார்கள்.

அதேமாதிரி யுனானி வைத்தியத்தைப் பொறுத்தவரையில் 715 பேர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். எந்த விதமான பாதுகாப்பும் இல்லாமல் அவர்கள் பயிற்சி பெற்று இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களும் ஆங்காங்கே ஏதோ தொழில் செய்து கொண்டிருந்தாலும் கூட அவர்கள் இந்தச் சட்டத்தினுடைய எல்லைக்குள் வரவில்லை. ஒட்டு மொத்தமாக சித்தா, ஆயுர்வேதம், யுனானி என்ற மூன்று பிரிவுகளிலும் 13,199 பேர்கள் பயிற்சி பெற்று, சட்டத்தின் எல்லைக்குள் வராமல் இருக்கிறார்கள். இப்போது இந்தச் சட்டத்தை நாம் இங்கே கொண்டுவந்து நிறைவேற்றுவதன் மூலம் அவர்கள் அத்தனைப் பேர்களும் பயன்பெறுவார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(நண்பகல் 12.00)

இது ஒரு சாதாரணமான பிரச்சனை அல்ல. பல ஆயிரக்கணக்கான சித்த வைத்தியர்களால் பாராட்டப்படுகின்ற, நன்றி தெரிவிக்கக்கூடிய அளவுக்கு இங்கே சட்டத்தைக்கொண்டுவந்திருக்கிறார்கள் என்று நமது மாண்புமிகு உறுப்பினர் சௌந்திரராஜன் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய ஒரு கருத்திற்காக நன்றி தெரிவிக்கிறேன். நான்தான் அவரைப் பார்த்து, நீங்களும் பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். ஏனென்றால் இங்கே அனுபவம் பெற்றிருக்கக் கூடிய அவர் பேசினார் என்றால், விவாதத்திற்கு அது பயன் உள்ளதாக இருக்கும் என்கிற அடிப்படையிலேயே கேட்டுக் கொண்டேன். அவர்கள் அருமையான கருத்தினை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அத்தோடு நம்முடைய அதிகாரிகளும் இங்கே உட்கார்ந்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் சொன்ன கருத்துகளையெல்லாம் அவர்கள் குறித்துக் கொண்டு, உடனுக்குடன் அவைகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று நான் இங்கே அவர்களுக்கு அறிவுறுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

[திரு. திருச்சி சௌந்திரராஜன் [1983 பிப்ரவரி 11

எங்களுக்கு மட்டுமே அந்தப் பெயர் தெரியவேண்டும் என்று சொல்கிறார்கள். ஒருநாள் சாப்பிட்டாலே அந்த விஷம் இறங்கி விடுகிறது. 10 நாள், 40நாள் கழித்து அவர்கள் நாய் போல் குரைப்பது இல்லை. அல்லது சாவதும் இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, ஆஸ்துமா என்ற நோய் உடன்பிறந்தே கொல்லும் தன்மை பெற்றதாகும். அதனால் பாதிக்கப்பட்டவர்கள் இதுவரையில் வேறு எந்த மருத்துவ முறையினாலும் விடுதலை பெற்றதாக சான்றுகள் கூறமுடியாது. ஆனால் இந்திய மருத்துவ முறையிலே, சித்த வைத்திய முறையிலே, ஆயுர்வேத வைத்திய முறையிலே அதைப் போக்கமுடியும். இந்த முறை மருத்துவ முறையைப் பின்பற்றியவர்கள் அந்த நோயிலிருந்து விடுபட்டு இருக்கிறார்கள் என்பதற்கு நான் பல சான்றுகள் சொல்ல முடியும்.

இப்படி பல நோய்களுக்கு இந்திய மருத்துவ முறையில் நல்ல மருந்துகள் இருக்கின்றன. இந்திய மருத்துவ முறையைப் பின்பற்றுகின்ற மருத்துவர்களும், பரம்பரை பரம்பரையாக இந்த மருத்துவத்தை அறிந்தவர்களும் அந்த முறையில் நல்ல வெற்றிகளைக் கண்டு இருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு அந்த மருத்துவ முறையில் தலைசிறந்த முறையில் பணியாற்றி வருகின்ற மருத்துவர்கள் பதிவுபெற்றவர்களாக இந்த சட்டமுன்வடிவு மூலம் ஆகின்ற சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுத்த புரட்சித் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அத்தனை மருத்துவர்களின் சார்பாக நான் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். நீண்டகாலமாக அவர்கள் இந்தக் குரலைக் கொடுத்துக்கொண்டு இருந்தார்கள். எங்களைப் பதிவுபெற்றவர்களாகச் செய்யுங்கள் என்று சொன்னார்கள். எங்களை முறையாக 'ரெகக்னைஸ்' செய்யுங்கள் என்று கேட்டார்கள். ஆனால் அந்தக் குரல் நீண்டகாலமாக வேண்டியவர்கள் காதில் விழாமல் இருந்தது. ஆனால் விழ வேண்டியவர்கள் காதில் அது இப்போது விழுந்துவிட்ட காரணத்தால் இன்றைக்கு இந்தச் சட்டத்தின் மூலம் அவர்கள் பதிவு பெற்ற மருத்துவர்களாக மாறும் சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதற்காக இந்த அரசுக்கு நான் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு கிராமப்புறத்தில் உள்ளவர்கள் அலோபதித் மருந்துகளை வாங்கவேண்டும் என்று சொன்னால், அது விலை அதிகமாக இருக்கிறது. சென்ற ஆண்டை விட ஒரு பங்கு அல்ல, இரண்டு பங்கு அல்ல, 3 பங்கு விலையேறியிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் சித்த மருந்துகள், ஆயுர்வேத மருந்துகள் எல்லாம் விலை குறைவாக இருக்கின்றன. ஆகவே, ஏழை எளிய



1983 பிப்ரவரி 11] [திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்]

மக்கள் அந்த மருந்துகளை வாங்கிச் சாப்பிட முடியும். ஆகவே, அத்தகைய நிலைமைகள் இருப்பதால் அந்த மருத்துவ முறைக்கு நல்ல ஊக்கமும், ஆக்கமும் அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இந்திய மருத்துவ முறையில் கண்ணுக்குத் தெரியாமல், உலகுக்கு வெளியே வராமல் கிராமங்களில் இருக்கும் மருத்துவர்களிடத்தில் ஓலைச்சுவடிகள், அவர்களிடமுள்ள மருந்து செய்யும் தன்மை ஆகியவைகளைக் கொண்ட புத்தகங்களை நாம் பெற்று, அவற்றை ஆராய்ச்சி செய்வதற்காக தனி ஒரு இடத்தை நியமித்து, அங்கே அதைப் பற்றி ஆராய்ச்சி செய்து. அந்த அடிப்படையில் மருந்துகள் தயாரிக்கலாம். இன்றைக்கு தமிழகத்தில் அப்படிப்பட்ட மருந்துகளைத் தயாரிக்க ஒரே ஒரு நிறுவனம் தான் உள்ளது. அதுதான் 'இம்ப்காப்ஸ்'.

தமிழ்நாட்டின் மத்தியப் பகுதியிலே இன்னொரு நிறுவனத்தை அரசு அமைத்து அங்கே இந்திய மருத்துவத்தை வளர்ப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்திய மருத்துவத்தில் செவிலியர்கள் படிப்பதற்குவழிவகை செய்து இருக்கிறோம். பார்மசிஸ்ட்ஸ் படிப்பதற்கு வழிவகை செய்திருக்கிறோம். இந்த வசதிகளை இன்னும் விரிவுபடுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. இந்திய மருத்துவத்தில் எந்தப் பிரிவாக இருந்தாலும் அந்தப் பிரிவை அலோபதியில் இருக்கும் மருத்துவ மனைக்கு உள்ளேயே வைத்து செயல்படுத்தாமல் தனியாக வைத்து செயல்படுத்தும் ஒரு வழிமுறையைச் செய்ய வேண்டும். அப்படி நாம் செய்தால் இந்திய மருத்துவத்தின் பயன், முக்கியத்துவம் நல்லமுறையில் வெளிப்படும்; வெளிநாடுகளுக்கும் இதன் பெருமை தெரியும். இந்திய மருத்துவத்தின் பெருமை வெளிநாடுகளுக்கு எட்டிவிடுமானால், நாம் நம்முடைய மருந்துகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அதனால் இந்திய மருத்துவ முறைப்படி தயாரிக்கப்பட்ட மருந்துகளின் வாணிபம் பெருகுவது மட்டுமல்லாமல் இந்திய பொருளாதாரத்தையும் பெருக்க வழிவகை ஏற்படும் என்பதால் இந்தச் சட்டத்தைப் பாராட்டி, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு அந்த மருத்துவர்களின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தின் மூலம் நமக்கு ஒரு நல்ல நேரம் வந்திருக்கிறது. மத்தியிலே இருக்கிற அந்தக் கவுன்சில் சித்த மருத்துவத்திற்கு இடமே இல்லை என்று சொல்லக்கூடிய

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1983 பிப்ரவரி 11

கோர்ஸ் பாஸ் பண்ணிவிட்டால் வேலை இல்லை என்ற நிலைமையே கிடையாது. எம். பி. பிஸ். பாஸ் பண்ணினால் கூட வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டு நம்மை வந்து நோக்கக் கூடிய நிலைமை இருந்தாலும் பி. எஸ். எம். அன்ட் எஸ் கோர்ஸ் பாஸ் பண்ணிவிட்டால் உடனடியாக வேலை கிடைக்கக்கூடிய நிலைமையை இந்த அரசு அண்மையில் உருவாக்கி இருக்கின்றது. முழுக்க முழுக்க அந்தப் பெருமை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவரைச் சார்ந்ததாகும். ஏனென்றால் அவர் தனிப் பட்ட வகையிலே இதற்கு என்னென்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. செளந்தரராஜன் அவர்கள் சொன்னது மாதிரி கவனம் செலுத்தி வருகிறார்கள்.

210 பி. எச். சி.-யிலே சித்தா டாக்டர்களைப் போட்டிருக்கிறோம். மத்திய அரசின் சார்பாக மாநிலங்களின் நல்வாழ்வுத் துறை அமைச்சர்களின் மாநாடு நடைபெற்றது. அப்போது அந்த மாநாட்டில் பலரும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய மருத்துவர்களை நியமிப்பதில்லை என்று குறிப்பிட்டார்கள். மேலும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவர்களை நியமிப்பது இல்லை என்ற குறையினை எழுப்பினார்கள். நம்முடைய மாநிலத்திலே நாம் 3 டாக்டர்களை நியமித்திருக்கிறோம், ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும். ஆனால் மூன்று மருத்துவர்களில் ஒருவரை இந்திய மருத்துவராக நியமித்திருப்பதாகவும் ஏதோ ஒரு பெரிய தியாகத்தை இந்திய மருத்துவத் திற்குச் செய்துவிட்டது மாதிரி அன்றைக்கு பெருமையோடு சொல்லிக் கொண்டார்கள். அவர்கள் அவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில். ஆனால் நாம் 210 ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயும் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் 3 பேர் ஏற்கனவே இருந்தது போக அடிஷனலாக ஒருவரை அதாவது 4-வதாக ஒருவரை சித்த வைத்தியத்திலே பட்டம் பெற்றவரை நாம் போட்டியிருக்கிறோம் என்பதைச் சொன்னோம். அதுபற்றி நன்கு விளக்கிச் சொல் னோம். அதற்காகத்தான் நமக்கு அந்த டாக்டர்கள் பற்றாக் குறை ஏற்பட்டிருக்கின்றது. எனவே பி. எஸ். எம் அன்ட் எஸ் கோர்ஸைப் பொறுத்தவரையில் 44 என்பதை 75-ஆக உயர்த்தி இருக்கிறோம்.

மேலும் டிப்ளமா இன் பார்மஸி-சித்தா என்பதைப் பொறுத்தவரையில் 20 இடங்களை 40 இடமாக உயர்த்தி இருக் கிறோம்.

அடுத்து எம். டி. குணபாடம்-மருத்துவம் என்ற ஸ்பெஷலை சேஷன் பிரிவுக்கு 20 இடங்களை நாம் உருவாக்கி இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு மாவட்ட தலைமை மருத்துவ மனையிலும் சித்தத்துறை என்ற ஒரு பிரிவை ஏற்படுத்தி இருக் கிறோம். சித்தா விங் என்ற வகையிலே அதற்காக பெட்ஸ்



1983 பிப்ரவரி 11] [டாக்டர் எச். வி. ஹண்டே]

போட்டிருக்கிறோம். அவற்றை 10 படுக்கைகள் வரையிலே ஜாஸ்தியாக்கவேண்டும் என்றால் அதற்கு தேவை இருக்கின்றது என்றால் அதற்கும் தயாராக செய்ய வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். நாம் Separate Sidha Wards நாகப்பட்டினம், தர்ம புரி, திண்டுக்கல்லில் அண்மையிலே உருவாக்கி இருக்கிறோம் Pharmacies in Madras and Palayamkottai have improved in mechanisation. மெகனைசேஷன் நாம் செய்திருக்கிறோம். இந்த வகை யிலே பல்வேறு நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டு வரு கிறோம். இன்னொரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். Steps to be taken to prevent bogus registration என்ற அளவுக்கு இங்கே சொன்னார்கள். அதற்கு நாம் என்ன செய்து இருக்கிறோம். போகஸ் ரெஜிஸ்ட்ரேஷன் இருக்கக்கூடாது, விவரம் தெரிந்த பயிற்சி பெற்ற அதிகார பூர்வ மாக இருக்கக்கூடிய மருத்துவர்களைத்தான் இந்த சித்த துறை களிலே நாம் பயன்படுத்தவேண்டும், ஏனென்றால் அவர்களை நம்பி மக்கள் போகக்கூடிய காரணத்தால் அதற்குரியநடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்கு நாங்கள் கீழ்க்கண்ட முறை களை வகுத்து இருக்கிறோம்

(பிற்பகல் 12.10)

*Conditions :*

(1) They should have practised for five years prior to 1- 10—76. அக்டோபர் 1ஆம் தேதி 1976-ஆம் ஆண்டு 5 ஆண்டுகள் பயிற்சி நிறைவேற்றியவர்களாக அவர்கள் இருக்கவேண்டும்.

(2) They should have completed the age of 18 years on 1- 10— 71.

அதுமட்டும் அல்லாமல் அதற்காக இருக்கின்ற டெஸ்டு, ஓரல், Written டெஸ்டு என்று வைத்து அதற்குப் பிறகு அவர்கள் ரிஜிஸ்டர் செய்து கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு காரி யங்களை எல்லாம் நாம் செய்துகொண்டு வருகிறோம். ஆகவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கக்கூடிய கருத்துக்கள் எல்லாம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தன. பல நல்ல யோசனைகளை எல்லாம் அவர்கள் சொன்னார்கள். இன்னும் துரிதப்படுத்துவதற்கு என்ன என்ன செய்யவேண்டுமோ அத்தனை விஷயங்களையும் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் பாரமலை அவர்கள் இங்கே சுணக்கம் இருக்கிறது என்று சொன் னார்கள். எந்தவிதமான சுணக்கமும் இல்லை. ஒரு ரிசர்ச் தேவை என்று சொன்னார்கள் ரிசர்ச்சுக்கு நாம் செலவு செய்ய தயாராக இருக்கிறோம். பேரறிஞர் அண்ணா மருத்துவ மனை யில் ரிசர்ச்சுக்கு நாங்கள் ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறோம். மதிப்பிற்குரிய திரு. பாபு ஜனார்த்தனம் அவர்கள் நல்ல பயிற்சி பெற்றவர்கள்போல் இங்கே விஷயங்களை சொன்னார்கள். பல வியாதிகளை ஆங்கில மருத்துவ முறையில் குணப்படுத்த முடியாது

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1983 பிப்ரவரி 11

நிலை இருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொண்டு ஆக
வேண்டும். விவரம் தெரிந்த பல படித்த சைன்டிஸ்டுகள்,
மருத்துவர்கள் பலபேர் இன்றைய தினம் இந்திய மருத்துவ துறை பல
யில் நமக்கு என்ன கிடைக்கிறது என்று வருகிறார்கள்.
நாட்டிலிருந்து வருகிறார்கள். நம்முடைய குழந்தையை வெளி
கவனிக்காமல் இருக்கக்கூடிய ஒரு நிலைமையில் நாமே
யாக நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிற மாதிரி
மருத்துவத் துறை இருக்கிறது என்பதை இந்த சித்த
மாக வெளி உலகத்திற்கு தெரியவேண்டும் என்பதற்காக மன்றத்தின் மூல
கிறேன். சித்த மருத்துவமுறையை ஏற்று பாராட்டக்கூடிய சொல்
நிலைமை இருக்கிறது. இன்று ஜான்டீஸ்க்கு சரியானசட்ட ரீதி
யான மருந்து ஆங்கில முறையில் இல்லை. அதற்கு வேறு
பிலிகேஷன் வந்தால் அதற்கு மருந்து இருக்கிறது. சித்தமருத்துவ காம்
முறையில் திட்டவட்டமாக மருந்து இருக்கிறது என்று சொல்
கிறார்கள். அந்த மருந்தினுடைய பெயர்தான் கீழா நல்லி,
மஞ்சள் கர்சலாங்கன்னி என்று எல்லாம் சொன்னார்கள்.
வகையில் பல மருந்துகளை சொன்னார்கள், இந்த அந்த
மூலமாக மருத்துவர்களை, விஞ்ஞானிகளை கேட்டுக் கொள்வது மன்றத்தின்
என்ன என்றால் தங்களுடைய சித்த வைத்திய முறையில்
வதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. உயர்
ஆராய்ச்சியில் நாம் ஈடுபட்டு அனாவசிய பணம் எதை எதையோ
எந்தவிதமான பலனும் கிடைக்காமல் செலவு செய்து
சித்த மருத்துவ ஆராய்ச்சிக்கு நிறைய இருக்கிறது தவிட இந்த
கிறது. அதை பயன்படுத்தக் கொண்டு ஸ்கோப், வாய்ப்பு இருக்
இருக்கக்கூடிய சித்த மருத்துவ முறை நம்முடைய தமிழகத்தில்
நல்ல வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக அகில உலகத்திற்கே ஒரு
வந்து இதனுடைய பலனை பல வெளிநாட்டவர்கள்
நம்முடைய தமிழகத்தில் உருவாக்கித் பயன்படுத்துகின்ற நிலைமையை
படையில் இந்த அரசு செயல்பட்டுக் தரவேண்டும் என்ற அடிப்
அதனுடைய ஒரு கட்டமாகதான் இன்றையதினம் கொண்டு வருகிறது.
மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இங்கே இந்த
அத்தனை பேரும் வரவேற்றார்கள் அவர்களுக்கு இந்த மசோதாவை
வித்து இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நன்றியை தெரி
கிறேன். வணக்கம். சொல்லி முடிக்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள
கேள்வி; "தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு இந்திய முறை மருத்து
வர்கள் மாநிலப் பதிவேடு ஏற்பளிப்புச் சட்ட முன்வடிவு (சட்ட
மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1983) ஆய்வுக்கு
எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு
எடுத்துக் கொள்ளப்பெற்றது.



1983 பிப்ரவரி 11] [மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்]

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன், "தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு இந்திய முறை மருத்துவர்கள் மாநிலப் பதிவேடு ஏற்பளிப்புச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1983) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ச) கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1983—தொடர்ச்சி.

*மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

"தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு [சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1983] மீண்டும் பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

"தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு மீண்டும் பிரிவு வாரியாகக் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

## பிரிவு 3

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 3, சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.'

THE HON. THIRU S. D. SOMASUNDARAM : Sir, I move ..........that in Clause 3, in the TABLE—

(i) Against item (a) under Column (1) and item (i) under Column (2) for the existing entry in Column (3), the following shall be substituted :—

"31 per cent of the gross collection capacity for a show multiplied by 3"

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 பிப்ரவரி 1

(ii) Against item (b) under Column (1) and item (i) under Column ( ), for the existing entry in Column (3), the following shall be substituted ;—

"31 per cent of the gross collection capacity for a show multiplied by 21"

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்தச் சட்டமுன்வடிவைப்பற்றி தங்களுடைய அரிய கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லுகிறபோது தமிழகத்திலே உள்ள சினிமாக் கொட்டகைகளின் நிலைமைகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கின்ற திரையரங்குகளிலே எம்மாதிரியான திரைப்படங்கள் ஓட்டப்படுகின்றன என்பதைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். அதற்கு எப்படியெல்லாம் விளம்பரம் வெளியே ஒட்டப்படுகிறது என்று சொன்னார்கள். எப்படிப்பட்ட படங்கள் எல்லாம் வரவேண்டும் என்பதையெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள்.

அதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது இன்றைக்கு கொட்டகைகளிலே உள்ள இருக்கைகளின் எண்ணிக்கையை குறைக்கவேண்டுமென்று சொன்னார்கள். இருக்கைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அங்கங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு இருக்கிற சட்டப்படி ஒன்றை நான் தெரிவிக்கக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திரையரங்குகளில் எத்தனை இடங்கள் இருக்கின்றனவோ அந்த இடங்களுக்கு மட்டும்தான் வரி வசூலிக்க முடியுமென்ற அதிகாரம் அரசுக்கு, வணிகவரித் துறைக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதிலே எந்தவிதமான சங்கடங்களும் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி யசோதா அவர்கள் பேசுகின்றபோது திரையரங்குகளில் ஏர்கன்டிசன் என்று சொல்கிறார்கள், ஆனால் ஏ.சி. இல்லை என்றும் இருக்கைகள் எல்லாம் நன்றாக இல்லை என்றும் சொன்னார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எல்லாம் அதைக் கவனிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனிவேல் அவர்கள் பேசும்போது ஒன்றைச்சொன்னார்கள். வெளியே ஒட்டப்படுகிற சுவரொட்டிகளைப் பற்றிச் சொல்லி அரை நிர்வாணமாக ஒட்டப்படுகின்றன என்று சொன்னார்கள். ஆனால் எனக்கு இருக்கிற கவலையெல்லாம் அதோடு நிற்காமல் அது வளர்ந்து முழு நிர்வாணமாக ஒட்டி விடுவார்களோ என்பதுதான் அதைச் செய்யவில்லையே என்பதிலே மகிழ்ச்சி, இந்த நிலை மாறி நல்லமுறை வரவேண்டும் என்று கருதுகிறேன்.



1983 பிப்ரவரி 11] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

பல்வேறு சங்கடங்களைப்பற்றியெல்லாம் பல்வேறு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்தச் சங்கடங்களை எண்ணிப்பார்த்து அரசுக்கு ஒருகஷ்டமும் வரக்கூடாது என்ற முறையிலே அரசுக்கு பணம் கொடுக்கிறவர்களுக்கு கஷ்டம் வரக்கூடாது என்ற முறையிலே செய்கிறோம். உலகத்திலே பொன் முட்டையிடுகிற வாத்தை வெட்டக்கூடாது என்று சொல்வார்கள். வெட்டினால் வாத்தின் வயிற்றில் ஒரு முழு முட்டையும், ஒரு அரை முட்டையும், ஒரு கால் முட்டையும் இருக்கும், பிறகு முட்டையிடாது. வாத்திற்கு தீனி போடவேண்டும், பிறகு அது முட்டையிடவேண்டும். முட்டையிடுகிறபோது முட்டையை உடைத்துத் தங்கத்தைக் கொண்டுபோகக்கூடாது என்ற முறையிலே அரசு பார்த்துக் கொள்ளவேண்டும், அதேநேரத்திலே அதற்குத் தீனியும் போட்டாக வேண்டும். இணக்குமுறை வரி எப்படி கொண்டுவந்தோம் என்றால் நாங்களாகவே கொண்டுவரவில்லை, திரைப்படச் சொந்தக்காரர்கள் திரைப்படம் எடுக்கிறவர்கள் எல்லாம் சேர்ந்து எங்களுக்கு இணக்குமுறை வரி கொண்டு வரவேண்டுமென்று கேட்டார்கள்.

(பிற்பகல் 12·20)

அப்படிக் கொண்டு வருகிறபோது கிராமப்புறங்களிலே இருக்கின்ற திரையரங்குகள்மூன்றாவது தரத்திலே இருக்கின்ற திரையரங்குகள், இரண்டாம் தரத்திலே இருக்கிற நகராட்சி திரையரங்கங்கள், இவைகளுக்கு எல்லாம் கொண்டு வரப்பட்டன. கொண்டு வரப்பட்டதாலே அரசுக்கு நஷ்டம் வந்தாலும் அதிலே அவர்களுக்கு சங்கடங்கள் இல்லாமல் சினிமாத் தொழில் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது அவர்கள் சொன்னார்கள். அந்த முறையில் கொண்டு வந்தபோது இன்றைக்கு நகராட்சி தேர்வுநிலை முதல்நிலை நகராட்சி—இவைகளுக்கு கொண்டு வர வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி கொண்டு வருகிறபோது இன்றைக்கு எந்தவிதமான சங்கடமும் வரக்கூடாதுஅரசுக்கு பொருள இழப்பு வரக்கூடாது என்பதை உத்தேசித்து, கொண்டு வரவேண்டுமென்ற முறையிலே முயற்சி எடுத்தோம்.

அதைப்பற்றி சொல்லவேண்டுமென்றால் 1981-82-ம் ஆண்டு தேர்வுநிலை நகராட்சிகளில் எவ்வளவு பணம் வந்தது என்றால் ரூ. 324.6 லட்சம் அதை இணக்கு முறையாக கொண்டு வருகிறபோது வருமானம் குறையவும் கூடாது. அதேநேரத்தில் வருடா வருடம் எந்த சதவீதத்தில் வருமானம் ஏறுகிறது என்பதை கவனிக்கவேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை. இணக்கு முறை கொண்டு வருகிறபோது என்ன செய்தோம் என்றால் 31 சதவிகிதம் கிராஸ் கலெக்ஷன்—கிராஸ் கலெக்ஷன் என்றால் அங்கே எத்தனை சீட்டுகள் இருக்கின்றன? எல்லாவற்றிலும் ஆட்கள் உட்கார்ந்து பார்த்தால் எவ்வளவு பணம் வருமோ, அதிலே 31 சதவிகிதம் அரசுக்கு மற்றத்தொகை திரையரங்கு சொந்தக்காரர்களுக்கு அவர்கள் ஒரு வாரத்திலே 24 ஷோ நடத்து

[டாக்டர் எச். வி, ஹண்டே] [1983 பிப்ரவரி 11

மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் ஒரு கேள்வி யைக் கேட்டுக், அதற்கு முதலிலேபதில் சொல்லவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். 1931 ஆம் ஆண்டிலேயிருந்து non-statutory register சட்டப் பாதுகாப்பு இல்லாமல், சட்டத்தின் உள் ரிஜிஸ்டர் ஆகாமல் இருக்கக்கூடிய பிரிவாக இருந்துக் கொண்டிருக்கிற இதிலே, 1956 ஆம் ஆண்டு, Integrated Medicine Act என்ற ஒரு சட்டம் இந்த சட்டமன்றத்திலே கொண்டு வரப்பட்டது. ஏ. பி. ஷெட்டி என்பவர்தான் அப்போது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தார் என்று நான் நினைக்கிறேன். பதிவு பெற்றிருக்கிற இன்டக்கிரேட்டர் ஆக்டின் உள்ளே கொண்டு வரப் பட்டார்கள். அதற்குப் பிறகு, 1970 ஆம் ஆண்டு, 1971 ஆம் ஆண்டுகளில் முன்னாள் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. அன்பழகன் அவர்கள், ஒரு திருத்தத்தை கொண்டு வந்து, அதிலே இருக்கக் கூடிய ஒரு ஊனத்தை களைந்து விட்டார்கள். அன்றையதினம் நான் அதை பாராட்டி பேசியிருக் கிறேன் என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாபு ஜனார்த்தனன் அவர்களுக்கு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன்.

அது மட்டும் அல்லாமல். சில கருத்துக்களும் சில சந்தேகங் களும் இங்கே எழுப்பப்பட்டிருக்கின்றன. குறிப்பாக செய்யாறு தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் ஒரு முக்கியமான சந் தேகத்தை கிளப்பினார். அது என்னவென்றால், போலி மருந்து கள் தயார் செய்வது தடுக்கப்படவேண்டும், அதை எப்படி தடுக்கப் போகிறார்கள் என்கிற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நாங்கள் ஏற்கனவே, to prescribe standards எனப்படும் ஒரு முறையை வகுத்திருக்கிறோம். அதைப்பற்றி நமது மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொன்னார்கள். இந்த மருந்துகளை சரியான மருந்து என்கிற வகையில் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக் கூடிய அளவுக்கு அந்த மருந்துகள் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகத்தான், to prescribe standards of Sidha Medicines a committee of experts has been constituted. இதற்காக கமிட்டி ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த மருந்துகள் எல்லாம் ஸ்டாண்டர்ட்டாக இருக்கிறதா இல்லையா என்பதை ஆராய இதற்கு என்று ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக் கிறோம். Similarly another expert committee has been appointed to select quality medicines for purchase by Government institutions.

ஏனென்றால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் பேசுகிற நேரத்திலும், மற்ற உறுப்பினர்கள் பேசுகிற நேரத்திலும் இங்கே ஒரு கருத்து பொதுவாகச் சொல்லப்பட்டது. அதாவது சித்த வைத்தியத்திற்கு நல்ல முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். எவ்வளவு தான் நாம் இதை பரப்ப வேண்டும், முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று முயன்றாலும் கூட, சரியான வகையிலே மக்கள் விரும்பி அதனைச் சாப்பிடுவது இல்லை என்கிற ஒரு



1983 பிப்ரவரி 11] [டாக்டர் எச். வி. ஹண்டே]

கருத்தைச் சொன்னார்கள். இதிலே நான் சொல்ல வேண்டிய முக்கியமான கருத்து என்னவென்றால், முதலில் ஏராளமான மருந்துகள் சப்ளை இருக்க வேண்டும். ஏனெனில் மாவட்டங் களில் நான் இன்ஸ்பெக்ஷனுக்குப் போகிற நேரத்திலே, தாலூக்காக் களில் எங்கே சித்த வைத்திய மருத்துவமனை இருக்கிறது என்று தேடிப்போய் பார்க்கிற நேரத்திலே அங்கேயிருப்பவர்கள் தெரி விக்கிற ஒரே குறை, அங்கே மருந்து இல்லை, என்பதுதான். ஆகவே, Indian Medical Co-operative Pharmacists Stores என்று சொல்லி, எங்கெல்லாம் இந்த மருந்துகள் தயார் செய்யப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும், IMPCOPS இங்கே அடையாரிலே தயார் செய்துகொண்டிருந்தாலும்கூட, பாளையங்கோட்டையிலே தயார் செய்திருந்தாலும் கூட, அது அந்தந்த மருத்துவ மனைக்கே பயன்படுத்தப்படுகிறது. அண்ணா மருத்துவ மனையிலேயும் இந்த மருந்துகளைத் தயார் செய்கிறார்கள், அதுவும் அந்த மருத்துவ மனைக்கே பயன்படுகிறது. ஆகவே இவைகள் இல்லாமல், எங்கேங்கே தனியார்கள் தயார் செய்கிறார்கள் என்பதைப் பார்த்து, அவைகள் தரமாக இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்து ஏனென்றால் எல்லாவற்றையும் நாமே தயார் செய்து கொள்ள வேண்டும் என்றால், அது முடியாது போய் விடலாம். கால தாமதமும் ஏற்படலாம். தொடர்ந்து வாங்குவதற்கு மருந்து கிடைக்காமல், பற்றாக்குறையும் ஏற்பட்டு விடலாம். ஆகவே, பழனி, கோயம்புத்தூர் போன்ற பகுதிகளில் இந்த மருந்துகளை தயார் செய்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களுக்கு இந்தக் குழுவினரை அனுப்பி, எங்கெங்கே தரமான மருந்துகள் இருக்கிறது என்பதைப் பார்த்து, எங்கெங்கே என்னென்ன மருந்தை வாங்கலாம் என்று பார்த்து பரிந்துரை செய்யுங்கள் என்று சொல்லி பட்டியலையும் கொடுத்திருக்கிறார்கள்.

ஆகவே இந்த வகையிலே நாம் பல்வேறு வகையிலே இந்த சித்த வைத்தியத்தைப் பொறுத்தவரையில் அதனுடைய மருத்து வத்தை நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்ளவேண்டும். சித்த வைத்தியத்தினுடைய மேம்பாட்டுக்கு அரசாங்கம் பொறுப் பேற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்கு பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனாலும் கூட ஒரு அச்சம் இருக் கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார்கள். இன்னும் செய்திருக்கலாமே, கொஞ்சம் மெத்தனம் இடையிலே வந்துவிட்டது என்று மாண்புமிகு திரு. ரமணி அவர்கள் கேட் டார்கள் என்று கருதுகிறேன். அதற்காக ஒரு சிறு பட்டியலை அதிகமான நேரத்தை எடுத்துக்கொள்ளாமல் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். சுருக்கமாக சித்த வைத்தியத்திற்கு என்னென்ன செய்திருக்கிறோம் என்பதற்காகத்தான் ஒரு சிறு பட்டியலைச் சொல்ல விரும்புகிறேன். பி. எஸ். எம். அன்ட் எஸ் கோர்சுக்கு முன்பு 44 இடங்கள்தான் இருந்தன. அதனை 75 ஆக உயர்த்தினோம். எதற்காக உயர்த்தினோம் என்று கேட்க லாம். ஆனால் இன்றையதினம் பி. எஸ். எஸ். அன்ட் எஸ்

வார்கள். 24 ஷோக்கள் நடத்துகிறபோது எவ்வளவு வரும் என்று கணக்குபார்த்தால் ரூ. 343 லட்சம் வரும் என்று கணக்கிட்டு— அதிலே ஒரு வாரத்திற்கு 24 ஷோக்கள் நடத்தலாம். அதற்கு மேலும் நடத்தலாம். அதிலே வருகிற லாபம் அவர்களுக்குத்தான்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். உங்கள் அனைவரின் உணர்வுகளையும் உள்ளடக்கி அதிலே இருக்கிறதை குறைப்பதற்கு 31 சதவிகிதம் அப்படியே வைத்து, 24 ஷோக்கள் என்பதற்கு பதிலாக ஒரு வாரத்திற்கு 23 ஷோக்கள் என்று ஆக்கினோம். அதனால் இன்றைக்கு வருகிற வரவு ரூ. 328 லட்சம் தான். போன வருடம் வந்தது ரூ. 324 லட்சம்; நமக்கு நஷ்டம் ரூ. 14 லட்சம்; இருந்தாலும் பாதகம் இல்லை என்ற அந்த எண்ணத்தை வைத்துக்கொண்டு குறைத் தருச்கிறோம். அதைப்போல முதல் நிலை நகராட்சிகளில் 1981–82-ல் வருவாய் ரூ. 411.96 லட்சம் அந்த காம்பவுண்டிங் கொண்டு வருகிறபோது அதிலே 30 சதவிகிதம் கிராஸ் கலெக்ஷன். ஒரு வாரத்துலே 22 ஷோக்கள்; அப்படி பார்க்கிறபோது ரூ. 451.7 லட்சம்; அதிலே பணம் வரவேண்டுமென்று சட்டம் கொண்டு வரப்பட்டது. உங்களுடைய வேண்டுகோள்களுக்கிணங்க கிராஸ் கலெக்ஷன் 30 சதவிகிதம் அப்படியே வைத்துக்கொண்டு, 22 ஷோக்களுக்கு பதிலாக 21 ஷோக்கள் ஆக்கி அதிலே இன்றைக்கு வரவேண்டிய பணம் ரூ. 451 லட்சத்திலிருந்து ரூ. 430 லட்சமாகி ரூ. 20.52 லட்சம் நஷ்டம் இன்றைக்கு வரும் இந்த சட்டத்திருத்தத் தினால் அரசிற்கு எவ்வளவு நஷ்டம் என்றால் ரூ. 34 லட்சம் அந்த 34 லட்சம் நஷ்டமாயிருந்தாலும் சென்ற ஆண்டு அரசிற்கு பணம் எவ்வளவு வந்திருக்கிறதோ அதற்குக் குறையாத அளவிற்கு அதைக் காப்பாற்றுகிற அளவிற்கு அந்த வகையிலே சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஒரு கருத்தை தெரிவித்தார்கள். வரிகளை உயர்த்தி விட்டால் கிராமங்களில் அவர்களுக்கு பார்ப்பதற்கு கஷ்டமாக இருக்குமென்று இப்போது இருக்கிற சட்டத்துலே கிராமப் புறங்களில் இருப்பதை எதையும் மாற்றவில்லை.

**திரு. தி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்தில் இருக்கிற ஊராட்சியில் இருக்கக் கூடிய கொட்டகைக்கு ஏற்கனவே 21%, இப்பொழுது 22% என் கின்ற அந்த நிலை இருக்கிறது. அதனால்தான் அது சம்பந்தமாக பேசினோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு துணைத்தலைவர் அவர் களே, முன்பு கிராமப் பஞ்சாயத்து, நகரப் பஞ்சாயத்து ஆகிய வற்றில் உள்ள தியேட்டர்களில் 19% காம்பவுண்டிங் வரி வசூ லித்து வந்தார்கள். தற்போது, நகராட்சி, மாநகராட்சி போன்ற வைகளில் அந்த காம்பவுண்டிங் வரியை மாற்றும்போது, கிராமப்





பஞ்சாயத்து டவுன் பஞ்சாயத்து போன்றவற்றில் உள்ள தியேட் டர்களுக்கும் அந்த காம்பவுண்டிங் வரியை உயர்த்தினீர்கள். ஆகவே அந்த வரிகளில் ஏதாவது சலுகை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இணக்கு முறை வரி கொண்டு வருகிறபொழுது இதற்கு முன்பு வருஷா வருஷம் அரசுக்கு எந்த அளவுக்கு பணம் வந்தது என்பதைக் கணக்கிடுகிறோம். கணக்கிடுகிறபொழுது, ஒரு ஆண்டுக்கு எவ்வளவு வந்தது, அதற்கு முந்தைய ஆண்டுக்கு எவ்வளவு வந்துள்ளது என 4, 5 ஆண்டுகளைப் பார்க்கும்போது, ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து கொண்டே வருவது தெரியும். அந்த நிலைமையைப் பார்த்து வரியை உயர்த்தியிருக்கிறோம். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபொழுது முதல் நிலை நக ராட்சியில் உள்ள தேர்வு நிலை நகராட்சியில் உள்ள திரையரங்கு கள் எங்களுக்கெல்லாம் சங்கடமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதை கவனித்துள்ளோம். கிராமப்புறத்தைப் பொறுத்த வரைக்கும் அங்கேயிருக்கிற தற்காலிக தரையரங்கு, அங்கேயிருக்கிற திறந்தவெளி திரையரங்கில் இவைகளுக்கு மட்டும் எந்தவிதமான மாற்றமும் இல்லையென்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசுகிறபொழுது அருமைச் சகோதரர் இரகுமான்கான் அவர்கள், 31% 24 காட்சிகள் என்பதற்குப் பதிலாக, 25% 21 காட் சிகள் என்று வைத்தால் நல்லது என்று சொன்னார்கள். அவர் களிடத்திலே சொன்னேன், ஏற்றுக் கொண்டார்கள். அப்படிக் கொண்டு வந்தால் ரூ. 83 இலட்சம் நஷ்டம் வரும் என்று சொன்னேன், ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் சொன்னதற் கிணங்க, எல்லோரும் சொன்னதற்கிணங்க ஓரளவுக்குக் குறைத் திருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே பேசும்போது பொதுவாக ஒரு கருத்தைச் சொன் னார்கள், தமிழ்ப் படங்களுக்கு அனுசரணையாக அரசாங்கம் இல்லை, என்று. உதாரணத்துற்குக் கர்நாடகத்தைக் காண்பித் தார்கள்; குஜராத்தை, மகாராஷ்டிராவை, ஒரிசாவை, ஆந்திராவை என்று எல்லா மாநிலங்களையும் உதாரணத்திற்குக் காட்டினார்கள். தமிழகத்திலே அப்படியெல்லாம் இல்லையென்று சொன்னார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் ஒரு வருஷத்திற்கு 130, 140 தமிழ் படங்கள் வருகின்றன. அந்தப் படங்களைத் தயாரிக்க அதிகமான பணத்தைப் போடுகிறார்கள். ஆனால், இந்திப் படங் களுக்குப் போடுவதைப் போல கோடிக்கணக்கிலே போட முடிய வில்லை. இலட்சக் கணக்கிலே தமிழ்ப்படங்களுக்கு போடும்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 பிப்ரவரி 11

போது, வேடிக்கனக்கில் போடுகிற இந்திப் படக்காரர்களுடன் போட்டியிட முடியவில்லை. இணைந்தே முறை வரி வருவதாலே, திரையரங்குகளிலே, எந்தப் படம் அதிகமான வருவல் தருகிறதோ அதை எடுத்துக் கொள்கிறார்கள். தமிழ்ப் படம் நசிந்து விடுகிறது என்று சொன்னார்கள். அந்தக் கருத்தும் ஓரளவுக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாக இருக்கிறது. நானும், அவர்கள் சொன்ன பிறகு வெளியே கேட்டேன். சென்ற ஆண்டு 139 படங்கள் வந்தன: வெற்றி பெற்றவை பத்தோ, பன்னிரண்டோதான் மற்றவை வெற்றிஅடையவில்லை என்று சொன்னார்கள். வெற்றி அடையாத பொழுது, இதை நம்பி வாழ்கிற கலைஞர்கள், நடிகர்கள், தொழிலாளர்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். இவையெல்லாம் இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். தமிழ்ப் படங்களை முன்னேற்றுவதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது, எடுக்கும். கவனிக்கும் என்று சொல்வதை விட, கடமைப்பட்டிருக்கிறது என்றுகூட நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இந்திப் படங்களைப் பற்றிக்கூட சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்தவரை சொல்வது என்னவென்றால், அரசு மட்டுமல்ல, இங்கேயிருக்கிற பெரும்பான்மையானவர்களுடைய உணர்வு என்னவென்றால் இந்தியை இந்த நாட்டிலே புகுத்துகிறபொழுது அதைக் கண்டிக்கிற உணர்வு பெரும்பாலும் இருக்கிறது. எங்கேயாவது தொலைக்காட்சியிலே இந்தி வந்தால் உடனே நீங்கள் எல்லோரும் சத்தம் போடுகிறீர்கள், எதிர்ப்பு தெரிவிக்கிறீர்கள், வானொலியில் வந்து விட்டால் எதிர்ப்பு தெரிவிக்கிறீர்கள், நானும் தெரிவிக்கிறேன், இந்த அரசும் தெரி

(பிற்பகல் 12.20)

விக்கிறது. ஆனால் வானொலி மூலமாக இந்தியைப் பரப்புவதைவிட தொலைக்காட்சியின் மூலமாக இந்தியைப் பரப்புவதைவிட கலையின் பெயரால், கலையைச் சொல்லி இந்தியை வளர்ப்பது விடமிக ஆபத்தானது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அதை கத்துள் மூலமாக கருத்துக்கள் மக்களுக்கு நன்றாகப் படிகிறது. நா திரைப்படம் மூலமாகச் சொல்லும்போது நன்றாகப் படிகிறது. திரைப்படம் பார்க்கிறபொழுது ஆயிரக்கணக்கான பேர், இலட்சக்கணக்கான பேர் பார்க்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னார்கள், ''நான் ஒரு மாதத்திற்குப் பத்து ஐந்து கூட்டங்கள் பேசுவதாக வைத்துக் கொள்ளுங்கள், அந்தப் பத்து ஐந்து கூட்டங்களுக்கும் எவ்வளவு மக்கள் வருகிறார்கள் என்பதையும் வைத்துக் கொள்ளுங்கள், எவ்வளவு பேர் என்னைப் பார்க்கிறார்கள், எவ்வளவு பேர் நான் பேசுவதைக் கேட்கிறார்கள், எவ்வளவு பேர்கள் அதை ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதைப் பற்றி ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை எடுத்துக் கொள்ளுங்கள்: அதை விடத் திரைப்படத்தின் மூலமாக மக்கள் பார்ப்பது நான் பேசுவதைக் கேட்கின்ற



1983 பிப்ரவரி 11] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

மக்களை விட பல்லாயிரக் கணக்கான மக்கள் அதிகமாக இருக்கிறார்கள், பல மடங்கு அதிகமாக இருக்கிறார்கள், கருத்துக்களை திரைப்படம் மூலமாக என்னைவிட வேகமாகப் பரப்பி விடுகிறார்கள் நான் பேசுவதை விட, நான் சார்ந்திருக்கின்ற இயக்கத்தைச் சேர்ந்த அத்தனை பேர்களும் பேசுவதைவிட வேகமாக அந்தக் கருத்துக்கள் பரவி விடுகின்றன. படிக்காத மக்கள், பாமர மக்கள், எதுவும் புரியாத மக்கள், கிராம மக்கள், வயதானவர்கள் ஆகியவர்களிடத்தில், சட்டை போடாதவர்களிடத்தில், நாகரிகம் பரவாதவர்களிடத்தில் திரைப்படம் மூலமாக கருத்துக்களை வெகு எளிதில் பரப்பி விடுகிறார்கள்'' என்று சொல்லியிருக்கிறார்கள்.

எனவே இந்தியைத் தொலைக் காட்சி மூலமாகவும், வானொலி மூலமாகவும் பரப்புவதை விட இந்த இந்திப் படங்களின் மூலமாக மிகவும் வேகமாகப் பரவுகிறது என்று நான் கருதுகிறேன். இந்த அரசும் ஏற்றுக் கொள்கிறது. இதற்கு என்ன செய்வது? இந்தியைப் பற்றி பேசினார்கள், அதனால்தான் நான் சொல்கிறேன். நீங்கள் இந்தியைத் தடுத்து நிறுத்தவில்லையென்று சொல்கிறார்கள். நீங்கள் இரயில் நிலையங்களிலே பார்த்தால், மேலே தமிழிலே எழுதி இருக்கிறார்கள், அதற்குப் பிறகு இந்தியிலே எழுதி இருக்கிறார்கள், அதற்குப் பிறகு ஆங்கிலத்திலே எழுதியிருக்கிறார்கள். இது எவ்வளவு போராட்டங்களுக்குப் பிறகு, எவ்வளவு பேர்கள் சிறைச்சாலைக்குச் சென்றதற்குப் பிறகு, எவ்வளவு உயிர்கள் போனதற்குப் பிறகு இந்த நிலைமை வந்திருக்கிறது என்று பார்க்க வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் அதற்கான காரியங்களைச் செய்தார்கள். அண்ணா அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் ஒரு காலத்தில் எதிரும் புதிருமாக இருந்தார்கள். ஆனால் இந்தப் பிரச்னையிலே ஒன்றாக இருந்தார்கள். அண்ணா அவர்கள் இந்தி எழுத்துக்களின் மேல் பேப்பரை ஒட்டுங்கள் என்று சொன்னார்கள்: ஆனால் பெரியார் அவர்கள் தார் வைத்து அழியுங்கள் என்று சொன்னார்கள். ஆக அப்படியெல்லாம் செய்து இன்று இந்த நிலைமை இருக்கிறது.

இங்கே தமிழ்நாட்டிலே இருக்கிற இந்தியப் பேரரசின் எல்லா அலுவலகங்களிலும் நம்மை வாழ வைத்த தமிழை மேலே எழுத வேண்டுமென்று சொன்னோம். ஆனால் அந்த நிலைமை புகை வண்டி நிலையங்களில் மட்டும்தான் இருக்கிறது. ஆனால் மற்ற மத்திய அலுவலகங்களான அஞ்சல் நிலையங்கள், தொலைபேசி இருக்கின்ற அலுவலகம் ஆகியவைகளிலெல்லாம் மேலேதான் இந்தி, அதற்குப் பிறகுதான் தமிழ் இருக்கிறது.

நான் இதைப்பற்றி யல்லாம் சொல்வதற்குக் காரணம், இந்த அரசு சும்மா பார்த்துக் கொண்டிருக்கிறதே என்று மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள். இதையெல்லாம் அவரும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 பிப்ரவரி 11

இன்றைக்கு இருக்கிற இந்திய பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் டில்லியிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்தார்கள். முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி சார்பாக வந்தார்கள். டில்லியிலிருந்த முன்னாள் அமைச்சர்கள், மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்களும், அழகேசன் அவர்களும் மந்திரிசபையை விட்டு வெளியேறினார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இப்படி வெளியே அநியாயம் நடக்கிறபோது, நீங்கள் செய்ய வேண்டுமென்று இங்கே சொல்லக்கூடாது. ஆனால் இப்படி வருகிறபோது செய்வதற்கு தமிழ் உணர்வு உள்ளவர்கள் யாரும் அதைச் செய்ய வேண்டும். பெரியாருடைய வீரம், அண்ணாவினுடைய செய்முறைகள் செத்துவிட்டது என்று நானும் கருதவில்லை, நீங்களும் கருதமாட்டீர்கள். தமிழ்நாட்டு மக்களும் கருதமாட்டார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே திரைப்பட தணிக்கையைப் பற்றிச் சொன்னார்கள். நான் முதலிலேயே தெரிவித்தேன். இந்த இந்தியத் துணைக் கண்டம் ஒரேநாடு அல்ல. பல மாநிலங்களில் பலவிதமான உணர்வுகள் உள்ளமக்கள் இருக்கிறார்கள். பலவிதமான உணர்வு வகைகளை உட்கொள்ளுகின்ற நிலையில்இருக்கிறார்கள். ஆனால் கலை எப்படி வளர்கிறது என்றால், உதாரணமாக தெருக்கூத்து கூட ராமநாதபுரத்தில் ஒருவிதமான தெருக்கூத்து நடக்கிறது. தஞ்சையிலே ஒருவிதமான தெருக்கூத்து நடக்கிறது. அந்தந்த ஊரிலே உள்ள பண்பாட்டிற்கேற்ற, மக்களுக்கு நடைமுறைக்கு ஏற்றவாறு

(பிற்பகல் 12.40)

தெருக்கூத்து இருக்கிறது. மதுரைக்குப் போனால், மதுரை வீரன் வருகிறான். தஞ்சைக்குப் போனால், மதுரை வீரன் வராமல் வேறு ஒருத்தன் வருகிறான். கதை அப்படி வளர்கிறது. அப்படி அந்த அந்த ஊருக்கு ஏற்றவாறு கதை வளர்கிறது. அதுபோலத்தான் மாநிலத்திற்கு மாநிலம், அதற்கு ஏற்றவாறு கதை வளர்கிறது. ஆகவேதான் மாநிலத்திற்கு மாநிலம் வெவ்வேறு வகையான ஆடை அணிகிறார்கள். இங்கே பேசுகிறபோது சொன்னார்கள். இன்றைக்கு வெளியிலே ஓட்டப்படுகின்ற படங்களிலே அரைகுறை நிர்வாணமாக இருக்கிறது என்று சொன்னார்கள். இது எப்படி வந்தது என்றால், சில மாநிலங்களில் உள்ள மக்கள் ஆடை அணிவதில் சிக்கனம் காட்டுகிறார்கள். அங்கு எடுக்கப்படுகிற படங்களை அங்குள்ள மக்களின் மனநிலைக்கேற்றவாறு எடுத்து விடுகிறார்கள். அங்கே எடுக்கப்படுகிற திரைப்படம் தமிழ் நாட்டிற்கு வந்து விடுகிறது. அந்தந்த மாநிலத்திற்கு ஏற்ற நடையுடைபாவனைகளுக்கு ஏற்றவாறு அந்தப் படங்கள் எடுக்கப்படுகிறது. நம்முடைய தமிழ்நாட்டினுடைய பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்றால், இங்கே இருக்கிற நடையுடை பாவனைகளைக் காப்பாற்ற வேண்டுமென்றால், தமிழ்நாட்டிலே ஓடுகின்ற எந்தப் படங்களானாலும் சரி, அது



1983 பிப்ரவரி 11] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

தமிழ்ப்படமாக இருந்தாலும் சரி, இந்திப்படமாக இருந்தாலும் சரி, தெலுங்குப்படமாக இருந்தாலும் சரி, தமிழர்களைக் கொண்ட ஒரு தணிக்கைக்குழு இருக்க வேண்டும், அந்த தணிக்கைக் குழு தணிக்கை செய்து அனுமதி வழங்கிய பிறகுதான் தமிழ் நாட்டில் படங்கள்போட முடியும் என்ற நிலைமை வந்தாக வேண் டும். சாராயம் செய்வதற்கு, அல்லது அபினம் செய்வதற்கு அல்லது பிராந்தி செய்வதற்கு அனுமதி வழங்குவதாலே அவர்கள் எங்கே வேண்டுமானாலும் கொண்டு போகமுடியாது. தமிழ்நாட்டிற்கு கொண்டு வரவேண்டுமென்றால், தமிழ்நாட்டு அரசினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் பிற மாநிலத்திலே செய்யப்படுகிற மது இங்கே நம்முடைய மாநிலத்திற்கு உள்ளே வரமுடியும். அதைப் போலவே வேறு மாநிலத்திலே திரைப்படங்கள் தணிக்கை செய்தாலும் தமிழகத்திலே உள்ள திரைப்படக் கொட்டகைகளில் ஓடுவதற்கு முன்னாலே தமிழ்நாட்டினுடைய அரசால் நியமிக்கப் படுகிற தணிக்கைக்குழு அதை தணிக்கை செய்ய வேண்டும். தமிழ்நாட்டினுடைய பண்பாட்டை தமிழ்நாட்டினுடைய நாகரிகத்தை காப்பாற்றுகின்ற வகையில் திரைப்படங்கள் தணிக்கைச் செய்தாக வேண்டும். அதற்காக இந்த அரசு மத்திய அரசிடம் கோரிக்கையை வைக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்றால், தமிழ்நாட்டினுடைய பண்பாட்டை காப்பாற்றாமல் இன்னார் எல்லாம் அமைச்சராக இருக்கிறபோது இப்படிப்பட்ட நீங்கள் எல்லாம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறபோது நாம் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறபோது தமிழ்நாட்டினுடைய பண்பாடு போவதற்கு நாம் எல்லாம் உறுதுணையாக இருக்கிறோம் என்ற கெட்ட பெயர் ஏற்படுவதற்கு நானும் தயாராக இல்லை, நீங்களும் தயாராக இருக்கமாட்டீர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். திரைப் படத்தைப் பொறுத்தவரைக்கும் தமிழ்நாட்டுக்கு என்று தணிக்கைக்குழு, தனியாக இருந்தால்தான், இன்றைக்கு நம்முடைய நாகரிகத்தை நாம் காப்பாற்ற முடியும் என்பதை.....

**திரு. கி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது பிற மாநிலப் படங்களில்தான் ஆடை குறைவு, அது அந்த அந்த மாநிலத்திற்கு தகுந்தாற்போல வருகிறது என்று அவர்கள் சொன்னார்கள். தமிழ்ப்படங்களிலே இந்த மாதிரியான ஆடை குறைவு வருகிறது. அதையும் பரிசீலிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது தவறாக இருந்தால் மாற்றிக் கொள்ளுங்கள், பன்றியோடு சேர்ந்த கன்றும் மலம் தின்றது என்பார்கள் கிராமங்களிலே ஆசையினாலே அவர்களைப் பார்த்து, இங்கே அந்த மாதிரியான படங்களைஎல்லாம் எடுக்க ஆரம்பித்து

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 பிப்ரவரி 1

உங்களுக்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், நாட்டிலே
ஒரு நல்லவன் இருக்கிறான், அவன் எல்லோருக்கும் உதவி செய்
கிறான்; நாட்டுக்கு நன்மை புரிகின்றவனாகவும், சமுதாயத்திற்கு
உதவி செய்பவனாகவும் இருக்கிறான். எப்படி நம்மை வாழ
வைக்கும் தமிழ், நமக்கு வீரத்தையும், வெற்றியையும்
தருகின்ற தமிழ் இருக்கிறதோ அதைப்போல ஒரு நல்லவன் இருக்
கிறான். ஒருநாள் நான்கு பேர் சேர்ந்து கொண்டு அடித்தால்
என்ன செய்வீர்கள்? நீங்கள் அதைப் பார்த்துக் கொண்டிருப்
பீர்களா? நான்கு பேர் அவனை அடிக்கும்பொழுது, காவல்
நிலையத்திற்குப் போய்ச் சொல்லு, ஊர் பெரியவர்களிடத்தில்
போய்ச் சொல்லு என்று சொன்னால் அவர்களைப்பற்றி நாம்
என்ன நினைப்போம். ஆகவே, முதலில் முரடர்களிடத்திலிருந்து
அவனைக் காப்பாற்றி விட்டு, அதற்குப் பிறகுதான் அவர்கள்
மீது நடவடிக்கை எடுப்பார்கள். இந்தி உள்ளே வருகிற
பொழுது, மாநாடு போடவேண்டும், தீர்மானம் போட வேண்டும்,
தலைவர்கள் அறிக்கை விட வேண்டும் என்று யாராவது
நினைத்தால் அவர்களுக்குத் தமிழ் உணர்வு இல்லை, உணர்ச்சி
இல்லை என்றுதான் அர்த்தம்.

அங்கே என்ன அநியாயம் நடக்கிறதோ அந்த அநியாயத்தை
அங்கங்கேயே களைந்தெடுத்து விடவேண்டும். நான் ரகுமான்கான்
அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன். அவர்கள் மாணவர்
முன்னேற்றக் கழகத்திலே உறுப்பினராக இருக்கின்றபோது
அண்ணா அவர்கள் சொல்ல வேண்டும் என்று அவர்கள் காத்
ருந்தார்களா என்பது எனக்குத் தெரியாது. அண்ணா அவர்கள்
என்ன சொன்னார்கள் என்றால், 1965 ஜனவரி மாதம் 26-ந்
தேதிக்குப் பிறகு இந்த நாட்டினுடைய ஆட்சி இந்தியத்
துணைக்கண்டத்தின் ஒரே ஆட்சி மொழி இந்தி தான் என்று
சொல்லுகிறார்கள். அதை எதிர்க்கின்ற வகையில் தமிழகத்திலே
இருக்கின்ற மக்கள் அனைவரும்............

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் துணைத்
தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் மாண்புமிகு எஸ். டி.
எஸ். அவர்கள் மாணவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின்
பொதுச் செயலாளராக இருந்தபோது அவருடைய தலைமையின்
கீழ் என்னைப் போன்றவர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருந்த
சம்பவத்தை அவர்கள் குறிப்பிட்டார்கள். அன்றைக்குத் தாய்க்
கழகத்திலே கூட நான் உறுப்பினராக இல்லை. நம்முடைய
எஸ். டி. எஸ். அவர்களைத் தலைவராக ஏற்றுக் கொண்ட, அவர்
பொதுச் செயலாளராக இருந்த மாணவர்கள் அமைப்பிலேதான்
இருந்தோம். அன்றைக்கு அவர் இட்ட கட்டளைகளை எல்லாம்
ஏற்று, நம்முடைய எஸ்.டி.எஸ். அவர்களைத் தலைவராக ஏற்றுக்
கொண்டு அன்றைக்கு நாங்கள் செயல்பட்டோம். ஆக, அன்றைக்கு
இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே அவர் என்ன கட்டளைகளை



1983 பிப்ரவரி 11] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

இட்டார்களோ அதே காரியத்தை அன்றைக்கு நாங்கள் செய்
தோம். இன்றைக்கு அவர்கள் அமைச்சராக இருக்கிறார்கள்.
என்னைப் போன்றவர்கள் எதிர் அணியிலே இருக்கிறோம்.

ஆனால் நான் கேட்கின்ற கேள்வி இதுதான். அதே உணர்
வோடுதான் அமைச்சர் இருக்கிறார் இந்த எதிர்ப்பிலே, நாங்களும்
இருக்கிறோம். சென்னை நகரத்தில் தமிழ்ப் படங்களுக்கு முன்
னுரிமை கொடுக்கப்பட வேண்டும். சென்னை மாநகரில் மட்டு
மல்லாமல் சென்னை போன்ற பல்வேறு நகரங்களில், குறிப்பாக
இந்தி அந்த இடத்தை அதிகமாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்
கிறது. பிற மொழி படங்கள் அதிகமாக ஆக்கிரமித்துக் கொண்
டிருக்கின்றன. என்னதான் தமிழ்ப் படங்கள் இந்த ஆண்டு அதிக
மாக எடுக்கப்பட்டாலும் கூட, நல்ல தியேட்டர்கள் இன்றைக்கு
சென்னை நகரத்திலே கிடைக்கவில்லை. மாறாக பிறமொழிப்
படங்களுக்கு, குறிப்பாக இந்திப் படங்களுக்குத்தான் அந்த
வாய்ப்பு கிடைக்கிறது. எனவே, எடுக்கப்படுகின்ற படங்கள்
நல்ல தியேட்டர்களிலே திரையிடப்படவில்லை என்று சொன்னால்
ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மக்கள் பார்க்கும் வாய்ப்பு
கிடைக்காது. எனவே, துணை சபாநாயகர் அவர்களே, உங்கள்
மூலமாக அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்ப்
படங்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற விதத்திலே தமிழ்ப் படங்
கள்தான் முன்னுரிமைப் பெற்று சென்னை நகரத்திலே இடம்
பெறுவதற்கான வகையிலே அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத்
தலைவர் அவர்களே, நான் அதைப்பற்றி தெரிவிக்கவில்லை.
நான் தெரிவிக்க விரும்புவது, பேரறிஞர் அண்ணா அவர்கள்
அன்றைக்குத் தெரிவித்தது 1965-க்குப் பிறகு இந்த நாட்டி
னுடைய ஒரே ஆட்சிமொழி இந்தி தான் என்று சொல்லுகிற
போது, அதை நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கிற வகையிலே தமிழகத்
திலே இருக்கிற எல்லா வீடுகளிலும் கருப்புக் கொடி கட்ட வேண்
டும் என்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய ரகுமான்கான்
போன்றவர்கள் எல்லாம் என்ன செய்தார்கள் என்றால், வீடுகளிலே
மட்டும் கட்டவில்லை தெருவிலெல்லாம் கட்டினார்கள். வாகனங்
களிலே கட்டினார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம்
அநியாயம் நடக்கிறபோது ஆட்சியிலே உள்ளவர்கள் சொல்ல
வேண்டும், தலைவர்கள் சொல்ல வேண்டும், மாநாடு போட
வேண்டும் என்று அன்றைக்கு மாணவர்கள் நினைத்தார்களா?
இல்லையே அன்றைக்கு மாணவர்கள் போராட்டம் நடத்திய
போது பொதுமக்கள் ஆதரவு கொடுத்தார்கள். நான் தெரிவித்துக்
கொள்வேன். மாணவர்கள் அதைச் செய்து வெற்றி பெற்றார்கள்
மாணவர்கள் செய்வதற்கு பொதுமக்கள் ஆதரவு கொடுத்தார்கள்.
பொதுமக்களுக்கும் அந்த உணர்வு இருந்தது இன்றைக்கும் இருக்
கிறது. அதுமட்டுமல்ல, உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றால்,

விட்டார்கள். வியாபார நோக்கம் இன்றைக்கு இந்தப் படத்தைப் போட்டால் வியாபாரம் நடக்கும் என்று பார்த்து, அதற்குத் தக்கபடி படம் எடுக்கப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே அந்த திரைப்படங்கள் இங்கே வருகிறபோது நாம் தணிக்கை செய்து விட வேண்டும் நம்முடைய தமிழ் நாட்டினுடைய பண்பாட் டிற்குத் தகுந்தபடி தணிக்கை செய்துவிட்டால் அது வர முடியாது. அப்போது தமிழ்ப்படம் தன்னாலே திருந்திவிடும். ஆகவே இதை நாம் செய்ய வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே அமைச்சர் அவர்கள் நம்முடைய பண்பாட்டிற்குத் தகுந்தபடி செய்துவிட்டால் அதைக் காப்பாற்ற முடியும் என்று சொன்னார் கள். ஆனால் சென்சார் போர்ட் என்பது தமிழ்நாட்டில் படம் எடுப்பவர்களையும், குறிப்பாக தென் நாட்டில் படம் எடுப்பவர் களையும் வஞ்சித்து, வடநாட்டில் எடுக்கின்ற படங்கள் பல கோடிக்கணக்கான ரூபாய்களை சம்பாதிப்பதற்கு மறைமுகமாக வடநாட்டில் இருக்கின்றவர்களுக்கு இந்தி என்ற முறையில் ஆதரவு அளித்து வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, விவாதம் இப் போது எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறது. அதனாலே தமிழ்ப் பண்பாடு, கலை என்றால், அது எப்படி இருக்க வேண்டும், என்ற விஷயங்களைப் பேசவேண்டும் என்றால், அதற்காக தனியாக ஒரு ஏற்பாடு செய்தால் பேசலாம். இல்லை என்றால் இப்படி இடை யிலே பேசுவது என்பது எல்லோருடைய தரப்பிலேயும் அந்தக் கருத்துக்களை பேசுவதற்கு வாய்ப்பு அளிக்காது.

திரு. அ. ரகுமான்கான் ; மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத்தலைவர் அவர்களே, இங்கே மிக முக்கியமான பிரச்னை இப்போது படம் எடுக்கிறார்கள். தமிழிலே படம் வருகிறது, மலையாளத்திலே வருகிறது. கன்னடத்திலே வருகிறது. இந்தியிலே வருகிறது எல்லா மொழிப்படங்களும் இன் றைக்கு தமிழகத்திலே திரையிடப்படுகிறது. ஆனால் ஆபாசம் இருக்கக் கூடாது, அது தமிழ் பண்பாட்டை அழிப்பதாக இருக் கிறது என்பது ஒருவிதத்திலே குற்றச்சாட்டு. ஆனால் குறிப்பாக இந்த ஆபாசத்தை தடுப்பது என்ற உரிமை அரசுக்குஒருபுறத் திலே இருந்தாலும்கூட, தணிக்கைக் குழு என்ற ஒன்று இருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்கு தெரியும், எல்லோருக்கும் தெரியும். இன்றைக்கு இந்த சென்சார் போர்டு யாருடைய அதிகாரத்தில் இருக்கிறது, என்றால் மத்திய சர்க்காரு டைய அதிகாரத்தில் இருக்கிறது. தமிழ் நாட்டிலே தமிழ்ப் படங்கள் எடுக்கிறார்கள் படத்தயாரிப்பாளர்கள். ஆனால் தமிழ் கலாசாரத்தை பிரதிபலிக்கின்ற படங்களை தமிழ் தயாரிப்





பாளர்கள் எடுக்கிறார்கள். ஆனால் எது ஆபாசம், எது ஆபாசம் இல்லை, அல்லது தமிழ் பண்பாட்டுக்கு ஒத்து வரக்கூடியது, அல்லது ஒத்துவராது என்பதை தீர்மானிப்பவர்கள் நம்மவர்கள் அல்ல, தமிழர்கள் அல்ல. அந்த அதிகாரம் மத்திய சர்க்காருடைய இடத்திலே இருக்கிற காரணத்தாலே நம்முடைய கலாசாரத்தைப் பற்றி புரியாத, அல்லது புரிந்து கொள்ளாத மத்திய சர்க்கார் நியமிக்கக் கூடிய அதிகாரிகள் இருக்கிறார்கள். எனவே தணிக் கைக்கு வருகிறபோது அவர்கள் எதையெல்லாமோ ஆபாசம் என்று சொல்லிக்கொண்டு, அல்லது வேறு காரணங்களைச் சொல்லிக் கொண்டு, இன்றைக்கு அந்தப் படங்கள் தடையிடுகிற காரணத் தாலே படங்கள் பாதிக்கப்படுகின்றன. கலாசாரம் பாதிக்கப் படுகிறது. எனவே அந்த அதிகாரங்கள் மாநில சர்க்காருக்கு வர வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் முதலில் இதைப் பற்றித் தெளிவாகப் பேச வேண்டியதில்லை என்று கருதினேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் அதைப்பற்றி இன்றைக்கும் மறந்திருப்பார்கள் என்றாலும், நான் குறித்து வைத்திருக்கிறேன் இங்கே அதைப்பற்றி பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களும் மற்றவர்களும் தமிழ்ப்படங்கள் என் றும், அதிலே தமிழ் கலாச்சாரம் இருக்கும் என்றும் அவர்கள் பேசிவிட்டார்கள். அதனால் தான் நான் பேசினேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆகவே யாரும் அதைத் தவறாகக் கருதி விடக் கூடாது. அவர்கள் பேசியதால் நான் பதில் சொல்லாமல் இருக்கக்கூடாது என்று அதைத்தெரிவித்து இருக்கிறேன். ஆனால் நான் தெரிவித்துக் கொள்கிறேன் மாண்புமிகு ரகுமான்கான் அவர்களும், மற்றவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும்.

தணிக்கைக்குழு இன்றைக்கு மத்திய அரசின் பொறுப்பில் இருக்கிறது, அதனால் தான் இப்படி வருகிறது. அதனால்தான் நான் தெரிவித்தேன். ஏதாவது ஒரு பொருளைச் செய்வதற்கு ஒரு மாநில அரசு லைசென்ஸ் கொடுத்தாலும் அதை இங்கே வந்து விற்கவேண்டும் என்று சொன்னால் தமிழக அரசிடத்தில் அவர்கள் வந்து லைசென்ஸ் வாங்க வேண்டும், அப்படி லைசென்ஸ் வாங்காமல் உள்ளே அந்தப் பொருள் வருகிறது என்று சொன் னால், அது எல்லையிலேயே நிறுத்தப்படுகிறது. அதேபோல் எந்த படமாக இருந்தாலும் தமிழகத்தில் உள்ள திரையரங்குகளில் ஓட வேண்டுமென்று சொன்னால், அதற்காக நாம் தணிக்கை செய் கிற அதிகாரத்தைப் பெற வேண்டும், இல்லாவிட்டால் தணிக்கை செய்ய வேண்டும் என்ற முறையில் திட்டத்தின் மூலமாக ஏதேனும் நடைமுறையில் வகுக்கமுடியுமா என்பதை இந்த அரசு யோசிக்கக் கடமைப்பட்டு இருக்கிறது, தமிழக மக்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்,

பாற்றப்படும் என்று நான் ஆசைப்படுகிறேனே தவிர வேறு ஒன்றும் அல்ல. ஆக நான் முன்மொழிந்திருக்கிற திருத்தத்துடன் இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

In Clause 3 in the Table—

(1) Against item (a) under Column (1) and item (i) under Column (2) for the existing entry in Column (3), the following shall be substituted—

"31 per cent of the gross collection capacity for a show multiplied by 23".

(2) Against item (b) under Column (1) and item (i) under Column (2), for the existing entry in Column (3), the following shall be substituted—

"30 per cent of the gross collection capacity for a show multiplied by 21".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 3, திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 4 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1983) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது





**(உ) சட்டமன்றத் (தகவின்மை தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1983**

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு சட்டமன்றத் (தகவின்மை தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13/1983) ஆய்வுக்கு *எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவரவர்களே, இந்தத் தமிழ்நாடு 1967 ஆம் ஆண்டு சட்டமன்ற (தகவின்மை தடுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1967) 2 ம் பிரிவின்படி இச்சட்டத்தின் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பதவிகள் எவையும் அப்பதவியை வகித்து வருபவரை சட்டமன்ற உறுப்பினராகத் தெரிந்தெடுப்பதற்கு அல்லது இருந்து வருவதற்குத் தகவின்மை உடையவராக ஆகாது அல்லது எப்போதும் தகவின்மை உடையவராக ஆக்கியுள்ளதாகக் கருதப் படமாட்டாது என்ற காரண நோக்கத்திற்காக இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, இந்தச் சட்டம், சட்டமன்ற உறுப்பினர் என்ன தகுதிகள் இருந்தால் அவர் சட்டமன்ற உறுப்பினர், என்ன தகுதிகள் இல்லை என்றால் அவர் சட்டமன்ற உறுப்பினர் இல்லை என்பதைத் தெரிவிக்கின்றது. இந்தச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை வேறு வார்த்தை[illegible] சொல்வதாக இருந்தால்தான் சரியாக இருக்கும்.

உதாரணமாக, அகில இந்திய அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த சகோதரர் மோகனரங்கம் அவர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தார். அதே நேரத்தில் அவர் அரசாங்கத்தின் ஸ்பெஷல் ரெப்ரெசென்டேட்டிவ் என்ற அதிகாரியாகவும் டெல்லியிலே இருந்தார். ஒரு வழக்கு வந்தது. ஒருவருக்கு இரண்டு வருமானம் இருக்கக் கூடாது—ஆபீஸ் ஆப் பிராபிட். அவர் நாடாளுமன்ற உறுப்பினர் தகுதியற்றவராவார். காரணம் நாடாளுமன்ற [illegible] பினராக இருந்து சம்பளம் வாங்கிக் கொண்டு, [illegible] கவும் இருக்கக் கூடாது என்ற பிரச்சனை வந்தபோது [illegible] நாடாளுமன்றத்திற்கு தேர்வு செய்யப்பட்டது செல்லாது என்று அறிவித்தார்கள்.

எனவே அந்த சிக்கல் இங்கே இனி வரக்கூடாது என்பதற்காகத்தான், அந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. உதாரணமாக இங்கே இருக்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள்

---

*1983ஆம் ஆண்டு பிப்ரவரி 10ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 பிப்ரவரி 11

அதைப் போலவே, கலாச்சாரம் என்று சொல்கிறபோது, தமிழகத்தின் கலாச்சாரம் வேறு என்றும் மற்றவர்கள் கலாச்சாரம் வேறு என்றும் சொல்லப்படுகிறது, எனக்குத் தெரிந்த வரையில், என்னைப் பொறுத்தவரையில், தமிழ் கலாச்சாரம் என்னவென்று கேட்டால், நான் இப்படி நின்று கொண்டு பேசிக் கொண்டு இருக்கிறேனே அதுதான் தமிழ் கலாச்சாரம் என்று நினைக்கிறேன். இதிலே ஏதாவது தவறு இருந்தால் மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதம் வரி விதிப்பது சம்பந்தமானது, அதோடு நின்று விட்டால் நல்லது, காரணம் என்னவென்று சொன்னால் தணிக்கை என்று சொல்கிறபோது தமிழ்நாட்டில் உள்ள படத் தயாரிப்பாளர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால் மற்ற மொழிப் படங்களில் எல்லாம் தாராளமாக 'ஆப்சீன்' அனுமதிக்கப்படுகிறதே, தமிழ் நாட்டுப் படங்களில் அப்படி அனுமதிக்கப்படுவதில்லையே என்பதுதான். அவர்களுடைய குறை இதுதான் இது எந்த அளவிற்குத் தமிழ் கலாச்சாரத்திற்குப் பொருத்தமானது என்ற வாதம் ஒருபுறமிருக்கட்டும்.

இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவதை தீர்க்கமாக ஆலோசிக்கப்பட வேண்டும். மற்ற மாநிலப் படங்கள் இங்கே வருகிறபோது தனியான தணிக்கை என்று சொன்னால், தமிழ்ப் படங்கள் பிற மாநிலங்களுக்கும் போகின்றன. தில்லிக்குக் கூட தமிழ்நாட்டுப் படங்கள் போகின்றன. ஆகவே அதையெல்லாம் அவ்வாறு பாதிக்காதா ? இந்தப் பிரச்னையையும் நாம் பார்க்க வேண்டும். அதே போன்று தமிழ்நாடு இந்தியாவிலேயே உள்ள 3 மாநில சினிமாப் படத் தயாரிப்பு இடங்களில் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறது. ஆகவே இந்தப் படங்கள் பல மாநிலங்களுக்குப் போகின்றன. இதையெல்லாம் நாம் பரிசீலிக்க வேண்டிய பிரச்னையாக இருப்பதால், இந்த விவாதத்தை இந்த வரி சம்பந்தப்பட்ட மட்டும் உள்ள குறுகிய வட்டத்தில் வைத்துக் கொள்வது நல்லது. திரைப்படங்கள் துறை சம்பந்தமாக இந்த விஷயங்கள் வருகிறபோது, இதைப் பற்றிப் பேசுவது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தப் பிரச்னையை இத்தோடு முடித்துக் கொண்டு விவாதத்தை வரி சம்பந்தப்பட்ட அளவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

திரு அ. ரகுமான்கான் : நான் சொல்கிற வாதம் இதுதான். தணிக்கைக் குழு இருக்கிறது. தமிழகத்தில் தமிழ்ப் படங்கள் தயாரிக்கிறார்கள். அதிலே தமிழ் கலாச்சாரம் பிரதிபலிக்கிறது.



1983 பிப்ரவரி 11] [திரு. அ. ரகுமான்கான்]

அந்தப் படங்களைத் தணிக்கை செய்யும் அதிகாரிகள் யார்? மத்திய சர்க்காரால் நியமிக்கப்படுபவர்கள். தமிழகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அதில் இருக்கக்கூடாதா? நான் கேட்க விரும்புகிறேன். தமிழ்ப் படங்களைப் பற்றி தணிக்கை செய்ய தமிழைப் பற்றியவிவரம் தெரியாத அதிகாரிகளை அதிலே போடுகிறார்களே அது தவறு என்றுதான் நான் சொல்கிறேன். இது என்னுடைய முதல் குற்றச்சாட்டு.

[பிற்பகல் 12.50]

இரண்டாவதாக, 'ஆபாசம்' என்பதைப் பொறுத்தவரையில் தமிழ் பண்பாடு என்ன என்று கேட்டார்கள். ஒரு படத்திலே கதாநாயகனும் கதாநாயகியும் முத்தம் கொடுக்கிற காட்சி வருகிறது. முத்தம் கொடுக்கும் காட்சி பிற மொழிப் படங்களில் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் தமிழ்ப் படங்களில் அனுமதிக்கப்படுவதில்லை. அதைப் போன்று தமிழ் நாட்டுக்கு என்று பிரத்தியேகமான சில அம்சங்கள் இருக்கின்றன. அதைப் பற்றி எல்லாம் நன்றாகத் தெரிந்தவர்கள், தமிழ் தெரிந்தவர்கள், தமிழ் பண்பாடு தெரிந்தவர்கள் தணிக்கைக் குழுவில், இருந்தால்தான் நன்றாக இருக்கும்.

ஒரு டைரக்டர் இன்றைக்குக் கூட சொல்லி இருக்கிறார். ஒரு படம் தமிழ்; இன்னொரு படம் பிற மொழி. இரண்டும் ஒரே படம் தான். ஆனால் ஒன்று தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்டது. மற்றொன்று பிற மொழியில் தயாரிக்கப்பட்டது. இரண்டு படத்தையும் தயாரித்தவர் ஒருவர்தான். ஒரே நேரத்தில் தயாரிக்கிறார். பிறமொழியில் அனுமதிக்கப்பட்ட சில காட்சிகள் தமிழ் மொழியில் வருகிறபோது அனுமதிக்கவில்லை. எதிர்ப்பு இருக்கிறது. ஒரு நபர் தயாரித்த ஒரே படத்தில் பிற மொழியில் அனுமதிக்கிற காட்சிகளை தமிழ் மொழியில் அனுமதிக்காதது ஏன்? தமிழ் படத்திற்கு ஏன் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, அந்த விளக்கங்களுக்குள் நான் செல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ் படத்திற்கு அனுமதிக்கவில்லை, மற்ற படத்திற்கு அனுமதிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். நான் அதற்குள் போகவில்லை. தமிழ் படத்திற்குக் கொடுக்க வேண்டாம் என்பது அல்ல என்னுடைய கருத்து. தமிழ் படமாக இருந்தாலும், இந்திப் படமாக இருந்தாலும் அனுமதி ஒரே மாதிரி இருக்க வேண்டும். அதாவது நம்முடைய தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்றவாறு அனுமதி இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. அதற்கு அந்தத் தணிக்கைக் குழுவில் தமிழ்நாட்டு அரசின் சார்பிலே போடப்படுகின்றவர் இடம் பெற வேண்டும். அந்த நிலைமை வந்தால்தான் தமிழ்நாட்டுப் பண்பாடு காப்

சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள், அதே நேரத்
தில் ஒரு வாரியத்தின் தலைவராகவும் இருந்து, அல்லது ஒரு
கார்ப்பொரேஷனுடைய உறுப்பினராகவும் இருந்து அந்த சம்ப
ளம் பெற்று, ரெமுனரேஷன் அல்லது டி.ஏ. பெற்று வருகிற
போது, சட்டமன்ற உறுப்பினராக இருக்கக் கூடாது. காரணம்
ஏற்கனவே ஒரு அலுவலகத்திலோ அல்லது பணியிலோ ஒரு
பொறுப்பிலோ அவர்கள் பணம் பெறுகிறார்கள். ஆகையினாலே
அதிலே சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடிய தகுதியை
இழந்து விடுகிறார்கள் என்பதற்காகத்தான், இப்போது சட்டத்
திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதிலே சில இடங்
களையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

மாநில வக்ஃப் போர்டு வாரியத்திலே சட்டமன்ற உறுப்பினர்
கள் இடம் பெறலாம். அதனாலே அவருடைய பதவி பறி
போகாது. அதேபோல பல்வேறு தொழிற்சாலைகளில் நிர்ணயம்
செய்யும் ஊதிய ஆலோசனைக் குழுவிலே இருக்கலாம். அப்
படி இருப்பதினாலே அவர்களுடைய பதவி பறிபோய்விடாது.
அதேபோல பத்திரிகை ஏற்பளிப்புக் குழுவிலே இந்த சட்டமன்ற
உறுப்பினர்கள் இருக்கலாம், அதனால் அவர்களுடைய எம்.எல்.ஏ.
ஆக இருக்கக்கூடிய தகுதியை இழந்துவிட மாட்டார்கள். மாநில
தொழிலாளர் நல ஆலோசனைக் குழுவிலே உறுப்பினராக இருக்
கலாம். அப்படி இருந்தாலும் அவர்கள் தன் தகுதியை இழந்து
விடமாட்டார்கள். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மாநில அள
விலே உள்ள ஆலோசனைக் குழுவிலே உறுப்பினராக இருக்கலாம்
அதனாலே சட்டமன்ற உறுப்பினராக இருக்கக் கூடிய தகுதியை
இழந்து விட மாட்டார்கள் என்று சொல்லி சில பதவிகளை
இன்றைக்கு இந்தப் பட்டியலிலே கொடுத்திருக்கிறார்கள்.

இவைகளில் எல்லாம் உறுப்பினராக இருக்கிற காரணத்தால்
டி.ஏ. வாங்குகிற காரணத்தால், அதனாலே லாபம் பெற்றாலும்
சட்டமன்ற உறுப்பினராக இருக்கலாம். அவர்கள் தன்னுடைய
தகுதியை இழக்க மாட்டார்கள் என்று ஒரு பாதுகாப்பை இந்தச்
சட்டத்தின் மூலமாக நீங்கள் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். அந்து
சொல்கிறார்கள் வேறு சில வாரியங்கள், கழகங்களில் உள்ள சில
பதவிகளை இந்த ஷெட்யூலில் சேர்க்கலாம் என்று அரசு முடிவு
செய்துள்ளது என்று. அதுதான் மிக முக்கியமான பிரச்னை.
இப்போது நான் கேட்க விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர்கள் குடிசைமாற்று வாரி
யத்தின் தலைவராகவும் இருக்கலாம், சட்டமன்ற உறுப்பினராக
வும் இருக்கலாம், அக்ரோ இண்டஸ்ட்ரியினுடைய சேர்மனாகவும்
இருக்கலாம், சட்டமன்ற உறுப்பினராகவும் இருக்கலாம்.
ஒவ்வொரு வாரியத்திலும் தலைவராக இருப்பதனாலே இந்தப்
பதவிக்கு ஆபத்து இல்லை—சட்டமன்ற உறுப்பினராக பதவி
யைத் தொடரலாம். ஆனால் நீங்கள் புதியதாகச் சொல்ல





வருகிறீர்களே வேறு சில வாரியங்கள், கழகங்களில் உள்ள சில
பதவிகளையும் மேற்சொன்ன ஷெட்யூலில் சேர்க்கலாம் என்று
அரசு முடிவு செய்துள்ளது என்று நான் தெரிந்துகொள்ள விரும்பு
கிறேன். வேறு சில வாரியங்கள் என்ன? வேறு சில கழகங்கள்
என்ன? அவைகள் சம்பளம் வாங்குகிற பதவிகளா? அல்லது
டி.ஏ. வாங்குகிற பதவிகளா அல்லது ரெமுனரேஷன் வாங்கக்
கூடிய பதவிகளா? சம்பளம் குறைவாகக் கூட இருக்கலாம்.
சம்பளமே இல்லாமலும் இருக்கலாம். ஆனால் . . . (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: யு டு நாட் மைண்ட்
இன்டிரப்ஷன் ஐ ஸப்போஸ்.

திரு. அ. இரகுமான்கான்: நோ.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் இதிலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்
கள். குடிசை மாற்று வாரியத்தின் தலைவராக இருந்து
கொண்டே சட்டமன்ற உறுப்பினராக இருக்கலாமா என்று
வினாவை எழுப்பினார்கள். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்
கான் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். ஏற்கனவே
குடிசை மாற்று வாரியத்தின் தலைவராக முன் முதல் இருந்த
வர்கள், இந்த மாமன்றத்தில் அன்றைய தினம் 1970 ஆம் ஆண்
டிலே—உங்களுக்குத் தெரியும் மைலாப்பூர் எம்.எல்.ஏ.வாக
இருந்தார்கள். அதே நேரத்தில் குடிசை மாற்று வாரியத்தின்
தலைவராகவும் இருந்தார்கள். இப்போது இந்தச் சட்டத்
திருத்தம் என்னவென்றால்,

We want to make everything Statutory.

எந்தவித சந்தேகத்திற்கும் எந்த டிஸ்பியூட்டிற்
கும் இடம் வைக்காமல், என்னைப் பொறுத்தவரையில் குடிசை
மாற்று வாரியத்தின் தலைவராக இருந்து கொண்டு சட்டமன்ற
உறுப்பினராக இருக்கக் கூடாது என்று சொல்லவில்லை — இருந்
தாலும் வினாவை வேறு யாரும் எழுப்பிவிடக் கூடாது. அது
முறையாக அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இது.

It has been statutorily Okayed.

என்கிற வகையிலேதான் இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

I wish to draw the attention of the Hon'ble member to the amendment in Section 2. It is on page 2 of the Bill. It is an amendment of Schedule to Tamil Nadu Act 3 of 1967. In Sub-section (2), it is stated, that "after sub-item (62) the following sub-item shall be added. There are sub-items (63) to (86). The Hon. Member's attention was not drawn to this. Some of his friends would not have drawn his attention to this.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே,

The Tamil Nadu Legislature (Prevention of Disqualifciation) Act, 1967, Tamil Nadu Act 3 of 1967, as amended in 1975.

என்கிற சட்டத்தினுடைய காப்பியைத் தான் நான் கையில் வைத்திருக்கிறேன். அதைப் படித்துவிட்டுத் தான் சொல்கிறேன். என்ன சொல்கிறேன் என்றால், இங்கே விவரமாக இருக்கக்கூடிய ஷெட்யூலில்—அட்டவணையில் நீங்கள் சில இடங்களைக் குறிப்பிட்டு அதிலே சட்ட மன்ற உறுப்பினர் பணியாற்றலாம். அப்படி சில பதவிகளை வகிக்கிற காரணத்தாலே சட்ட மன்ற உறுப்பினர் என்ற தகுதியை அவர்கள் இழந்துவிட மாட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே எதை எதை இணைக்கப் போகிறீர்கள் என்பதையும் கோடிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். வக்ஃப் போர்டிலே சேர்மனாக இருக்கலாம், அல்லது உறுப்பினராக இருக்கலாம். அதற்கு டி.ஏ. வாங்கலாம், ரெமுனரேஷன் வாங்கலாம். அப்படி அது எந்த விதத்தில் இருந்தாலும் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கக் கூடிய தகுதியை இழந்துவிட மாட்டார்கள் என்பதைத் தெளிவாக, குறித்தபடி அட்டவணையில் இணைத்திருக்கிறீர்கள்.



(பிற்பகல் 1·00)

அதைத்தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். அந்த மாதிரி இந்த மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு, கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்குரிய மாநில அளவிலான ஆலோசனைக் குழு, பத்திரிகை ஏற்பளிப்புக் குழு, பல்வேறு தொழில்களில் உள்ள வேலைகளுக்கான குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக் குழு, இவற்றில் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி வகிக்கலாம். இதனால் அவர்களுடைய பதவி செல்லாது என்பது ஆகாது என்பதைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். ஆனால் நான் கேட்பது இதுவல்ல. இரண்டாவதாக மேலும் சொல்கிறீர்கள். காரண நோக்க விளக்கத்திலே மேலும் சில வாரியங்கள், கழகங்கள் போன்றவற்றின் பதவிகளை மேற்சொன்ன விவர அறிக்கையில் சேர்க்கவும். அரசு முடிவு செய்திருக்கிறது என்று சொல்கிறீர்கள். அப்படி சேர்ப்பதற்காகத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அப்படிச் சேர்ப்பதற்காகக் கொண்டு வந்து இன்னின்ன என்று கோடிட்டுக் காட்டிவிட்டீர்கள். ஆனால் அதற்குப் பிறகு கடைசியாக அன்றும் சில கார்ப்பரேஷன்களை இதிலே சேர்க்கப்போகிறோம், அதாவது எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அப்படிப்பட்ட பதவிகளிலேயும் இருப்பார்கள். அதனால் சட்டமன்ற உறுப்பினர் பதவி பறி போகாது என்று சொல்கிறீர்கள். நான் கேட்க விரும்புகிறேன். ஆலோசனை என்று சொல்கிறீர்களே வாட் இஸ் தி நேட்சர் அது என்ன கார்ப்பரேஷன்? அது எப்படி இருக்கும்? எவை எவை அரசுக்கு ஆலோசனை கூறும் என்ற விவரத்தை நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து இன்னொன்று, நம்முடைய

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அதிலே ஒன்றும் கன்ப்யூஷன் இல்லை, தெளிவாக இருக்கிறது. நீங்கள் சரியாகப் படிக்கவில்லை என்று நினைக்கிறேன்.

The Government have also decided to include certian offices

This is in the Statement of Objects and reasons

ஸ்டேட்மென்ட் ஆஃப் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசனிலே படிக்கிறேன்.

அதிலே Decided to include certain offices Certain offices

என்றால் என்ன கேட்கிறீர்கள்? ஸ்டேட்மென்ட் ஆஃப் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசனிலே சுருக்கமாகத்தான் போடப்பட்டிருக்கிறது. The entire thing will not re-appear. What are those certain offices That is what you ask I suppose. Clearly it has been mentioned in Section 2 Amendment of Schedule to Tamil Nadu Act 3 of 1967. In Sub-section (2), it is stated that "after sub-item (62), the following sub-items shall be added" These are things. இது ரொம்பத் தெளிவாக இருக்கின்றது.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, 1970-ஆம் ஆண்டு, 1961-ஆம் ஆண்டு, அதைப்போலவே 1971-ஆம் ஆண்டு, 1969-ஆம் ஆண்டு ஆகிய ஆண்டுகளிலே எல்லாம் இதே மாதிரி ஆபீஸ் ஆஃப் ப்ராஃபிட் என்பனவற்றை இணைத்து சட்டங்கள் வந்திருக்கிறது. இங்கே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய சட்டத்திலே மாநில வக்ஃப் வாரியம் போன்ற பலவற்றைக் கோடிட்டுக் காட்டி இருக்கிறார்கள். பாக்கி இருக்கக்கூடிய அந்த இரண்டாவது செக்ஷனில் இவையல்லாமல் வேறு எவை எவை என்று அமைச்சர் அவர்கள் தன்னுடைய பேச்சிலே சொல்லவேண்டும் என்பதற்காகத்தான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கக் கூடிய செக்ஷன் இரண்டிலேஎல்லாம் போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வருகின்ற பிரிவுகள் அல்ல. அத்தனையும் அவை 1971-லே இருந்து இருக்கிறது 1967-லேஇருந்து இருக்கின்றது. உதாரணமாக இப்போது ஹவுசிங்போர்ட் இருக்கின்றது. அது அந்த காலத்திலும் உண்டு. ஆனால் புதிதாக இந்தப் பட்டியல் இணைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இரண்டாவது செக்ஷனில் போட்டிருக்கிறோம் எது எது என்று பார்த்துப்பார்த்துக் கொள்ளுங்கள் என்றுசொல்வதை விட எவை எவை என்று அமைச்சர் அவர்கள் சொன்னால் கொஞ்சம் தெளிவாக இருக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் பல்வேறு அரசுகள் கொண்டு வந்த அமெண்ட்மெண்ட் செக்ஷன் இரண்டோடு சொல்லப்பட்டிருக் கிறது. அதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.





சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினராகவும் இருக்கலாம். அதே நேரத்தில் மற்றைய பதவிகளிலும் இருக்கலாம் ஆபீஸ் ஆஃப் ப்ராஃபிட் அல்லாது மற்ற பதவிகளில் இருக்கலாம் என்று சொல்கிற கருத்து என்னைப் பொறுத்த வரையில் வேறு விவகாரம். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு பதவிக்கு மேல் யாரும் வகிக்கக்கூடாது என்று கொள்கையினை வலியுறுத்தி இன்றைக்கு பல பேர் பல பொறுப்புக்களை எல்லாம் இழந்திருக்கிறார்கள். ராஜிநாமா செய்திருக்கிறார்கள். அப்படிப் பலர் ராஜிநாமா செய்த பிறகு மீண்டும் இன்றைக்கு இரண்டு பதவிகளிலே ஒருவர் இருப்பதற்காக அமெண்ட்மெண்ட் கொண்டுவருவது என்ற கொள்கை முரண்பாடாக இல்லையா? இதுபற்றி அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு சட்டமன்ற பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட திருத்தம், ஏற்கனவே 1967-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டதிலே பல இனங்கள் அதிலே விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதிலே உறுப்பினர்கள் இருந்தால் சட்டமன்றத்திலோ மேலவையிலோ உறுப்பினர்களாக இருக்கலாம் என்று. தமிழ்நாடு அரசு இப்போது மேலும் பலவற்றை இதிலே 63ஆம் எண்ணிலிருந்து 86 வது எண் வரைக்கும் பல இனங்களை சேர்த்து இருக்கிறார்கள். அப்படி சேர்க்கும் போது தான் எங்கள் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு சார்பில் கூற விரும்புவது, இதிலே சொல்லப்பட்டு இருக்கிறது என்ன என்றால் ஊதியம் வழங்கப்படும் பதவிகள் குறித்த கூட்டுக் குழு, தனது ஐந்தாவது மக்கள் அவை பதினான்காம், பதினைந்தாம் அறிக்கைகளில் அளித்துள்ள பரிந்துரைகளின்படி பின்வரும் ஐந்து அமைப்புகளில் உள்ள சில பதவிகளை மேற்சொன்ன விவர அட்டவணையில் சேர்க்க அரசு முடிவு செய்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றமே நாம் ஒரு கூட்டு குழு ஏற்படுத்தி இதிலே இந்த ஊதியம் வழங்கப்படும் பதவிகள் என்ன என்பதை தமிழ்நாடு பொறுத்தவரைக்கும் நிர்மாணிப்பது தான் சரியாக

[திரு. என். சங்கரய்யா] [1983 பிப்ரவரி 11]

இருக்கும். நாம் மாநில சுய ஆட்சி கேட்கிறோம் மக்கள் அவையில் இந்த ஊதியம் என்பதை அந்த மக்கள் அவைக் குழு அளிக்கக் கூடிய அறிக்கையின் அடிப்படையில் நாம் போகவேண்டும் என்பது அது கூடாது என்பது என்ன அவசியம். அவசியம் இல்லை. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சட்டமன்றம் அப்படி ஒரு கூட்டு குழுவை ஏற்படுத்தி அதிலே இந்த ஊதியம் வழங்கப்படும் பதவிகள் என்ன என்பதை பற்றி நாம் தீர்மானித்து அந்த அடிப்படையில் இந்த சட்டத்தை கொண்டு வருவது தான் பொருத்தமாக இருக்கும் என்று முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக என் அபிப்பிராயமும், எங்கள் கட்சியின் அபிப்பிராயமும் இதிலே இப்போது அரசாங்கம் கொண்டுவரக் கூடிய சில இனங்கள் பொருத்தம் அற்றது என்று கருதுகிறேன். ஏற்கனவே, 1967 ஆம் ஆண்டு சட்டத்திலேயே பல இனங்கள் இருக்கின்றன. அரசாங்கத்தினுடைய கொள்கையை வகுப்பதற்கு துணை செய்யக்கூடிய ஆலோசனைக் குழுக்கள் பல்வேறு தொழிலாளர் நல குழுக்கள் அல்லது பல்வேறு துறைகளிலே வருகிற ஆலோசனை குழுக்கள் இவைகளில் எல்லாம் உறுப்பினர்களாக இருப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தகுதி உண்டு. ஆனால் பிரச்சினை என்ன என்றால் மாநில வக்ப் வாரியத்திலே உறுப்பினர்களாக உள்ளவர்கள் இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினராக இருப்பதற்கு அனுமதிக்கவேண்டுமா என்பது என் அபிப்பிராயம் மற்றும் எங்கள் கட்சியின் அபிப்பிராயமும் கூட, காரணம் கோடிக்கணக்கான ரூபாய் உள்ள விவகாரங்களை அவர்கள் நிர்வாகிக்கிறார்கள், அப்படிப்பட்ட நேரத்திலே அந்த வக்ப் வாரியத்தை பற்றிய விமர்சனம் இந்த சட்டமன்றத்திலே நடத்த வேண்டி இருக்கும். இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த வக்ப் வாரிய தலைவராக உறுப்பினராக இருந்தால் அவர்களுக்கு ஒரு 'வெஸ்டட் இண்டரஸ்டு' வரும். அந்த வக்ப் வாரியத்தைப்பற்றி இங்கே விவாதம் வரும். அதை தடுக்க வேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு ஏற்படும். சிந்தித்து பார்க்கவேண்டிய பிரச்சனை.



983 பிப்ரவரி 11] [திரு என். சங்கரய்யா]

மற்றொன்று சட்டமன்றம் என்பது சட்டம் இயற்றுவதற்காக இருக்கக்கூடிய பகுதி. நீதி மன்றம் இருக்கிறது. நிர்வாகம் இருக்க சட்டமன்றத்திலே இருப்பவர்கள் ஏதாவது வகையில் நிர்வாக முறையில் பொறுப்பிலே ஏன் போடவேண்டும். இதிலே பலவிதமான முறைகேடுகள் நடப்பதற்கு இடம் உண்டு. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையை பயன்படுத்திக்கொண்டு நான் கேட்க விரும்புவது 234 சட்டமன்ற உறுப்பினர்கள், மேல்சபை உறுப்பினர்களை தவிர இந்த 5 கோடி தமிழ் மக்களின் இந்த வாரியங்களை நடத்துவதற்கு மற்றவர்கள் கிடைக்கமாட்டார்களா? அப்படி பஞ்சம் வந்து விட்டதா? இது முக்கியமான கேள்வி. என்ன தேவை. அவ்வளவு தூரத்திற்கு இந்த 2 பதவிகளும் இருக்க வைக்க வேண்டிய அளவுக்கு தமிழ்நாட்டில் பொது பிரச்சனைகளில் ஈடுபடக்கூடியவர்கள் எண்ணிக்கை குறைந்துவிட்டதா? சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லாதவர்களை வக்ப் வாரியத்தில் நியமிக்க கூடாதா? அவர்கள் மூலமாக அதை நிர்வகிக்கலாம் அல்லவா? சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் அந்த பணியையும் செய்துகொண்டு அந்த வக்ப் வாரிய வேலையிலும் ஈடுபட வேண்டுமா? அது ஒரு பெரிய சுமை அல்லவா. அது நியாயம் ஆகுமா?

அதுபோல் தான் இந்த ஊதிய குழுக்கள் இருப்பது அவசியம். ஏன் என்றால் இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைகள் சொல்வார்கள் அரசாங்கத்தினுடைய கொள்கையை எப்படி உருவாக்க வேண்டும் என்று சொல்வார்கள். ஆகவே அது ஊதியம் பெறக்கூடிய பதவி அல்ல. ஆனால் இங்கே நாங்கள் கேட்க விரும்புவது சட்டத்திலே எடுத்துப் பார்த்தால் முரண்பாடுகள் சில இனங்களில் இருக்கின்றன. உதாரணமாக ஏற்கெனவே இருக்கக்கூடிய தமிழ்நாடு சர்க்கார் உத்தியோகத்தில் இருக்க கூடிய ஒரு ஆனரரி மெடிகல் ஆபிஸர் சட்டமன்ற உறுப்பினர் ஆகலாம் என்று 67வது சட்டத்திலே வகை செய்யப்பட்டிருக்கிறது. ஒரு ஆனரரி மெடிக்கல் ஆபிஸராக இருந்தால், ஒரு ஆனரரி சர்ஜனாக இருந்தால் அவர்கள் தமிழ்நாடு அரசாங்கத்தினுடைய ஊழியர்கள் அல்லவா. அவர்கள் மீது நாம் விமர்சனம் செய்ய மாட்டோமா? அவர்களுடைய வேலையை உட்பட்டு இந்தத் தமிழ்நாடு அரசாங்கம் இந்த சட்டமன்றத்திலே விவாதம் நடத்தாத? ஆனால் ஏற்கெனவே 1967 ஆம்

கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்திற்கு உதவி செய்வதற்காக கொள்கைகளை வகுப்பதற்கு துணை செய்வதற்காக உள்ள குழுக்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கலாம். ஆனால் அரசாங்கம் பணத்தைக் கொடுத்து நிர்வகிக்கக்கூடிய பொறுப்புகளுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் போடப்படலாம் என்று வந்தால் பிறகு அதற்கு லிமிட்டே இருக்காது. 60 பேர்கள் கூட இருக்கலாம். இத்தகைய கழகங்களில் பொறுப்பேற்ற 60 பேர்கள் அல்லது 80 பேர்கள் கூட வந்து விடலாம். அப்போது இந்த சட்டமன்றம் என்னவாகும்? அதிலே வெஸ்டட் இன்டரெஸ்ட்ஸ் வளர்ந்துவிடும். ஒரு தூய்மையான நிர்வாகம் நடத்த விடமாட்டார்கள். ஆகவே இந்த சட்டத்திலே இந்த அயிட்டங்களைப் பொறுத்தவரையில் மார்க்சிஸ்ட் கம்யுனிஸ்ட் கட்சி சார்பாக நான் வன்மையாக எதிர்க்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு ரகுமான்கான் அவர்கள் பேசியபோது அதுபற்றி அவர் ஏதோ அபிப்பிராயம் சொன்னார்கள். இதை ஆதரிக்கிறார்களா அல்லது எதிர்க்கிறார்களா என்று சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக்கழகம் இப்படிப்பட்ட பொறுப்புள்ளவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கலாம் என்று அரசாங்கம் கொண்டு வந்திருப்பதை ஆதரிக்கிறதா? எதிர்க்கிறதா? எதிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை சொல்லாமல் விட்டுவிட்டது ஒரு குறைபாடு, என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1967 ம் ஆண்டு சட்டமன்ற (தகவின்மை தடுத்தல்) சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்டமுன்வடிவை குறித்து அது சம்பந்தமாக கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இந்த சட்டத்தை இயற்றுவதற்கான காரண நோக்க விளக்கம் என்று கொடுத்திருக்கிற குறிப்பிலே குறிப்பிட்டிருப்பது" ஊதியம் வழங்கப்படும் பதவிகள் குறித்து கூட்டக்குழு, இது ஐந்தாவது மக்களவை 15-ம்அறிக்கையில் அளித்துள்ள பரிந்துரைகளின்படி பினவரும் 5 அமைப்புகளில் உள்ள சில பதவிகளை மேற்சொன்னவாறு அட்டவணையில் சேர்க்க அரசு முடிவு செய்துள்ளது என்று, ஐந்து பதவிகளைப் பற்றி குறிப்பிட்டிருக்கின்றது. தமிழகத்தில் அந்த ஐந்து பதவிகளையும், ஏற்கனவே இருக்கிற 1967-ம் ஆண்டு சட்டத்திலே இருக்கிற அட்டவணையிலே சேர்ப்பதற்கு முடிவு செய்திருக்கிற இதே நேரத்தில், அதோடு மேலும் சில பதவிகளை 1967-லேயிருந்து, 1968-லிருந்து, 1986 வரையில் இருக்கிற மேலும் ஒரு 18 பொறுப்புகளை இதிலே சேர்ப்பதற்கான திருத்தத்தை இணைத்து சேர்த்திருக்கிறது.





இது சம்பந்தமாக நான் குறிப்பிட விரும்புவது இன்றையதினம் ஊதியம் பெறுவதற்கான வாய்ப்பை பெறக்கூடிய நிலையில் இருக்கிற கழகங்கள்—அது எந்த பெயரில் அமைந்திருந்தாலும் சரி, வாரியம் என்ற பெயரில் அமைந்திருந்தாலும் சரி, கழகங்கள் என்ற பெயரில் அமைந்திருந்தாலும் சரி, அம்மாதிரியான கழகங்களை, வாரியங்களை நிர்வகிப்பதற்கான பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக வருவதற்கோ அல்லது அவர்கள் தொடர்ந்து நீடிப்பதற்கோ ஒரு தகுதியை இழந்தவர்களாக இருக்கிறார்கள் என்ற நிலையை ஏற்படுத்தக் கூடாது எனபதற்கான காரணத்தோடு இந்த திருத்தச் சட்டம் இயற்றப்படுகிறது.

இன்றையதினம் பொதுவாக ஆலோசனைக் குழுக்கள் என்று அரசு தரப்பில் ஏற்படுத்தக்கூடிய பல குழுக்கள் இருக்கின்றன. உதாரணமாக குறைந்தபட்ச உதியம் சம்பந்தமாக அரசுக்கு ஆலோசனை கூறுவதற்காக ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அதுமாதிரி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்டுகின்றன. மாநில தொழிலாளர் நல ஆலேசனைக் குழு அமைக்கப்படுகின்றது. இம்மாதிரியாக பல்வேறு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அரசாங்கத்தினுடைய கொள்கையை அது நிறைவேற்றுவதற்கு அல்லது ஆலோசனை கூறுவதற்காக, ஆலோசனை கூறக்கூடிய குழுக்களாக அவை அமைகின்றன, ஆகவே அம்மாதிரியான குழுக்களிலே அங்கம் பெறுவது என்பது அதிலே லாப நோக்கத்திற்காக அல்லது வேறு எந்த காரணத்தையோ எதிர்பார்த்து என்று சொல்லப்படுவதாக கூறமுடியாது. ஆனால் அதே நேரத்தில் பல்வேறு கழகங்கள், குழுக்கள் அதிலே குறிப்பாக கூறலாம். தமிழ்நாடு மாநில தொழிலாக்கக் கழகம்; தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம்; தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம்; தமிழ்நாடு சிறுதொழில் கழகம்; தமிழ்நாடு துணி ஆலைக் கழகம் போன்ற பல்வேறு கழகங்கள் இருக்கின்றன. இந்த கழகங்கள் அனைத்திலும் கோடிக்கணக்கான ரூபாயை முதலீடாக வைத்து அதிலே சம்பந்தமான கொள்கையை உருவாக்கி, நிறைவேற்றுவதற்கான பொறுப்பிலே இருக்கிற பொறுப்பை நிர்வகிக்கக்கூடியவர்கள், அம்மாதிரியான நபர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகவோ, அல்லது இம்மாதிரியான பொறுப்புகளிலே இருப்பது என்பது ஒரு ஏற்புடைய கொள்கையாக இருக்காது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-20]

இன்றைய தினம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நாட்டிலே இருக்கிற பல்வேறு நிலைமைகளை ஆய்ந்து, நாட்டின் அரசாங்கம் அதை நிர்வகிப்பதற்காக சட்டங்களை இயற்றுவதற்கு அதற்கான திட்டங்களை உருவாக்கிக் கொடுப்பதற்கும் பொறுப்புகள் இருக்கின்றன. ஆகவே இம்மாதிரியான பொறுப்புகளை நிறைவேற்றக்

[திரு. என். சங்கரய்யா] [1983 பிப்ரவரி 11

சட்டத்திலேயே ஒரு ஆனரரி மெடிக்கல் ஆபிஸர் ஒரு சவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியில் இருக்கக்கூடியவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருக்கலாம் என்று அதிலே விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது.

(பிற்பகல் 1-10)

அது எல்லாம் தவறு. உதாரணத்திற்குச் சொல்கிறேன் ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்திலே ஹாண்டிகிராப்ட்ஸ், தமிழ்நாடு காதிபோர்டு, ஹவுசிங் போர்டு, ஆல் இண்டியா ஹாண்டிகிராப்ட்ஸ் கார்ப்பரேஷன் இவைகளிலே இருப்பதற்கு தடையில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் நிர்வாகப் பொறுப்புகள் இல்லையா? காதி போர்டில் பொறுப்பு இல்லையா? ஹவுஸிங் போர்டில் பொறுப்பு இல்லையா? அது முழு நேரப் பணி இல்லையா? அந்த நிர்வாகத்தைக் கவனிக்கக்கூடியவர்கள் எதற்காக சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கவேண்டும்? இவைகளிலே முழு நேரமும் ஈடுபடக்கூடியவர்கள் இருக்கக்கூடாதா?

இதிலே சொல்லப்பட்டிருப்பதிலே இனம் 72 பற்றிப் பிரச்சினை இல்லை. 73, தமிழ்நாடு மாநில தொழிலாக்கக் கழகம். 74, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம். 75, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம். 76, தமிழ்நாடு சிறு தொழில் கழகம். 77, தமிழ்நாடு துணி ஆலைக் கழகம். 78, தமிழ்நாடு மட்பாண்ட தொழில் நிறுவனம், 79, தமிழ்நாடு கைத்தறி நிதியுதவி-வாணிபக் கழகம் என்று வரிசைப்படுத்திச் சொல்லப்படுகிறதே. இவைகளில் எல்லாம் பணத்தை வைத்து நிர்வகிக்கக்கூடிய பொறுப்புகள் இருக்கின்றன. இவைகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் உறுப்பினர்களாக இருந்தால் இந்த சட்டமன்றத்திலே ஏதாவது அவைகளைப்பற்றிய விவாதம் வரும்போது விவாதம் நடத்த விடுவார்களா? முப்பது பேர்கள் இப்படி வந்து விட்டால் இங்கே ஒருவருக்கொருவர் மியூட்சுவல் அட்மிரேஷன் சொசைடிதான் இருக்கும். ஒருவர் முதுகை ஒருவர் சொறிந்துக்கொண்டு எந்தவிதமான விமரிசனமும் வரவிடாமல் செய்வார்களே, அரசாங்கத்திலே உள்ள குறைகளைப் பற்றி இந்த நிறுவனங்களில் உள்ள குறைகளைப் பற்றி விமரிசனம் செய்யும்போது அதை விமரிசனம் செய்ய



1983 பிப்ரவரி 11]

விடுவதற்கு அவர்களுக்கு விருப்பம் இருக்காது. இங்கே திரு. ரகுமான்கான் "அவர்கள் கேட்டார்கள் வேறு எதற்கு என்று. வேறு எதுவும் இல்லை, இதுதான். இதிலே இனம் 86 வரைக்கும் ஏன் கொடுத்திருக்கிறார்கள்? தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், தமிழ்நாடு பால்வள நிறுவனம், தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் என்று ஒவ்வொன்றைப் பற்றியும் கொண்டு வந்திருக்கிறார்கள். இது பல முறைகேடுகளுக்கு இட்டுச் செல்லும். ஆகவேதான் நான் மீண்டும் கேட்கிறேன். மறுபரிசீலனை செய்யவேண்டும். நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசனின் டைரக்டர் சட்டமன்ற உறுப்பினர். உறுப்பினராக இருக்கலாம் அதற்கு. 1967 ஆம் ஆண்டுச் சட்டம் விதிவிலக்கு அளிக்கிறது. அதேபோல் மற்ற நிறுவனங்களில் இருக்கக்கூடியவர்கள் இருப்பார்கள் என்றால் சட்டமன்றத்திலே விமர்சிப்பதற்கான அந்த சுதந்திரத்தை முன்னிட்டு இந்த இனங்களைச் சேர்ப்பதிலே பொருத்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காரண நோக்க விளக்கத்திலே இரண்டு என்று போட்டு இருப்பதிலே சொல்லி இருக்கிறார்கள். 'ஊதியம் வழங்கப்படும் பதவிகள் குறித்த கூட்டுக்குழு தனது ஐந்தாவது மக்களவை ஆறாம் அறிக்கையில் அளித்துள்ள பரிந்துரைகளின்படி, மேற் சொன்ன விவர அட்டவணையின் 11 ஆம் இனத்தின் (28) துணை இனத்தில் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு கிடங்கு வசதிக் கழகம் தொடர்பான பதிவை நீக்கிவிடவும் அரசு முடிவு செய்துள்ளது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு வேர் ஹவுஸிங் கார்ப்பரேஷனிலே ஏன் சட்டமன்ற உறுப்பினர் இருக்கக்கூடாது? ஏன் அதை நீக்கவேண்டுமென்று கொண்டுவந்திருக்கிறார்கள்? அது மட்டும் என்ன பாவம் செய்தது? கிடங்கு வசதிக் கழகத்தில் சட்டமன்ற உறுப்பினர் இருக்கக்கூடாது என்றால் மற்றவைகளிலே இருக்கலாமா? தமிழ்நாடு மாநிலத் தொழிலாக்கக் கழகம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு முதலீட்டு கழகம், தமிழ்நாடு சிறு தொழில் கழகம் இவை ஒவ்வொன்றிலும் அவர்கள் இருக்கலாம். ஆனால் கிடங்கு வசதிக் கழகத்திலே மட்டும் இருக்கக்கூடாது என்று சொன்னால் இது ஏதோ சம்பிரதாயம் போன்று இருக்கிறது. கிடங்கு வசதிக் கழகம் மட்டும் ஏன் நீக்கப்படுகிறது? ஆகவே இதை அரசாங்கம் மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று

(திரு. இரா. கருப்பையா) [1983 பிப்ரவரி 11

கூடிய நிலைமையிலே இருப்பவர்கள் இம்மாதிரியான குழுக்களுடைய பொறுப்புகளை வகிப்பது என்பது சரியான நிலையாக இருக்காது, இருக்க முடியாது. சட்டமன்ற உறுப்பினர்கள் முழுமையாக, தாங்கள் சட்டமன்றத்திலே இருந்து, சட்டமன்ற உறுப்பினராக இருந்து ஆற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவி செய்கின்ற முறையிலே அது இருக்காது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் இம்மாதிரியான குழுக்களிலே இருப்பது தவறாக இருக்க முடியாது என்ற நிலை இருக்கமுடியாது. காரணம், நாட்டிலே இம்மாதிரியான குழுக்களை நிர்வகிப்பதற்கு பொறுப்பான பதவிகளை நிர்வகிப்பதற்கு திறமையுள்ள பல்வேறு நபர்கள் இருக்கிறார்கள். அதற்குப் பஞ்சம் நம்முடைய நாட்டிலே ஏற்படவில்லை என்று தான் நான் கருதுகிறேன். அவர்கள் எந்த அரசியல் இயக்கத்தைச் சேர்ந்தவர்களானாலும் சரி, அதே மாதிரி, இன்றையதினம், தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எடுத்துக் கொண்டாலும், இம்மாதிரியான பொறுப்புகளை நிர்வகிப்பதற்கு, அந்தப் பொறுப்புகளை ஏற்றுச் செயல்படுவதற்குத் தகுதியான நபர்கள் நிச்சயமாக இருப்பார்கள் என்பதிலே எந்தவிதமான ஐயமும் இருக்க முடியாது. ஆகவே அம்மாதிரியான நபர்களிடம் பொறுப்புகளைக் கொடுத்து நிர் வகிப்பது என்பது தான் இன்றையதினம் சரியான முறையாக இருக்கும்.

இன்றையதினம் 86 வரையிலே, புதிதாக பல நிறுவனங்களைச் சேர்த்து இவை அனைத்தையும் நிர்வகிக்கக் கூடியவர்கள்—இந்தப் பொறுப்புள்ள கழகங்கள் அனைத்தையும் நிர்வகிக்கக்கூடியவர்கள்—சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பதன் காரணமாக, அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் தகுதியை இழந்து விட முடியாது என்ற நிலைமையை ஏற்படுத்திக் கொடுப்பது சரியாக இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பொறுப்பை நிறைவேற்றுகின்ற முறையிலே அவர்களை விடுவதுதான் சரி. ஆகவே, இம்மாதிரியான திருத்தம் தேவையில்லையென்பதை நான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக நீங்கள் இந்தத் திருத்தம் இப்பொழுது கொண்டு வந்ததற்கான அவசியம் என்ன என்பதே புரியவில்லை. சமீபத்திலே சில தினங்களுக்கு முன்பு நான் பத்திரிகையிலே படித்தது எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. அரியானா மாநிலத்திலே பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் இம்மாதிரியான குழுக்களிலே இருப்பவர்கள் தங்களுடைய பதவியை இழந்து விட்டதாக ஒரு உயர்நீதிமன்றத் தீர்ப்பு வந்திருக்கிறது என்ற காரணத்தினாலே ஒரு வேளை அம்மாதிரியான நிலைமை நம்முடைய தமிழகத்திலே இருக்கிற கழகங்களிலே ஏற்படக் கூடாது என்கின்ற காரணத்தினாலே இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டதோ என்று நான் நினைக்கிறேன்.



1983 பிப்ரவரி 11] [திரு. இரா. கருப்பையா]

ஆகவே, இம்மாதிரியான முறையிலே, இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வந்திருப்பது ஆட்சேபனைக்குரியது. இந்தச் சட்டத் திருத்தம் தேவையற்றது. ஆகவே, இந்தத் திருத்தத்தை அரசு வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் குறிப்பிட்டு கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்டத் திருத்தம் தேவையில்லையென்ற அடிப்படையிலே, குறிப்பாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் அவர்களும், சி.பி.ஐ. துணைத் தலைவர் அவர்களும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதற்கு ஒரு பின்னணி இருக்கிறது என்பதைச் சுருக்கமாக நான் இங்கே கோடிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை என்பதற்காக நான் சொல்கிறேன்.

Joint committee on office of Profit of the Fifth Lok Sabha ஒரு அறிக்கையைச் சமர்பித்தது என்று ஏற்கனவே நம்முடைய சட்ட முன்வடிவிலே கூறப்பட்டிருக்கிறது. Fifteenth Report of the Joint Committee on office of Profit of the Fifth Lok Sabha submitted on 12—1—1976 and the Fourtee th Report submitted on 25—7—1975. இந்த இரண்டு ரிப்போர்ட்டுகளையும் இங்கே குறிப்பிட்டு காட்டியிருக்கிறோம். இதிலே மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். குறிப்பிட்டு, இந்த வக்ப் போர்ட் பொறுத்த வரையிலே, எதற்காக இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதையும் அவர்கள் சொன்னார்கள். ஒன்றை நான் சுருக்கமாகப் படித்துவிடுகிறேன். இந்த அறிக்கையிலே இருப்பதை நான் படித்துவிடுகிறேன்.

*State Wakf Boards* : The Joint committee on offices of profit, while examining the character, composition etc. of the State Wakf Boards in general; at their sitting held on 4th December 1974 had noted that section 24 of the wakfs at 1954 decleared that the offices of Chairman and members of State Wakf Boards shall not be disqualified and shall be deemed never to have disqualified holders thereof for being chosen or of being Members of parliament என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல், Bodies recomended fo exemption from disqualification இதற்காக தகுதி அற்றவர்கள் என்பதிலே, விதி விலக்கு என்னென்ன என்பதிலே Para 41 : Advisory Boards of the collected works of Mahathma Gandhi, Central Board of Forestry, Board of Agricultural machinery என்று பல்வேறு இனங்கள் ஏறத்தாழ 66 இருக்கின்றன. அதை நாம் இங்கே கொண்டுவரவில்லை. இதனுடைய பின்னணி Back-drop, which was responsible for bringing this place of legislation. இந்த மசோதாவை நாம் சட்டமாக ஆக்குவதற்கு ஏன் முயன்றோம் என்பதற்குத்தான் பின்னணியைக் கொடுப்பதற்கு நான் கடமைபட்டிருக்கிறேன்.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1983 பிப்ரவரி 11

இங்கே இன்னொரு கருத்துச் சொல்லப்பட்டது. லோக் சபாவிலே பரிந்துரை செய்த காரணத்தாலேயே நாம் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்பதற்கு ஒரே ஒரு விடை, நாம் பெடரல் ஸ்டரக்சரில் இருக்கிறோம். ஆகவே லோக் சபையினுடைய பரிந்துரைகள் நம் மாநிலத்தைப் பொறுத்த வரையிலே, நம்முடைய சட்டமன்றத்தைப் பொறுத்த வரையிலே entitled to respect மதிக்கத்தக்க கருத்துக்களாகத்தான் கருதப்படுகின்றது. அதுமட்டுமல்ல, இன்னும் ஒரே ஒரு கருத்தை திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னதை மானைத் தானே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் முன் அனுமதியுடன் அவையின் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இங்கே ஒரு கருத்துச் சொல்லப்பட்டது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கக்கூடியவர்கள் ஒரு பொறுப்பை வைத்துக்கொண்டு இங்கே அமைச்சராக இருக்கக்கூடாது. இப்படியெல்லாம் சொல்லிவிட்டு இங்கே இதைக் கொண்டு வரலாமா என்று சொல்லப்பட்டது. நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். அதிலே மிகத் தெளிவாக முடிவு எடுக்கப்பட்டது. கட்சியிலே பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் அரசாங்கத்திலே ஒரு பொறுப் பிலே இருக்கத் தேவையில்லை. என்கிற ஒரு துணிவான தைரியமான, நிச்சயமாக மற்றவர்கள் பாராட்டுதலுக்குரிய ஒரு கருத்தைத்தான் வெளிப்படுத்தினார்கள். அந்த அடிப்படை யிலே தான் இன்றைய தினம் இந்த அமைச்சரவையிலே பணி யாற்றுகின்றவர்கள் எல்லாம், கட்சியிலே இருக்கக்கூடிய பொறுப்புகளை ராஜினாமா செய்தோம். ஆகவே இதற்கும் அதற்கும் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியாக இருக்காது. இந்தப் பிரச்னையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் என்றாலே ஒரு quasi statutory body உள்ளேதான் வந்துவிடுகிறார்கள். ஆகவே சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற காரணத்தாலே அவர்களுக் கும் வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்பதற்காக அவசரம் அவசரமாகக் கொண்டு வரப்பட்ட மசோதா அல்ல. ஆனாலும் கூட சட்டத்தினுடைய ஒரு தெளிவின்மையின் காரணமாக அவர்கள் பதவி இழந்துவிடக்கூடாது என்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம். ஆகவே இதிலே எந்தவிதமான முரண் பாடும் இருப்பதாக என்னைப் பொறுத்த வரையில் தெரியவில்லை. இதை நிச்சயமாக மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் ரொம்பவும் பாராட்டி வரவேற்பதற்கான சட்டம்தான் இது என்று நான் கருதுகிறேன்.



1983 பிப்ரவரி 11]

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்ததற்கு நன்றி. ஆனால் என்னுடைய இந்தக் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லிவிட்டால் சிறப்பாக இருக்கும். சட்ட மன்ற உறுப்பினர்கள் ஒரு பொறுப்பை வகிக்கிறார்கள். அவர்க ளுக்கு இன்னொரு பொறுப்பு, ஒரு பதவி, ஒரு வாய்ப்பு தருவது குறித்து எனக்கு ஆட்சேபணை இல்லை. ஏன் என்றால் திறமைசாலிகள் அந்தப் பொறுப்புக்கு தேவைகூடப்பட லாம். ஆகவே அந்தப் பொறுப்பிலே சட்டமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு, நிர்வாகத்திலே திறமையாகப் பணியாற்ற வேண்டிய அவசியம் கருதி அவர்களை நியமிப்பதுகூட தவறில் லை. நீங்கள் சொன்னதற்கு நாங்கள் விரோதிகள் அல்ல, ஆனால் கேள்வி இதுதான். ஒருவர் இரண்டு பொறுப்புக்கள் வகிக்கக்கூடாது என்று முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை தெரிவித்தார்கள். அப்படி ஒரும் கட்சி சார்பாக ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.........  ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கட்சிக் கொள்கையை எல்லாம் இங்கே விவாதிக்கக் கூடாது. எம்.எல்.ஏ.-வாக இருப்பவர்கள்தான் அமைச்சர்களாக இருக்கிறார்கள். டெபுடி ஸ்பீக்கர்களாக இருக்கிறார்கள். இது கட்சிப் பிரச்னை. இங்கே பேசக்கூடாது.

திரு. அ. ரகுமான்கான் : அமைச்சர் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். தயவு செய்து அனுமதிக்க வேண்டும்.

திரு. எம். சங்கரய்யா : தலைவர் அவர்களே, அவர் சொல்லக் கூடியது அல்ல உண்மையான பிரச்னை. கட்சிக்குள்ளே இருக்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள். இதிலே பிரச்னை என்னவென்றால் பொருளாதார நிறுவனங்களில் உள்ளவர்கள் இருக்கலாமா என்பதுதான் முக்கியமானது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் சரியான விடையை மாண்புமிகு ரகுமான்கான் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பிரச்னையை எல்லாம் நான் மிகத் தெளிவாகச்சொல்லியிருக்கிறேன் கட்சியிலே பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் இங்கே ஆட்சியிலே பொறுப்பிலே இருக்கக்கூடாது என்று தெளிவாகச் சொல்லப்பட்டு, அந்த அடிப்படையிலே நம்முடைய பொறுப்புக்களை நாம் இழந்தி ருக்கிறோம். ராஜினாமா செய்திருக்கிறோம். இதிலே எந்த விதமான குழப்பமும் நம்மைப் பொறுத்தவரையில் இல்லை. இங்கே இருக்கக்கூடிய பிரச்னை எல்லாம் இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள் இந்தப் பொறுப்பினை வகிக்கலாமா அப்படி வகிப்பதின் காரணமாக ஏந்தவிதமான பாதிப்பும் ஏற்ப டாது? இதை நல்லவகையிலே தாராளமாக டிஸ்கஷன் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1983 பிப்ரவரி 11

இங்கே ஒரு கருத்து சொல்லப்பட்டது, சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும்தானா இருக்கிறார்கள், இதற்கு வேறு யாரும் கிடைக்கவில்லையா, சட்டமன்ற உறுப்பினர்களாக இல்லாதவர்களை இந்தப் பொறுப்பிலே அமர்த்தியிருக்கலாமே என்ற கருத்து சொல்லப்பட்டது. நான் இங்கே சொல்வதை எல்லோரும் தயவு செயது நன்றாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினரை நாம் புதிதாக இங்கே இந்தப் பொறுப்புக்கு கொண்டு வர வேண்டுமென்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. இன்னும் தெளிவாக சொல்லவேண்டுமென்றால், We do not want a piece of legislation to hamstring the members from discharging their duties freely. அவர்கள் சரியான வகையிலே அந்த வேலையைச் செய்ய வேண்டுமென்ற ஒரு நிலைமை உருவாக்கப்படுமேயானால் பிற்காலத்தில் அந்த வேலையைச் செய்ய முடியாமல், சட்டத் திருத்தங்கள் இல்லாத காரணத்தாலே அவர்களுக்கு இடையூறாக இருக்கக் கூடாது என்பதற்காக ஃப்ரீயாகச் செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும், சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் தொழிற்சங்கத்திற்கே தலைமை தாங்கக் கூடாது என்று சொன்ன நேரத்தில் எல்லாம் அதைக் கடுமையாக எதிர்க்கிறோம். தொழிசங்கத்திற்கும் இதற்கும் ஒப்பிட்டு நான் பேசவில்லை மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் அப்படிக் கருதக்கூடும். ஆனாலும்கூட அந்தக் கருத்தின் அடிப்படையை நான் சொல்கிறேன். அந்தக் கருத்தை அப்படியே ஒப்பிட்டுச் சொல்லவில்லை. திறமை வாய்ந்தவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தால் ஒரு எஃபிசியன்ட் எம். எல். ஏ., பொறுப்பேற்று தொழிற்சங்கத்தை நடத்துகின்ற நிபுணத்துவத்தைப் பெற்று இருப்பாரேயானால், அந்த நிபுணத்துவத்தைப் பெற்றிருக்கின்றவர் எம். எல். ஏ., வாக வந்திருக்கின்றார் என்கின்ற ஒரே ஒரு காரணத்திற்காக தன்னுடைய நிபுணத்துவத்தை தொழிலாளர்களுக்காகப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பை இழந்துவிடக் கூடாது என்பது அருமையாக, அற்புதமான கருத்தாக இருக்கிறது. அதை நான் ஒப்பிட்டுச் சொல்லவில்லை. இருந்தாலும் ஒருவருக்குத் திறமை இருக்கிறது என்றால், அப்படிப்பட்ட திறமை உள்ளவர் ஒரு எம்.எல்.ஏ. வாக ஆகிவிட்டார், எம்.எல்.சி.யாக ஆகிவிட்டார், எம்.பி. யாக ஆகிவிட்டார், அது ஒரு ஆபீஸ் ஆஃப் பிராஃபிட் என்கிற ஒரு தோஷத்தின் காரணமாக, அந்த ஊனத்தின் காரணமாக அவர் அந்த எம்.எல்.ஏ. பதவியை இழக்கக்கூடாது என்பதற்காகக் கொண்டு வரப்பட்ட மசோதா இது என்பதை இந்த நேரத்தில் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.



1983 பிப்ரவரி 11]

திரு. என். சங்கரய்யா : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழிற்சங்கத்திலே சர்க்காருடைய பண முதலீடு என்கிற பிரச்னைக்கே இடமில்லை. எங்களுடைய ஆட்சேபணை, மாநில அரசாங்கத்தினுடைய உதவியை பெற்றிருக்கின்ற பொருளாதார நிறுவனங்களிலே இவர்களை அமர்த்துவது பற்றி. வாலன்டரி ஆர்கனைசேஷனிலே இருப்பதைப் பற்றி பிரச்னை இல்லை. நாங்களே சொல்லியிருக்கிறோம். மகாத்மா காந்தியினுடைய நூல்களைப் பதிப்பதற்கான அட்வைசரி கமிட்டியைப் பற்றி ஆட்சேபித்தோமா? அல்லது இங்கே போடப்பட்டிருக்கின்ற அட்வைசரி கமிட்டிகளிலே இருப்பவர்களைப் பற்றி ஆட்சேபித்தோமா என்றால் இல்லை. பொருளாதாரத்தைக் கண்காணிக்கின்ற, அதை நிர்வகிக்கும் வாய்ப்பு இருக்கின்ற நிலைமைகளைத்தான் நாங்கள் ஆட்சேபிக்கிறோம். இதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** நான் பதில் சொல்லும் நேரத்தில் எனக்குச் சாதகமான கருத்துக்களைச் சொல்வது எளிது இயற்கை. எனவே அவரவர்களுக்குச் சாதகமாக இருக்கின்ற கருத்துக்களைச் சொல்வதுதான் திறமை என்றுகூடச் சொல்லவில்லை, வாதத்தின் அடிப்படை என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தும் இங்கே சொல்லப்பட்டது. இப்படி இவர்கள் இந்தப் பொறுப்பை வகிப்பதால் சட்டமன்றத்திலே அவர்களை எப்படிக் கண்டிக்க முடியும் என்ற பிரச்னை எழுப்பப்பட்டது. உதாரணத்திற்காகச் சொல்கிறேன். குறிப்பாக நம்முடைய நண்பர் ரகுமான்கான் அவர்கள் இந்தப் பிரச்னையை எழுப்பிய காரணத்தால் சொல்கிறேன், இதே மன்றத்தில் குடிசை மாற்று வாரியத் தலைவராக அன்றைய மாண்புமிகு உறுப்பினர் அரங்கண்ணல் அவர்கள் இருந்த நேரத்தில் பல பிரச்னைகள் எழுப்பப்பட்டன. அந்தப் பிரச்னையையெல்லாம் பற்றி வாதாடி, அதற்குப் பதில் சொல்லப்பட்டது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினராக இங்கே இருக்கிறார் என்ற காரணத்தினாலே சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் தங்கள் வாதத்தின் கூர்மையையோ, அதனுடைய முக்கியமான கூர்மைத் தன்மையையோ குறைத்துக்கொள்ள மாட்டார்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[1983 பிப்ரவரி 11

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு சட்டமன்றத் (தகவின்மை தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு சட்டமன்றத் (தகவின்மை தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1983) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 12-2-1983 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.34 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## II. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

142. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுக ஒழுங்கு முறை விதிகளின் முதல் தொகுப்பில் திருத்தங்கள் செய்வது குறித்து 25—7—1980 ஆம் தேதியிட்ட பெற்ற, பணியாளரமைப்பு-நிர்வாகச் (பணியாளரமைப்பு-M) திருத்தத் துறையின் 775 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

143. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 1980 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)



1983 பிப்ரவரி 11]

144. அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் 1981-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [ஆங்கிலம்] 1056-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

145. சேரன் போக்குவரத்துக் கழகத்தின் 1979-ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [ஆங்கிலம்] 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

146. சேரன் போக்குவரத்துக் கழகத்தின் 1980-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்—

எதுவுமில்லை.

## இணைப்பு.

(7ம் பக்கத்திலுள்ள குறிப்பிட்ட வினா எண் 226-க்கான விடையைக் காண்க.

1956-ஆம் ஆண்டு மாநில சீரமைப்பு சட்டத்தின் 40-வது பிரிவின்படி சென்னை மாநிலத்திற்கு (தற்போது தமிழ்நாடு) மக்கள் அவையில் 41 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. ஒதுக்கீட்டின்படி 1957-ம் ஆண்டு மற்றும் 1962-ம் ஆண்டு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் வகை செய்தவாறு 1961-ம் ஆண்டு மக்கட்தொகை கணக்குப்படி தொகுதிகளைச் சீரமைக்க ''தொகுதிகள் சீரமைப்புக்குழு'' (Delimitation Commission) ஒன்று மைய அரசினால் அமைக்கப்பட்டது. அக்குழு, மக்கட்தொகை கணக்கின்படி தமிழ் நாட்டிற்கு மக்கள் அவையில் 39 இடங்களை ஒதுக்கியது. இதனால் தமிழ்நாட்டிற்கு மக்கள் அவையில் இரண்டு இடங்கள் குறைந்தன. மக்கள் அவையில் இரண்டு இடங்களை இழந்ததற்குக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைத் தீவிரமாக அமுல் செய்ததினால் ஏற்பட்ட விளைவுதான் என இவ்வரசு கருதியது.

(ஆ) இதைத் தவிர்க்க, 1951 மக்கட்தொகை கணக்கு அடிப்படையில் மக்கள் அவையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டுமென்று இவ்வரசு மைய அரசை 1970-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் கேட்டுக் கொண்டது.

இவ்வேண்டுகோளை மைய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. இதை வற்புறுத்தும் முகமாக தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் இதுபற்றி விவாதிக்கக்கோரி, மத்திய அரசின் திட்டக் குழுவை 1972-ஆம் ஆண்டு மே மாதம் இவ்வரசு கேட்டுக் கொண்டது. திட்டக்குழு, மக்கள் அவையில் இடங்கள் ஒதுக்கீடு பற்றிய பொருள் குறித்து தேசிய அபிவிருத்திக் கவுன்சிலில் விவாதிப்பது அதன் அலுவலின் கீழ் வராது என்று கூறி, இவ்வரசின் கடிதத்தை மைய அரசின் பரிசீலனைக்கு அனுப்பிவைத்தது. மைய அரசு இதற்குப் பதில் அளிக்கையில் கருத்தில் இது தங்கள்





குறித்து மாறுதல் இல்லை என்று அறிவித்தது. இவ்வரசின் மேற்குறித்த வேண்டுகோளை வற்புறுத்தும் வகையில் அமைச்சரவையில் முடிவு செய்தபடி, மறுபடியும் 1974-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், மக்களவையில் 1951ம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி மாநில வாரியாக ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கையை அப்படியே நிலைப்படுத்தி வைக்க வேண்டுமென்றும், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனில் மாநில மக்கட்தொகையைக் கணக்கிடும்போது தவிர்க்கப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கைகளை மக்கட்தொகை கணக்கில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்றும் வற்புறுத்தியது. மைய அரசு இதனை ஏற்றுக்கொள்ளாததினால், மேற் கொண்டு நடவடிக்கைகள் கைவிடப்பட்டன.

## உள்ளடக்கம்

*12—2—1983*


1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 127—171

2. தகவல் கோரல்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள் .. .. .. .. 171—173

3. அறிவிப்புகள்—

(அ) ஆளுநரிடமிருந்து செய்தி .. .. 173

(ஆ) (i) ஷெரீப் நியமனத்திற்கு வகை செய்யும் முத்திரைப் பத்திர (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு, 1983 .. 242—243

(ii) பச்சையப்பன் பொறுப்புக் கழக நிருவாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல், திருத்தச் சட்ட முன் வடிவு 1983 .. .. .. 242—243

(iii) மது விலக்கு (திருத்த) சட்ட முன் வடிவு, 1983 .. .. .. 242—243

4. கவன ஈர்ப்புகள்—

(அ) அம்பிளிக்கை பயிற்சி நிலையத்தில் பயின்றவர்களை நர்சிங் கவுன்சில் பதிவு செய்ய மறுப்பது .. .. .. 173—177

(ஆ) மானாமதுரையில் சிமெண்ட் ஆலை நிறுவுவதனால் விளை நிலம் பாதிக்கப்பட்டுள்ளது .. .. .. 177—182

5. அரசினர் சட்ட முன்வடிவு—

கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1980 183—242

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் . 243—244

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5
6 The Universal Book House, Moore Market, Madras-8
7 C. Sitharaman and Company, Madras 14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Penniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros, Tiruchirappalli-2
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem 1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai 1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street Calcutta-12

© TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT

PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

(1-7-1983) Issued 1-7-1983

COMMISSIONER OF TAMILNADU ARCHIVES & HISTORICAL RESEARCH
16 AUG 1983
EGMORE, MADRAS-8

# தமிழ் நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES

அதிகாரப்பூர்வ அறிக்கை—OFFICIAL REPORT

சனிக்கிழமை, பிப்ரவரி 12, 1983— தொகுதி XLII எண் 2

Saturday, 12th February 1983—Volume XLII No. 2

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

Legislative Assembly Department, Fort St. George Madras-600009

(விலை ரூ. 3-50 காசுகள்) (Price Rs. 3-50 Paise

2475

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1983 பிப்ரவரி 12.

தை 30, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு.''

துன்பத்தையே ஒருவன் இன்பமாகக் கருதிக் கொள்வானானால், அவனுடைய பகைவரும் விரும்பிப் போற்றும் மதிப்பு அவனுக்கு உண்டாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 242, 243 மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

### சித்தன்னவாசல் குகைக்கோவிலை சுற்றுலாத் தலமாக்கும் திட்டம்.

*வினா எண். 244—திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் சித்தன்னவாசல் குகைக் கோவிலை சுற்றுலா மையமாக்க அரசுக்கு திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாவட்ட உலாத் தலங்கள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் சித்தன்னவாசல் தேர்ந்தெடுக்கப்பட்டு சுற்றுலாத்தலமாக அபிவிருத்தி செய்வதற்கான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. பெ. திருமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சித்தன்னவாசல் என்ற அந்தக் குகைக்கோவில் கி. மு. 2 ஆம் நூற்றாண்டில் பல்லவர்களால் ஏற்படுத்தப்பட்டது. அந்தக் குகைக்கோவிலில் உள்ள

சிற்பங்கள் மிகவும் ஓவியக்கலையில் சிறப்பு பெற்றதாகவும், அதனுடைய கலர் இன்னும் அழியாமல் அது சிறப்பாக விளங்கிக் கொண்டு வருகிறது. ஆகவே அங்கே சுற்றுலாத் தலமாக்க அரசு எந்த வகையில் திட்டம் போட்டிருக்கிறது? எவ்வளவு ரூபாய் மதிப்பீடுத் தொகை ஒதுக்கி அந்த திட்டத்தை அதற்கு அரசு நிறைவேற்றும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே போகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கும் பொது மக்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கு முதலில் சுமார் 3½ லட்சம் ரூபாய் செலவில் திட்டம் போடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு அதை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. பெ. திருமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே வேறு எந்தக் கோவிலையாவது சுற்றுலாத் துறைக்கு எடுத்துக்கொள்ள அரசிடம் திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, சித்தன்னவாசலுக்கு அடுத்தபடியாக விராலி மலையை மாவட்ட சுற்றுலாத்தலமாக எடுத்துக்கொண்டு திட்டம் நிறைவேற்றுகிற ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

புதுக்கோட்டை தேவஸ்தானத்தில் பணிபுரியும் ஆலய ஊழியர்களுக்கான ஊதிய உயர்வு.

*வினா எண். 245—திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான்: திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

புதுக்கோட்டை தேவஸ்தானத்தில் பணிபுரியும் ஆலய ஊழியர்களுக்கு அரசால் அறிவிக்கப்பட்ட ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: புதுக்கோட்டை திருக்கோயில்களின் ஊழியர்களுக்கு 1—7—82 முதல் இதுவரை அடிப்படைச் சம்பளம் ரூ. 10-க்குக் குறைவாக வாங்கி வருபவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 10 என நிர்ணயித்து வழங்கவும், அடிப்படைச் சம்பளம் ரூ. 10-க்கு மேல் பெறுபவர்களுக்கு அகவிலைப்படியில் ரூ. 10 உயர்வு செய்து வழங்கவும், இந்து அறநிலைய ஆட்சித் துறை ஆணையரால் ஆணைப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.



திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேவஸ்தானத்தில் பணிபுரிகின்ற ஆலய ஊழியர்களுக்கு குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளம் 10 ரூபாய் என்றும், அடிப்படைச் சம்பளம் 10 ரூபாய்க்கு மேல் பெறுபவர்களுக்கு அலவன்ஸ் கூட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது இருக்கின்ற இந்த விலைவாசி ஏற்றத்திலே இதை வைத்துக்கொண்டு ஒருவேளை சாப்பாடுகூட சாப்பிட முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் உடனடியாக பரிசீலனை செய்து இந்த தேவஸ்தானத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு குறைந்தபட்ச சம்பளத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த புதுக்கோட்டை தேவஸ்தானத்திற்கு உட்பட்ட ஆலயங்களில் மிக அதிகமான அளவிலே தேவைக்கு மேல் அங்கே பணியாளர்கள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். எல்லோருமே முழு நேர ஊழியர்கள், அலுவலர்கள் அல்ல. அவர்கள் ஏதோ ஒரு குறிப்பிட்ட பணிக்காகவே அங்கே நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் தவிர மானியங்கள் என்ற வகையில் நிலங்கள் எல்லாம் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, அவைகளை கணக்கில் வைத்துதான் இந்தச் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. குறைந்த பட்சம் ரூ. 10 சம்பளமாக இருக்கவேண்டும் என்பதற்காக அந்த அளவிற்கு அது நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. இந்த நிலையிலேகூட ஏறத்தாழ 1 லட்சம் ரூபாய்க்கு மேல் துண்டு விழுந்து, பழனி ஆலயத்தில் இருந்து கடன் பெற்றுத்தான் அந்த ஆலய ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, புதுக்கோட்டை ஆலயங்களில் தேவைக்கு அதிகமான பணியாளர்கள் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் எல்லாம் எப்போது நியமிக்கப்பட்டவர்கள்? தேவைக்கு அதிகமாகப் பணியாளர்கள் நியமிக்கக் காரணம் என்ன? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மன்னரின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்த நேரத்தில் அவர்கள் எல்லாம் மன்னராலே நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் நீண்ட காலமாக அங்கே அவசியம் இருக்கிறதோ இல்லையோ ஆலய அலுவலர்களாக பல உதவிகளைப் பெற்றுக் கொண்டு பணிபுரிந்து வருகிறார்கள். ஆலயத்திற்கு மக்கள் வருகிறார்களோ இல்லையோ, அங்கே இருக்கும் ஆலய அலுவலர்களின் எண்ணிக்கை வரும் மக்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருக்கிறது. ஆகவே, அவர்களை வீட்டுக்குப் போக வைக்கும் பிரச்சனையையும் இப்போது எடுத்துக் கொண்டால்,

அது சிக்கல் நிறைந்ததாக இருக்கும். ஆகவே, இவர்களுடைய பிரச்னைகளையெல்லாம் எப்படித் தீர்ப்பது என்பதைப் பற்றி அந்த ஆலய நிர்வாகம் இப்பொழுது சிந்தித்துக்கொண்டு இருக்கிறது. அரசாங்கத்திடம் அந்த ஆலய நிலங்களை ஒப்படைத்து விட்டு பெற்றுக்கொண்டுள்ள ரூ. 5,30,000-க்கு மேல் சுமார் 10 லட்ச ரூபாய் தஸ்திக் அலவன்சு கொடுக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அதையும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று அறநிலையத் துறை இப்போது வேண்டுகோள் வைத்து இருக்கிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறநிலையத் துறை ஊழியர்களுக்கு நிலம் ஒதுக்கப்பட்ட அடிப்படையில் அவர்களுக்கு மாதம் 10 ரூபாய் சம்பளம் என்று கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அவர்கள் ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் எத்தனை ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த நிலங்களைப் பெற்றுக்கொண்டு இருக்கிற அலுவலர்கள் சுமார் 608 பேர் என்று கணக்குத் தரப்பட்டு இருக்கிறது. இதிலே 0.17 ஏக்கர் நஞ்சை நிலத்தில் இருந்து 10.27 ஏக்கர் நஞ்சை அல்லது புஞ்சை நிலம் வரையில் அவர்கள் ரக வாரியாக மானியங்களைப் பெற்று இருக்கிறார்கள்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, ஆலய ஊழியர்கள் மிகக் குறைந்த ஊதியத்தினைப் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். இது கடுமையான விலையேற்றம் இருக்கும்படியான காலம். அவர்களுடைய பணியையும், ஊதியத்தையும் முறைப்படுத்த ஒரு குழு அமைத்து, பரிசீலித்து, விரைவில் மாறுதல் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி புதுக்கோட்டை தேவஸ்தானத்தில் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிற ஆலயங்கள் பற்றியது. இதிலே சுமார் 112 முதல் 117 வரை ஆலயங்கள் அந்த ஒரே நிர்வாகத்தின் கீழே இருக்கின்றன. ஆகவே, அந்த ஆலய நிர்வாகத்தைப் பற்றிதான் இப்போது நான் விடையை அளித்துக்கொண்டு இருக்கிறேன். மற்ற ஆலயங்களைப் பொறுத்த வரையில், அந்தந்த ஆலய நிர்வாகமே அந்தந்த ஆலயங்களின் சக்திக்கு ஏற்றவாறு ஆலயப் பணியாளர்களுக்கு இன்னின்ன வகையில் சம்பளம் தருவது என்பது தற்போது நடைபெற்றுக் கொண்டு வருகிற முறையாகும். ஆகவே, புதுக்கோட்டையைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு இன்று சம்பளம் எல்லாம் நிர்ணயிக்கப்பட்டு இருக்கின்றன. இப்போது நாம் செய்யவேண்டிய நல்ல காரியம் என்னவென்றால், தேவைக்கு அதிகமாக இருக்கின்றவர்களையெல்லாம் அந்த வேலையில் இருந்து அனுப்புவதுதான் ஆலயத்திற்கும் பாதுகாப்பாக இருக்கும். அவர்களுக்கும் பாதுகாப்பாக இருக்கும்.



## சென்னையில் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு சிலை நிறுவும் திட்டம்.

*வினா எண் 246—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு சிலை வைக்க தமிழக அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து சென்னை நகருக்குள் வரும் வழியில் அமைந்துள்ள சத்திப்பாரா சந்திப்பு என்னுமிடத்தில் அமரர் நேருஜியின் சிலை ஒன்றினைச் சிறப்பான முறையில் நிறுவும் திட்டம் இப்போது செயலாக்குவதில் உள்ளது.

(முற்பகல் 9-10)

திரு. இரா. தாமரைக்கனி ; தலைவரவர்களே, சென்னையில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய சிலை வேறு எங்காவது இருக்கிறதா? இது முதன் முதலாக திறக்கப்படுகின்ற சிலையாக இருந்தால் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, பாரத ஜனாதிபதி ஆகியோர்களையும் அழைத்து இந்த விழா சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு நேரு அவர்களுடைய பொன்மொழிகளும் அந்த சிலைக்கு அடியில் பொறிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் வேறு இடத்திலே பண்டித ஜவஹர்லால் அவர்களுடைய சிலை இருப்பதாக அரசின் கவனத்திற்கு வரவில்லை. ஆகவே, இந்தச் சிலைதான் முதன் முறையாக அமைக்கப்படுகின்ற சிலை என்பதாலும் சென்னை மாநகரில் இருக்கின்ற ஒரே ஒரு சிலை என்பதாலும் குறிப்பாக தமிழ் நாட்டில் இருக்கிற ஒரு முக்கியமான சிலை என்பதாலும் சுமார் 10,50,000 ரூபாய் மதிப்பீட்டில் இந்த சிலையை அமைக்கின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தச் சிலையை அமைக்கின்ற இடத்தைச் சுற்றி ஒரு நல்ல அழகான பூங்காவும், அழகான புல் வெளியும் அமைக்கும் திட்டமும் இருக்கிறது. இந்தச் சிலை அமைப்பு முழுவதும் கல்லினால் வடிவமைக்கப்படுகிறது. பண்டித நேரு அவர்களுடைய பொன்மொழிகள் எல்லாம் இதிலே பொறிக்கப்படுகின்ற திட்டம் ஏற்கனவே இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான் 10.5 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிலை பீடம் சுமார் 20 அடி உயரமும், அதிலே 10 அடி உயரத்திற்குக் குறையாத சிலையும் அமைக்கப்பட இருக்கிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, பண்டித நேரு அவர்கள் ஒரு தலைசிறந்த ஜனநாயகவாதி. அவர்கள் நாடாளுமன்றத்திற்கு வரும்போது, அவர்கள் இந்த நாட்டினுடைய

பிரதமராக இருந்தாலும்; கையிலே ஃபைல் இல்லாமல் உள்ளே நுழையமாட்டார்கள் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அந்த வகையில் நேரு அவர்களுடைய சிலையை வைக்கும்போது அப்படி ஒரு ஃபைல் கையிலே இருக்கும் அளவுக்கு அந்த சிலை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, சிலை எப்படிப்பட்ட வடிவமைப்பிலே அமைய வேண்டுமென்பதுபற்றி ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்பட்டு, சிலை வடிக்கின்ற காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எப்படிப்பட்ட உருவ அமைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் இப்போது என்னிடம் இல்லை. ஆகவே, செய்துக்கொண்டிருக்கிற சிலை வடிவத்திலே இருந்து மாறுதல் செய்வது என்பது இயலாது என்று கருதுகிறேன். ஒரு வேளை இன்னும் தொடக்க நிலையில் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற கருத்தையும் பரிசீலித்து இப்படிப்பட்ட தோற்றப் பொலிவு அந்த சிலைக்கு நன்றாக அமையும் என்றால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்; தலைவரவர்களே, உலகில் பெரும் ஜனநாயகவாதியாகவும் இந்தியப் பிரதமராகவும் இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு தமிழ்நாட்டில் முதன் முதலாக சென்னை மாநகரில் அமைக்கப்படுகின்ற ஒரு முக்கியமான சிலை இது என்று சொன்னார்கள். ஜவஹர்லால் நேரு அவர்கள் மொழி விஷயத்தில் இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் இந்த நாட்டின் பொதுமொழியாக நீடிக்கும் என்று உறுதி கொடுத்த வாசகம் இந்த சிலையின் அடியில் பொறிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ; தலைவரவர்களே, பண்டித நேரு அவர்களுடைய உருவச்சிலையைப் பார்க்கும்போது எல்லோரும் அவர் மிகுந்த ஜனநாயகவாதி என்பதையும் அவர் எந்த எந்த தொண்டுகளை இந்த நாட்டுக்கு ஆற்றியிருக்கிறார் என்பதையும் அவர் தலைசிறந்த பல உறுதிமொழிகளை இந்தத் தமிழக மக்களுக்கு அளித்திருக்கிறார் என்பதையும் நிச்சயமாக நினைவுகூற முடியும். ஆனால் நிரந்தரமாக அமைக்கப்படும் ஒரு சிலைக்குக் கீழே ஒரு குறிப்பிட்ட கொள்கையை, அரசின் முடிவை தெரிவிக்கின்ற ஒரு கருத்தை பொறிக்க இயலுமா, அது சரியானதா என்பதைப்பற்றி பரிசீலிக்க வேண்டியிருக்கிறது, அவர்கள் என்றைக்கும் நிலைத்து நிற்கக்கூடிய பல கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை எல்லாம் பொறிக்க திட்டம் இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்து அவ்வளவு தகுந்த கருத்தா, பரிசீலனைக்கு உரியதா என்பதிலே எங்களுக்கு கொஞ்சம் தயக்கம் இருக்கிறது.





திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; நம்முடைய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய திருவுருவச் சிலையை வைப்பதற்கு அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை பாராட்டுவது என்னுடைய கடமை. அதற்காக நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அரசியல் வானிலே ஆசிய ஜோதியாக விளங்கிய நம்முடைய மதிப்பிற்குரிய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களுடைய திருவுருவப் படத்தை இம்மாமன்றத்தில் வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிற கருத்து என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மறைந்த பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு சிலை வைக்க முடிவு செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மறைந்த நம்முடைய பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள், 1953 ஆம் ஆண்டு சென்னையிலே திராவிட முன்னேற்றக் கழகம் கார்ப்பொரேஷன் சார்பாக தலைவர் காமராசர் அவர்களுடைய சிலையைத் திறந்து வைத்தார்கள். அப்படி திறந்து வைக்கிறபோது தமிழகத்திலே இருக்கிற எல்லோரையும் அழைத்து மிகப் பெரிய அளவில் சிறப்பான விழாவாகக் கொண்டாடப்பட்டது. அதுபோல நம்முடைய மறைந்த பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைக்கிறபோது, அதை ஒரு பெரிய நிகழ்ச்சியாக தமிழகத்திலே இருக்கிற எல்லா மக்களும் கலந்துகொள்கிற நிகழ்ச்சியாக நடத்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய பண்டித நேரு அவர்களுக்கு முதன் முறையாக தலைநகரத்திலே சிலை வைக்கிற காரணத்தாலே அந்த மிகப் பெரிய அளவிலே பொது மக்கள் எல்லோரும் அந்த விழாவில் கலந்துக் கொள்கிற நிகழ்ச்சியாக அமைக்க வேண்டும் என்ற எண்ணத்திலேதான் சென்ற நவம்பர் 14 ஆம் தேதி, நேரு அவர்களின் பிறந்த நாள் அன்று வைப்பதாக இருந்த திருவுருவச் சிலை திறப்பு விழாவை, இந்த ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் தேதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, 1983 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் நாள், நேரு அவர்களின் பிறந்த நாள், குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிற திரு நாள் அன்று, சென்னையிலே தமிழக மக்களுடைய உணர்வுகளை, மறைந்த நமது மகத்தான தலைவருக்கு தெரிவிக்கின்ற வகையில், அரசு அந்த ஏற்பாடுகளை நடத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க வினா எண் 247 ஒத்திவைக்கப் பெறுகின்றது.

[1983 பிப்ரவரி 12

பச்சகுப்பம் அருகே ரெயில்வே பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம்.

*வினா எண். 248—திரு. இல. பலராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை—பெங்களூர் தேசீய நெடுஞ்சாலையில் ஆம்பூர் அருகே பச்சகுப்பம் என்னுமிடத்தில் ரெயில்பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது இப்பணி துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தேசிய நெடுஞ்சாலை 46, கி.மீ. 73/6-ல் பச்சகுப்பம் அருகே சாலை மேம்பாலம் அணுகு சாலைகளுடன் கட்டும் திட்டமானது மத்திய அரசால் 6-வது ஐந்தாண்டு திட்ட வேலைகளின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. 1982-83-ம் ஆண்டு திட்டத்தில் 2-வது கட்ட வேலையாக, நில உரிமை பெறும் பணிக்காக மத்திய அரசு ரூபாய் 21 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கியுள்ளது. 9-2-1983-ல் மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது.

(ஆ) இக் கேள்வி தற்போது எழாது.

எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலைகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 249—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஐப்பானில் உள்ளதுபோல எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலைகள் அமைப்பது குறித்து பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் மேற்படி நெடுஞ்சாலையை உபயோகப் படுத்தும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இந்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்படும் சென்னை மாற்று வழியை எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலையாக அறிவிக்குமாறு இந்திய அரசிடம் கேட்கப் பட்டிருக்கிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் எக்ஸ்பிரஸ் வண்டிகள் ஓடுகின்ற போக்குவரத்து ரோடுகளில் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக, போக்குவரத்து விதிகளுக்கு புறம்பாக நடக்கின்ற, பொதுமக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. அத்தோடு, எக்ஸ்பிரஸ் வண்டிகளின் டிரைவர்கள் போக்குவரத்து



1983 பிப்ரவரி 12]

விதிகளை மீறினால் அவர்களுடைய லைசன்ஸ் பறிக்கப்படுகிறது. அதேபோன்ற நடவடிக்கைகளை இங்கேயும் எடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. என்றாலும், அதுபோன்ற விதி முறைகள் இப்போது ஏற்கனவே நடைமுறையிலே இருந்தாலும், நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்திற்கு இடைஞ்சல் செய்கிற வகையில் சாலைகளில் குழி தோண்டி வரவேற்பு வளைவுகள் போன்றவைகள் அமைக்கின்ற காரணத்தால், ரோடுகளில் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன. அத்தோடு சிலர் ரோடு ஓரங்களில் உள்ள பிளாட் பாரங்களில் ஆக்கிரமிப்பு செய்வதால், ரோடிலே நடக்க முடியாமலும், ரோட்டை கடக்க முடியாமலும் சூழ்நிலை இருக்கின்றதே. ஆகவே அவை எல்லாம் அப்புறப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகளில் எங்கே வரவேற்பு வளைவுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அவைகள் எல்லாம் அரசியல் கட்சிகளினால்தான் ஏற்படுத்தப்படுகின்றன. இந்த மாமன்றத்தின் மூலமாக அவர்களை வேண்டிக் கொள்கிறேன், தயவுசெய்து இப்படிப்பட்ட சாலைகளில் எல்லாம் பழுது ஏற்படுகின்ற வகையிலே வளைவுகள் போடவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆக்கிரமிப்புச் செய்கிறவர்களை அகற்றுவதற்குரிய விதிமுறைகள் எல்லாம் நெடுஞ்சாலைத் துறையின் சட்டதிட்டங்களிலே இருக்கின்றன. ஆகவே, ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்.

(முற்பகல் 9-20)

திரு. எம். இன்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத்துறையின் சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் முதலிலே அப்படி அகற்றப்பட்ட பிறகு இரண்டு அல்லது மூன்று மாதங்கள் கழித்து மீண்டும் அவ்வாறு போடுகிறார்கள். ஆகவே அவ்வாறு ஆக்கிரமிப்புகள் செய்யப் படாமல் இருக்கின்ற வகையிலே நிரந்தரமான சட்டம் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு நிரந்தரமாகச் செய்யவேண்டும் என்றால் எல்லோருக்கும் இருக்க இடம், உண்ண உணவு, உடுக்க உடை கிடைத்துவிட்டால் கண்டிப்பாக ஆக்கிரமிப்புக்கள் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவரவர்களே, நெடுஞ்சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றி. ஆனால் அப்படிப்பட்ட வேலை தொடர்ந்து நடக்கவேண்டும், எல்லா இடங்களிலும் இருக்கவேண்டும், கட்சிப் பாகுபாடற்ற முறையில் இருக்கவேண்டும் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா? வரவேற்பு வளைவுகள் என்று நகர்ப்புறங்களில் உள்ள நெடுஞ் சாலைகளில் ஆண்டுக்கு பத்து, பன்னிரண்டு முறை அவ்வாறு அமைக்கப்படுகின்றன. எனவே நிரந்தரமாக அமைக்காமல் இருக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். கட்சிக்காரர்கள் அவ்வாறு வரவேற்பு வளைவுகள் போட்டுவிடுகிறார்கள். மேலும் அவர்கள் அதற்காக அனுமதியும் கூடப் பெறுவதில்லை. இரவோடு இரவாக அவ்வாறு செய்துவிடுகிறார்கள். ஆனால் அந்த வளைவுகளை எடுத்துச் செல்கின்ற நேரத்தில் சாலை பழுதாகி இருக்கின்றதா என்பதைப் பார்ப்பதில்லை. அதனால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. தற்போது நெடுஞ்சாலைத் துறையில் உள்ள சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. திரு. பூங்காவனம் அவர்களுக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய திரு. பழனிவேல் அவர்கள் நேற்று முன்தினம் என்னிடம் கேட்டார்கள், பழனியிலே உள்ள ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்படுவது பற்றி. அங்கே மருத்துவ மனைக்கு முன்னாலே ஏறத்தாழ நூற்றுக்கு மேற்பட்ட கடைகள் போடப்பட்டிருந்தன. அவற்றை அகற்றவேண்டும் என்று உடனடியாக உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. ஆனால் அவர் வந்து அகற்றவேண்டாம் என்று சொன்னார்கள். எனவே தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய நண்பருக்கு இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, நெடுஞ் சாலைத் துறைக்குச் சொந்தமான இடங்களில் இருக்கின்ற ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்குப் பக்கத்தில் நன்னிலத்தில் நெடுஞ் சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் ஒரு தனியார் நிரந் தரமான கட்டிடம் கட்டுகிறார்கள். நெடுஞ்சாலைத் துறையினைச் சேர்ந்தவர்கள் அது குறித்து நோட்டீஸ் கொடுத்தும் அது அப்புறப்படுத்தப்படவில்லை. மேலும் காவல் துறையிலேயும் அது குறித்து ரிப்போர்ட் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படி இருந்தும் நடவடிக்கை எடுக்கப்படாமல் அந்தக் கட்டிடம் தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றது. எனவே அதனைக் காலி செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். விவசாய சங்கத் தினைச் சேர்ந்தவர்கள் அனுமதி இல்லாமல் ஒட்டன்சத்திரத்தில் கட்டிடம் கட்டினார்கள். அதுகுறித்து நோட்டீஸ் கொடுக்கப் பட்டும் அவர்கள் அதை அகற்ற மறுத்தார்கள். கடைசியாக ஓர் இரவிலே அது அகற்றப்பட்டது என்பது நமக்குத் தெரியும். அதேபோன்ற நிலைமையினை இதற்கும் கூட அனுசரிக்கலாம்.

### பட்டினிச்சாவு தடுப்பு திட்டத்தின் மூலம் நிவாரணம் பெற்றோர் எண்ணிக்கை

* வினா எண் 250—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டினிச் சாவு தடுப்பு திட்டத்தின் மூலம் 1981 முடிய எத்தனை பேர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது?

(ஆ) இத்திட்டத்தின் மூலம் எத்தனை பேர் செங்கற்பட்டு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் பயன் அடைந்தார்கள்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 268 நபர்கள் (1981 டிசம்பர் முடிய) (ஆ) 12 நபர்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் நிவாரணம் பெற என்னென்ன நடைமுறைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு எவ்வளவு பேருக்கு நிவாரணம் வழங்கப்பட்டது!

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1980-ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து செயல் படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலமாக ஏழை எளியவர்கள், வாழ வழி ஏதுமின்றி பட்டினியால் மிகவும் வாடும் நிலைமை ஏற்பட்டால் அத்தகையோர் ஊர் நல அலுவலரை அணுகி ரூபாய் 100 உதவித் தொகையாகப் பெறலாம். அத்தகையோர் அவ்வாறு பணம் பெற்ற பின்னர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் வேலைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர். வயதானவர்களாக இருந்து முதியோர் உதவித்தொகை பெறத் தகுதி உடையவர்களாக இருந்தால் அவர்களுக்கு அந்த உதவித்தொகையினைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நல்ல முறையில் செயலாற்றப்படவேண்டும் என்றால் இதற்கு ஊர் நல அலுவலர்கள் மட்டுமல்லாமல் மேலும் தனியாக அலுவலர்களைப் போட்டு அவர்கள் மூலமாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்தத் திட்டத்தை ஊர்நல அலுவலர்தான் செய்து வருகின்றார்.

[1983 பிப்ரவரி 12

திரு. கு. ரமணி : இப்படிப்பட்டதொரு திட்டம், பட்டினிச் சாவு ஏற்பட்டே தீரும் என்றளவிற்கு பட்டினி கிடக்கிறவர்கள் இந்தமாதிரி நிதி பெற்றுக்கொள்ளமுடியும் என்று அநேகமாக பட்டினி கிடக்கக்கூடிய மக்களுக்குத் தெரியாது என்றுதான் நான் கருதுகிறேன். எனவே அதை அப்படிப்பட்டவர்களுக்குத் தெரியபடுத்துவதற்கான முறையில் ஒரு விளம்பரத்தை அல்லது எல்லா ஊர்களிலும், கிராமங்களிலும் உள்ள மக்களுக்கு, இப்படிப் பட்டினி கிடக்கக்கூடியவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு இந்த விஷயத்தைத் தெரியப்படுத்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? இது தெரியாமல் அவர்கள் கேட்கமுடியாது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இது ஏற்கனவே பல்வேறு நிலைகளில் விளம்பரப்படுத்தப்பட்டு அதன் மூலமாகத்தான் 268 பேர்கள் தமிழகம் முழுவதும் இந்த உதவித் தொகையைப் பெற்றுவருகிறார்கள். இதற்கு இன்னும் அதிகமாக விளம்பரம் கொடுப்பது என்றால் அது தவறாகக் கூட போய்விட முடியும். ஏனென்றால், 100 ரூபாய் எப்படியாவது கிடைக்கிறது என்பதற்காகக்கூட ஒரு சிலர் வேண்டுமென்றே இதற்கான மனுக்களை அனுப்பலாம். அப்படிப்பட்ட நிலைமை உண்டாகாமல் எல்லோருக்கும் வேலைவாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற நிலை ஏற்படத்தான் இப்போது இந்த அரசாங்கம் பாடுபட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : ஒருவர் ஊர்நல அலுவலரை அணுகி எனக்கு வேலை இல்லை, பட்டினி கிடக்கிறேன் என்று சொல்லி ஒருமுறை அந்த உதவியைப் பெற்ற பிறகு அவருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் அல்லது ஒய்வூதியம் வழங்க முயற்சிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒய்வூதியம் அல்லது வேலைவாய்ப்பு இல்லையென்றால் இரண்டாவது முறையாக ரூ 100 வழங்க அரசு ஏதாவது ஆணை பிறப்பித்துள்ளதா? ஊராட்சி ஒன்றியங்கள் ஒரு ஆண்டு இவ்வளவு நபர்களுக்குத்தான் வழங்கவேண்டும் என்று அலகேட் செய்யப்பட்டுள்ளதா? இதற்கு அரசாங்கம் தனியாக நிதி அளித்துள்ளதா அல்லது ஒன்றிய நிதியிலிருந்து அளிக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தப் பட்டினிச் சாவைத் தடுக்கவேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை யெல்லாம் கொண்டுவந்து நடைமுறைபடுத்திக்கொண்டிருக் கிறோம். இந்த நூறு ரூபாய் கொடுத்ததற்குப் பின்னால் அறுபது வயதுக்கு கீழ்ப்பட்டவர்களாக இருந்து வேலைக்குச் செல்ல முடிகிறவர்களாகயிருந்தால் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் அவர்கள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்படுகிறார் கள். ஆகவே மீண்டும் நூறு ரூபாய் அவர்களுக்கு கொடுக்கிற முறை இதுவரை நடமுறைப்படுத்தவில்லை. கேட்பதற்கும் ஆள் இல்லை, அதனால் நடைமுறைப்படுத்தவில்லை. தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலை கொடுக்கிற காரணத்தால் அந்நிலை எழுவதற்கில்லை.



1983 பிப்ரவரி 12]

திரு. தி. கா. நல்லப்பன் : இப்படிப்பட்ட பட்டினிச்சாவுகளைத் தடுக்கும் திட்டம் நல்ல திட்டம்தான். ஆனால் பட்டினியால் சாகிறார்கள் என்பதை எந்த நிலையில் அறிந்து கொள்வது? இரண்டாவதாக. ஊர்நல அலுவலரிடம் அவர்கள் விண்ணப்பிக்கிறபோது அனாதையாக இருந்து, வயோதியராக இருந்து விண்ணப்பித்தால் அவர்களுக்குக் கொடுப்பது சரி, ஆண், பெண் இருந்தும் நிராகரிக்கப்பட்டவர்களும் இந்த திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆதரவற்றவர்களாக இருக்கவேண்டும், வயோதிகராக இருக்கவேண்டும், அவர்கள் உழைக்க முடியாதவர்களாகவும் இருக்கவேண்டும். உழைக்கிறவர் களாக இருந்தாலும் கூட அவர்களுக்கு போதுமான அளவிற்கு, தேவைப்படுகிற அளவிற்கு சாப்பாடு கிடைக்கமுடியாததொரு நிலை இருந்தால் இவைகள் எல்லாம் இந்தப் பட்டினிச் சாவு தடுப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம். குறிப்பாக அவர் களுக்கு குழந்தைகுட்டிகள் எல்லாம் இருந்து பெற்றோர்கள் அல்லது அவர்களுக்கு ஆதரவாளர்கள் எல்லாம் இருந்து நிராகரித்துவிட்டால் அதற்கு சட்டம் இருக்கிறது, வழக்கு மன்றம் இருக்கிறது, அவர்கள் மூலமாக நடவடிக்கைகள் எடுக்கலாம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : ஒருவர் பட்டினியால் சாக யிருக்கிறபோது அவர் இந்த உதவித் தொகை பெறவேண்டு மென்றால் அவர் பட்டினியால் சாக இருக்கிறார் என்பதற்கு யார் அத்தாட்சி கொடுப்பது? எந்த அடிப்படையில் இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இதெல்லாம் மனிதாபிமான அடிப்படையில்தான் செய்யவேண்டும். பட்டினி யால் சாகப்போகிறார் என்பது நம் கண்களுக்கே தெரியும். இதற்காக தனியாக ஒரு மருத்துவரிடம் அல்லது வேறு ஒருவரிடம் சென்று இதற்காக நற்சான்றிதழ் பெறத் தேவை இல்லை. இவைகளையெல்லாம் நாம் மனிதாபிமான அடிப்படையில் செய்ய வேண்டும்.

### எல்லா கிராமங்களிலும் கழிப்பிடங்கள் கட்டும் திட்டம்.

* வினா எண் 251—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு இரண்டு ஆண்டு காலத்திற்குள் எல்லா கிராமங்களிலும் கழிவறைகளை கட்டுவதென தீவிர திட்டத்தை செயல்படுத்த உள்ளதா?

இருந்தால்தானே 24 மணி நேரமும் தண்ணீர் வசதி செய்து கொடுக்கமுடியும்? ஆகவே ஏன் வார்தா கக்கூசைக் கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யக் கூடாது? மக்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே. வார்தா கக்கூஸ் என்றால் எனக்கும் தெரியும். நானும் காந்தி கிராமத்தில் படித்தவன் தான். வார்தா கக்கூஸ் எப்படி அமைத்துக் கொடுத்தார்கள் என்பது தெரியும். இதுபோன்ற கழிப்பறைகள் நவீன கழிப்பறைகளாக இருக்க முடியாது. சுகாதாரக் கேடுகள் வந்துவிடுகின்றன. ஆகவேதான் அவைகளை மாற்றி, நவீன கழிப்பறைகளாக, நாகரிகத்திற்கு ஏற்ற முறையில் அவைகளையெல்லாம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. பொ. உந்திராயதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம கழிவறைகள் கட்டுவது சம்பந்தமாக, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும், அதற்கான பொருள்கள் வந்து விட்டன. அவைகளைக் கட்டிய பிறகு. அவைகளை எப்படிப் பராமரிப்பது என்பதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்று நினைக்கின்றேன். தற்போது பேரூராட்சி, முனிசிபாலிடி மூலமாக இருக்கக்கூடிய கழிவறைகள் எல்லாம், உள்ளே போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த அளவுக்கு அவைகள் மோசமாக இருக்கின்றன. ஆனால் தனியார்கள் கட்டுகின்ற கழிப்பறைகள் சுத்தமாக இருக்கின்றன. புதிதாக கிராமங்களிலே கட்டுவதுபோல். நகரங்களிலே கட்டுவதற்கு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு கிராமத்திலே டேஸ்ட் இருக்குமென்று நினைத்தேன். ஆனால், நகரத்திற்கு வந்து விட்டீர்கள். மூலக்கேள்வி கிராமங்களைப் பற்றியது. எனவே, இதற்கும், அதற்கும் சம்பந்தமில்லை. அடுத்த கேள்வி.

## அரசு மருத்துவர்களுக்கு வழங்கப்படும் 'Non-practising Allowance'.

வினா 252—திரு. செ. செம்மலை : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு (Doctors) Non-practising Allowances வழங்கப்பட்டுவருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; தனியாக தொழில் செய்யக்கூடாதென்று தடை செய்யப்பட்ட அரசு மருத்துவர்களுக்கு மட்டும் 'Non-Practising Allowance' வழங்கங்கப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் துறையில் பணிபுரியும் டாக்டர்களுக்கு இந்த 'நான் பிராக்டீசிங் அலவன்ஸ்' வழங்கப்பட்டு வருகிறது. இப்போது கொடுக்கப்படும் 'நான்-பிரிக்டிசிங் அலவன்ஸ்'ன் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு எவ்வளவு செலவு ஆகிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தேர்டு பே கமிஷன்'—னின் ரெக்கமன்டேஷன் அடிப்படையில் General line - District Family Welfare, Maternity and Child Health Officers in the grade of Civil Surgeons அவர்களுக்கு தரப்படுகிறது. ஈ. எஸ். ஐ. டாக்டர்களுக்கு தரப்படுகிறது. Principal Training Centres, Madras and Salem. Family Welfare Department அவர்களுக்கு தரப்படுகிறது. Asst. Surgeons in the selection category அவர்களுக்கு தரப்படுகிறது. Civil Surgeons holding sanctioned posts of R.M.O. அவர்களுக்குத் தரப்படுகிறது Asst. Directors, D.M.S., Deputy Directors இவர்களுக்கு தரப்படுகிறது. இவர்களுக்கு எல்லாம் ஆண்டுக்கு 350 ரூபாய் தரப்படுகிறது. D.M.S. F.W. and Deputy Director இவர்களுக்கு 450 ரூபாய் மாதத்திற்கு தரப்படுகிறது. ஒட்டுமொத்தமாக இதற்கு செலவு Total amount of expenditure per year teaching line பொறுத்தவரையில் 13, 36, 980 ரூபாய். General line, non-teaching பொறுத்தவரையில் 2, 29, 800 ரூபாய். Primary Health Centres பொறுத்தவரையில் 18, 94, 500 ரூபாய் 'நான் பிரிக்டிசிங் அலவன்ஸாக, செலவழிக்கப்படுகிறது.

திரு. செ. செம்மலை ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையில் பணிபுரியும் சில டாக்டர்கள் தனியாக நர்சிங்ஹோம் நடத்துகிறார்கள். அவர்கள் அரசு மருத்துவமனைக்கு வருகிற நோயாளிகளை தங்கள் சொந்த நர்சிங்ஹோம்களுக்கு அழைத்துச்சென்று சிகிச்சை அளித்து பணம் சம்பாதிக்கிறார்கள் என்ற புகார் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா? அப்படி இருப்பின் அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக எல்லா மருத்துவர்களையும் சொல்ல முடியாது. சிலர் தனிப்பட்ட முறையில் அப்படி செய்யப்படுவதாக புகார் அரசுக்கு வந்திருக்கிறது. அரசு மருத்துவ மனைக்கு வருகின்ற நோயாளிகளை தங்கள் சொந்த மருத்துவ மனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சை அளித்து பணம் பெறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வந்தவுடனே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். நான் இந்த மன்றத்தின் மூலமாக அவர்களை எச்சரிப்பதற்காக இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு அவர்கள் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை பொறுப்பை ஏற்று இருந்த போது ஒரு அறிவிப்பை செய்தார்கள். 'நான்-பிராக்டிசிங் அலவன்ஸ்' அதிகமாக கொடுத்து தனியாக தொழில் செய்வதை தடுக்கக்

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்

(ஆ) மற்றும் (இ) : தமிழகத்திலுள்ள 16,000 வருவாய் கிராமங்களில் ஆண்களுக்கும் தாய்மார்களுக்கும் பயன்படும் படியாக கழிப்பிடங்கள் ஆண்கள் பகுதியில் இரு மீங்கான் கழிப்பிருக்கைகளும், பெண்கள் பகுதியில் நான்கு கழிப்பிருக்கைகளும், இரு பகுதிக்குமிடையில் குறுக்கே தடுப்புச் சுவரும், சிமெண்ட் காண்கிரீட் கூரையும் அமைக்க ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தை இரண்டு ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் 8,000 கிராமங்கள் வீதம் நிறைவேற்றப்படவுள்ளது. இதற்கு ஆகும் செலவினம் ரூபாய் சுமார் 24 கோடியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-30)

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 16,000 கிராமங்களில், 2 ஆண்டுகளில் இந்த கழிப்பறைகள் கட்டி விட்டால், கிராமப் பஞ்சாயத்துக்களில் அந்தக் கழிப்பறைகளை சுத்தம் செய்யும் பொறுப்பை யார் ஏற்பது? அப்படி பஞ்சாயத்து கள் தாமே அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னால், ஊழியர்களை நியமிக்க இப்போதே அரசாங்கம் அதற்கு ஏதாவது வழிவகைகள் செய்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, அதற்காக பகுதிநேர அலுவலர்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டு மென்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். ஏ. பூங்காவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவறைகள் கட்டுகின்றபோது குடிநீர் மிக நெருக் கடியாக உள்ள இந்த நேரத்தில் அந்த கழிப்பறைகள் கட்டுகின்ற போது ஒவ்வொரு இடத்திலும் குடிநீர் வசதி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, 24 மணி நேரமும் தண்ணீர் வசதி கொண்ட கழிவறைகளை கட்டிக்கொண்டு வருகிறோம்.

**திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் ;** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கழிவறைகளை ஊராட்சி ஒன்றியங்கள் பராமரிப்பதற்கு வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. அதற்காக மாற்று ஏற்பாடு ஏதாவது அரசு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, பொது நிதியிலிருந்து தான் இவைகளையெல்லாம் பராமரிக்க வேண்டும். நிதி இல்லையென்று சொன்னால் வேஸ் அண்டு மீன்ஸ் அட்வான்ஸ் நிதியிலிருந்து அரசாங்கத்திடமிருந்து பெறலாம்.





**திரு. கு. பா. பழனியப்பன் :** தலைவர் அவர்களே 1956 வது ஆண்டு வாக்கில் மத்திய அரசின் திட்டமாக கிராமப்புற பகுதிகளில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் 4, 5 கிராமங்களில் மாடல் வில்லேஜ் களில் கழிப்பிடங்கள் கட்டப்பட்டன. ஆனால் அவைகள் நாளடைவில் தண்ணீர் இல்லாமலோ அல்லது அங்குள்ள ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படாததினாலோ அவைகள் சரிவர பராமரிக் கப்படாமல் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இன்றைக்கு அவைகள் எல்லாம் பாழாகி விட்டது. மக்களுக்கு இன்றைக்கு அதனால் பயனில்லை, அதைப்போலவே இப்போதும் ஆகிவிடும் என்பதை அரசு உணருகிறதா? இன்னும் சொல்லப்போனால், இன்றைக்கு குடிநீர் தொடர்பு மின்கள் மோட்டார் பராமரிக்க மாதம் 50 ரூபாய் அளவில் பெறும் அந்த ஊழியர்களுக்கு சரியாக சம்பளம் கொடுக்கப்படவில்லை. அவ்வாறு சம்பளம் கொடுக்கப்படாததினால் பல இடங்களில் அவைகள் சரிவர பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அப்படிப் பட்ட நிலைமையை சீர்தூக்கிப் பார்த்து ஊழியர்களை நியமனம் செய்து அவர்களுக்கு உறுதியாக சம்பளம் கொடுக்க அரசு ஏதாவது உத்திரவாதம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, அப்போது கட்டப்பட்ட கழிப்பிடங்கள் 'டிரை' லெட்ரின்ஸ், இப்போது கட்டப்பட இருக்கின்ற கழிப்பிடங்கள் நவீன கழிப் பிடங்களாகும். அதற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது இதற்காக தனி ஏற்பாடுகளை நாங்கள் செய்திருக்கிறோம்.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்துக்கும் ஒவ்வொரு கக்கூஸ் கட்டப்படுவதாகச் சொல்லப்படுகிறது ஒரு ரெவின்யூ கிராமத்திலே பல கிராமங்கள் இருக்கின்றன. அதிகமான ஜனத்தொகை கொண்ட கிராமங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒன்று என்றிருப்பதற்குப் பதிலாக மேலும் கூடுதலாகக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, இப்போது ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் எது முக்கியமான கிராமமாக இருக்கிறதோ, எந்தக் கிராமத்தில் அதிகமான ஜனத் தொகை இருக்கிறதோ அந்தக் கிராமத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இந்த கழிப்பறைகளைக் கட்டிக் கொண்டிருக் கிறார்கள். எல்லாக் கிராமங்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் 40,000-க்கு மேலாக கிராமங்கள் தமிழகத்திலே இருக்கின்றன. 4 ,000க்கும் மேலாக உள்ள கிராமங்களில் கழிப்பறைகளைக் கட்டவேண்டும் என்று சொன்னால் அதைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தான் கட்டவேண்டும். ஆகவே இந்த நிலை நீடிக்கும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலிலே 24 மணி நேரமும் தண்ணீர் கொடுக்கக்கூடிய சூழ்நிலையில் கழிப்பறைகள் கட்டப்படுகின்றன என்று சொன்னார்கள். கிணற்றிலே தண்ணீர்

கூடிய அளவுக்கு ஒரு ஏற்பாட்டை செய்வதாகச் சொன்னார்கள். அதுபற்றிய நடவடிக்கை எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மாநிலங்களில் முழுக்க முழுக்க நான்-பிராக்டீசிங் அலவன்ஸ் கொடுத்து, தனியாக தொழில் செய்வதை தடுக்கக்கூடிய அளவுக்கு கடுமையான உத்தரவு போட்டார்கள். U. P. Government Doctors Restriction of Private Practice Rules, 1978 என்று போட்டார்கள். அதே மாதிரி பீகார் மாநிலத்தில் செய்தார்கள். ஆனால் இன்றைக்கு அது கைவிடப்பட்டது. ஏன் என்றால் இப்போது இருக்கக்கூடிய அந்த 'நான்-பிராக்டீஸ் அலவன்ஸ்' மூலம் மட்டுமே நான் சொன்ன மாதிரி கிட்டத்தட்ட 34 லட்சம் ரூபாய் செலவாகிறது. இப்போது இருக்கக்கூடிய ரெஸ்டிக்டட் அளவுக்கு நான்-பிராக்டீஸ் அலவன்ஸ்' கொடுப்பதன் மூலமாக ஏறத்தாழ 34 லட்ச ரூபாய் செலவு செய்து கொண்டிருக்கிறோம். முழுமையாக 'நான்-பிராக்டீஸ் அலவன்ஸ்' கொடுக்கவேண்டும் என்றால் இன்னும் அதிகமாக செலவு ஆகும். அந்த அளவுக்கு நாம் நிதி நிலையை தயார் செய்து கொள்ளவேண்டும்.

**திரு. ஆர். டி. கோபாலன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஷ்ட ரோகப் பிரிவில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு அரசு ஏதேனும் விஷேச சலுகை கொடுத்துள்ளதா? ஆம் என்றால் எவ்வளவு கொடுக்கிறது. அதை உயர்த்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாதத்திற்கு 200 ரூபாய் அந்தப் பிரிவிலே உள்ளவர்களுக்கு நாம் லெப்ரஸி அலவன்ஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இங்கே இந்தக் கேள்வியைக் கேட்பதன் மூலமாக ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள் தொழு நோய் ஒழிப்புப் பிரிவிலே அந்த மருத்துவர்களுக்கு இப்போது அளிக்கப்படுகிற 200 ரூபாய் என்பதை உயர்த்துவதற்கு உத்தேசம் உண்டா என்று கேட்பதன் மூலமாக கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தொழுநோய் டாக்டர்களுக்கு அதை உயர்த்தலாமா என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட நாம் நிதிநிலைமையைப் பொறுத்து நாம் முடிவு செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம்.

**செவிலியர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் வழங்கப்படும் உதவித்தொகை**

*வினா எண். 253—**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பயிற்சி காலத்தில் செவிலியர்களுக்கு உதவித்தொகை எவ்வளவு கொடுக்கப்படுகிறது?



(ஆ) இதை உயர்த்தித்தரக்கோரி அவர்களிடமிருந்து விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) 3½ ஆண்டு செவிலியர் பயிற்சி மற்றும் மகப்பேறு பயிற்சி மாணவிகளுக்குப் பின்வருமாறு மாதம் ஒன்றுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது:—

| | | | |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | .. | .. | ரூ. 115 |
| இரண்டாம் ஆண்டு | .. | .. | ரூ. 120 |
| மூன்றாம் ஆண்டு | .. | .. | ரூ. 125 |
| நான்காம் ஆண்டு | .. | .. | ரூ. 130 |

(ஆறு மாதங்களுக்கு பின்னர் பயிற்சி முடிந்துவிடுகிறது)

(ஆ) இல்லை.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, பயிற்சி செவிலியர்களைப் பொறுத்தவரையில் 'தே ஆர் தி ஓர்ஸ்ட் லாட்' என்று சொல்கிறமுறையில் அவர்களுடைய ஹாஸ்டலைப் பொறுத்த வரைக்கும் நான் பார்த்தவரைக்கும் மதுரையிலே என்ன கண்டிஷன்கள் அவய்லபிளோ அந்த நிலைமைகள்தான் மாநிலம் பூராவும் இருக்கிறது. அங்கே நான் பார்த்தேன், மிகவும் கெட்டுப் போன தண்ணீர் கொடுக்கப்படுகிறது, சுகாதாரமற்ற நிலைமை இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதால் — ஒரே அறையிலே இரண்டு பேர்கள் போடலாம், ஆனால் பத்துப் பேர்கள் இருக்கின்ற நிலைமை இருக்கிறது — அதனாலே பீவர் வருகிறது. நான் என்னுடைய ஒய்ஃபை அட்மிட் பண்ணச் சென்றபோது பார்த்தேன். ஒரு பேட்ச் முதலிலே பீவர் என்று வந்தார்கள், இன்னொரு பேட்ச் பீவர் என்று வருகிறார்கள். இப்படி மோசமான நிலை இருக்கிறது. அங்கே அவர்களைக் கவனிக்க யாரும் இல்லை. அவர்களுடைய பேரன்ட்ஸ்கள் எல்லாம் வெளியிலே இருக்கிறார்கள் என்பதால் அவர்களுக்கு கஞ்சி கொடுக்கக்கூட வழியில்லை. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, அவர்களுடைய விடுதிகளின் கண்டிஷன்களை எக்ஸாமின் பண்ணுவதற்காக தனியாக ஒரு கமிட்டியை அமைத்து அந்த குறைகளை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுக்கு நான் நன்றி செலுத்த வேண்டும். மிக முக்கியமான கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள், அதற்கு ஒரு நல்ல பதிலும் என்னிடத்திலே இருக்கிறது. அதற்காக ஒரு கமிட்டியைப்போட்டு நாம் ஆராய்வது என்றால் நிறைய நாட்களாகும். ஆகவே அவர்களுக்கு 45 லட்சம் ரூபாயில் மதுரையிலே ஒரு டிரெயினுங் சென்டர் ஏற்படுத்துவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் ஒரு தகவலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே மாதிரியாக கோயம்புத்தூரிலேயும் 50 லட்ச ரூபாயிலே செய்ய இருக்கிறோம். மொத்தம் ஒரு கோடி ரூபாய் செலவிலே செவிலியர் பயிற்சி மாணவிகளுக்கு நல்ல முறையில் விடுதிகள் கட்டுவதற்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசாங்கம் ஆணையிட்டிருக்கிறது என்பதை நல்ல செய்தியாக நான் தர கடமைப்பட்டிருக்கிறேன்.

[1983 பிப்ரவரி 12

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்கள் இந்த செவிலியர் பயிற்சிக்கு உதவித் தொகை எந்த ஆண்டில் உயர்த்தப்பட்டது ? இதனால் இந்தப் பயிற்சிக்காலம் முழுவதற்கும் அரசுக்கு ஏற்படும் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பட்ஜெட் பார் த்ரீ இயர்ஸ் பார் ஸ்டைபண்ட் ஒன்லி—1980–81 ஆம் ஆண்டில் 16,40,000 ரூபாய் ; 1981–82 இல் 16,85,000 ; 1982–83 ஆம் ஆண்டில் 17,57,000 ரூபாய்.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, இந்தத் உதவித் தொகையைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த உதவித் தொகையை வைத்து அவர்கள் சாப்பிட வேண்டி யிருக்கிற காரணத்தினால் அவர்களுக்கு நல்ல போஷாக்குள்ள உணவு கொடுக்கப்படவில்லை என்ற புகார்கள் வருகின்றன. அந்த உதவித் தொகை உணவுக்காகவும் சேர்த்துக் கொடுக்கப்படுகிறதா? அல்லது அது தனியாகத் தரப்படுகிறதா ? அந்த பயிற்சிபெறு கின்ற செவிலியர்கள் ஹாஸ்டலிலே தங்கிக் கொண்டு இருக் கிறார்கள். உணவு போடப்படுகிறது. உணவுக் கான தொகை அதிலே சேர்க்கப்படுகிறதா ? அவர்களுக்கு சரியான போஷாக் குள்ள உணவு அளிக்கப்படவில்லை என்ற புகார்கள் இருக்கின்றன. அவர்களுக்கு உணவுக்காக தனியாகக்கொடுக்கப்படுகிறதா அல் லது அதிலேயே சேர்த்துக்கொள்ளப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக 'சப்சிடைஸ்ட் புட்' கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் செலவு முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். அது கொஞ்சம் கஷ்டமான விஷயம். ஒரு சின்ன திருத்தத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். நான் ஒரு கோடி ரூபாய் செலவு என்று சொன்னது — மாண்பு மிகு உமாநாத் அவர்களுக்கு சொன்னது — அது பயிற்சியாளர் களுக்கும், நர்சுகளுக்கும், சேர்ந்து கொடுக்கக்கூடிய ஒரு கட்ட ணம். அதிலே எல்லோருக்கும் வசதி இருக்கிற அளவிற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த தொகையைப் பொறுத்த வரையில் சப்சிடைஸ்ட் புட் நாம் கொடுத்துக் கொண்டிருக் கிறோம். முழுமையாக அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டு மென்றால் அது கடினமாக இருக்கும். ஏறத்தாழ ரூ. 17 லட் சத்து 55 ஆயிரம் ஸ்டைபண்டாக கொடுத்துக்கொண்டிருக் கிறோம். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நிறைய சௌகரியம் செய்ய வேண்டுமென்பதுதான் அதனுடைய எண்ணமாக இருக்கிறது. நான் கூட எதிர்க்கட்சியிலே இருக்கிற போது நிறைய கேள்விகளை கேட்டிருக்கிறேன். ஆகவே இப்போது இருக்கிற நிலைமை இதில் படிப்படியாக கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.



1983 பிப்ரவரி 12]

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கிறபோது, உதாரணமாக தஞ்சாவூரில் 70 பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்றால் 65 பேர்களுக்குத் தான் ஸ்டைபண்ட் ; 5 பேர்களுக்கு நான்—ஸ்டைபண்ட்டரி என்று சொல்லி தொடர்ந்து பணம் கட்டவேண்டியிருக்கிறது என்பது உண்மைதானா ? அதை மாற்றி தேர்ந்தெடுக்கப்படுகிற அனைவருக்கும் ஸ்டைபெண்ட் கொடுக்க உதவி செய்வார்களா ? உதவித் தொகை நான்காவது ஆண்டு ரூ. 130 என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது இருக்கிற விலைவாசி நிலைமையை கருதி அதை அரசாங்கம் உயர்த்திக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது கேள்விக்கு நான் ஏற்கனவே பதில் சொல்லி விட்டேன். முதல் கேள்வியைப் பொறுத்தவரையில் 740 பேர்களை நாம் தேர்ந்தெடுக்கிறோம். 50 பேர்கள் தான் நான்-ஸ்டைபெண்டரி ; 690 ஸ்டைபெண்டரி பிளஸ் 50 நான்-ஸ்டைபெண்டரி—டோட்டல் 740 ; ஆகவே இந்த 740-ல் 50 பேர்கள் நான்-ஸ்டைபெண்டரியாக இருக்கிறார்கள். அதிலும் 10 பேர்கள் அரசினர் பொது மருத்துவமனை சென்னை, 5 பேர்கள் கஸ்தூரிபா அரசினர் மருத்துவமனை, சென்னை ; தஞ்சாவூர் மெடிகல் காலேஜில் நான்-ஸ்டைபெண்டரி இருப்பதாக எனக்கு கொடுத்திருக்கிற தகவலில் இல்லை. ஆகவே 50 பேர்கள் அவர்களாகவே விரும்பி வருகிறார்கள். இந்த இரண்டு ஆண்டுகளுக்கிடையில் 350 ஆக இருந்ததை 740 ஆக உயர்த்தி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவித் தொகை கொடுப்பதைப் பற்றி விளக்கமாகவே சொன்னார்கள். முதல் ஆண்டிற்கு ரூ. 110 இரண்டாம் ஆண்டிற்கு ரூ. 120 மூன்றாம் ஆண்டிற்கு ரூ. 125 ; நான்காம் ஆண்டிற்கு ரூ. 130; என்று சொன்னார்கள். இப்போது உள்ள சூழ்நிலையில் முதல் ஆண்டு ரூ. 125 என்றும். கடைசி ஆண்டு ரூ. 150 என்றும் உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் ஆண்டு ரூ. 110 என்று சொன்னார்கள் ; அதில் சிறு கரெக்ஷன் ; முதல் ஆண்டிற்கு ரூ. 115 ; ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் உயர்த்தவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். உயர்த்த வேண்டுமென்று தான் அரசாங்கத்திற்கும் ஆசை ; அத்தனை பேருக்கும் பிரச்னை தெரிந்திருக்கிறது ; நிதி நிலைமையை பொறுத்து பிரச்னையை ஆராயலாம்.

[1983 பிப்ரவரி 12

**அரசினர் சார்பில் ஓட்டுநர் பயிற்சி அளிக்கும் திட்டம்.**

*வினா எண். 254. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஓட்டுனர் உரிமம் பெறுபவர்களுக்கு பயிற்சி அளிக்க அரசே ஓட்டுனர் பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஆம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்து அதிகாரிகள் என்னதான் கடுமையாக விதிகளை வைத்திருந்தாலும் தனியாக ஓட்டுநர் பயிற்சி நிலையங்களில் அவசர அவசரமாக பயிற்சி கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே தனியார் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை தடைசெய்து அரசே ஏற்று நடத்த முன் வருமா ? எத்தனை ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டந்தோறும் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளிகளை நிறுவவேண்டுமென்பது அரசினுடைய கொள்கை. உடனடியாக ஒரே ஆண்டில் செய்யமுடியாது என்பதால் முதலில் ஐந்து இடங்களில் செய்து முடித்துவிட்டு அதற்கு பின் அடுத்த ஆண்டில் எல்லா இடங்களிலும் ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்கு பின் தான் தனியார் பயிற்சிப் பள்ளிகளை தடை செய்வதைப்பற்றிய பிரச்னையை யோசிக்க வேண்டும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பயிற்சி நிலையங்கள் தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன ? மாவட்ட அளவில் ஆரம்பிப்பதற்கு முன்னால் தற்போது இருக்கிற பயிற்சி நிலையங்களை விரிவு படுத்துவதற்கு செயல்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தற்போது ஒரே ஒரு இடத்தில்—கும்மிடிப்பூண்டி என்ற இடத்தில் மட்டும் அதை நடத்தி வருகிறோம். அது போக்கு வரத்துக் கழகத்தின் சார்பாக, போக்குவரத்துக் கழகங்களுடைய நிதி உதவியோடு நடந்து வருகிறது. நாம் இப்பொழுது, அரசினுடைய சார்பாக ஒவ்வொரு மாவட்டத்திலேயும் செயல்படுத்த வேண்டுமென்று முயற்சி எடுக்கிறோம். எனவே, அப்படிப்பட்ட முயற்சி வெற்றி பெறுகின்ற நேரத்திலேதான் தனியார்களைப் பற்றி சிந்தித்து, அவர்களை நீக்கிவிட்டு முழுமையாக அரசினுடைய சார்பாக அவைகளைச் செயல்படுத்த முடியும்.



1983 பிப்ரவரி 12]

திரு. நி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை அரசு நிர்வாகத்திலுள்ள எல்லா போக்குவரத்துக் கழகங்களிலும் துவக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : போக்குவரத்து கழகங்களில் அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களுடைய தொழிலாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டுமென்பதற்காக இப்பொழுது தனியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது நாம் அமைப்பது, பொதுவாக, போக்குவரத்துக் கழகங்களுக்கும், தனியார்களுக்கும் சேர்ந்து அந்த ஓட்டுநர்கள் பயன்படவேண்டுமென்ற முறையிலேதான் நாம் செய்கிறோம். எனவே, அந்த வகையிலே செய்யக்கூடியது, அரசாங்கம்தான் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செய்யும், போக்குவரத்துக் கழகங்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாது.

**நட்டத்தில் செயல்பட்டுவரும் போக்குவரத்துக் கழகங்கள்.**

வினா எண் 255—திரு. கே. நாராயணசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்கள் இழப்பில் செயல்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் கழகங்கள் வாரியாக இழப்பு தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 1981-82ஆம் ஆண்டு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகமும், சேரன் போக்குவரத்துக் கழகமும் இலாபத்தில் இயங்கின. இதர போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தில் இயங்கின.

(ஆ) இழப்பில் இயங்கிய போக்குவரத்துக் கழகங்களின் இழப்பு விவரம் பின்வருமாறு :—

| போக்குவரத்துக் கழகங்கள். | இழப்புத் தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்) .. | 768.91 |
| பல்லவன் போக்குவரத்துக் கழகம் (புறநகர்) .. | 171.40 |
| பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் .. | 6.92 |
| சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம் .. | 146.34 |
| அண்ணா போக்குவரத்துக் கழகம் .. | 101.53 |
| தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் .. | 142.36 |
| திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் .. .. | 276.93 |

மன்றத்திலே சில ரூட்டுகளை இத்தனாம் தேதிக்குள் முடித்து அறிவிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதை முடிக்க வேண்டிய நிலைமைக்கு நிர்ப்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர இதை விட்டு விடத் தயாராக இல்லை. எந்தக் காரணத்தைக் கொண்டும் போக்குவரத்துக் கழக பேருந்துகளை தனியாருக்கு விட்டு விடுவதற்கு தயாராக இல்லை.

திரு. பி. வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு போக்குவரத்துக் கழகங்கள் இழப்பில் உள்ளனவா அல்லது இலாபத்தில் உள்ளனவா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1982-83 ஆம் ஆண்டில், இரண்டு போக்குவரத்துக் கழகங்களைத் தவிர மற்ற போக்குவரத்துக் கழகங்கள் இலாபத்தில் வரும் என்று எதிர்பார்க்கிறோம். நல்ல இலாபத்திலே வரலாம்.

திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும் பொழுது டீசல் விலை ஏறி விட்டது, அதனால் தான் நஷ்டம் என்று தெரிவித்தார்கள். டீசல் விலை ஏறுகின்ற நேரத்தில் கட்டணங்களும் உயர்த்தப்பட்டிருக்கின்றன என்பது ஒன்று. அதற்கடுத்தபடியாக, நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும், தனியார் போக்குவரத்துக் கழகங்களுக்கும் இடையே டைமிங்ஸ் சரியாக இல்லாமல் இருக்கிறது. இதையெல்லாம் சரிப்படுத்தினால் நல்ல முறையில் அவை இயங்கும். ஆகவே தான் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்குகொள்ள வேண்டுமென்று நேற்று ஒரு வினாவின்பொழுது தெரிவித்தோம். நஷ்டம் ஏற்பட்டிருப்பது செயற்கைக் காரணங்களால் தானே தவிர இயற்கைக் காரணங்களால் அல்ல. அப்படிப்பட்ட நஷ்டம் வராமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். டீசல் விலை உயர்ந்த உடனேயே நம்மால் கட்டணத்தை உயர்த்த முடியவில்லை. கொஞ்சம் காலம் கழித்துத்தான் உயர்த்தியிருக்கிறோம். அப்பொழுதும் கூட டீசல் விலை எவ்வளவு உயர்ந்து இருக்கிறதோ அதை ஈடுக்கட்டும் அளவிற்கு உயர்த்தவில்லை; ஓரளவுக்குத்தான் உயர்த்தியிருக்கிறோம் மக்களின் சிரமங்களைக் கருதி. ஆகவே அவைகளை எல்லாம் காரணம் என்று சொன்னாலும், அந்த அளவிற்கு உயர்த்தப்படாமல்தான் இருந்தது. டைமிங்க்ஸ் பற்றிச் சொன்னார்கள். சில இடங்களில் அப்படிப்பட்ட பிரச்னை இருப்பதை ஒப்புக்கொள்கிறேன். அவைகளை எல்லாம் கண்காணித்து மேம்படுத்துவதற்காக இப்பொழுது நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.



திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, டீசல் விலை உயர்வும், அதே நேரத்திலே மெஷினரி போன்ற உதிரி சாமான்களின் விலை உயர்வும் காரணம் என்று சொல்லும் பொழுது, டீசலின் விலை உயர்ந்தபொழுது, மத்திய அரசு வரி விதிக்கும் பொழுது மாநில அரசின் கருத்துரையைக் கேட்க வேண்டுமென்று மத்திய அரசைத் தமிழக அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே, டீசல் விலையை உயர்த்தக் கூடாது என்று நாம் கேட்டிருந்தோம். அப்படி உயர்த்தினால் போக்குவரத்திற்கு நாம் செலவழிக்கும் இந்த டீசலுக்கு அவர்கள் சப்சிடி கொடுக்க வேண்டுமென்றுக்கூடக் கேட்டோம். ஆனால் அதை அவர்கள் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது நஷ்டம் ஏற்பட்டதற்குக் காரணமாகப் பல்வேறு விஷயங்களைக் குறிப்பிட்ட நேரத்தில், போனஸைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். அப்படி என்றால் சென்ற வருஷத்திலே கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலும், சேரன் போக்குவரத்துக் கழகத்திலும் இலாபம் ஏற்பட்டதற்குப் பிறகும் கூட அங்கேயுள்ள தொழிலாளர்களுக்கு போனஸ் முந்தைய வருஷத்தில் கொடுக்கப்பட்டதை விடக் கம்மியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு கொடுத்த 20 சதவீதம் என்ற அந்த அளவிற்கு ஏன் கொடுக்கப்படவில்லை என்று கேட்டிருக்கிறார்கள். இலாபம் வந்திருக்கிறதே தவிர, 20 சதவீதம் கொடுக்கின்ற அளவிற்கு வரவில்லை. ஆனாலும், இலாபம் வந்ததற்கும் மேலாக நாம் போனஸ் கொடுத்து விட்டோம்.

சென்னை நகரில் ஓடிக் கொண்டிருக்கும் மூன்று சக்கரங்களை கொண்ட மினி டாக்சிகள்.

*வினா எண் 256—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூன்று சக்கரங்களைக் கொண்ட மினி டாக்சிகள் சென்னை நகரில் எத்தனை ஓடுகின்றன?

(ஆ) அத்தகைய டாக்சிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) 30.

(ஆ) இல்லை.

கட்டபொம்மன், சேரன், போக்குவரத்துக் கழகங்கள் ஈட்டியுள்ள லாபத் தொகை முறையே ரூ. 22.16, 0.29 இலட்சமாகும். மேற்கண்ட தொகைகள் தற்காலிகமானவை; அவை இன்னும் தணிக்கை செய்யப்படவில்லை. எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும் நட்டம் இல்லாமல் செயல்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ர. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியார் துறையிலே முதலாளிகள் பஸ் ஓட்டுகிறபொழுது இலாபம் கிடைக்கிறது. எங்களுக்குக் கொடுத்த ரூட்ஸ் போதாது. இன்னும் கொடு, இன்னும் கொடு என்று சொல்லி, பிரஷர் ரொம்பக் கொடுக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, சர்க்காரிலிருக்கிற பெருவாரியான கழகங்களிலே நஷ்டம் வருவது எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. உண்மையிலேயே சொல்லப்போனால், அங்கே ஏராளமான பொருட்கள் திருடப்படுகின்றன. அங்கேயிருக்கக்கூடிய அதிகாரிகள் மட்டரகமான ஸ்பேர் பார்ட்ஸ்களை வாங்குகிறார்கள். மெயின்டனன்ஸ் சரியாக இல்லை. இந்த மாதிரி பெரிய விஷயங்கள் நடந்து, நஷ்டம் ஏற்படுகிறது. நான் கேட்கக்கூடிய விஷயம் என்னவென்றால், இந்த விஷயங்களைத் திருத்தி, இலாபகரமாக ஓட்டுவதற்கான முயற்சி எடுப்பதற்கு பதிலாக நாங்கள் இனிமேல் கொடுக்கக்கூடிய ரூட்ஸ்களையெல்லாம் தனியார் துறைக்குக் கொடுக்கப் போகிறோம் என்று சர்க்கார் கருதுவதாகச் சொன்னதாகப் பத்திரிகையிலே பார்த்தோம். அப்படி சொன்னது உண்மைதானா? அப்படியென்றால், Do you accept that you are inefficient in running the Transport. திறமையற்றவர்களாக நாங்கள் இருக்கிறோம், தோற்றுப் போய் விட்டோம், ஆகவே தனியார்களுக்குக் கொடுக்கிறோம் என்ற நிலைதானா?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எப்போதுமே திறமையாகப் பேசக்கூடியவர். அதேபோல், இதிலும் திறமையாக வாதத்தை வைத்திருக்கிறார்கள். உண்மை நிலைமையை நான் சொல்கிறேன். திறமையான விவாதத்திற்கு நான் போகவில்லை. நீங்கள் இங்கே சொல்கின்றபொழுது தனியார் துறையை ஒப்பிட்டுச் சொன்னீர்கள். தனியார் துறையைப் பற்றியும் அரசுப் போக்குவரத்துக் கழகத்தைப் பற்றியும், அதிலே பணியாற்றுகின்ற தொழிலாளிகளைப்பற்றியும் இந்தத் தொழிலாளிகள் பற்றியும் நன்கு தெரிந்த உறுப்பினர் இதைச் சொல்லியிருப்பது எனக்கு வேதனையாக இருக்கிறது. போக்குவரத்துக் கழகங்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளிகளுக்கு நாம் எவ்வளவு சம்பளம் கொடுக்கிறோம். தனியார் துறையிலே எவ்வளவு சம்பளம் கொடுக்கப்படுகிறது என்பதைப் பார்க்கவேண்டும். இதிலே, நார்ம்ஸ் பிரகாரம், ஒரு வண்டிக்கு 7½ நபர்களை அமர்த்தியிருக்கிறோம். அதிலே 4 பேர்களை வைத்துக்கொண்டு அவர்கள் நடத்துகிறார்கள். மேலும் போனஸ் போன்ற பிரச்சினைகளை நீங்கள் பார்க்கவேண்டும். ஒவ்வொரு இடத்திலும் அவர்கள் தங்குவதற்கான, உணவு அருந்துவதற்கான வசதிகளை நாம் எப்படி செய்திருக்கிறோம் என்பதையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்களானால் போக்குவரத்துக் கழகங்களையும் தனியார் துறையையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற மனம் நிச்சயமாக எந்த நேரத்திலும் வருவதற்கான வாய்ப்பே இருக்காது என்பதை நான் முதலிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



எனவே, போக்குவரத்துக் கழகத்திற்கு இலாபம் மட்டுமே நோக்கம் அல்ல. பல கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது என்ற காரணத்தால், இலாபம் மட்டும் கருதாமல், குறைந்தபட்சம் ரூ. 800 ஒரு வண்டிக்கு கலெக்ஷன் ஆனால்தான் கட்டுப்படியாகும் என்ற நிலைமையைக் கூட மாற்றி ரூ. 500, ரூ. 400 கலெக்ஷன் ஆகிற நிலைமை இருந்தாலும்கூட நாம், இயக்கிக் கொண்டிருக்கிறோம். பொது மக்களுடைய நன்மையைக் கருதி, எனவே, இவைகள் எல்லாம் காரணம் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். இந்தக் காரணங்களை எல்லாம் சொல்லிவிட்டு தட்டிக் கழிக்கவும் நான் தயாராக இல்லை.

இந்தப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரை நஷ்டம் ஏற்படுவதற்கான முக்கிய காரணம் டீசலுடைய விலை உயர்வு என்பதை நாம் யாரும் மறுத்துவிட முடியாது என்று நான் கருதுகிறேன். ஏறக்குறைய இரண்டாண்டுகளுக்கு மட்டும் 41 கோடி ரூபாய் கூடுதலாக டீசலுக்கு மட்டும் செலவழிக்கின்ற நிலைக்கு நாம் ஆளாக்கப்பட்டிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 8—6—80-இல் ஒரு லிட்டர் டீசல் 1.65 ஆக இருந்தது. ஆனால் அது 11—7—81-ல் எப்படி உயர்ந்திருக்கிறது என்று பார்த்தால் 3 ரூபாய் 9 காசாக உயர்ந்திருக்கிறது. இப்படிக் கிட்டத்தட்ட இரண்டு மடங்காக ஆகியிருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது எவ்வளவு தூரம் விலை கூடியிருக்கிறது என்பதை நம்மால் உணர முடிகிறது. இப்படி ஒவ்வொரு பொருளின் விலையும் கூடியிருக்கிறது. கடைசியாகக் கட்டணத்தை உயர்த்துவது என்றாலும் டீசல் விலை உயர்ந்தவுடனேயே நம்மால் உயர்த்த முடியவில்லை. மக்களுடைய பிரச்னைகளையெல்லாம் கேட்டு, அப்ஜெக்ஷன் கொடுக்கிறார்களா என்று விசாரித்து பிறகுதான் நடவடிக்கை எடுக்கிறோம். இந்த நிலையிலேதான் நஷ்டம் ஏற்படுகிறதே தவிர, வேறு எந்தவகையிலேயும் இல்லை. இன்னொரு கருத்தைச் சொல்ல வேண்டுமென்றால், இந்த ஆண்டு போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில் இரண்டு போக்குவரத்துக் கழகங்களைத் தவிர மற்றவை இலாபத்தில் வரும் அளவிற்கு இயங்கி வருகின்றன. தனியாருக்குக் கொடுத்துவிடப் போகிறீர்களா, உங்களுக்குத் திறமையில்லை என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா என்று கேட்டார்கள். எங்களுக்குத் திறமையில்லை என்று யார் சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்வதற்கு நாங்கள் தயாராக இல்லை. திறமையோடுதான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவைகளை விட்டுவிடத் தயாராக இல்லை. பத்திரிகையிலே ஒரு கருத்து வந்திருக்கிறது. நீதி

[1983 பிப்ரவரி 12

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று சக்கரங்களைக் கொண்ட மினி டாக்சிகள் மற்ற டாக்சிகளை விட போவதற்கு எளிதாக இருக்கின்றது. அதே நேரத்தில் கட்டணமும் குறைவு. இதைக் கருத்திற் கொண்டு இந்த டாக்சிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதை இயக்குபவர்கள் முன்வந்தால் அரசு பரிசீலிக்கும்.

வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பனைப் பொருட்கள்.

*வினா எண். 257—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனை மரத்திலிருந்து உற்பத்தியாகும் பொருட்கள் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் என்றால் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எங்கெங்கே இந்த பனைப் பொருள்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. இதனால் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பனைப் பொருள்கள் சம்பந்தமாக பனைத் தும்பு குளச்சலிலே தயாரிக்கப்பட்டு, தூத்துக்குடியிலிருந்து அது வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய நிலை இருக்கிறது. பனைப் பொருள்களிலிருந்து கிடைக்கின்ற ஓலைப் பொருள்களும் மற்றப் பொருள்களும், மதுரையை மையமாகக் கொண்டு தமிழகம் முழுவதிலும் இருந்து தயாரிக்கப் படும் பொருள்கள் அனைத்தும், மதுரைக்கு வரவழைக்கப்பட்டு அங்கிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

*244 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



1983 பிப்ரவரி 12]

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலமாக அரசுக்கு எவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது என்பதை அறிய இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, பனைப் பொருள்களைப் பொறுத்தமட்டில், வேறு எந்தப் பொருள்களையும் விட, இந்தப் பொருள்கள்தான் அதிக பட்சம் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. அதாவது 35 நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றது. கடந்த 3 ஆண்டுகளின் அனுப்பப்பட்ட விவரங்கள் அவையிலே வைக்கப்பட்டுள்ளது. 1981—82ல் 28.25 லட்சம்,1980—81-லே 27.50 லட்சம், 1979—80-லே 43.97 லட்சம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. பனை ஓலைப் பொருள்கள் பற்றி இந்த அவையிலே குறிப்பு வைக்கப்பட்டிருக்கிறது. பனை வெல்லப் பாகு—அதாவது ஜாகரி ஜூஸ் கருப்பட்டி பாகு அமெரிக்க நாட்டிற்கு 2.66 லட்சம் ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இங்கே லாபம் எவ்வளவு என்று குறிப்பிடப்படவில்லை. ஏற்றுமதி செய்யப்பட்ட தொகைதான் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, பனைப் பொருள் உற்பத்தி செய்யப்பட்டு, வெளி நாடுகளுக்கு—35 நாடுகளுக்கு —ஏற்றுமதி செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் இந்த மூன்றாண்டு பட்டியலைப் பார்க்கும் போது, வர வர 'டிக்ரீஸ்' ஆகிறதே ஒழிய, இன்கிரீஸ் ஆகவில்லை. அதாவது 79—80-லே 43.97 லட்சம், 1980—81-லே 27.50 லட்சம், 1981—82-லே 28.25 லட்சம். இப்படிக் குறைவதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் குறைவுக்குக் காரணம் அங்கே சரியான முறையிலே தும்புகள் கிடைக்காததுதான். அது சரி செய்யப்பட்டு இந்த ஆண்டு 50 லட்சம் ஏற்றுமதி செய்வதற்கான ஆர்டர்கள் வந்திருக்கின்றன. ஆகவே இனிமேல் கூடுவதற்கான வாய்ப்புக்கள்தான் இருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் திருக்குறளை பனை ஓலையில்தான் எழுதினார். இந்த சட்டமன்ற நடவடிக்கைகள்கூட திருக்குறளைச் சொல்லித்தான் பேரவைத் தலைவர் அவர்கள் ஆரம்பிக்கிறார். ஆதலால், அந்தப் பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் பரீட்சார்த்தமாக சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளை பனை ஓலைச் சுவடிகளில் எழுதி அளிக்கப்படுமா? அதே போன்ற அரசாங்க விழாக்களுக்கான அழைப்பிதழ்கள் பனை ஓலை சுவடியில் அடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருக்குறளைப் போன்று உறுப்பினர்கள் சுருக்கமாகச் சொன்னால் அனைத்தையும் செய்யலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தப் பனைத் தொழிலிலே ஈடுபட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான், வாரி யம் சம்பந்தமாக நடைபெறுகிற அரசு நிகழ்ச்சிகளுக்கான அழைப் பிதழ்கள் ஓலைச் சுவடியில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப் படு கின்றன. திருக்குறளும் ஓலைச் சுவடியில் அடிக்கப்பட்டு விற் பனைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. ஓலைச் சுவடிகளிலே கலை நுட்பம் தெளிவாகத் தெரிவதற்கான வரைபடங்கள் வரைந்து அது அமோகமான வரவேற்பைப் பெற்றிருக்கிறது. தொழிலாளர் களுக்கு வேலை வாய்ப்பு கிட்டியிருக்கிறது. இங்கே சட்ட மன்ற நிகழ்ச்சிகளை ஓலைச் சுவடிகளிலே கொடுப்பதைப் பற்றிய விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்காலத்து ஓலைச் சுவடிகளைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் நினைவு படுத்தி னார்கள். ஓலைச் சுவடிகளில் சட்டமன்ற அழைப்பிதழ்கள் எல்லாம் வருமா, அதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று கேட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் பழங்காலத்தை நினைவு படுத்தும் வகையில் பழங்கால உடைகளை அணிந்து சட்டமன்றத்திற்கு வருவதை அரசு அனுமதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை).

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வெளி நாடுகளுக்கு நுங்கு ஏற்றுமதி செய்யப் படும் என்று சொல்கிறார்கள். எந்த அளவுக்கு ஏற்றுமதி செய் யப்படுகிறது ? எவ்வளவு நாளைக்கு நுங்கு கெட்டுப் போகாமல் இருப்பதற்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவிப்பார் களா ?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நுங்கு விரைவில் கெட்டுப் போகாமல் இருப்பதற்கு ஆராய்ச்சி செய்து, அதற்கு 18 குளிர்சாதனங்களை உருவாக்கி அதை டின்களில் அடைத்தால் எத்தனை நாளைக்கு அவைகள் கெடாமல் இருக்கும் என்பதற்கு ஆராய்ச்சி செய்து அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். அரபு நாடுகளுக்கு பரீட் சார்த்தமாக அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவிலே அதற்கான ஆர்டர்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. டி. மணி :** பேரவைத் தலைவர் அவர்களே, குளச் சலிலேயிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்ற தும்பு, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னால் அங்கு ஏற்கெனவே உற்பத்தி யாவதில் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ? உற்பத்தி செய்கின்ற அந்த வேலைகளில் ஈடுபட்டிருக் கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு நேரடியாக இந்தத் துறையின் மூலமாக சம்பளங்கள் வழங்கப்படுகின்றதா ? அவர்களுக்கு





கொடுக்கின்ற சம்பளம் மிகக் குறைவானது என்பதை கணக்கி லெடுத்து நியாயமான குறைந்தபட்ச சம்பளச் சட்டம் கொண்டுவந்து அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா? அதோடு அங்கே ஏராளமான தும்பு கிடைக்கின்ற காரணத்தால் அதை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, குளைச்சலிலே பணிபுரிகின்ற பணியாளர் களுக்கு நியாயமான சம்பளங்கள் வழங்கப்பட்டு வருகிறது. அங்கே நல்ல தும்பு கிடைக்கின்ற காரணத்தால் அதை அதிகப் படியாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சி களை வாரியம் எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

**திரு. கே. சொக்கலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, கள் இறக்குவதிலே இன்றையதினம் அதிக கவனம் செலுத்துகிற காரணத்தால் பனைமரத்திலிருந்து பதநீரை இறக்குவது குறைந் துள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா ? இந்தப் பதநீர் மட்டு மல்ல, நுங்கு மட்டுமல்ல, பனை உற்பத்திப் பொருள்களான, பனைவெல்ல உற்பத்தியும் குறைவாக இருக்கிறது என்பது தெரியுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி வெளிநாட்டுக்கு ஏது எது அனுப்பப்படுவது பற்றியதாகும். கள்ளும், பதநீரும் நம் நாட்டிலேயே பயன்படுகிறது.

## பொதுப் பணித்துறையில் பணியாற்றும் பொறியாளர்கள்.

*வினா எண். 258—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பொதுப் பணித் துறையைச் சேர்ந்த இஞ்சினியர்களை வெளிநாடுகளுக்கு (deputation) அடிப்படையில் அனுப்புவதில்லை என அரசு முடிவெடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** (அ) மற்றும் (ஆ): அயல் நாட்டுப் பணிப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள மாநில அரசால் ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்ட பொறியாளர்களையும், இப்பணிக்கு ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பொறியாளர் களையும், மத்திய அரசு அழைப்பு அனுப்பும் நேரத்தில் விடுவிக்க அனுமதி வழங்கலாம் என்றும், இனிவரும் விண்ணப்பங்களைப்

பொறுத்தவரையில் தகுதிக்கேற்ப ஆய்வு செய்து, அவர்களை அயல் நாட்டுப் பணிக்கு அனுப்பினால் நம் துறையின் பணி பாதிக்கப்படுமா என்பதைக் கருத்தில் கொண்டு முடிவு எடுக்கலாம் எனவும் அரசு தீர்மானித்துள்ளது.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது வெளிநாடுகளுக்கு இனிமேல் செல்லுகின்ற பொறியாளர்களை அனுப்பும்போது அது இங்குள்ள நாட்டுப் பணியைப் பாதிக்குமா என்று ஆய்வு செய்து அனுப்பவேண்டுமென்று அரசு முடிவு எடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி வெளிநாட்டுக்கு அனுப்புவதால், நூற்றுக்கணக்கான இன்ஜினியரிங் கிராஜுவேட்ஸ்களுக்கு படித்து விட்டு வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை கிடைக்குமே? ஏன் வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு இந்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே படித்த பட்டதாரிகள் பொறியாளர்களை—ஜூனியர் இன்ஜினியர், கீழ் மட்டத்தில் இருப்பவர்கள்—இங்கே பணியாற்றுவதற்கு வருகை தராமல் இருப்பதன் காரணமாகவும் இங்கே ஜூனியர் இன்ஜினியர்ஸ்களில் பட்டம் பெற்றவர்கள் குறைவாக இருக்கிற காரணத்தாலும் அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவது பற்றி இந்த அரசு இப்படிப்பட்ட முடிவு எடுத்திருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தில் பணியாற்றியபிறகு அவர்களுக்கு ஒரு எக்ஸ்பீரியன்ஸ் கிடைத்ததற்குப் பிறகுதான் அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். அங்கே போய் தங்கியும் விடுகிறார்கள். லீவ் போட்டுவிட்டு டிசார்ட் ஆகிவிடுகிறார்கள். பல ஆண்டுக்காலம் லீவிலே இருக்கிறோம், இருக்கிறோம் என்று வெளிநாடுகளில் குறிப்பாக, அரபு நாடுகளிலே நம்முடைய பொறியாளர்கள் இருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்கவேண்டியது அவசியமான காரியம் தான். என்றாலும் அப்படிச் செல்லக்கூடியவர்கள் தங்களுடைய பதவியை ராஜினாமா செய்துவிட்டுப் போகவேண்டுமென்று விரும்பினால், அதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்கலாமே. அப்படி நிரந்தரமாக ஏன் கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும்?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரமாகப் பொறியாளர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவது அரசின் கொள்கையல்ல. ஓராண்டுக் காலத்திற்கு மட்டும் முதலில் அனுப்புகிறோம். பின்னர் ஓராண்டு, ஓராண்டாக நீடித்து, அதிகபட்சம் ஐந்து ஆண்டுக் காலம் வெளிநாடுகளில் பணியாற்ற அனுமதிக்கிறோம். அந்த



ஐந்து ஆண்டுக் காலத்திற்கு மேல் அவர்கள் அங்கே பணியாற்ற முடியாது. நிரந்தரமாகவும் இருக்க முடியாது. அப்படி இருப்பவர்களை மீண்டும் நாம் தமிழகத்திற்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டு வருகிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

திரு. ம. வின்சென்ட் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருந்து டெபுடேஷன் அடிப்படையில் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள பொறியாளர்களின்—பொறியியல் வல்லுநர்களின்—எண்ணிக்கை என்ன? அவர்கள் பல ஆண்டுக் காலமாக வெளிநாடுகளில் நிரந்தரமாகத் தங்கி, அந்த வெளிநாடுகளுக்குப் பெருமை சேர்க்கும் திறமைபெற்ற நிபுணர்களை நமது நாட்டிற்கு அழைத்து வர அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் கண்காணிப்புப் பொறியாளர்கள் (சூப்பிரண்டென்டிங் இன்ஜினீயர்) 57 பேர் இருக்கிறார்கள். அவர்களில் 1 நபர் மட்டும் வெளிநாடுகளில்—அயல் பணிக்கு—அனுப்பப்பட்டு இருக்கிறார். எக்சிகியூடிவ் இன்ஜினியர்கள் 315 பேரில் 7 பேர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பெற்று இருக்கிறார்கள். உதவி செயற்பொறியாளர்கள் (அசிஸ்டெண்ட் எக்சிகியூடிவ் இன்ஜீனியர்கள்) 1,318 பேரில் 29 பேர்கள் அயல் பணிக்குச் சென்றிருக்கின்றனர். உதவிப்பொறியாளர்கள் (அசிஸ்டெண்ட் இன்ஜீனியர்)3283 பேரில் 8 பேர்கள் அயல்பணிக்குச் சென்று இருக்கிறார்கள். மொத்தம் உள்ள 4973 பேர்களில் 45 பேர்தான் இப்போது அயல்நாட்டில் பணிசெய்கின்றனர் என்ற விவரம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அத்தகைய பொறியாளர்களை நம் நாட்டிலேயே பணியில் அமர்த்திக் கொள்ள இந்த அரசு அக்கறை காட்டுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனாதை விடுதிகள் பராமரிப்பிற்கான நிதி உதவி.

*வினா எண். 259—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனாதை விடுதிகள் பராமரிப்பிற்கு என்று வெளிநாடுகளிலிருந்து உதவிகளை சிலர் பெறுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) உதவிகள் பெறுவது யார், யார் என்பதை அரசு அறிவிக்குமா?

வட்டாட்சித் தலைவர் அலுவலகங்களில் முதியோர், ஊனமுற்றோர் விதவைகள் உதவித்தொகை கோரி வரப்பெற்றுள்ள விண்ணப்பங்கள்.

* வினா எண். 260—திரு. ப. வேணுகோபால் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு வட்டாட்சித் தலைவர் அலுவலகத்திலும் முதியோர் உதவித் தொகை, விதவை உதவித்தொகை, ஊனமுற்றோர் உதவித்தொகை கோரும் விண்ணப்பங்கள் தேங்கிக் கிடப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மேல் எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மதுரை (ஆ) இம்மாநிலத்தில் உள்ள 16 மாவட்டங்களிலும் முதியோர், ஊனமுற்றோர், விதவைகள் உதவித்தொகை கேட்டு 31—12—1981 முடிய 63,482 விண்ணப்பங்கள் வரப் பெற்றுள்ளன. இந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து தகுதி வாய்ந்த நபர்களுக்கு உதவித்தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ப. வேணுகோபால் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிட்டது போல 16 மாவட்டங்களில் விண்ணப்பங்கள் வந்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த விண்ணப்பங்களை விரைவில் பரிசீலனை செய்வதற்கு, உரிய காலத்திலே உதவித் தொகையை உடல் ஊனமுற்றவர்களுக்கும், முதியோர்களுக்கும், விதவைகளுக்கும் கொடுப்பதற்கு ஒவ்வொரு வட்டத்திலும் தனியாக ஒரு தனிப் பிரிவை நியமனம் செய்து, துரிதமாகக் கொடுக்க ஆவன செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, வட்டாட்சி அலுவலகத்தின் மூலமாக நாம் இன்றைக்கு ஊனமுற்றவர்களுக்கும் முதியோர்களுக்கும் விதவைகளுக்கும் உதவித் தொகை கொடுத்து வருகிறோம். அதுதவிர நிறைய விண்ணப்பங்கள் வந்து, 39,995 விண்ணப்பங்களின் மீது ஆணை கேட்டு வருவாய் நிர்வாக ஆணையாளர் குறிப்பு அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இது தவிர தகுதி வாய்ந்த அனைவருக்கும் உதவித் தொகை வழங்கலாமா என்பதும், இந்த வருஷம் 10,000 நபர்களுக்கு உதவி தொகை வழங்குவதும், அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.



திரு. ப. வேணுகோபால் : தலைவரவர்களே, ஒரு வருடத்திற்கு ஒரு வட்டத்திற்கு இத்தனை மனுக்கள் வரையில்தான் உதவித் தொகை வழங்கலாம் என்று கட்டுப்பாடு வைக்கப்பட்டிருக்கிறதா? அப்படி இருந்தால் அந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி தகுதி வாய்ந்த ஊனமுற்றோர், முதியோர், விதவைகள் அனைவருக்கும் உதவித் தொகை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவாவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய பதிலிலே குறிப்பிட்டிருக்கிறேன். தகுதி வாய்ந்த அனைவருக்கும் உதவித் தொகை வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ப. சுந்தரம் : தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்கள் கிராமப்புறங்களிலிருந்து வந்து விண்ணப்பம் செய்ய பல் வேறு வகைகளில் சிரமப்படுகிறார்கள். ஆகையால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கிராமங்களுக்குப் போய் உடல் ஊனமுற்றவர்கள் யார், யார் என்று நேரிலே பார்த்து அவர்களுக்கு நிதி உதவி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தகுதிவாய்ந்த அத்தனை பேர்களுக்கும் உதவித் தொகை கொடுப்பது சம்பந்தமாக அரசு பரிசீலித்து வருகிறது என்று சொன்னார்கள். இப்போது ஒரு வட்டாரத்திற்கு இத்தனை விதவைகள், முதியோர்கள், ஊனமுற்றோர்களுக்கு உதவித் தொகை அளிப்பது என்ற லிமிட்டேஷன் வைத்திருக்கிறார்கள். ஆகையால்தான் அமைச்சரவர்கள் குறிப்பிட்ட 63,482 மனுக்கள் சாங்ஷன் செய்யப்படாமல் இருக்கின்றன. இந்த குறிப்பிட்ட அளவுதான் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையை மாற்றி அனைவருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? நாம் சத்துணவு கொடுக்கிறோம். யாரும் பட்டினி கிடக்கக்கூடாது என்பதற்காக அதைச் செய்கிறோம். ஆகவே, ஆதரவற்ற நிலையில் இருந்து அவர்கள் கஷ்டப்படாமல் இருக்க, ஊனமுற்றவர்கள் விதவைகள், முதியோர்கள் எவ்வளவு பேர் இருந்தாலும் அத்தனை பேர்களுக்கும் இந்த உதவித் தொகையை வழங்க, அதிகமான தொகை ஒதுக்கி, துரிதமாகக் கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் உள்ள தகுதி வாய்ந்த அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை கொடுப்பதற்கான துரிதமான நடவடிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது.

1983 பிப்ரவரி 12]

(ஈ) தனியார் துறையினரும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் உடல் ஊனமுற்றோருக்கு ஒதுக்கீடு செய்தல் வேண்டுமென அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) 1976ஆம் ஆண்டு தமிழக நிதித்துறையின் பொருளாதார ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு நடத்திய உடல் ஊனமுற்றோர் பற்றிய கணக்கெடுப்பு அறிக்கையின்படி தமிழ்நாட்டிலுள்ள ஊனமுற்றோர் எண்ணிக்கை மொத்தம் 2,35,181 ஆகும்.

(ஆ) இவர்களில் 1976 ஆம் வருடத்திய ஆய்வு அறிக்கையின்படி 36,700 நபர்கள் அலுவலகங்களில் பணியாற்றுகின்றனர்.

(இ) ஊனமுற்றோரில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் தற்சமயம் இல்லை. எனினும் மொத்தம் உள்ள ஊனமுற்றோரில் பயிற்சி பெற்ற பின் வேலை வேண்டி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலைக்காகக் காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 16,191 ஆகும்.

(ஈ) அரசுத்துறை, அரசுத்துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சித் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் ஊனமுற்றோருக்கு 3 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தனியார் துறையில் ஒதுக்கீடு செய்ய இதுவரை ஏதும் அரசு ஆணை கிடையாது.

**திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களின் வாழ்க்கை வளம் பெற ஏதேனும் அரசு சிறப்புத் திட்டங்கள் தயாரித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக உடல் ஊனமுற்றோர் ஆண்டாக 1981 ஆம் ஆண்டை நாம் கொண்டாடுகிற சமயத்தில், அவர்களுக்காக 20 சிறப்பு திட்டங்களைத் தீட்டி, அவைகள் மூலமாக பல சிறப்புப் பணிகளை இந்த அரசு செயலாற்றி வந்தது. கல்வியிலும் அவர்களுக்கு முதன்மையிடம் கொடுக்கப்பட்டது. தொழில்களிலும் அவர்களுக்கு முதன்மையிடம் கொடுக்கப்பட்டது. தொழிற் பயிற்சியிலும் அவர்களுக்கு முதன்மையிடம் கொடுக்கப்பட்டது. இப்படி பலவாறாக நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு, சிறப்புத் திட்டங்களின் வாயிலாக அவர்களுக்கு அதன் பயனை அரசு கொடுத்தது.

**திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட, அவர்களின் வாழ்க்கையில் உடனடியாக பரிகாரம் காண, ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள், அவர்களுக்கு வழங்கப்பட

வேண்டிய உதவித் தொகையை வழங்கிட வேண்டும் என்கிற வகையில் அதிகாரிகளுக்கு அரசு ஆணை பிறப்பித்து ஆவன செய்யுமா? அவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகிற உதவித்தொகையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன உதவித் தொகையினைப் பற்றிக் கேட்கிறார்கள் என்பது தெரியவில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, நான் இரண்டு கேள்விகளை மாண்புமிகு அமைச்சர்முன் வைத்தேன். உடல் ஊனமுற்றோர் வாழ்க்கைத் தரம் உயர குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் அது குறித்து நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்பது ஒரு கேள்வி. அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற உதவித் தொகை அரசின் சார்பில் வழங்கப்படுகின்றது. அது போதுமானதாக இல்லை, அதை உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்பது மற்றொரு கேள்வி.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 45 வயது முடிந்த ஊனமுற்றோருக்கு அரசாங்கத்தால் உதவித் தொகை கொடுக்கப்படுகின்றது. தொழில் பயிற்சி பெறுகின்ற ஊனமுற்றவர்களாக இருந்தால் 150 ரூபாய் உதவித் தொகை கொடுக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த உதவித் தொகையைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்பது தெரியவில்லை.

மாமுண்டி ஆற்றின் மீது விடத்திலாம்பட்டியில் மேம்பாலம் கட்டும் திட்டம்.

*குறுகிய கால வினா எண். 5—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை நகராட்சி எல்லைக்குள் மணப்பாறை நகரை இரண்டாக்கிச் செல்லும் மாமுண்டி ஆற்றின் மீது விடத்திலாம்பட்டியில் மேம்பாலம் (Over Bridge) கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : மணப்பாறை நகராட்சி இத்திட்டத்தினை மேற்கொள்வதற்காக 1983—84 வரவு-செலவு மதிப்பீட்டில் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் அந்நகராட்சிக்கு கடன் உதவிக்கான வகை செய்ய அரசு உத்தேசித்துள்ளது.



திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, இந்தத்திட்டத்திற்கான மதிப்பீடு எவ்வளவு ? 1983—84 ஆம் ஆண்டிலே மணப்பாறை நகராட்சியில் இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், மணப்பாறை நகராட்சிக்கு நிதி நிலைமை சரியாக இல்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனவே, அந்தத் திட்டத்தினை மணப்பாறை நகராட்சியால் நிறைவேற்ற முடியாது என்பதும் அமைச்சருக்குத் தெரியும். ஆகவே, அந்தத் திட்டத்தை 1983—84 ஆம் ஆண்டிலே அரசே நேரடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே இந்தத் திட்டத்திற்கு சுமார் 15 லட்சம் ரூபாய் ஆகுமென்று மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கின்றது. மணப்பாறை நகராட்சியைப் பொறுத்தவரையில் போதுமான நிலைமை இல்லை, ஃபைனான்சியல் வீக் என்று சொல்லக்கூடிய நிலைமையின் காரணத்தால்தான் அந்த நகராட்சியைத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டு அதற்காக இந்த ஆண்டு 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. ஆனாலும், இந்த வேலையினை அரசாங்கமே நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் பகுதி இரண்டாம் திட்டத்தின் கீழ் இதனை வழிவகை செய்வதற்கும் அதற்கு வேண்டிய பணம் ஒதுக்குவதற்கும் அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் அமைக்கப்படுவது மிகவும் அவசியம். மணப்பாறை நகராட்சி இப்போது இரண்டாகப் பிளந்து அந்தப் பகுதி ஒரு தீவு போன்று இருக்கிறது. இதன் வழியேதான் மதுரை மாவட்டம், மற்றும் பெரியார் மாவட்டம் ஆகிய இடங்களுக்குச் செல்ல வேண்டி இருக்கின்றது. அப்படிப்பட்ட வழி இன்றைக்கு முடக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நேரடியாக அந்த இடத்திற்குச் சென்று பார்த்திருக்கிறார்கள். மழைக் காலங்களில் மக்கள் அங்கே போக முடியாமலும், அங்கிருந்து வர முடியாமலும் கஷ்டப்படுகிறார்கள். இதை எல்லாம் அரசு கவனத்தில்கொண்டு இந்தத் திட்டத்தினை உறுதியாக 1983—84 ஆம் ஆண்டுத் திட்டத்திலே சேர்த்து இதனை நிறைவேற்ற அதாவது நகராட்சியிடம் ஒப்படைக்காமல் அரசாங்கமே நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் அவற்றை எல்லாம் உத்தேசித்துத்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1983 பிப்ரவரி 12

## தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை நகராட்சிகளுக்கு விரிவுபடுத்தும் திட்டம்.

*குறுகிய கால வினா எண். 6—திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிகளுக்கு தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் அரசின் சார்புத் திட்டம் ஆகும். (Centrally sponsored Scheme) இத்திட்டத்திற்காக மத்திய அரசு வகுத்துள்ள விதிமுறைகளின்படி, ஊரகப் பகுதிகளில்தான் நலிவுற்ற மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் நிறைவேற்றப் பட வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தினை நகராட்சிகளுக்கு விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வெ. அரங்கராசன் : தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு விஸ்தரிக்கின்ற திட்டம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நகராட்சி சாலைகளோடு கிராமப்புறங்களுக்குச் செல்கின்ற சாலைகள் இணைந்திருக்கின்ற காரணத்தால் அந்தச் சாலைகளைச் செப்பனிட வேண்டும். ஆனால், போதிய நிதி வசதி நகராட்சிகளில் இல்லாத காரணத்தால், அவர்களால் செப்பனிட முடியாத நிலைமை இருக்கின்ற காரணத்தால் கிராமப்புறங்களுக்குச் செல்கின்ற சாலைகளை இந்தத் திட்டத்தின் மூலம் செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தின் பெயரே தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம். ஆகவே, பெயரில் கிராமப்புற வேலைவாய்ப்பு என்று வைத்துக்கொண்டு அதை நகர்ப்புறத்திற்கு விரிவாக்கம் செய்ய வேண்டும் என்பது முடியாத காரியம். மத்திய அரசாங்கம் தேசீய நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் என்று ஏதாவது கொண்டுவந்தால் அப்போது இதைப் பற்றிப் பார்க்கலாம்.

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறத்திற்கு விஸ்தரிப்பு இல்லை என்றார்கள். நகர்ப்புற நகராட்சியில் நிதி வசதி இல்லாத காரணத்தால் நகர்ப் புறத்தில் இருக்கக்கூடிய சாலைகளைச் செப்பனிட முடியாமல்



1983 பிப்ரவரி 12]

இருக்கிறது. கிராமங்களில் செல்லுகின்ற சாலைகளுக்கு அந்த திட்டத்தின் மூலமாக நகராட்சியின் எல்லையாக இருந்தால் அதை செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்புறங்களைப் பொறுத்தவரையில் எந்த எந்த நகராட்சிகள் பொருளாதாரத்தில் பலவீனமாக இருக்கின்றனவோ அவைகளுக்கு இந்த மாநில அரசு மூலமாக தன் நிறைவு திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் அங்கே சாலைகளைப் பழுதுபார்க்கலாம்.

திரு. ஏ. ரி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகர்ப்புறங்களுக்கு இந்த திட்டத்தில் இடம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் பேரூராட்சிகளில் இந்த தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் நடைபெறவில்லை என்று கேள்விப்படுகிறோம். எனவே, அரசு இந்த தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை பேரூராட்சிகளுக்கும் விஸ்தரிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பேரூராட்சிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது இந்தத் திட்டத்தை நகராட்சிகளுக்கு விஸ்தரிக்க முடியாது என்று சொன்னார்கள். இந்த திட்டமே ஜனதா அரசாங்கத்தில் Food for Work Scheme என்று கொண்டு வந்தார்கள். பின்பு இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. National Rural Development Scheme என்று பெயரை மாற்றிவிட்டார்கள். பெயரை மட்டும்தான் மாற்றினார்கள். ஆகவே ஏன் நகராட்சிகளுக்கு இதை விஸ்தரிக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Food for Work Scheme தான் இந்த வேலைக்கு உணவு திட்டம். ஜனதா ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்தார்கள். அப்போது அவர்கள் கொண்டுவந்த காலத்திலே 100-க்கு 100 மானியமாகக் கொடுத்தார்கள். அதற்கு பின்னால் வந்த இந்திரா காங்கிரஸ் அரசு இதை 100-க்கு 50 என்று செய்துவிட்டார்கள். அது மட்டும் அல்லாமல் வேலைக்கு உணவு திட்டம் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு அற்றவர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆகவே, அதுவே தேசீய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் என்று பெயர் மாற்றப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கிருஷ்ணமூர்த்தி கொடுத்ததை நான் அரசுக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தாங்கள்தான் பெற்றுத்தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் பெற்றுத்தர முயல்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அக்ரிகல்சர் மினிஸ்ட்டர் இப்போது திருச்செந்தூரில் இருப்பதால் இன்டஸ்ட்ரிஸ் மினிஸ்ட்டர் கால் அட்டென்ஷனை எடுத்துக்கொண்டு பதில் சொல்லலாம். இன்னும் இரண்டு நாட்கள் தான் சட்டசபை கூட்டம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மே மாதம் வரை அது இருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : இந்தி பாட்டு எழுதினால் 150 ரூபாய்; தமிழ் பாட்டு எழுதினால் 100 ரூபாய் என்று...................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நீங்கள் கொடுக்கவில்லை. கொடுத்தவர் கேட்கும்போது நான் சொல்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : கடந்த 7 ஆம் தேதி நான் ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் கொடுத்திருந்தேன், சென்னையிலே, மின்டிலே இருக்கக்கூடிய தொழிலாளர்கள்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தினசரி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : சட்டசபைக் கூட்டம் இன்னும் இரண்டுநாள்தான் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 3 ஆம் தேதி ஆரம்பிக்க இருக்கிறது, தொடர்ந்து மே மாதம் வரை போகிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் * * ஆகவே அவர்கள் சொன்னதையும் நான் சொன்னதையும் நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவற்றை நீக்கிவிட ஆணையிடுகிறேன்.





திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : முடிவு எடுத்ததாக நான் அறிகிறேன் என்றுதான் சொன்னேன். அவர் கமிட் பண்ணியதாக நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறையாக வந்தால் இப்படிப்பட்ட விவாதம் வராது, நல்ல பதில் வந்திருக்கும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தமிழகத்திலே ஓட்டல் பண்டங்களுடைய விலைகள் ஏராளமாக ஏறியிருக்கின்றன....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி தனியாகக் கொடுங்கள். உங்கள் ஊரிலே நெல் விலையைக் குறைத்துவிடுங்கள், பண்டங்களின் விலையை குறைக்கச் சொல்லலாம்.

### 3. அறிவிப்புகள்.

#### (அ) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 10—2—1983 ஆம் தேதியிட்ட கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் :

"I have received with satisfaction, your resolution thanking me for my Address on the 24th January 1983 to the Members of the Legislature".

(முற்பகல் 10—40)

### 4. கவன ஈர்ப்புகள்.

*(அ) அம்பிளிக்கை பயிற்சி நிலையத்தில் பயின்றவர்களை நர்சிங் கவுன்சில் பதிவு செய்ய மறுப்பது—*

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மதுரை மாவட்டம் அம்பிளிக்கை கிறித்துவ சமுதாய சுகாதார வழிகாட்டிகள் பயிற்சி நிலையத்தில் பயின்ற சுமார் 300 பேரை தமிழக நர்சிங் கவுன்சில் பதிய மறுப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

தமிழ்நாடு செவிலியர் மருத்துவத் தாதியர் மன்றம் ஒரு சட்ட பூர்வமான தனித்தியங்கும் அமைப்பாகும். இம்மன்றம், மற்றப் பணிகளுடன், அங்கிகரிக்கப்பட்ட பயிற்சிகளுக்கு பாடத்திட்டங்கள் வகுத்தல் செவிலியப் பணியினை ஒழுங்குபடுத்துதல்

செவிலியர் பயிற்சிப் பள்ளிகளை ஆய்வு செய்தல், மற்றும் தகுதி பெற்ற உறுப்பினர்களை பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுகின்றன. இம்மன்றம், அரசு அனுமதியுடன் தகுதி வாய்ந்த நிறுவனங்களில் செவிலியர், மருத்துவத் தாதியர், சுகாதார மேற்பார்வையாளர் அல்லது துணைச் செவிலியர் பயிற்சி பெற அதிகாரம் அளிப்பதுடன் மேற்கண்ட பயிற்சிகளுக்கு சான்றிதழ்களும், பட்டயங்களும் வழங்கி அச்சட்டத்தில் விதி 32-ன் படி பதிவு செய்ய வகை செய்கிறது.

2. இம்மன்றம், அரசு அனுமதியுடன் பின்வரும் பயிற்சிகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது :—

(1) பொது செவிலியர்.

(2) மருத்துவத் தாதியர்.

(3) சுகாதாரப் பார்வையாளர்கள்.

(4) பொது சுகாதாரச் செவிலியர்.

(5) இளைநிலை அறிவியல் செவிலியர் B.Sc. (Nursing).

(6) துணை செவிலியர் (பலநோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சி) (பெண்கள்).

மேலும் இந்திய செவிலியர் மன்றச் சட்டம் 1947 விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மற்றத் தகுதியுடையோரும் இம் மன்றத்தில் பதிவு செய்யலாம்.

3. அரசு தம் ஆணை எண் 634, நாள் 16—3—1976-ல் மருத்துவப் பணி மற்றும் குடும்பநலத்துறை இயக்குநரின் கருத்துருவை ஏற்று கிறிஸ்துவ சமுதாய சுகாதார நிலையத்தில் "சுகாதார வழிகாட்டி" என்ற பயிற்சி நடத்த அனுமதி வழங்கியுள்ளது.

4. கிறிஸ்துவ சமுதாய சுகாதார நிலையம் தம் நிலையத்தில் "சுகாதார வழிகாட்டி" பயிற்சி பெற்றோரை செவிலியர் மன்றத்தில் பதிவு செய்ய 15—12—1980 அன்று செவிலியர் மன்றத்தை கேட்டுக் கொண்டது. செவிலியர் மன்றம் "சுகாதார வழிகாட்டி" பயிற்சிக்குரிய பாடத்திட்டத்தை ஆய்வு செய்த பின் இம்மன்றத்தில் பதிவு செய்ய சுகாதார வழிகாட்டி பயிற்சி பலநோக்கு சுகாதாரப் பணியாளர்" பயிற்சிக்கு சமமானது அல்ல என்று கருதியது. செவிலியர் மன்றத்தின் "சுகாதார வழிகாட்டி" பயிற்சி சட்டத்தின் ஒப்புதல் பெற்றதாக இல்லை. எனவே, கிறிஸ்துவ சமுதாய சுகாதார நிலையத்தில் "சுகாதார வழிகாட்டி" பயிற்சி முடித்தோர் கூடுதலாக "பலநோக்கு சுகாதாரப் பணியாளர்" பயிற்சிக்குரிய மூன்றாவது அரையாண்டிற்கான (Third Semester) பாடத்திட்டத்தைப் படித்து முடித்தால் மட்டுமே செவிலியர் மன்றத்தில் பதிவு செய்து கொள்ள அனுமதிக்கலாம் என்று, செவிலியர் மன்றம் முடிவு



செய்தது. மேற்குறிப்பிட்டுள்ள கூடுதல் பயிற்சியை முடித்தபின் தமிழ்நாடு செவிலியர் மற்றும் மருத்துவத் தாதியர் மன்றத்தால் ஒப்புதல் பெறப்பட்ட குழுவால் நடத்தும் தேர்வுக்குக் கலந்து கொள்ளலாம். இத்தேர்வில் வெற்றி பெற்றோர் செவிலியர் மன்றத்தில் பதிவு செய்யலாம் என்றும் இம்மன்றம் முடிவு செய்தது. எனவே, "சுகாதார வழிகாட்டி" பயிற்சியை இம் மன்றத்தில் பதிவு செய்ய மறுக்கவில்லை என்று மன்றப் பதிவாளர் கூறியுள்ளார்.

5. கிறிஸ்துவ சமுதாய சுகாதார நிலையம், செவிலியர் மன்றத்தினுடைய கருத்தினை ஏற்று "சுகாதார வழிகாட்டிகள்" மன்றம் கூறியுள்ளபடி நடவடிக்கை எடுத்து, தங்களை மன்றத்தில் பதிவு செய்து கொள்ள தகுதி பெற்றவர்களாக ஆக்கிக் கொள்ள தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

6. கிறிஸ்துவ சமுதாய சுகாதார நிலையம், 1978 ஆம்ஆண்டு பலநோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சி (துணைச் செவிலியர் பயிற்சி) நடத்துவதற்கும் செவிலியர் மன்றத்தை அணுகியுள்ளது. செவிலியர் மன்றம் இவ்வேண்டுகோளை ஏற்று, அரசுக்கு பரிந்துரைத்துள்ளது. இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், அரசு அளிக்கிற பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்களுக்கான பயிற்சியில் மூன்றாவது செமஸ்டரில் உள்ள பாட திட்டங்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது. உண்மையில் மனமுவந்து இந்த பயிற்சிக்காக அங்கீகாரம் அளிக்கிறபோது மாநில அரசு பயிற்சிக்காக அளிக்கப்பட்டுள்ள பாடதிட்டத்தில் வெகுவாக பாராட்டியே அங்கீகாரம் அளித்திருக்கிறது.

The course is unique one of its kind in the State, as so far, no othei institution—private or public—is conducting such a course. that the syllabus c vers all areas important for Community Hea th Centre. என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதை நர்சிங் கவுன்சிலிடம் பதிவதற்காக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த பிரச்னை பொறுத்த வரையில் இதில் அரசாங்கத்தினுடைய நேரடி பொறுப்பில்லை ; கிறிஸ்டியன் பெலோஷிப் கம்யூனிட்டி ஹெல்த் செண்டர், அம்பிளிகை—அவர்கள் 1980-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15ஆம்

[1983 பிப்ரவரி 12

பனை ஏறும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் லைசென்ஸ்.

*குறுகியகால வினா எண். 7—திரு. இரா. நாமமைக்கனி : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கேள்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பதநீர் இறக்குகின்ற பனை ஏறும் தொழிலாளர்களுக்கு லைசென்ஸ் வழங்கியது மதுவிலக்கைத் தீவிரப்படுத்தும் காலங்களில் இருந்து வந்தது. இப்பொழுது மது விலக்கு தளர்த்தப்பட்டதால் உடனடியாக லைசென்ஸ் வழங்கும் முறையை அரசு ரத்து செய்யுமா.

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (ஆ) : லைசென்ஸ் வழங்கும் முறையை ரத்து செய்வது (அ) மற்றும் குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. இரா. நாமமைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதநீர் இறக்குகின்ற பனை ஏறும் தொழிலாளர்களுக்கு லைசென்ஸ் வழங்கும் முறை எப்போது ரத்து செய்யப்படும் ? அதனால் அந்தத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பாதிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரத்து செய்வது பற்றி அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. எவ்வளவு காலம் பிடிக் கும் என்பதை இப்போதைக்கு சொல்லமுடியாது. ரத்து செய்வ தால் அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு பாதிக்காது. அதற்கு மாறாக வேலைவாய்ப்பு அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. நாமமைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதநீர் இறக்குகின்ற பனை ஏறும் தொழிலாளர் களுக்கு லைசென்ஸ் ரத்து செய்வதால் ஜனதா இன்சூரன்ஸ் பாலிசி மூலமாக பெறப்படுகின்ற சலுகையும், தவறி விழுந்து இறந்துவிட்டால் அரசு கொடுக்கும் 10,000 ரூபாய் சலுகையும் பாதிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக பாதிக்காது.



1983 பிப்ரவரி 12]

திரு. நி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதநீர் இறக்குகின்ற பனை ஏறும் தொழிலாளர் களுக்கு அனுமதி வழங்குகின்றபோதே ஆபத்து வேலையில் ஈடுபடு கின்ற காரணத்தால் அவர்கள் இந்த ஜனதா இன்சூரன்ஸில் சேர்ந்தால் தான் முன்னுரிமை வழங்குவதற்கு அரசு ஏதாவது சட்டம் இயற்றுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்சூரன்ஸ் பாலிஸி என்பது கட்டாயப்படுத்துவது அல்ல. தொழிலாளர்கள் அதை உணர்ந்து அதை நிறைவேற்றுவார்களானால் அதனால் அவர்களுக்கு நலனும் பலனும் ஏற்படும் என்பதை அவர்கள் புரிந்து இந்த ஜனதா இன்சூரன்ஸ் பாலிஸியில் சேர்ந்தால் அதனால் அவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். தொழிலாளர்கள் ஜனதா இன்சூரன்ஸ் பாலிஸியில் சேருவதற்கு வருடம் 12 ரூபாய் அதாவது மாதம் 1 ரூபாய் கட்ட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தை அவர்கள் பெற்று ஆக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, தங்களு டைய மேலான கவனத்திற்காக இதனை வைக்க விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களை கரும்புக்கு விலை நிர்ண யம் செய்ய வேண்டுமென்று கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் தேதி அமைச்சர் அவர்கள் அழைத்துப் பேசினார்கள். அது சமயம் ஒரு வாரத்திலே நான் சொல்கிறேன் என்று சொன்னார்கள்

* * அவர்களைக்

கலந்துகொண்டுதான் கால் அட்டென்ஷன் கொடுத்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்திருக்கிறீர்கள். அரசுக்கு அதை அனுப்பியிருக்கிறேன். வந்தவுடன் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கரும்புக்கான விலை சம்பந்தமாக முத்தரப்பு மாநாடு ஒன்றை அமைச்சர் அவர்கள் கூட்டி நாங்கள் எல்லாம் போய் அங்கே பெரிய விவாதம் நடந்தது. சீக்கிரமாக அறிவிக்கிறேன் என்று சொன் னார்கள். ஆனால் இதுவரையில் அறிவிக்கவில்லை. 120 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். 175 ரூபாய்..........

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்

நாள் அன்று ஹெல்த் கைட் ரெஜிஸ்ட்ரேஷன் கோர்சிற்காக அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்காக இந்த ஹெல்த் கைட் கோர்ஸ் சிலபஸ் சரியான வகையில் இருக்கிறதா ? இல்லையா ? என்று நர்சிங் கவுன்சில் அதை ஆராய்ந்தார்கள்.

The Council examine the syllabus of the Health Guide Course conducted by the Centre and considered that it was not equal to that of the Multi Purpose Health Workers' Course.

இப்போது அவர்கள் கேட்பதெல்லாம் ஹெல்த் கைட் கோர்ஸ், மல்ட்டி பர்ப்பஸ் ஹெல்த் ஓர்க்கர்ஸ் கோர்ஸ் இரண்டும் ஒன்றாக சரிசமமாக கருதப்படவேண்டும்மென்று கேட்கிறார்கள். ஆனால் நர்சிங் கவுன்சில் இரண்டும் சரியில்லை ; மல்ட்டி பர்ப்பஸ் ஹெல்த் ஓர்க்கர்ஸ் கோர்சினுடைய தகுதி பெறவேண்டுமென்றால் அடிஷனல் ஸ்டெடி என்று இன்னும் ஆறு மாதங்களுக்கு அதற்கு பயிற்சி பெறவேண்டும். அப்போது தான் மல்ட்டி பர்ப்பஸ் ஹெல்த் கைட் ஓர்க்கர்ஸ் கோர்சிற்கு உரியவர்களாக, சரிசமமாக கருதப்படுவார்கள் என்று நர்சிங் கவுன்சில் முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே அந்த பிரச்சனை பொறுத்தவரையில் நர்சிங் கவுன்சில் தான் முடிவு எடுத்துக் கொள்ள வேண்டும். அரசாங்கத்தினுடைய நேரடி பொறுப்பு இதிலே கிடையாது ; இருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை நர்சிங் கவுன்சில் கவனிப்பார்கள் என்று தான் நான் நம்புகிறேன்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நர்சிங் கவுன்சில் பதிய மறுப்பதற்கு காரணம் சொல்கிறபோது பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் பயிற்சியில் மூன்றாவது செமஸ்டர் பாட திட்டம் இல்லை என்று சொல்கிறார்கள். மூன்றாவது செமஸ்ட்டர் பாட திட்டம் என்பது ஆறு மாதங்கள் பிராக்டிக்கல் டிரெயினிங் மட்டும்தான். அம்ளிகையில் பயிற்சி பெற்றிருக்கிறவர்கள் பயிற்சி முடித்த பிறகு 4 ஆண்டு, 5 ஆண்டு என்று அரசு நடத்துகிற மினி ஹெல்த் சென்ட்டர் மற்றும் அதுபோன்ற ப்ராஜெக்ட்களில் பணியாற்றிருக்கிறார்கள் என்பதை கருத்தில் கொண்டு அந்த நர்சிங் கவுன்சில் கோருகிற பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் பயிற்சிக்கு சரிசமமான பயிற்சி தான் இது என்று அரசாங்கம் ஒரு ஆணை போட்டுவிட்டால் பிரச்னை முடிந்துவிடும். ஆகவே அரசு இதை பரிவோடு செய்வதற்கு இந்த பல் நோக்கு சுகாதார பணியாளர்களுடைய பயிற்சிக்கு சமமான பயிற்சி தான் என்று அரசு ஆணை வெளியிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நர்சிங் கவுன்சில் என்றால் அது மாநிலத்தினுடைய கவுன்சில் அல்ல ; ஆல் இண்டியா நர்சிங்



கவுன்சிலில் சில கைட்லைன்ஸ் கொடுக்கிறார்கள். இப்படித் தான் சிலபஸ் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். உதாரணமாக நர்சுகளுக்கு 154 சென்டி மீட்டர் உயரம் இருக்க வேண்டுமென்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். ஆல் இண்டியா நர்சிங் கவுன்சிலைப் பொறுத்த வரையில் இவர்களுக்கு எக்ஸ்ட்ரா பயிற்சி இருந்தால் தான் மல்ட்டி பர்ப்பஸ் ஹெல்த் ஓர்க்கர்ஸ்க்கு சரிசமமாக கருதப்படும் என்று அவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது என்னவென்றால் மல்ட்டி பர்ப்பஸ் ஓர்க்கர்சை விட நல்ல திறமைவாய்ந்தவர்கள், அனுபவசாலிகள் என்று சொல்கிறார்கள். அதெல்லாம் உண்மையாகவே இருக்கலாம். அதை ஆராயப் போவதில்லே; பிராக்ட்டிக்கல் டிரெயினிங் இருந்தாலும் கூட கைட்லைன்ஸ்களுக்கு உட்படுத்தப்படாமல் இருக்கிற காரணத்தால் தான் அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும் உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பதை நாம் பரிந்துரையாக நர்சிங் கவுன்சிலுக்கு அனுப்ப தயாராக இருக்கிறோம்.

## (ஆ) மானாமதுரையில் சிமெண்ட் ஆலை நிறுவுவதனால் விளை நிலம் பாதிக்கப்பெறுவது

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. ப. பொன்னுரங்கம் ):** திருவாளர்கள் ப. நெடுமாறன், க. பாரமலை, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ஆகியோர் ஒரேபொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. க. பாரமலை :** மாற்றுத் தலைவர் அவர்களே, ''மானா மதுரை சிப்காட் தொழில் மையத்தில் நிறுவப்படவிருக்கும் சிமெண்ட் தொழிற்சாலையினால் 1,000 ஏக்கர் விளை நிலம் பாதிக்கப்படுவதன் காரணமாக அதைச் சுற்றியுள்ள கிராம மக்கள் மத்தியில் தோன்றியுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

முதன் முதல் மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்திலுள்ள திருவாதவூர் கிராமத்தில், ஆண்டொன்றுக்கு 15,000 டன்கள் சிமெண்ட் உற்பத்தி செய்ய சிறு சிமெண்ட் ஆலை ஒன்று நிறுவ திருவாளர்கள் மேலூர் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் 1979-ஆம் ஆண்டு ஜூலை திங்களில் மத்திய அரசு டைரக்டர் ஜெனரல் ஆப் டெக்னிகல் டெவலப்மெண்டில் பதிவு செய்துள்ளது. இந்நிறுவனம் தமிழக அரசு அதிகாரிகள், மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட சுகாதார அதிகாரி மாநில

சுகாதாரத்துறை அதிகாரிகள் யாவரும் இச்சிறு சிமெண்ட் ஆலைக்கு டைரக்டர் சுகாதாரத் துறையிடமிருந்து அனுமதி வழங்க வேண்டும் என்று கோரியது.

2. இந்த தொழிற்சாலையை அனுமதித்தால் சுற்றுப்புறங்களிலுள்ள 40,000 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்கள் சிமெண்ட் தூசி பறந்து கட்டாந்தரையாக போகக்கூடிய நிலை ஏற்படும் என்றும், ஆடுமாடுகள் பாதிக்கப்படும் என்றும் திருவாதவூர் விவசாயிகளும், பொது மக்களும் கூறினர். எனவே, சிமெண்ட் தொழிற்சாலையை அந்த பகுதியில் ஏற்படுத்துவதை நிறுத்தி வைக்குமாறு ஆர்பாட்டங்கள் நடந்தது. தொழிற்சாலைக்கு அளித்த உரிமத்தை ரத்து செய்யக்கோரி பல மனுக்கள் அரசுக்கு வந்தன. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் விவசாயத்துறை இயக்குநரை விவசாயிகளின் கோரிக்கையைப் பரிசீலிக்கும்படிக் கேட்டுக் கொண்டார். விவசாயத்துறை அதிகாரிகள் கொண்ட ஒரு வல்லுநர் குழு தொழிற்சாலையை நிறுவும் இடத்தை பார்வையிட்டு ஒரு அறிக்கையை அனுப்பியது. அந்த அறிக்கையில் தொழிற்சாலை நிறுவுவதால் அப்பகுதியில் உள்ள மக்களுக்கோ அல்லது நிலங்களுக்கோ தீங்கு ஏதும் ஏற்படாது என தெரிவிக்கப்பட்டது.

3. இதே போல் மைய அரசிடம் கொடுக்கப்பட்ட மனுவின் பேரில் மத்திய அரசின் ஸ்டேட் விவசாய அமைச்சர் அவர்கள் இந்த தொழிற்சாலையை பற்றி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கலந்து பேசினார். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் விவசாயிகளின் எதிர்ப்பை மத்திய அரசின் ஸ்டேட் அமைச்சருக்கு விளக்கிக் கூறினார். மத்திய அரசின் அமைச்சர் அவர்கள் இந்த பிரச்சினையை ஆராய மத்திய அரசிடமிருந்து குழு ஒன்று அனுப்பினார். இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனம் தொழிற்சாலை நிறுவப்படும் இடத்தை பார்வையிட்டு விவசாயிகளுக்கு தொழிற்சாலையினால் எந்த அளவுக்கு பாதகம் ஏற்படும் என்பது பற்றி ஆராய ஒரு மைய குழு அனுப்பப்பட்டது. இந்த மையக் குழுவின் பரிந்துரையின் பேரில் மைய அரசின் டைரக்டர் ஜெனரல் ஆப் டெக்னிகல் டெவலப்மெண்ட், புதுதில்லி, அவர்களிடமிருந்து 1980-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17-ஆம் நாள் அன்றைய கடிதத்தில் மேற்படி சிறிய சிமெண்ட் ஆலையை திருவாதவூரில் அமைப்பதால் காலப்போக்கில் தொழிற்சாலையை சுற்றிலும் உள்ள கிராம மக்களும், கால்நடைகளும், பாதிக்கப்பட்டு அசுத்தமான சூழ்நிலையில் இருக்க நேரிடும். மேற்குறிப்பிட்ட காரணத்தால் மேலூர் சிமெண்ட் ஆலை அமைக்க மாற்று இடவசதி செய்ய வேண்டும் என்றும் மேற்கண்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டது. இந்தப் பரிந்துரை குறித்து அதாவது நிறுவனத்திற்கு பொருந்தும் வகையில் மாற்று நிலம் கொடுக்க ஆணை செய்யும்படி மதுரை மாவட்ட ஆட்சியாளருக்கு பரிந்துரை செய்யப்பட்டது.





4. அதற்கேற்ப திருவாளர்கள் மேலூர் சிமெண்ட் (பி) லிமிடெட் நிறுவனம் மானாமதுரை சிப்காட் தொழில் மையத்தில் ஒரு சிறிய சிமெண்ட் தொழிற்சாலையை ரூ. 104 இலட்சம் செலவில் நிறுவ முடிவு செய்துள்ளது. இதற்காக 8.00 ஏக்கர் நிலம் சிப்காட்டால் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தை இந்நிறுவனம் பெற்றுக்கொண்டு வேலையைத் தொடங்கி உள்ளது. இத்தொழிற்சாலையின் அடிக்கல் நாட்டு விழா 22—12—1982 அன்று நடந்தது.

5. இந்நிறுவனம் தமிழ்நாடு தண்ணீர் அசுத்த தடுப்பு வாரியத்திடமிருந்து தடையில்லைச் சான்றிதழ் பெற்றிருந்தாலும் உறுதிச் சான்றிதழ் பெற வேண்டும் என்ற நிபந்தனையில் சிப்காட் இடம் ஒதுக்கீடு செய்துள்ளது.

6. 1983-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10-ஆம் நாள் அன்று சிப்காட் நிறுவனம் கொடுத்துள்ள இடத்தில் சிமெண்ட் தொழிற்சாலை அமைப்பதை ஆட்சேபித்து முறையீடுகள் வந்துள்ளன. இந்த முறையீடுகளை மாவட்ட ஆட்சித் தலைவருடன் ஆய்ந்து தக்க முடிவு எடுக்கப்படும்.

*திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22 ஆம் நாளன்று இத் தொழிற்சாலையின் அடிக்கல் நாட்டுவிழா நடந்ததாக அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அந்த விழாவிலே நானும் கலந்து கொண்டேன். அந்த விழாவில் சிப்காட் தொழில் மையத்தை துவக்குவதற்காக, மக்களின் சார்பிலே நானும் நன்றியைத் தெரிவித்துப் பேசி இருக்கிறேன். ஆனால், சிமெண்ட் தொழிற்சாலை நிறுவுவது சம்பந்தமாக, அங்குள்ள மக்களுடைய மத்தியிலே ஒரு பய உணர்வு ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அப் பகுதி மக்கள், தாங்களாகவே ஒரு குழு அமைத்து, துலுக்கப்பட்டி, ஆலங்குளம், தாழையூத்து போன்ற சிமெண்ட் தொழிற்சாலைகள் உள்ள இடங்களுக்கெல்லாம் சென்று, பக்கத்திலே உள்ள விவசாயிகளையெல்லாம் விசாரித்து விட்டு, நிச்சயமாகப் பாதிக்கும் என்ற முடிவுக்கு வந்திருக்கிற காரணத்தாலே, அவர்கள் அதை மா... வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். இந்... கையிலே ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ... ஊரில் அமைக்கவிருந்த தொழிற்சாலை சம்பந்தமாக மைய... சின் குழுவின் பரிந்துரையின் பேரில், மைய அரசின் டைரக்... ஜெனரல் ஆப் டெக்னிக்கல் டெவலப்மெண்ட் அவர்க... மிருந்து 17–12–1980 தேதி அனுப்பப்பட்ட கடிதத்தில், '' மேற்படி சிறிய சிமெண்ட் ஆலையை திருவாதவூரில் அமைப்ப... தால் காலப் போக்கில் தொழிற்சாலையைச் சுற்றிலும் உள்ள கிராம மக்களும், கால் நடைகளும், பாதிக்கப்பட்டு அசு... சூழ்நிலையில் இருக்க நேரிடும்..'' என்று குறிப்பிடப்ப... என்று அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையி...

பிட்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்பினுடைய கருத்து மானாமதுரை சிப்காட் தொழில் மையத்தில் இருக்கிற பக்கத்து கிராமங்களுக்கும் பொருந்தும் என்பதை அரசு உணர்ந்திருக்கிறதா ? ஆம் என்றால், பக்கத்தில், விளைநிலம் இல்லாத பகுதிக்கு அந்தத் தொழிற்சாலையை மாற்றுவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த மையக் குழுவினுடைய பரிந்துரைக்குப் பின்னாலே தான் சிப்காட் தொழில் மையத்திலேயே இதற்கு இடம் ஒதுக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதற்காக நடைபெற்ற விழாவிலே கலந்து கொண்டார்கள். சிப்காட் அவர்களுக்கு 8 ஏக்கர் நிலம் ஏற்கெனவே கொடுத்திருக்கிறது. அந்த நிறுவனம் தமிழ்நாடு தண்ணீர் அசுத்த தடுப்பு வாரியத்திடமிருந்து தடையில்லைச் சான்றிதழ் பெற்றிருந்தாலும், உறுதிச் சான்றிதழ் பெற வேண்டும் என்ற நிபந்தனையோடுதான் சிப்காட் அங்கே ஆரம்பிக்க இடம் கொடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை அரசு புரிந்து கொண்டு அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் பாதிக்காத விதத்திலே என்ன, என்ன தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ அவற்றை மேற்கொள்வதற்கு, அந்தத் தொழிலைத் துவங்குவோர்களுக்கு அரசுத் துறை மூலமாக இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்கும். இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதி. யாராவது ஒரு சிலர்தான் அந்தப் பகுதியில் தொழில் துவங்குகிறார்கள். அதுவும் சிமெண்ட் பற்றாக்குறை, வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டுமென்கிற நேரத்திலே, இப்படி ஒன்றிரண்டு பிரச்சினைகள் வருகின்றன. ஒரு சில ஆதாரங்களோடு வருகின்றன. ஒரு சில நேரங்களிலே நம்பிக்கையில்லாத காரணத்தாலோ, யாரோ கிளப்பி விடுவதாலோ, இந்தப் பிரச்சினைகள் வருகின்றன. அப்படிப்பட்ட புகார்கள் இருக்கிற காரணத்தாலே, தொழில் வளம் பெறுவது கெட்டுப் போகக் கூடாது. இருந்தாலும், விவசாயிகளுடைய புகார்களையும் அரசு கவனத்திலே கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய கருத்தோடு எனக்கு உடன்பாடு இருக்கிறது. எங்கள் பகுதிக்கு அந்த சிப்காட் மையம் என்பது உண்மையிலேயே ஒரு வரப் பிரசாதம் என்றே சொல்ல வேண்டும். ஆனாலும், 200, 300 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய அந்த சிமெண்ட் தொழிற்சாலை அமைப்பதனால், 10,000 ஏக்கர் பாதிக்கப்படுமானால், அதிலே 10 கிராமங்களைச் சேர்ந்த 10,000 குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன என்ற கருத்து நிலவுகிற காரணத்தாலே, அவர்களுடைய உணர்வுகளை நாம் பரிசீலிக்க வேண்டும். நான் சிமெண்ட் தொழிற்சாலை வேண்டாம் என்று கூறவில்லை. அந்தப் பகுதியிலே விளை நிலங்கள்



பாதிக்கப்படாத வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு அரசு முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கூறுகின்ற நேரத்தில், இந்த மாதம் 3 ஆம் தேதி அன்று அங்குள்ள கிராம மக்கள் எல்லாம் சேர்ந்து ஏறக்குறைய 5,000 பேர் கூடி, மானாமதுரையிலே ஊர்வலம் நடத்தி, அரசுக்கு இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்தினை அடிப்படையாக வைத்து, இதன் மீது அரசு இறுதியான முடிவு எடுக்கின்ற வரை, அந்தத் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகளை நிறுத்தி வைக்க அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—50)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மானாமதுரை தொழில் பேட்டை, விவசாயப் பயிர்கள் அருகில் இல்லாத ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்து இன்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்ஸைத் தமிழ்நாடு சிப்காட் நிறுவனம் உண்டாக்கியது. அந்தத் தொழிற்பேட்டை நிலையத்திற்குள்ளேதான் இதற்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போல தொழிற்சாலையும் வேண்டும், அதே நேரத்திலே இது நிறுத்தவும் வேண்டுமென்றால், மற்ற ஏதாவது ஒரு இடத்திலே இதை நிறுவ முயன்றாலும்கூட அங்கேயிருக்கின்ற விவசாயிகள் ரெப்ரசன்டேஷன் கொண்டு வருவதற்கும் வாய்ப்பிருக்கிறது. அந்தப் பகுதியிலேயும், அந்த ஊருக்குப் பக்கத்திலேயும், அந்த இடத்தைச் சுற்றியுள்ள கிராமங்களிலேயும் இருப்பவர்கள் ஆப்ஜெக்ஷன்ஸ் சொல்லுகின்ற வாய்ப்பும் இருக்கிறது. இங்கே ஒரு முறை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் சொன்னார்களே, ஆம்லெட்டும் வேண்டும், முட்டையையும் உடைக்க வேண்டாம் என்று, அதைப் போலத்தான் இதுவும் இருக்கிறது. இருந்தாலும்கூட அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் போராடியிருக்கிறார்கள். போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள், இதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று முறையீடுகள் செய்துள்ளார்கள். இது குறித்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளையும், தொழிலதிபர்களையும், தொழில் துறையைச் சேர்ந்த அந்தப் பகுதியிலுள்ள அதிகாரிகளையும் அழைத்துப் பேசி மாற்று ஏற்பாடு செய்ய முடியுமா அல்லது அவர்களை கன்வின்ஸ் செய்ய முடியுமா, அல்லது விவசாயிகள் பாதிக்கப்படாமல் மாற்று ஏற்பாடுகளைச் செய்ய அங்கேயே துவங்க முடியுமா என்பதுபற்றி மாவட்ட ஆட்சித்தலைவரவர்கள் அதிகாரிகளோடும் விவசாயிகளோடும் கலந்து பேசுமாறு அறிவுரை கூறி, நடவடிக்கை மேற்கொள்ளலாம். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினரவர்களும் அதில் இடம் பெற்று வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில், இந்த சட்டத்தை ஆய்ந்து பார்த்ததில், சொன்ன நோக்கத்திற்கும் இதிலே இருக்கின்ற சட்டவிதிகளுக்கும் முரண்பாடான கருத்துக்கள் பல்வேறு கிடைக்கின்றன. முக்கியமாகச் சொல்லவேண்டுமானால், ஜனநாயக ரீதியாக நிர்வாகம் என்பதற்கு ஒரு சம்மட்டி அடியாக இந்தச் சட்டம் அமைந்து இருக்கிறது என்று கூட நான் கருதுகிறேன். காரணம், பெரும்பான்மையான பிரிவுகளில் இந்த சங்கத்தின் உறுப்பினர்கள் அல்லது சங்கத்தின் நிர்வாகஸ்தர்கள் முடிவு எடுப்பதைவிட, மேலே இருக்கிற அதிகாரிகள், பதிவாளர் அல்லது அவருடைய அதிகாரம் பெற்று இருக்கின்ற அதிகாரிகள்தான் இவர்களை எல்லாம் ஆட்டிப்படைக்கின்ற விதத்திலே முழுமையாக இருக்கின்றது. ஏற்கனவே இருந்த சட்டத்திலேகூட இந்த நிர்வாகத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் செய்த தவறுகளைக் கண்டிப்பதற்காக, நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் அந்த அதிகாரம் பெற்றிருந்தார்கள்.

ஆனால் ஏனோ இந்தப் புதிய சட்டத்தில் எல்லா பிரிவுகளிலுமே இந்த அதிகாரம் பூராவும் அந்த அதிகாரிகளுக்குத்தான் தரப்படுகிறது, என்பது எனக்கு புரியவில்லை. இதிலே ஜனநாயக ரீதியான கொள்கை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்ற நோக்கத்தையும் சொல்லி அதிகாரத்தைப் பூராவும் அரசு அதிகாரிகளுக்கு கொடுப்பது எனக்கு விந்தையாகத் தெரிகிறது. நாம் கூட பார்த்து வருகிறோம். தந்தை பெரியாரை சொல்லுகிறோம். அவர்களுடைய கொள்கையைச் சொல்லுகிறோம். ஆனால் செயல்படுத்துகிற நேரத்திலே அதற்கு மாறான முரண்பட்ட கருத்துகளை எல்லாம் நிறைவேற்றிக் கொண்டு வருகிற காட்சிகளை அன்றாடம் பார்க்கிறோம். அதைப்போலவேதானோ என்னவோ இதிலும் இந்த அரசு இரட்டை வேடம் போடுகிறதோ என்று நான்கூட அஞ்சுகிறேன்.

இங்கே சொல்லுகிறோம். மத்திய அரசிலே அதிகாரங்கள் எல்லாம் குவிந்து கிடக்கின்றன. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்றெல்லாம் சொல்லுகிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட சொல்லுகின்றபோது, ஏறத்தாழ மாநிலங்கள் (Glorified municipalities) ' குலோரிபைடு முனிசிபாலிட்டிஸ் ' என்ற அளவிலே வளர்ந்து விட்டதே தவிர, முழுமையான அதிகாரம் பெறவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். அதைப்போலவே நான் சொல்லுகிறபோது, இப்போது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறீர்கள். ஆனால் இங்கே இருக்கின்ற கூட்டுறவு சங்கங்களுக்கு, அதனுடைய மேல் அமைப்புக்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தை விட, பதிவாளருக்கு இருக்கின்ற அதிகாரம் தான் அதிசப்படியாக இருக்கிறது. நான் அஞ்சுவது எல்லாம் நாளடைவில் இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துகிறபோது, ஏறத்தாழ கூட்டுறவுச் சங்கங்கள்





எல்லாம் ஒரு அரசுத் துறையாக, அரசினுடைய, ஒரு டிப்பார்ட்மெண்டாக மாறிவிடுமோ என்று அச்சப்படுகிற விதத்திலே, இந்தச் சட்டம் அமைந்திருப்பதாக நான் கருதுகிறேன்.

நான் நினைப்பதெல்லாம், கூட்டுறவுச் சங்கங்கள் சுயேச்சையாக தன்னிச்சையாக, அதனுடைய கொள்கையை, அந்தப் பகுதி மக்களுடைய வாழ்வுக்காக, மேம்பாட்டிற்கு இருக்க வேண்டுமே தவிர, அரசாங்கம் சொல்லுகிறபடி எல்லாம் செய்து வருகிற ஒரு நிர்வாகமாக இருக்கக்கூடாது என்றுதான் நான் சொல்லுகிறேன். ஏற்கெனவே தனி அதிகாரிகள் பிடியிலே இன்றைக்கு கூட்டுறவு இயக்கம் பூராவும் வளர்ச்சியில் இருந்து பின்வாங்கிவிட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. The English proverb is: Out of frying pan into the fire.

[முற்பகல் 11-00.]

அதேபோல் எப்படியோ தனி அதிகாரிகளிடத்திலேயிருந்து தப்பித்து கூட்டுறவு நிர்வாகம் ஜனநாயக ரீதியாக அமையப் போகிறது என்ற மகிழ்ச்சி ஒருபுறம் வருவதாக இருந்தாலும், ஆனால் இதிலே இருக்கிற சட்டப் பிரிவுகளின் அடிப்படையிலே பார்த்தால் மீண்டும் ஒரு பெரிய நெருப்பிலே இந்த இயக்கம் மாட்டிக்கொள்ளுமோ என்று நான் அஞ்சுகிறேன். இதிலே இருக்கின்ற சட்டப்பிரிவுகளைப் பார்க்கின்றபோது உறுப்பினராக யார் வேண்டுமானாலும் சேரலாம் என்பது அங்கே இருக்கின்ற நோக்கத்திலே இதுதான், ஓப்பன் மெம்பர்சிப் என்பதுதான். இதிலேகூட சொல்லுகின்றபோது, யார் யாருக்கு தகுதியின்மை என்று சொல்கிற 23-வது பிரிவிலே, அதேபோல் எந்த ஒரு சங்கத்திலேயும், அந்தச் சங்கத்தை ஒத்த வியாபாரத்திலோ அல்லது பணியிலோ ஈடுபட்டவர்கள் உறுப்பினராகக்கூடாது என்று போட்டிருக்கிறார்கள். அதேபோன்ற ஒரு சங்கத்திலிருந்து ராஜினாமா செய்த ஒரு ஆண்டுக்காலத்திற்குள்ளாக மீண்டும் உறுப்பினராக ஆவதை தடைசெய்திருக்கிறார்கள். அதைப் போலவே அதேவகையான வேறு ஒரு சங்கத்திலே உறுப்பினராக இருந்தால் இந்தச் சங்கத்திலே உறுப்பினராக இருக்கக்கூடாது, ஒரே மாதிரியான சங்கமாக இருந்தால் இருக்கக்கூடாது என்ற கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் வரிசையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் உச்சியும், வின்சென்ட்டும் அமர்ந்திருக்கிறார்கள். இது மரபு அல்ல. அமைச்சர்கள் இடத்திலே உறுப்பினர்கள் உட்காரக்கூடாது என்பது ஒரு மரபாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் : (திரு. ப. பொன்னுரங்கம்) : தயவு செய்து உறுப்பினர்கள் அவர்களது இருக்கையில் அமரவும்.

*திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தற்காலிகத் தலைவரவர்களே, இந்தத் தொழிலகம் வருவதில் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பெருமையும், மகிழ்ச்சியும் அடைந்தாலும் கூட, அது அந்தக் கிராம மக்களை மிகவும் பாதிக்கின்ற அளவில் இருக்கிறது. மேலூரில் அமைக்க நினைத்த சூழ்நிலையில் அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தும், அங்கே அசுத்தம் ஆகிவிடும் என்று சொல்லிய காரணத்தால் மாற்று இடத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், மேலூரிலே வைத்தால் அசுத்தமாகிவிடும், மானாமதுரையிலே வைக்கும் பொழுது மட்டும் அசுத்தமாகாதா ? ஆகவே, மானாமதுரையிலே வைப்பதற்குப் பதிலாக, சிவகங்கை தாலுக்காவுக்குப் பக்கத்திலே, அதையொட்டி, இரண்டு மூன்று கிலோ மீட்டருக்குப் பக்கத்தில் புஞ்சைக் காடுகள் பாலைவனமாக, தரிசு நிலமாக இருப்பது தெரியுமா ? அப்படியென்றால் அந்த இடத்திலே இந்த நிறுவனத்தை நிறுவி, அந்த ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்புக்கு வழி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேலூரில் தேர்வு செய்யப்பட்ட இடத்தை ஏற்கனவே மையக் குழு பார்த்தபொழுது அது விவசாய நிலங்களை ஒட்டிய பகுதியாக இருக்கிறது, எனவே, மானாமதுரை சிப்காட் தொழில் மையம், நிலம் இல்லாத காட்டுப் பகுதியில் இடம் தேர்வு செய்து, தொழில் மையம் அமைக்கப் பட்டிருக்கிறது. அதிலே இந்த நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போல காட்டு நிலமாக இருந்தாலும், தரிசு நிலமாக இருந்தாலும், ஊரே இல்லாத இடமாக இருந்தாலும் அங்கே நிலம் இருந்தால் தொழில் துவங்குவதற்குத் தொழிலதிபர்களுக்குச் சில வசதிகள் வேண்டும். குடி தண்ணீர் வசதி, ரா மெட்டீரியல்ஸ் எளிதில் கிடைக்கும் நிலை, சாலை வசதி, இப்படிப்பட்ட பலவிதமான வசதிகள் தொழில்களைத் துவக்குகின்ற தொழில் அதிபர்களுக்குத் தேவைப்படும். அந்த வசதிகளெல்லாம் இருந்தால்தான் அவர்களும் போவார்களே தவிர நாம் உத்தரவிட்டு ஏதாவது ஒரு இடத்திற்குப் போகும்படி கட்டாயப்படுத்தினால் அந்த இடத்திற்கு அவர்கள் போக மாட்டார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற அந்த உணர்வைப் புரிந்து கொண்டு, விவசாய மக்களின் பிரதிநிதிகளையும், தொகுதி எம்.எல்.ஏ.யையும், அரசுத் துறையில் உள்ள இன்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்ட் அதிகாரிகளையும், தொழில் துவங்கும் தொழிலதிபர்களையும், அழைத்து மாவட்ட ஆட்சித் தலைவரைப் பேசச் சொல்லி மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பதை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## 5. அரசினர் சட்ட முன் வடிவு

### கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1980

மாண்புமிகு திரு. பி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

'' தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டமுன்வடிவு ** (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 45/1980) (ஆய்வுக்குழு திருத்தி அமைத்தவாறு) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும் ''.

*திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய சட்டத்தைத் திருத்தி, ஒருங்குபடுத்தித் தொகுப்பதற்கான இந்த சட்ட முன்வடிவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை எடுத்து வைக்கிறேன்.

முதலாவதாக இந்தச் சட்ட திருத்தம், புதிய சட்டம் கூட்டுறவு நோக்கத்திற்கும், கொள்கைக்கும், மேம்பாடு அளிப்பதற்காகவும் இதுலே குறிப்பாக சொல்லப்படுகிற 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு', 'சிக்கனமே சிறந்தது', 'ஒருவருக்காகப் பலர், பலருக்காக ஒருவர்' இதுபோன்ற தத்துவங்களின் அடிப்படையில் இந்தச் சட்டத் திருத்தம் இருக்கின்றதா என்பதை ஆய்ந்து பார்க்கும் வாய்ப்பு கிடைக்கிறது. அதிலும் குறிப்பாக ஜனநாயக நெறியிலே, ஜனநாயக முறையிலே இந்த நிர்வாகம் அமைக்கப்படவேண்டுமென்பது கூட்டுறவு கொள்கையின் அடிப்படையாகும். உலக உத்தமர் காந்தியடிகள் கூட, கிராமங்களிலே, கிராம ராஜ்யம்தான் ஜனநாயகத் தொட்டிலாக இருக்கிறது என்று சொல்லுகிறபோது, கிராமங்களிலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்புகளிலே பயிற்சி பெறுகின்ற வாய்ப்பு ஜனநாயக ரீதியாக இருக்கின்ற நல்ல ஒரு வாய்ப்பாக அமையும். ஆனால் இன்றைய தினம் அப்படிப் பயிற்சி பெறுகிற வாய்ப்போ அல்லது மக்களுடைய வாழ்வு வளம் பெறுகிற வாய்ப்போ இல்லாமல், கிராம பஞ்சாயத்துகள் இருக்கின்ற நிலையிலேதான் கூட்டுறவுச் சங்கங்கள் பாழடைந்து கிடக்கின்றன. எப்படியோ இந்தப் புதிய சட்டம் வந்து, பிறகு தேர்தல் வந்து நிச்சயமாக ஜனநாயக நெறிப்படி, அங்கே இருக்கின்ற உறுப்பினர்களே நிர்வாகம் செய்யக்கூடிய அமைப்பிலே இந்த சங்கங்கள் எல்லாம் மாறவேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையில் இங்கே சில கருத்துக்களை எடுத்து வைக்கிறேன்.

---

**1982-ம் ஆண்டு மார்ச் 29 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

**திரு. கு. பா. பழனியப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தகுதியில்லாதவர்கள் உறுப்பினர்களாக ஆகக் கூடாது, தகுதி இல்லாதவர்கள் எங்கே இருக்க வேண்டுமென்று தான் இப்போது பேசிக்கொண்டு இருக்கிறேன். குறிப்பாக ஒத்த வியாபாரத்திலே இருப்பவர்கள் அதிலும் இருப்பவர்கள் உறுப்பினராக ஆகக்கூடாது என்று சொல்லி 23 ஒத்தப் பணியிலே 1—ஜி என்ற பிரிவிலே இருக்கிறது. அப்படிச் சொல்லுகின்ற போது ஒரு விபரத்திற்காகச் சொல்கிறேன். கூட்டுறவுப் பண்டகசாலையிலே ஒருவர் உறுப்பினராகலாம். யார் வேண்டுமானாலும் உறுப்பினராகலாம். என்று ஒருவர் பதிவு செய்து கொள்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் சிறு வியாபாரியாக இருக்கலாம். அல்லது ஒரு வெற்றிலைப் பாக்குக் கடையிலே இருக்கலாம். அங்கே இருக்கிறவர் ஒரு சோப்புகட்டி கூட அந்த வியாபாரத்திலே........(குறுக்கீடு).

**திரு. மி. வின்சென்ட் :** தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மட்டும் எதிர்க்கட்சித் தலைவர்கள் வரிசையிலே உட்காரலாமா ? (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. ப. பொன்னரங்கம்):** அமைச்சர் அவர்கள் உட்காருகிற இடத்தில்தான் உட்காரக்கூடாது என்று சொன்னார். அவர்கள் உட்கார்ந்து இருப்பது அமைச்சர்கள் இடம் அல்ல. (குறுக்கீடு). இது லீடர்ஸ் உட்காருகின்ற இடம், அப்போசிசன் லீடர்ஸ். ஆனால் நீங்கள் அமைச்சர்கள் உட்காருகின்ற இடத்திலே உட்கார்ந்தீர்கள், அதனால்தான்.

**திரு. கு. பா. பழனியப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சொல்லுகின்ற நேரத்திலே ஒரே பணி அல்லது ஒரே வியாபாரத்தில் சேர்ந்திருக்கிற ஒருவர் அதைப்போன்ற ஒரு நோக்கம் கொண்ட ஒரு சங்கத்திலே உறுப்பினராக ஆவதைத் தடை செய்திருக்கிறார்கள். நான் விளக்கத்திற்காக கேட்கிறேன் ஒரு கூட்டுறவு பண்டகசாலையிலே உறுப்பினராக ஆவதற்கு விண்ணப்பம் செய்து கொண்டால் அவர்கள் ஏற்கெனவே ஒரு சிறு வியாபாரத்திற்காக............

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது ஒரு சிறிய பிரச்சினை எழுந்தது. அது குறித்து நீங்கள் என்ன தீர்ப்புச் சொல்கிறீர்கள் ? இதிலே போய் பிரசிடென்ட்டாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இடத்திலோ அல்லது வரிசையிலோ அல்லது எதிர்க்கட்சித் தலைவர்கள் வரிசையிலோ உறுப்பினர்கள் யாரும் உட்காரக்கூடாது என்று எந்த விதியும் கிடையாது. இதே உறுப்பினர்கள் கூட நாளைக்கு அமைச்சர்களாகக்கூட வரலாம். எனவே எந்த மதியும் இல்லை. ஓட்டு எடுக்கிறபோது அல்லது ஒரு முக்கியமான பிரச்சினை வருகிறபோது அவர்களுடைய இருக்கையிலே



இருக்க வேண்டும் என்று இருக்கிறதே தவிர, அந்த இடத்திலே தான் உட்கார வேண்டும் என்றில்லை. மாறி உட்காரக்கூடாது என்றில்லை. இங்கேயிருக்கின்ற அமைச்சர்கள்கூட சில சமயங்களில் மாறி உட்கார்ந்து பேசுகிறார்கள். அப்படி மாறி உட்கார்ந்தால் ஒன்றும் பிரச்சினை இல்லை. அதிலே ஒன்றும் ரெஸ்ட்ரிக்ஷன், தடை ஒன்றும் கிடையாது.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்களுக்கு என்று தனியாக ஒரு மரியாதை, ஒரு மரபு உண்டு. அதனாலேதான் சொல்லுகிறேன். சட்டத்தைப் பற்றி இப்போது பேசவில்லை. அமைச்சர்களுக்கு உரிய மரியாதை தரவேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மரியாதை மனதிலே இருந்தாலே போதும். உட்காருகின்ற இடத்திலே வேண்டுமென்பதில்லை. அது பலருடைய உரிமையைப் பறிக்கும்.

**திரு. கு. பா. பழனியப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அப்படி இந்த ஒரு காரணத்தைக் காட்டி, அப்படிப் பட்ட சிறு வியாபாரிகள் எல்லாம் கூட கூட்டுறவு சங்கத்திலே உறுப்பினராவதற்குத் தடைசெய்வது எந்த விதத்தில் பொருந்தும் என்பதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

அதைப்போலவே, அவர்கள் இராஜினாமா செய்து இருந்தால் அப்படி இராஜினாமா செய்த காலத்தில் இருந்து ஓராண்டுக் காலம் ஆகவில்லையென்று சொன்னால், அவர் மறுபடியும் உறுப்பினராக தடை விதித்து இருக்கிறார்கள். இது ஏதோ உள்நோக்கம் தருவதாக இருக்கிறது என்று நான் கூற விரும்பாவிட்டாலும் கூட அதற்கு என்ன காரணம் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

ஒரு உறுப்பினர் மற்றொரு சங்கத்தில் உறுப்பினராவதைத் தடை செய்து இருக்கிறீர்கள். நான் ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். ஒரே நபர் இரண்டு வேறு மாவட்டங்களில் நிலம் வைத்து இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவர் அந்த மாவட்டத்திலேயும், அவருக்குள்ள நிலத்தில் பம்ப்செட் போட கூட்டுறவுக் கடன் வாங்க விரும்பினால், அங்கேயும் உறுப்பினராகவேண்டும். அவர் ஏற்கெனவே மற்றொரு சங்கத்தில், மற்றொரு மாவட்டத்தில் உறுப்பினராகச் சேர்ந்து, அங்கே கடன் பெற்று விட்டார் என்பதற்காக இந்த மாவட்டத்தில் உள்ள நிலத்தின் பம்ப்செட் போட கடன் வாங்க வழிசெய்துகொள்ளும் வகையில் உறுப்பினராகும் வாய்ப்பை இந்தச் சட்டம் தடை செய்கிறது. இந்தச் சட்டத்தின்படி, ஒருவர் இரண்டு இடத்தில் உறுப்பினராகிவிட்டால், அவர் இரண்டு இடத்திலும் உறுப்பின

ராக இருக்கும் தகுதியை இழந்துவிடுகிறார் என்று இருக்கிறது. அப்படிப்பட்ட நிலை இந்தச் சட்டத்தில் இருப்பதால் இது எப்படிப் பொருத்தமானதாக இருக்கும் என்பது எனக்குப் புரியவில்லை. ஏனென்றால், ஆங்காங்கு கொடுக்கப்படும் கடன் அந்தந்த நிலத்தின் பெறுமானத்தைப் பொறுத்துத்தான் கொடுக்கப்படுகிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. வேண்டுமானால், இந்தச் சட்டத்தில் ஒன்றை நீங்கள் போட்டுக்கொள்ளலாம். ஒரு இடத்தில் தலைவராக இருக்கின்ற ஒருவர், மற்றொரு இடத்தில் நிர்வாக உறுப்பினராகவோ அல்லது தலைவராகவோ இருப்பதற்கோ தகுதியில்லை என்று வேண்டுமானால் போட்டுக் கொள்ளலாம். சாதாரண உறுப்பினராக ஆகி அவர் கடன் வசதி பெறக்கூடாது என்று கூறுவது முற்றிலும் பொருத்தமற்றது. அப்படிப்பட்ட பிரிவு திருத்தப்பட வேண்டும். அல்லது மாற்றம் செய்யப்பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்தப் புதிய சட்டம் அமுலுக்கு வந்து விட்டுவிட்டால் ஏற்கனவே இரண்டு சங்கங்களில் கடன் பெற்று இருப்பவர்கள், இரண்டு சங்கங்களில் உறுப்பினராக இருப்பவர்கள், தங்களுடைய உறுப்பினர் தகுதியை இழந்து விடுவார்கள். அப்படிக் கடன் பெற்றவர்கள் உறுப்பினர்கள் இல்லை என்று நிலை வந்து விட்டால், அப்படிப்பட்ட நபர்களிடமிருந்து எந்த வகையில் கடன் நிலுவைகளை விரைவாக வசூலிக்க முடியும்? கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர் என்று சொன்னால், அவர் செலுத்த வேண்டிய கடன் நிலுவையை வசூலிக்க ரெவின்யூ ரெகவரி ஆக்ட் மூலம் கூட நடவடிக்கை எடுத்து வசூலிக்கலாம். ஆனால் சங்க உறுப்பினர் இல்லை என்று சொன்னால், அந்த நடைமுறைக்கு மாறாக, கோர்ட் மூலமாகத்தான் நாம் நடவடிக்கை எடுக்கவேண்டி இருக்கும். ஆகவே, இது கூட்டுறவு முறைக்கு அப்பாற்பட்டது மட்டுமல்லாமல், கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகச் செலவையும், காலதாமதத்தையும் ஏற்படுத்தும் என்பதால் இதைக் கண்டிப்பாக சீர்தூக்கிப் பார்த்து, மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போர்ட் ஆப் மேனேஜ்மென்ட் கூட்டம் 3 மாதத்திற்கு ஒரு முறையாவது கூட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், உறுப்பினராவதற்கு ஒருவர் விண்ணப்பம் கொடுத்து, 30 நாட்களுக்குள் அந்த விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, முடிவு செய்யப்படவில்லையென்றால், 30 நாள் ஆனவுடனேயே அவர் உறுப்பினராகிவிடுகிறார். இப்படிப்பட்ட ஒரு பிரிவு இருக்கின்றபோது, நிர்வாகக் குழு 3 மாத கால இடைவெளியில் ஏதோ ஒரு காரணத்தால் கூட்ட முடியவில்லை என்று சொன்னால், நிர்வாகக் குழு கூடி முடிவு எடுக்கும் முன்பே ஒருவர் உறுப்பினர் ஆகும் வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது. இது ஒரு பொருத்தமற்ற சூழ்நிலையை ஏற்படுத்துகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எவர் ஒருவர் உறுப்பினராவதற்கு மனு கொடுத்துவிட்டு, 30 நாளைக்குள் அதற்கான முடிவு சொல்லப்படவில்லை



யென்றால், அவர் ஆட்டோமேடிக்காக உறுப்பினராகி விடுகிறார் என்பதைச் சாக்காக வைத்துக்கொண்டு, ஒருவர் நிர்வாகக் குழுக் கூட்டம் முடிந்த அடுத்த நாளே உறுப்பினர் ஆவதற்கு விண்ணப்பம் கொடுத்து, அவர் விண்ணப்பம் கொடுத்த ஒரு மாதம், அல்லது 2 மாதம் அல்லது 3 மாதம் நிர்வாகக்குழுக் கூட்டம் நடத்த முடியவில்லையென்றால், அவர் உறுப்பினராகிவிட முடியும். அவர் உறுப்பினராவதற்குத் தகுதியுடையவராக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அது பற்றிய பரிசீலனை முடிவதற்கு முன்பே அவர் உறுப்பினராகி விடலாம். அந்தத் தகுதியை அவர் பெற்று விடுகிறார். இது எப்படிப் பொருத்தமானதாக இருக்கும் என்பதை ஒப்புநோக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே 34(1) (i) என்ற பிரிவில் ஒருவர் தலைவராக இருப்பதற்கான தகுதிகளை நிர்ணயித்து இருக்கிறீர்கள். அதிலே சொல்கிறபோது, தமிழ் மொழியோ அல்லது வேறு எந்த மொழியோ எழுதப்படிக்கத் தெரிந்த ஒருவர்தான் தலைவராக வரமுடியும் என்று போடப்பட்டு இருக்கிறது, நான் ஏற்றுக் கொள்கிறேன். எழுதப்படிக்கத் தெரிந்தவர்தான் தலைவராக வரவேண்டும். ஏனென்றால், போடுகின்ற தீர்மானத்தை அவர் படிக்க, எழுதத் தெரிந்து இருக்க வேண்டும். மேலே இருந்து வருகின்ற கடிதங்களை, மனுக்களை படிக்கத் தெரிந்து இருக்க வேண்டும். ஆகவே, ஓரளவிற்கு எழுதப்படிக்கத் தெரிந்தவர் தலைவராக வரவேண்டும் என்பதில் ஆட்சேபனை இல்லை. எழுதப்படிக்கத் தெரிந்தால் மட்டும் போதுமா? பேசத் தெரிய வேண்டுமா, வேண்டாமா? ஒருவர் ஊமையாக இருந்தால் கூட, எழுதப்படிக்கத் தெரிந்தவர் என்ற காரணத்தால் தலைவராக வந்துவிடமுடியும்.

ஊமை, உளருவாயன் எல்லாம் தலைவராக வந்தால் எப்படி இருக்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, எழுதப்படிக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும் என்பதோடு, பேசத் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், குருடர்கள் பள்ளியில் படித்த சிலர் கூட, எனக்கு எழுதப்படிக்கத் தெரியும் என்று சொல்லி தலைவராகிவிடலாம். ஆகவே கண்பார்வையும் தெரிந்து இருக்க வேண்டும் என்று இதிலே இருக்க வேண்டும். இதையெல்லாம் நாம் சேர்க்காவிட்டால், பின்னால் நீதிமன்றத்தில் இதையெல்லெல்லாம் பற்றிச் சேலஞ்சு செய்கிறபோது இப்படிப்பட்ட வினாக்கள் எழுப்பப்படும் என்பதை முன்னெச்சரிக்கையாக நான் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11—10)

அதைப்போலவே, இதிலே பல்வேறு இடங்களிலே சொல்லப்பட்டிருக்கிற விதிகளைப் பார்த்தால் மீண்டும், மீண்டும் ஒரு இடத்தில் குறிப்பிட்டதையே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த

நிலையைத் தவிர்த்து, சுருக்கமாகச் சொல்லியிருக்கலாம். முன் பிரிவுகளில் சொன்னவை இதற்கும் பொருந்தும் என்பதுபோலச் சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை இன்னும் சுருக்கியிருக்கலாம். முன்னால் இருப்பதையே பின்னால் மீண்டும், மீண்டும் சொல்லியிருப்பது தேவையில்லை என்று நான் கருதுகிறேன். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் 34(4) (a) மற்றும் (b)களில் குறிப்பிட்ட விதிகளை 34 (4) (a) (i), (ii) பிரிவுகளிலும் திரும்பத் திரும்பக் கூறியிருக்கிறார்கள்.

அடுத்து, 34(7) பிரிவை எடுத்துக்கொண்டால் ஒருவர் இரு முறை தலைவராக இருந்தால் மீண்டும் தலைவராக வரக்கூடாது என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அது எனக்கு மகிழ்ச்சி தான். என்னைப் போன்ற இளைஞர்களுக்கு இதனால் வாய்ப்பு கிடைக்கும். ஆகையால் அது நியாயமாகவும் தோன்றுகிறது. ஆனால்......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ப. பொன்னையன்) :** சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கு. பா. பழனியப்பன்:** மாற்றுத் தலைவரவர்களே, இது ஒரு பெரிய சட்ட முன்வடிவு. நிறைய பேசவேண்டியிருக்கிறது இன்னும் கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் பேசும்போது மக்கள் ஆட்சித் தத்துவத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய கூட்டுறவுச் சட்டத்தில் அதிகாரிகளுக்குப் பல இடங்களில் அதிக அதிகாரம் தரப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். சில இடங்களில், உதாரணமாக 34(1) போன்றவற்றில் கூறியதையே மீண்டும் மீண்டும் கூறியிருக்கிறார்கள் ரிப்பீட் செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். என்னுடைய வேண்டுகோள் எல்லாம், வழக்கறிஞர், அன்பு சகோதரர் பழனியப்பன் அவர்கள் இன்னும் சற்று விளக்கமாக சொல்ல வேண்டும் என்பதுதான். அது அரசுக்கு உதவியாக இருக்கும் என்பதால் சற்று விவரமாகச் சொல்ல வேண்டும். நான் இந்த வேண்டுகோளை விடுக்கும் நோக்கம், இந்தக் கூட்டுறவுச் சட்டம் உழைப்பவர்களுக்கும் நலிந்த பிரிவினருக்கும் பயனளிக்கும் ஒரு சட்டமாக, அதிகாரிகளின் தலையீடு அதிகமாக இல்லாத ஒரு சட்டமாக இருக்க வேண்டும் என்பதிலே அதிக அக்கறை கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சற்று விளக்கமாக, விரிவாகப் பேசுவதற்குத் தலைவரவர்கள் அவரைச் சிறிது நேரம் கூடுதலாகப் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. கு. பா. பழனியப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஒரு பிரிவில் சொல்லியிருப்பதை மீண்டும் மீண்டும் கூறியிருப்பதற்குப் பதிலாக முன்னால் சொன்னது இதற்கும் பொருந்தும்; இந்தச் சட்டத் திருத்தம் வருவதற்கு முன்னால் இருந்தது இப்போதும் பொருந்தும் என்று ஒரே வாக்கியத்தில் சொல்லியிருந்தால் சுருக்கமாகவும் நன்றாகவும் இருந்திருக்கும். அதைப்போலவே ஒரு உறுப்பினரின் தகுதியை அல்லது நிர்வாக உறுப்பினரின் தகுதியைப் பற்றிச் சொல்லும்போது இப்போது இருக்கிற நிலைமை இந்தச் சட்டத் திருத்தம் வருவதற்கு முன்பு இருந்த நிலைமைக்கும் பொருந்தும் என்று இருந்தால் போதும். அந்தவகையில் ஒரே வாக்கியத்தில் சொல்லியிருக்கலாம். அதைப் போலவே 34 (7)-ல் ஒருவர் இரண்டுமுறை கூட்டுறவுச் சங்கத்தில் தலைவராகப் பணியாற்றினால் மீண்டும் ஒரு முறை தேர்ந்தெடுக்கத் தகுதியற்றவர் ஆகிறார். ஒரு வகையிலே அதை நான் வரவேற்கக் கூடியவனாக இருக்கிறேன். ஆனால் மற்றவர்களுக்கு அது பொருந்துமா? குறிப்பாக ஒருவர் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னால் மீண்டும் வரக் கூடாது என்று சொல்ல முடியுமா? அதைப் போன்று அமைச்சர்களுக்குச் சொல்ல முடியுமா? அதைப் பற்றி நாம் சற்று யோசனை செய்து பார்க்க வேண்டும். இரண்டு முறை தலைவராக வந்த ஒருவர் மீண்டும் தலைவராக வரக் கூடாது என்றால் சில சிறந்த வல்லுநர்களை இழக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது, அது சரியான ஒரு நடைமுறை அல்ல என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தக் கூட்டுறவு இயக்கம் வளர வேண்டுமென்ற நோக்கத்திலே நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்காகவோ அல்லது மற்றவர்களுக்காகவோ நான் சொல்லவில்லை.

அடுத்து, இந்தச் சட்ட முன் வடிவிலே 36-வது பிரிவிலே தகுதியின்மை (டிஸ்குவாலிபிகேஷன்) பற்றி ஒரு இடத்திலே சொல்கிறார்கள்.

இந்தச் சட்டம் சொல்கிறது, இதிலே ஒரு தவறு நடைபெற்றால் அவர் மீண்டும் அந்தச் சங்கத்திலோ அல்லது கூட்டுறவு இயக்கத்தைச் சேர்ந்த வேறு எந்தச் சங்கத்திலோ, எப்பொழுதுமே உறுப்பினராகவோ, நிர்வாகஸ்தராகவோ இருக்கவே கூடாது என்று இருக்கிறது. கொள்கை ரீதியாக இதை ஒப்புக் கொண்டாலும், ஏனென்றால் தவறு செய்தவர்கள் மீண்டும் இதிலே இருக்கக் கூடாது என்பது நியாயம் தான். ஆனால் இது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணாக வந்து விடுமோ என்றும் நான் அச்சப்படுகிறேன். ஏனெனில் ஒரு தவறுக்கே இரண்டு தண்டனை விதித்தது போல் ஆகிவிடக் கூடாதே என்பதற்காகத் தான். டிஸ்குவாலிபிகேஷன் என்பது

ஒரு தண்டனையாகவும், செய்த குற்றத்திற்கு வழங்கப்படும் தண்டனை இரண்டாவது தண்டனையாகவும் சேர்ந்து ஒரு குற்றத்திற்கே இரண்டு தண்டனையாக ஆகி விடுமோ என்று நான் அச்சப்படுகிறேன். இதற்கான பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கும்போது அளித்திட வேண்டுகிறேன்.

அடுத்து 48 (6) என்ற பிரிவிலே, இந்த நிர்வாகக் குழு இருக்கிறதே அது ஏதாவது தவறு செய்தால், நிர்வாகக் குழு சாதாரணமாக ஊழியர்களுக்குச் சம்பளம், முதலானவை கொடுப்பது வருவது போன்ற பல்வேறு பணிகளைச் செய்து வருகிறது. அது தவறு செய்தால் 500 ரூபாய் வரை அபராதம் விதிப்பது என்றெல்லாம் வைத்திருக்கிறார்கள். நிர்வாகக் குழுவிற்குப் பதிலாக, அரசு அதிகாரி ஒரு ஸ்பெஷல் ஆபிசர் இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் பணியாற்றுகிறபோது, அவர் ஏதாவது தவறுகளைச் செய்தால், அவருக்கு இது பொருந்துமா என்று கேட்டால், அவர்களுக்கு இது பொருந்தாது என்று சொல்லியிருக்கிறது இந்தச் சட்டப்பிரிவு. இது நியாயமா? தவறுகள் யார் செய்தாலும் அவர்களுக்குத் தண்டனை வழங்குவது என்று சொன்னால், நியாயம், அதிகாரிகளுக்குக் கிடையாது என்று சொன்னால் அது எப்படி?

இதிலே குறைந்த அளவு அனுபவம் உள்ள நிர்வாகக் குழுவைச் சேர்ந்த ஒருவர், நாமினேஷனிலும் வந்திருக்கலாம். அனுபவம் இல்லாத காரணத்தால் தவறு செய்கிறார் என்றால், அவருக்குத் தண்டனை உண்டு. வேண்டும் என்றே அவர் செய்யப் போவதில்லை. தெரியாமல், அனுபவம் இல்லாததால் செய்து விட்டால், அந்தக் குற்றத்திற்குத் தண்டனை உண்டு, ஆனால் ஏற்கெனவே பயிற்சி பெற்ற, அனுபவம் பெற்ற அதிகாரி, அதே பொறுப்பிலே இருந்து கொண்டு அந்தத் தவறைச் செய்தால் he shall not be punished அவருக்குத் தண்டனை கிடையாது என்று போட்டிருக்கிறீர்களே, அது எப்படிப் பொருந்தும்? எப்படி முறையானதாகும் என்று கேட்கிறேன். ஆகவே இதனை மாற்ற வேண்டும். யார் தவறு செய்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவதாக இருக்க வேண்டும்.

அதைப் போலவே, நிதி உதவி வழங்குகிற இந்தக் கூட்டுறவுச் சங்கம், எப்படி எப்படியெல்லாம் அதனை வழங்க வேண்டும் என்பதை அதனுடைய மேல் அமைப்புகள், அதாவது பைனான்சியல் இன்ஸ்டிடியூஷன்ஸ் ரிசர்வ் பேங்க் போன்றவைகள்தான் ஒழுங்குப் படுத்திக் கொடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே இருக்கிறது. ஏனெனில் அந்தக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக எத்தனை சதவீதம் கடனை எப்படி, எந்த வழிகளில் கொடுக்க வேண்டும், அதனை எப்படி வசூலிக்க வேண்டும், அதற்கு எவ்வளவு வட்டி வசூலிக்க வேண்டும் என்று பல்வேறு வகைகளிலேயும் பார்த்துத்தான் ரிசர்வ் வங்கி





அதற்கான ஒழுங்கு முறையை ஒழுங்கு படுத்திக் கொடுக்கிறார்கள். ஆனால் புதிய சட்டத்திலே, அந்த பைனான்சியல் இன்ஸ்டிடியூஷன் எனப்படும் ரிசர்வ் வங்கி மாத்திரம் அல்லாது, அரசினுடைய பதிவாளர்கள் என்னச் செய்யச் சொல்கிறார்களோ, அதன் அடிப்படையிலேயே வினியோகிக்க வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள்.

பதிவாளர்கள்தான் அதனை முறைப்படுத்த வேண்டும் என்று சொல்வது எப்படிப் பொருத்தமாக இருக்கும்? பதிவாளர்கள் வேண்டுமானால் மேற்பார்வைகள் செய்து தேவைப்பட்ட கைடு லைசன்ஸ் (Guide licence) களை வழங்கி அதனைப் பின்பற்றச் செய்யலாமே தவிர, அவர்கள்தான் அதனை முறைப்படுத்த வேண்டும் என்பது எப்படிச் சரியாகும்? உதாரணமாக ஏழை மக்கள் அதிகமாக வசிக்கிற பகுதிகளில் கடன் உதவி பெற, சில கூட்டுறவு வங்கிகளில் அதிகமான அளவு நகைகளின் மீது கடன் கொடுக்க வேண்டும் என்று விரும்பிக் கேட்கிறார்கள் என வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகும்போது, பதிவாளர்கள், எங்களுடைய கொள்கை அதன் அடிப்படையில் இல்லை, ஆகவே நகைகள் மீது கடன் கொடுக்கக் கூடாது என்று சொல்லிவிட்டால், அங்கே பணவசதி இருந்தாலும் கூட மக்களுடைய தேவை இருந்தாலும் கூட, உறுப்பினர்களை கொண்ட அந்தப் பேரவை ஒப்புக்கொண்டு கேட்டுக்கொண்டால் கூட, பதிவாளர்கள் விரும்பாவிட்டால் அப்படித் தரமுடியாத சூழ்நிலை உருவாகலாம். இதனால் சங்கத்தினுடைய வளர்ச்சியும், அதன் நற்பெயரும் கெடக்கூடிய சூழ்நிலையும் உருவாகலாம்.

எனவே, இப்படிப்பட்ட அதிகாரங்கள் அந்தப் பதிவாளருக்குத் தேவையில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே, 72-வது பிரிவிலே சொல்கிறபோது, சங்கத்தினுடைய அசையும், அசையாச் சொத்துக்களை, எப்படிப் பயன்படுத்தவேண்டும் என்பதைப் பதிவாளர் முடிவு செய்யவேண்டும் என்று இருக்கிறது. நான் இப்போது கேட்டுக்கொள்ள விரும்புவது, சங்கத்திற்குச் சொந்தமான அசையும், அசையாச் சொத்துக்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று முடிவு செய்யவேண்டும் என்பது அவசியம்தான். டெலிபோன்களைக் கூட அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள் என்று கோர்ட்டுக்கு இழுக்கிற அளவுக்குப் போய், அந்த நீதிமன்றம்தான் இது ஒன்றும் அவ்வளவு பெரிய குற்றம் இல்லை என்று சொல்லி விடுதலை செய்கிற நிலைமைகளை நாம் பார்த்துக் கொண்டு வருகிறோம். இவைகள் எல்லாம் தனியார்களுக்குத்தானே தவிர, அரசு அதிகாரிகளுக்கு இல்லை. அரசு அதிகாரிகள், ஸ்பெஷல் ஆபிசர்கள், எக்ஸிகியூடிவ் ஆபிசர்கள் அனுபவிக்கிற முறை இருக்கிறதே, அது பயங்கரமானது. அவ்வளவு

அதிகாரங்களை அவர்கள் உபயோகிக்கிறார்கள். அவர்கள்
அரசாங்கத்தின் எந்தப் பொருளை வேண்டுமானாலும்
எவ்வளவு வேண்டுமானாலும் உபயோகப்படுத்த முடியும்.
யாரும் கேள்வி கேட்க மாட்டார்கள்.

ஆனால், இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில்,
சங்கத்தினுடைய அசையும், அசையாச் சொத்துக்களை
என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்கள் தீர்மானிக்கக்
கூடாது. தேர்ந்தெடுக்கப்பட்ட குழு இருக்கிறது. அதுவே
முடிவு செய்யட்டும். அதிகாரிகளுக்குக் கண்காணிக்கக்கூடிய
வாய்ப்பு இருக்கிறது. குழு செய்யும் முடிவுகளில் ஏதாவது
தவறு இருக்குமேயானால், முறைகேடு இருக்குமேயானால்,
அப்பொழுது வேண்டுமானால் அதிகாரிகள் தலையிட
லாமே தவிர, எல்லா நடைமுறைக் காரியங்களிலும்,
பதிவாளர்கள்தான் அதைச் செய்ய வேண்டும் என்று
சொல்வது அவ்வளவு முறையானதாக, ஜனநாயகத்திற்கு
ஒப்பானதாக எனக்குத் தெரியவில்லை.

(முற்பகல் 11—20)

அடுத்து இங்கே ஊழியர்களைப் பொறுத்தவரையில்
பல்வேறு பிரிவுகளில் சொல்லி இருக்கிறார்கள்.
நிர்வாகம் திறம்பட நடைபெறுகின்றது என்று ஆனால்,
அதற்கு முக்கியமான காரணம் நிர்வாகத்தின் சொன்னால்
பிலே உள்ளவர்கள் மட்டுமல்ல. அங்கே வேலை பொறுப்
ஊழியர்கள்தான் பெரும் பொறுப்பிலே செய்கின்ற
குறிப்பாக, இதுவரை இருந்த நிலையினைப் இருக்கிறார்கள்.
யில் கிராமப் புறங்களிலும், மாவட்டங்களிலும் பொறுத்தவரை
கூட்டுறவுச் சங்கங்களுக்கான வேலையாட்களை அந்தந்த
காங்கே உள்ள நிர்வாகமே அமர்த்திக் ஆங்
அப்படி அவர்களே அமர்த்திக் கொள்கின்ற கொள்ளும்.
நிர்வாகத்திற்குப் பணிந்து அவர்கள் காரணத்தால்
கின்ற வாய்ப்பு இருந்தது. மேலும், வேலை செய்
ஊரிலேயே இருப்பதால், அங்கே அவர்கள் அந்தந்த
மக்களுக்கும், உறுப்பினர்களுக்கும் இருக்கின்ற பொது
சங்கம் எப்படிப் பயன்படவேண்டுமோ மிகச் சிறப்பாக அந்தச்
பயன் ஏற்படுகின்ற வகையிலே, அந்த அளவுக்குப்
வாழ்வினை நிச்சயமாக வளர்க்கின்ற மக்களின் எதிர்கால
கொண்டு வந்திருக்கிறார்கள். வகையிலே இருந்து

என்னுடைய தந்தையார் கூட கூட்டுறவுச்
முப்பது ஆண்டுக் காலம் பணியாற்றினார்கள் சங்கத்தில்
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் என்பது
தெரியும். அவர்கள் நல்ல முறையில் அவர்களுக்கும்
காரணத்தால் அவர்களுக்கு நல்ல பணியாற்றியதன்
தது. அந்த 30 ஆண்டுக் காலத்திலே பெயரும் இருந
பண வசூலைப்





பொறுத்தவரையிலே ஏலம் போடுகின்ற நிலைமையே
இல்லாமல் பணத்தை வசூல் செய்து கொடுத்தார்கள்.
அவ்வாறு பணியாற்றி பரிசு பெற்றிருக்கிறார்கள்.

ஆகவே, இனிமேல் அப்படி சிறப்பாக ஆங்காங்கே
பணியாற்றுகிறவர்கள் பணியாற்ற முடியாத நிலைமை
ஏற்படுமோ என்று ஐயப்படுகிறேன். ஏனென்றால், இப்
போது வந்திருக்கின்ற புதிய சட்ட முன்வடிவின்படி
மாவட்டம் அல்லது மாநில அளவிலே கூட்டுறவுச் சங்க
ஊழியர்களை நியமனம் செய்கின்ற அதிகாரம் கொடுக்கப்
படுகின்றது. மேலும், ஊழியர்களை தற்காலிக வேலை
நீக்கம் செய்கின்ற அதிகாரம், முடிவாக வேலை நீக்கம்
செய்கின்ற அதிகாரம் ஆகியவை எல்லாம் மாவட்ட,
மாநில அளவிலே வழங்கப்பட்டிருக்கின்றன. இது நிச்சய
மாகக் கூட்டுறவு இயக்கத்தினுடைய வளர்ச்சியைத் தடுப்ப
தாகும். மேலும், கூட்டுறவுச் சங்கத்தினுடைய நிலைமையை
மிகவும் கேலிக்கூத்தாக ஆக்கக்கூடிய சூழ்நிலையினை
உருவாக்கும். அவற்றின் தலைவர்கள் நிர்வாகத்தை
நல்ல முறையிலே நடத்தாமல் இருப்பது ஒரு பக்கம்.
ஆனால், பணியாற்றுகின்றவர்கள் அந்தந்தப் பகுதி மக்க
ளாக இருந்தால் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்
பினர்களுக்கு பல்வேறு நன்மைகளைச் செய்ய வேண்டும்
என்ற எண்ணம் இருக்க முடியும். ஆனால், இப்படி
மாவட்ட, மாநில அளவிலே அவர்கள் நியமிக்கப்படுவதன்
காரணத்தால் அவர்கள் என்னதான் பணியாற்றினாலும்
இன்னும் ஓராண்டு அல்லது இரண்டாண்டுகளிலே வேறு
இடத்திற்கு அனுப்புவார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு
ஏற்படுவதன் காரணத்தால் அவர்களுடைய பணி சிறப்
பானதாக இருக்காது என்பதோடு கூட்டுறவு இயக்கங்கள்
நிச்சயமாக வளராமல் போகும் என்பதை எண்ணிப் பார்க்க
வேண்டும். ஆகவே, நியமனம், வேலை நீக்கம், கண்
காணிப்பு ஆகியவற்றை எல்லாம் அந்தந்தச் சங்கங்களுக்குக்
கொடுக்கவேண்டும்.

வேண்டுமானால், நல்ல சம்பளத்தை நிர்ணயம் செய்வது,
தகுதியை நிர்ணயம் செய்வது ஆகியவற்றை மாநில,
மாவட்ட அளவிலே வைத்துக் கொள்ளலாம். ஏனெனில்
சில கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையிலே நடைபெற்
றாலும் அவற்றின் நிர்வாகஸ்தர்கள் குறைந்த அளவே சம்பள
உயர்வு கொடுப்பது, சம்பளங்களை உயர்த்தாமலே இருப்பது
போன்ற நிலைமைகள் குறித்து அரசின் கவனத்திற்கு வந்திருக்கக்
கூடும். ஆனால், அப்படிப்பட்ட நிலைமையிலே கூட
அப்படிப்பட்ட சங்க ஊழியர்களுக்கு போனஸ் கொடுப்பது,
சங்கத்தில் இருப்பவர்களுக்கு அதிகப்படியான தொகை
கொடுப்பது ஆகியவை அந்தந்தச் சங்கங்களின் பொறுப்
பிலேயே இருக்கவேண்டும். அரசாங்கம் நிர்ணயிக்கலாம்.

ஆனால், அதை நிறைவேற்றுகின்ற பொறுப்பு முழுமையாக சங்கத்திற்குத்தான் இருக்கவேண்டும். அதனை எடுத்துவிட்டால் சங்கம் இயங்க கடினமாக இருக்கும்.

'காமன் கேடர்' Comm n Cadr பதவிகளைப் பொறுத்த வரையில் தகுதியை வேண்டுமானால் பொதுவாக நிர்ணயிக்கலாம். ஆனால், நியமனம் செய்வது, தற்காலிகப் பணி நீக்கம் செய்வது, கண்காணிப்பு செய்வது ஆகிய அனைத்தும் சங்கத்திற்குத்தான் இருக்கவேண்டும். அவரவர் கடமை செய்யவேண்டும் என்ற முறையிலேதான் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

76-ஆம் பிரிவிலே ஒன்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தச் சங்கத்திலே உள்ளவர்கள் மீது ஏதாவது புகார் இருந்தால் உடனடியாக தற்காலிக வேலைநீக்கம் செய்யலாம் என்று இருக்கின்றது. (Ev... complaint before the Police) என்ற நிலைமை ஆகிவிட்டால் என்ன ஆகும்? வேண்டும் என்றே சங்கத்திலே இருப்பவர்கள் மீது, ஒழுங்காக வேலைசெய்கின்ற ஊழியர் மீது கூட உண்மைக்கு மாறான புகாரை எழுதி போலீஸிலே கொடுத்துவிடுகின்ற சூழ்நிலை உருவாகும். எனவே, புகார் என்ற ஒரே அடிப்படையில் அதுபற்றி விசாரிக்கப்படாமல், தகுந்த ஆதாரமில்லாமல், அது பற்றி ஆராய்ந்து பார்க்காமல் அவரைத் தற்காலிக வேலைநீக்கம் செய்யலாம் என்பது மிகப் பயங்கரமான ஒன்று. இந்த 76-வது பிரிவே மிகவும் கொடுமையானதாக இருக்கின்றது. புகார் இருக்கின்றது என்ற ஒரே காரணத்திற்காக ஒருவரைப் பணிநீக்கம் செய்வது, தற்காலிக வேலை நீக்கம் செய்வது என்பது மோசமான சூழ்நிலையினை உருவாக்கிவிடும். அந்தச் சங்கத்திலே இருக்கின்ற நிர்வாகத்தினர் அது ஒரு தவறான புகார் என்று எண்ணி அப்படி நீக்கத் தேவையில்லையே என்று கருதினால்கூட புகார் கொடுக்கப்பட்டவர் வேலையில் இருக்கமுடியாது என்ற பயங்கரமான நிலைமை இருப்பது சரியல்ல. இந்தச் சட்டத்தின் பிரிவு கடுமையாக இருக்கிறது. கூட்டுறவு பதிவாளர் ஒரு தாக்கீது அனுப்பினால் கூட வேலை நீக்கம் செய்ய வேண்டும் என்று சொல்வார்கள் அந்த நிர்வாகத்தில் உள்ளவர்கள் இது முறையற்றது.

Th y must implicity obey th order. உத்தரவுகளை உடனடியாக நிறைவேற்றுகின்ற நிலையில் சங்கம் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

முக்கியமான கருத்தை அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே இருக்கிற 1961-ம் ஆண்டு சட்டத்தின் கீழ் சொல்கிறேன். அப்போது அரசாங்கம் அல்லது ரிஜிஸ்ட்ரார் அனுப்புகிற உத்தரவுகளில் 'லாபுல் ஆர்டர்ஸ்' (Lawful orders) என்ற வார்த்தைகள் இருந்தன. நியாயப்படியான, சட்டப்படியான உத்திரவுகள், ஆணைகள் வந்தால்தான் சங்கம் நிறைவேற்ற



வேண்டும் என்று தெளிவாக இருந்தது. ஆனால் இப்போது இருக்கிற சட்டத்திலே 'லாபுல்' என்ற வார்த்தை காணவில்லை. நான் தீவிரமாகத் தேடிப் பார்த்தேன் அந்த வார்த்தை கிடைக்க வில்லை 'லாபுல்' இல்லாத, சட்டப்பூர்வம் இல்லாத, சட்டத்திற்குப் புறம்பான உத்தரவுகளை ரிஜிஸ்ட்ரார் அனுப்பலாம். அப்படி அனுப்பினால் கூட சங்கம் கண்மூடித்தனமாக பின்பற்றி ஆக வேண்டும். இதுதான் இந்தப் புதிய சட்டத்தில் இருக்கிறது. அது முறையானதாகத் தெரியவில்லை. பழைய சட்டத்திலே 'லாபுல்' என்ற வார்த்தையை எவ்வளவு திறமையாக போட வேண்டுமோ அவ்வளவு திறமையாக சேர்த்து இருக்கிறார்கள். அவ்வளவு திறமையாக நாம் அதை சேர்க்க வேண்டும். அதை திறமையாக இப்போது எடுத்துவிடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் இது ஒரு மோசமான நிலைமையை உருவாக்கும். சாதாரண போலீஸ் கம்ளைண்டுக்கு கூட அப்படிப்பட்ட நிலைமை வரலாம்.

இன்னொரு வேடிக்கை. ஒருவேளை சங்கங்கள் அவர்களை வேலை நீக்கம் செய்யவோ, பணி நீக்கம் செய்யவோ அல்லது தொடர்ச்சியாக பணி நீக்கம் செய்து அந்தக் காலக் கெடுவிற்கு அப்புறம் கூட தொடர்ந்து பணி நீக்கம் செய்யவோ விரும்பவில்லையென்று சொன்னால் அந்தக் கூட்டுப் பதிவாளரே நேரடியாகப் பணி நீக்கம் செய்து விடுவார் என்று 77, 78 பிரிவுகளிலே சங்கம் விரும்புகிறதோ இல்லையோ பதிவாளர் விரும்பினால் கூட பதவி நீக்கம் செய்து விடலாம் என்று இருக்கிறது. சங்கத்தினுடைய சுயேச்சையான அதிகாரத்தை இது கெடுப்பது ஆகும். இது முறையானது அல்ல என்று கருதுகிறேன். ஆகவே அது கூடாது.

அடுத்து பிரிவு 80-ல் சங்கத்தினுடைய வரவு செலவு கணக்குகள் தணிக்கையைப் பற்றி இருக்கிறது. அதிலே எவ்வளவு காலத்திற்குள் தணிக்கை செய்ய வேண்டும் என்ற நிலைமை இல்லை. அப்படி ஒரு ஏற்பாடு கண்டிப்பாக இருக்க வேண்டும். காலக்கெடு இருக்க வேண்டும். உதாரணமாக இந்த ஆண்டு கணக்கு குறைந்த பட்சம் அடுத்த ஆண்டுக்குள் தணிக்கை செய்யப் பட வேண்டும். இப்போது இருக்கிற நிலைமையில் இந்த ஆண்டு கணக்கை 5 ஆண்டு கழித்துக்கூட தணிக்கை செய்து கொள்ளலாம் என்பது போல் இருக்கிறது. அது முறையானது அல்ல. Companies Act ஒரு பிரிவு இருக்கிறது. அந்த கம்பெனிஸ் ஆக்ட் பிரிவு இதற்கு பொருந்துமா என்பது வேறு விஷயம். ஒப்பு நோக்குவதற்கு வேண்டுமானால் சொல்கிறேன். அதில் 15 மாதத்திற்குள் அந்த ஆண்டு வரவு செலவு கணக்கை சரிபார்க்க வேண்டும் என்று தெளிவாக இருக்கிறது. கூட்டுறவு சங்கங்களின் அந்த ஆண்டு வரவு செலவு கணக்கு அடுத்த ஒரு ஆண்டு காலத்திற்குள்ளாக தணிக்கை செய்யப்பட வேண்டும். சில நேரங்களில் தணிக்கை செய்யப்பட்டதற்கு பிறகுதான் சங்கத்திலிருக்கின்ற நிர்வாகத்தில் இருக்கின்ற தவறுகளை, ஊழியர்கள் மீதான தவறுகளை கண்டு பிடிக்க முடியும். ஆகவே ஒரு காலக் கெடு இருந்தால் ஒழுங்கீனங்களை தடுக்க முடியும். பழைய காலக் கட்டங்களிலே காலம்

[திரு. கு. பா. பழனியப்பன்] [1983 பிப்ரவரி 12

கடந்து போய் தணிக்கை செய்வதால் நடவடிக்கை மேற்கொள்ள முடியாத நிலைமை எல்லாம் அமைச்சர் அவர்களுக்கும். தெரியும், அரசாங்கத்திற்கும் தெரியும். அப்படிப்பட்ட சூழ்நிலை எதிர்காலத்தில் உருவாகக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

88-வது பிரிவிலே இந்தக் குழுவை கலைப்பது பற்றி குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதிலே சொல்லுகிறபோது நான் முன்பு குறிப்பிட்டபடி எந்த ஒரு உத்தரவுக்கும் அல்லது அறிவுரைக்கும் கீழ்படிய மறுக்கிறபோது அல்லது நிறைவேற்றாமல் இருக்கிறபோது அந்தச் சங்கங்களை உடனடியாக கலைக்கலாம் என்று இருக்கிறது. இதுதான் மிகவும் கொடுமையானது என்று கருதுகிறேன். அதில் Lawful என்கிற வார்த்தையை விட்டு இருக்கிறார்கள். அது மீண்டும் பொருத்தப்பட வேண்டும். அப்படி இருந்தால்தான் அது முறையாக இருக்கும்.

நிதியுதவி அளிக்கின்ற சங்கங்களின் கடன் 60 சதவீதத்திற்கு மேல் நிலுவையில் இருந்தால் அல்லது நிதியுதவி அல்லாத மற்ற சங்கங்களுக்கு 70 சதவீதத்திற்குக் கடன் நிலுவையிலிருந்தால் அவைகளைக் கலைத்துவிடலாம் என்ற ஒரு பிரிவு இருக்கிறது. நான் இது தொடர்பாக சொல்லவிரும்புவது, அரசாங்கம் மக்களிடத்தில் வாக்குகளைப் பெறுவதற்காக சில நேரங்களிலே உறுதி மொழிகளை தாறுமாறாக அள்ளி வீசுகின்ற சூழ்நிலை உருவாகிறது. அப்படிச் சொல்லுகிறபோது கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்கிறோம், நீங்கள் இப்போது கட்ட வேண்டாம் என்று எல்லாம் விளம்பரங்கள் வந்து விடுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலை மக்கள் கடனை திருப்பிச் செலுத்தமுடியாத சூழ்நிலை அரசாங்கமே வலுவிலே உருவாக்கக்கூடிய நிலையை நாம் பார்த்து இருக்கிறோம். அவர்களுக்கு அந்தக்கடனை திருப்பிக் கட்ட வேண்டும் என்ற எண்ணத்தை மறக்க வைத்து விட்டு இங்கே அந்த சங்கங்கள் 60 சதவீதம் 70 சதவீதம் நிலுவையில் இருந்தால் அந்த சங்கங்களை கலைத்துவிடலாம் என்ற சட்டப் பிரிவு போட்டு இருப்பது பொருத்தம்தானா? ஒன்று, அப்படி நிலுவையில் இருந்தால் அரசாங்கத்தினுடைய கருத்துக்கு ஏற்ப இருக்கிறது. எனவே அதைக் கலைக்க வேண்டியது இல்லை என்பதற்கான ஒரு அடையாளம் இதில் இருக்கவேண்டும்.

(முற்பகல் 11-30)

ஒருவேளை ஒரு சங்கத்தின் நிர்வாகத்திலே ஒரு தலைவர் மெத்தனம் காட்டினார் அல்லது அவர் பொறுப்பாக நடந்து கொள்ளவில்லை, அவர் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று கருதுவார்களேயானால் அந்த சங்கத்தையே கலைப்பதை விட அந்தத் தலைவரை தள்ளுங்கள் அதுதான் முறையாக இருக்கும். நெருக்கடிக்கு காரணமான அந்தத் தலைவர் சரியாக இல்லை என்றால் அந்தத் தலைவரைத் தள்ளுவதுதான் பொருத்தமாக இருக்கும், சங்கத்தைக் கலைப்பது என்பது



1983 பிப்ரவரி 12] [திரு. கு. பா. பழனியப்பன்]

கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது சட்டப்பிரிவுகள் ஏற்படுத்த இருப்பது சங்கத்தை எப்படிக் கலைக்கலாம் என்பதிலே கண்ணுங்கருத்துமாக இருப்பதைப் போல் இருக்கிறது, அது கூடாது.

89-வது பிரிவில் சங்கத்தைக் கலைத்த பிறகு நிர்வாக அதிகாரிகளாக தனி அதிகாரிகளை நியமனம் செய்வது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே எந்தெந்த கட்டங்களிலே நியமனம் செய்யலாம் என்று விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த நிர்வாகக் குழுவினுடைய காலக்கெடு முடிந்துவிட்டால் அல்லது அத்தனை பேர்களும் ஒட்டு மொத்தமாக ராஜினாமா செய்தால் அல்லது எவர் ஒருவர் ராஜினாமா செய்ததாலே அங்கே போதுமான எண்ணிக்கையில்லாமல் குறைந்தபட்ச எண்ணிக்கை இல்லை என்று கருதப்படுகிற நேரத்திலே அல்லது சில காலகட்டத்திலே தனி அதிகாரிகளை நியமிக்கலாம் என்று இருக்கிறது. நான் சொல்ல விரும்புவது, அப்படிப்பட்ட சூழ்நிலை வருகிறபோது உடனடியாக மறுதேர்தல்கள் நடத்தலாம் என்ற எண்ணம்தான் இருக்கவேண்டுமே தவிர சந்தர்ப்பம் கிடைத்தால் போதும் தனி அதிகாரிகளை நியமித்து விடலாம் என்ற முறையிலே இருக்கக்கூடாது. சில Extreme condition களில்தான் தனி அதிகாரிகளை நியமிக்கலாம் என்ற நிலை இருக்க வேண்டும். வேறு வழியில்லை என்றால்தான் தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டுமே ஒழிய கிடைத்தால் போதும் சந்தர்ப்பம், தனி அதிகாரிகளைப் போட்டுவிடலாம் என்ற நிலை இருக்கக் கூடாது. காரணம் தனி அதிகாரிகள் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆறு மாதம், ஆறு மாதம் என்று நீட்டித்துக் கொண்டே போய் 5 ஆண்டுகள் வரை கூட இருப்பார்கள். ஆகவே ஏதோ ஒரு உத்திரவைப் போட்டு அந்த உத்தரவை நிறைவேற்றவில்லை என்று சொல்லி உடனே சங்கத்தைக் கலைத்துவிட்டு மறு நாளே தனி அதிகாரிகளைப் போட்டு 5 ஆண்டுகளுக்குத் தன்னிச்சையாக ஜனநாயக இயக்கத்திற்கு மாறான முறையிலே செயல்படக்கூடிய முறையை ஏற்படுத்தக்கூடாது என்பதை எச்சரிக்க விரும்புகிறேன்.

151-வது பிரிவிலே தனக்குக் கீழே பணியாற்றுகின்ற ஒரு பணியாளருக்கு வேலையிடுவதைப்போல் சங்கத்தையும் வேலைக்காரராகப் பதிவாளர் பயன்படுத்துகின்ற நிலைமை உருவாகிறது. கூட்டுறவு சங்கம் அரசின் பதிவாளருக்கு வேலைக்காரரைப்போல் ஆகிவிடக் கூடாது. எல்லாவற்றிலும் பதிவாளருக்குக் கீழ்படிந்து பதிவாளருக்குப் பணியாளராக சங்கத்தினை மாற்றுவதைப் போன்ற ஒரு தோற்றத்தை உற்பத்தி செய்யக் கூடாது. சங்கங்களுக்கு என்று சுயேச்சையாக சில காரியங்கள் இருக்க வேண்டும். அந்த வகையிலே இதை மாற்றியமைக்க வேண்டும். அல்லது 151-வது பிரிவை எடுத்துவிட்டால்கூட நல்லதுதான், அதிலே ஒன்றும் பாதகம் இல்லை.

அடுத்து 158-வது பிரிவின்படி சங்கத்தினுடைய ஊழியர்கள் தவறுகளைச் செய்துவிட்டால் சங்கத்தின் நிர்வாகம்தான் தண்டனை அளிக்க வேண்டும். ஆனால் இங்கே ஒரு பிரிவு என்ன சொல்லுகிறது என்றால் நேரடியாகப் பதிவாளர்கூட தண்டனை கொடுக்கலாம் என்று இருக்கிறது. இப்படி இருப்பது பொருத்தமாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

181-வது பிரிவிலே எப்படிப்பட்ட அறிவுரையை வழங்க வேண்டுமென்று தெளிவாக இல்லை. பதிவாளர் தன்னிச்சையாக எந்த ஒரு அறிவுரையையும், எந்த ஒரு ஆணையையும் பிறப்பிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த ஆணை சரியா தவறா என்பதைக்கூட பார்க்க வேண்டிய அவசியமில்லை. 181-வது பிரிவு தங்களுடைய சௌகரியத்திற்காக ஏற்படுத்திக்கொண்ட பிரிவு. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு ஆணை பிறப்பித்தார் என்றால் அது சரியா தவறா என்பதைக்கூட பார்க்காமல் அதை நிறைவேற்றவில்லை என்று சொல்லி அதற்காகச் சங்கத்தின் நிர்வாகத்தை கலைப்பதற்கு என்றே இந்தப் பிரிவு இருக்கிறது. இந்தப் பிரிவு அவசியமற்றது, மட்டுமல்ல ஆபத்தானது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, புதியதாக ஒரு சங்கத்தை ஏற்படுத்துவதாக இருந்தாலும், அல்லது சங்கத்தின் நோக்கங்களை மாற்றியமைத்து உப விதிகளைத் திருத்தம் செய்வதாக இருந்தாலும் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும். 11(3)-வது பிரிவின்படி திருத்த உப விதிகள் போடப்படுகிறபோது அதிலே சொல்லப்படுவது என்னவென்றால் கூட்டுறவு இயக்கத்தினுடைய கொள்கைக்கு முரணாக அல்லது புறம்பாக திருத்தம் ஏதாவது இருந்தால் அதை மறுக்கலாம் என்று இருக்கிறது. நான் கேட்க விரும்புவது, கூட்டுறவு இயக்கத்தினுடைய கொள்கைகள் என்ன என்ன என்பதற்கு ஏதாவது விளக்கம் எங்கேயாவது இருக்கிறதா? இன்ன காரணத்தினாலே உப விதிகளின் திருத்தங்களை நாங்கள் ஏற்க மறுக்கிறோம் என்று சொல்லுகிற அதே நேரத்திலே கொள்கைகள் என்ன என்பதை வரையறுக்க வேண்டும். செலக்ட் கமிட்டியில் போடுகிறபோது அதற்கான விளக்கம் தேவையில்லை என்றும் விட்டுவிடுகிறோம் என்றும் ஒரு வாக்கியம் கூட நான் படித்தேன். நான் விரும்புவது இந்தக் கொள்கைக்கு முரணாக என்று குறிப்பிட்டுச் சொல்கிறபோது அது என்ன கொள்கைகள் என்று தெளிவாக்கப்பட வேண்டும். ஒரு சங்கத்திலே மின் வசதிகள் போன்ற மின் சாதனங்களை உறுப்பினர்களுக்கு கடனிலே வாங்கித் தருவது என்று ஒரு நோக்கம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அதே நேரத்தில் சிக்கனம் தான் இந்தக் கூட்டுறவு கொள்கை என்பதையும் நாம் அறிவோம். மின்விசிறி





என்பது கூட ஒரு ஆடம்பர பொருள், எனவே சிக்கனம் இல்லை; எனவே கூட்டுறவு நோக்கத்திற்கு முரணாக இருக்கிறது என்று ஒரு உத்தரவை பிறப்பித்து விடலாம். அந்த உத்தரவு 181-ஐக் கூட கட்டுப்படுத்தும். அப்படி போட்டுவிட்டால் அதை நிறைவேற்ற மறுக்கிற சங்கத்தை அரசு கலைத்துவிடலாம். இப்படிப்பட்ட ஒரு முரணான சூழ்நிலை இதில் உருவாகிறது.

19, 20 பிரிவுகளில் கூட்டுறவு ஒன்றியங்கள் மாவட்ட அளவில், இன்னும் மேல் அளவில் இருப்பதாக காட்டுகிறார்கள். நான் நடைமுறையில் சொல்கிறேன். மாவட்ட அளவிலே என்றால் அவர்களுடைய பணி என்னவாக இருக்கிறது. இங்கே இருக்கிற சட்டத்திலே கூட அதனுடைய பணி என்ன தான் என்பதைத் தெளிவாக்கவே இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான கருத்தை கூற விரும்புகிறேன். பதிவாளர் என்பவர் பார்வையாளராக, மேற்பார்வையாளராக இருக்கலாமே தவிர அவரே அதிகாரம் செலுத்துகிற நபராக இருக்கக்கூடாது என்பதைத்தான் நான் விரும்புகிறேன். அரசு தலையீடு ஆகிவிடும் என்று நான் கருதுகிறேன். சிலபேர் ஐ. ஏ. எஸ். அதிகாரிகளாக வருகிறவர்கள் முறையாக நிர்வாகம் தெரிந்து நடத்துகிறார்கள்; சில நேரங்களில் அவர் ஒரு பலகீனமான அதிகாரியாக இருப்பதாக வைத்துக்கொண்டால் அரசாங்கத்தினுடைய ஏவல்களுக்கு ஆளாகி எந்த சங்கத்தையும் எந்த சந்தர்ப்பத்திலும் கலைப்பதற்கும் அல்லது எப்படிப்பட்ட உத்தரவுகளையும் பிறப்பிப்பதற்கும் அல்லது எந்தச் சங்கத்தையும் தனி அதிகாரியுடைய நிர்வாகத்திற்கு கொண்டு வருவதற்கும், வாய்ப்புகள் இந்த புதிய சட்டத்தில் மலிந்து இருக்கின்றன. அவைகள் எல்லாம் திருத்தப்பட வேண்டும். அப்படிப்பட்ட நிலைமை உருவாக்கப்படக்கூடாது என்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். குஜராத்திலே இருக்கிற ஆனந்த் நிறுவனம்பற்றி சொல்கிறபோது, கமிட்டியிலே கூட சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய தலையீடு எள்ளளவும் இருக்கக்கூடாது; சுயேச்சையாக இருந்தால் தான் கூட்டுறவு இயக்கம் சிறப்பாகச் செயல்படும்; அது மக்களுக்கு பயன்படுகிற அளவிற்கு இருக்கும்; அது அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் இருக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள் . அதிலே குறிப்பாக ஈரோட்டில் அமுல் பேட்டர்னில் அந்த சொசைட்டி ஆரம்பிக்கிறபோது, குஜராத்திலிருந்து அதிகாரிகள் வந்து அதில் வல்லுநர்களாக துணை புரிந்திருக்கிறார்கள் என்றும், பிறகு அங்கேயிருந்து அவர்கள் விலகி சென்றுவிட்டதாக எனக்கு கிடைத்தத் தகவல்; தவறு இருந்தால் திருத்திக்கொள்ளலாம். சொல்கிறபோது அரசு தலையீடு அதிகமாக இருக்கிற காரணத்தால் சுயேட்சையாக அங்கே இருக்கிற அமுல் பேட்டர்ன் சொசைட்டி ஈரோடு

பகுதியிலே நடத்தமுடியவில்லை என்ற ஒரு காரணம் இருக்குமோ என்று அச்சப்படுகிறேன். அது உண்மையா, இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தலாம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இறுதியாக கிராமப்புற பொருளாதாரம் என்ற நூலில் ஒரு மிகப்பெரிய பொருளாதார நிபுணர் என்று சொல்லப்படுகிற டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு என்பவர் சொல்கிற நேரத்தில் ரெஜிஸ்டரார் அவர்கள் இருக்கிற சூழ்நிலையில் -இந்த சட்டத்திற்காக அல்ல -பொதுவாக ரெஜிஸ்டரார் அவர்கள் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களையும் செய்கிற மும்மூர்த்தியாக செயல்படுகிற அளவிற்கு, எல்லா அதிகாரங்களும் பெற்றவராக இருக்கிறார். இந்த சட்டத்தின் அடிப்படையில் அப்படிப்பட்ட ஒரு அதிகாரியே எல்லா அதிகாரங்களையும் வைத்துக்கொண்டு இருப்பது, கூட்டுறவு இயக்கத்தினுடைய வளர்ச்சியை தடுக்கக்கூடியது; சுயேட்சையான வளர்ச்சியை தடுக்கக்கூடிய அந்த வகையிலும் தான் இருக்கிறது என்று தெரிவித்து, வேறு எப்படி இருந்தாலும், இந்த சட்டத்தினுடைய பிரிவுகள் அதிகமான அதிகாரங்களை அரசு அதிகாரிக்கு அளிக்கும் வகையில் ஜனநாயக நிர்வாக முறைக்கு மாறாக கொடுமையாக காட்சி அளிக்கிற காரணத்தால், இது ஒரு பசு தோல் போர்த்திய புலி என்று சொல்லி அமர்கிறேன்.

(முற்பகல் 11-40).

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தமிழ் நாடு 1980-ம் ஆண்டு கூட்டுறவுச் சட்டங்கள் சட்டமுன்வடிவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

தமிழகத்திலே ஆலமரம் போல மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சியிலே கூட்டுறவுத் துறை வேரூன்றி உள்ளது. தமிழ் நாடு மாநில கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கூட்டுறவு நெசவாளர்கள் சங்கம், தமிழ்நாடு பனை வெல்லம் மற்றும் பனை நார் விற்பனை கூட்டுறவு இணையம், தமிழ்நாடு வேளாண் பொருள்கள் மற்றும் பனை கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், மத்திய கூட்டுறவு வங்கிகள், மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கங்-





கள், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள், கூட்டுறவு அச்சகங்கள், கூட்டுறவு பயிற்சி நிலையங்கள், மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு இணையங்கள், மீனவர் கூட்டுறவு இணையங்கள், மாவட்ட கூட்டுறவு வேளாண் பணி சங்கங்கள், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், கூட்டுறவு நிலவள வங்கிகள், கூட்டுறவு நகர வங்கிகள் போன்ற அமைப்புகளின் மூலம் மக்களுக்குச் சேவை செய்ய, கூட்டுறவுத் துறை தன் சேவைகளை வேகப்படுத்த, மக்களுக்கு நன்மைகள் எளிதில் கிடைக்க, புதிய புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டுள்ள திருத்தங்கள் இதில் உள்ளன என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். நூற்றுக் கணக்கான இந்தச் சட்டத் திருத்தங்களை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒரே நேரத்தில் கொண்டு வந்து, கூட்டுறவுத் துறைக்குப் பெருமை சேர்த்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில், இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலும் இல்லாத சில திருத்தங்கள் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்றன. கூட்டு வியாபாரம் செய்வதற்கு, ஒரு சங்கம் இன்னொரு சங்கத்தோடு அல்லது அரசோடு கூட்டு சேர்ந்து வியாபாரம் செய்கின்ற முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இணை உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளுதல், வழிவகை செய்தல், சங்கத்தின் சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல், பங்கு ஊதியம் 14 சதவீதமும், அதற்கு மேலும் அளிக்க வகை செய்தல், சங்கப் பணியாளர்கள் பணி விதிகளை அரசே விதிகள் மூலம் வரையறுக்க வகை செய்தல், 'காமன் காடர்'—பொதுப் பதவித் தரம் ஏற்படுத்தி அனைவருக்கும் சம வாய்ப்பளித்தல், பணிக் கொடை நிதி (Gratuity) வழங்குதல் போன்றவைகளை, இன்னும் சில திருத்தங்களை, இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலமும் செய்யாத மிகப் பெரிய திருத்தங்களை, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். குறிப்பாக, முந்தைய சட்டம், தோற்றுவாயில், 16 பொருள் விளக்கங்களைக் கொண்டுள்ளது. புதிய சட்டத்தில் 30 பொருள் விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வேளாண்மைத் துறைக்கு, கூட்டுறவுத் துறை மூலம் மிகப் பெரிய உதவிகள் கிடைக்கும் என்பதிலே சந்தேகம் இல்லை. ஒருவர் 6 ஆண்டுகளாகத் தொடர்ந்து பதவியிலே இருந்தால், மீண்டும் 6 ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கக் கூடாது என்று கொண்டு வரப்பட்டுள்ள திருத்தம் மிக முக்கியமான திருத்தம்.

மக்கள் இயக்கமாக இருக்க வேண்டிய ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களை, தங்கள் பாட்டன் காலத்து சீதனமாக நினைத்து, தன் வீட்டிலேயே, ஊருக்காக ஏற்படுத்திய இயக்கத்தை, தன் சொந்த நலனுக்காக பயன்படுத்தி வந்தார்கள் சிலர். ஏழைகள், ஆதி திராவிடர்கள், ஆதிவாசிகள், ஆகியோருக்கு அரசு அளிக்

கின்ற சலுகைகள் போய்ச் சேராமல் இருந்த நிலையை மாற்ற, பினாமியாக அவர்களை வைத்திருந்து, கடந்த 35 ஆண்டு காலமாக, பரம்பரை பாத்தியம் கொண்டாடி, மற்றவர்களை, ஏழைகளை, உறுப்பினர்களாகக் கூட சேர்க்க மறுத்தவர்களைக் கூட்டுறவுத் துறையிலே இருந்து அகற்றி, புதிய ஒரு சகாப்தத்தை உருவாக்குகின்ற வகையிலே கொண்டு வந்துள்ள திருத்தம்தான், 6 ஆண்டுகளுக்கு ஒருவர் தொடர்ந்து பதவியிலே இருந்தால், மீண்டும் அவர்கள் பதவிக்கு 6 ஆண்டுகளுக்கு வர முடியாது என்ற ஒரு மகத்தான திருத்தமாகும். இந்தத் திருத்தத்தின் மூலம் கிராமப் புறத்திலே அடிமைப்பட்டு கிடக்கும் கிராம மக்கள் விடுதலை பெறுவர் கூட்டுறவுத் துறையிலே என்பது தெள்ளத் தெளிவாகும்.

இன்னும் ஒரு திருத்தம், கிராமக் கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றுகின்ற கிராமக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கு எந்தவிதமான உதவிகளும் இல்லாத காரணத்தால், முழு நேரமாக அவர்கள் அதில் அக்கறை எடுத்துக் கொண்டு பணியாற்ற முடிவதில்லையென்ற ஒரு சூழ்நிலையில் வசதி படைத்தவர்கள் தான் அதிலே இருக்க முடியும், வசதியில்லாதவர்கள் இருக்க முடியாது என்ற ஒரு நிலையை மாற்றுகின்ற வகையில், இலாபத்திலே 10 சதவீதத்தை அவர்களுக்கு உதவியாக கொடுக்கலாம் என்று வரும் மாறுதல் மிகத் தெளிவான, கூட்டுறவுச் சங்கங்களுடைய வளர்ச்சிக்கு உகந்த மாறுதல் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த இலாபத்தையும் எதிர் பார்க்காமல், மக்களின் சேவையை நோக்கமாகக் கொண்டு இயங்கும் அந்த அமைப்புகளின் பொறுப்பாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், அவர்களின் சேவையை ஊக்குவிக்கும் வகையில் கொண்டு வந்துள்ள இந்தத் திருத்தம் வரவேற்புக்குரியதாகும். இந்த மாறுதலின் பயனாக எதிர் காலத்தில் அனைத்துச் சங்கங்களும் இலாபத்தில் இயங்க வேண்டுமென்ற ஒரு அக்கறை அனைவருக்கும் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மத்திய வங்கிகளில் கொடுக்கப்படும் கடன்களை நேரடியாக வசூல் செய்கின்ற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதை நான் மனப் பூர்வமாக வரவேற்கிறேன். காரணம் என்னவென்றால், சில சங்கங்களில் தலைவர்களோ, அல்லது அதிலே உள்ள பஞ்சாயத்தார்களோ கடனை வாங்கிக் கொண்டு அதைத் திருப்பிக் கட்ட முடியாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருப்பவர்களுக்கு அங்கே உள்ள உறுப்பினர்களிடத்தில் கடனை வசூல் செய்வதற்கு மனோ தைரியம் வருவதில்லை. அவர்களிடமிருந்து கடன் வசூல் செய்யும் தகுதியை அவர்கள் இழந்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட சங்கங்களில் பொது மக்கள் கடனை திருப்பிக் கொடுப்பதற்குத் தயாராக இருந்தாலும்,





விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பி செலுத்துவதற்குத் தயாராக இருந்தாலும்கூட அவற்றை வசூல் செய்வதில் அந்தத் தலைவரோ அல்லது பஞ்சாயத்தார்களோ அக்கறை காட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. அந்த நிலையை மாற்றி, கடன் அளிக்கின்ற மத்திய வங்கியே நேரடியாக அந்தக் கடனை வசூல் செய்யலாம் என்ற இந்தத் திருத்தம், எதிர் காலத்திலே கடன் வாங்கியவர்களிடத்திலேயிருந்து முறையாக வசூல் செய்யவும், அவர்களுக்கு உடனடியாக கடன்களைத் திருப்பிக் கொடுக்கவும், தவறு செய்கின்ற அந்தச் சங்கத்தின் தலைவர் மீது தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுத்து அந்தச் சங்கம் சிறப்பாக நடைபெறவும் இது அருமையான திட்டம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு சங்கம் ஏதாவதொரு தவறு செய்து அந்தச் சங்கம் கலைக்கப்பட்டால் அந்தச் சங்கம் வங்கிக்கோ அல்லது அரசுக்கோ செலுத்த வேண்டிய கடன் பாக்கியிருந்தால் அந்தக் கடனை அனைத்து உறுப்பினர்கள் மீதும் சுமத்தி எல்லோருமே திருப்பிக் கட்ட வேண்டுமென்ற நிலை இப்பொழுது இருக்கிறது. குறிப்பாகக் கிராமப் புறங்களில் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களில் இதுவரையில் இருந்த முறை, 10 பேர் அல்லது 20 பேர் அல்லது 25 பேர் தொடர்ந்து அவர்களே கடன் வாங்குவதும், திருப்பிக் கட்டுவதும் என்ற நிலையில் இருந்து தவறு நடந்திருக்கிறது. அதன் காரணமாகக் கடனே வாங்காத, பத்தேகால் ரூபாய் கட்டி உறுப்பினராகச் சேர்ந்த சாதாரண விவசாயிகூட, அந்தச் சங்கம் கலைக்கப்பட்டாலும், அரசுக்கோ அல்லது வங்கிக்கோ கடனாக உள்ள தொகையைத் திருப்பிச் செலுத்தும் நேரத்தில் அனைவரும் திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற முறை இதுவரையில் இருந்தது. அந்தச் சங்கத்தில் கடன் வாங்கிப் பலன் பெற்றவர்களும், கடனே வாங்காதவர்களும் சமமாகத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற முறை இருந்தது. ஆனால் இப்பொழுது அந்த நிலையை மாற்றி வரையறுக்கப்பட்ட சங்கமாக அமைக்கப்பட இருக்கிறது—முன்பு வரையறுக்கப்படாத சங்கமாக இருந்தது. இப்பொழுது வரையறுக்கப்பட்ட சங்கமாக அமைப்பதன் மூலம், யார் அதிகமாகப் பலன் பெறுகிறார்களோ, யார் அதிகமாக அதிலே பங்கு எடுத்து இருக்கிறார்களோ அவர்கள் அந்தப் பங்குகளின் அடிப்படையிலே இழப்பு ஏற்பட்டதைத் திருப்பிக் கட்ட வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதால் இதிலேயிருந்து தவறு இழைக்காதவர்கள் ஓரளவுக்குக் காப்பாற்றப் படுகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் சாதாரண விவசாயிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு சங்கத்தில் பதிவு செய்கின்ற உறுப்பினர்களின் தகுதியை நிர்ணயிப்பதில் அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்குள் ஏதாவது குழப்பம் ஏற்பட்டால், அந்தக் குழப்பத்தை அவர்களே

தீர்த்துக்கொள்ள முடியவில்லை என்றால் அதைப்பற்றி முடிவு செய்யும் பொறுப்பு பதிவாளருக்கு விடப்பட்டிருக்கிறது. இது சரியான முடிவு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமக்குள்ளே முடிவு செய்ய முடியாத ஒன்றை, பதிவளார் மூலம் முடிவு செய்வது என்பது நியாயமான ஒன்று. அதே நேரத்தில் 90 நாட்களுக்குள் அவர்கள் முடிவை அனுப்ப வேண்டுமென்ற நிபந்தனையானது காலதாமதத்தைத் தவிர்க்கின்ற ஒரு நல்ல திருத்தம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு சங்கத்தைப் பதிவு செய்வதற்காகப் பதிவாளருக்கு அனுப்பி, 90 நாட்களுக்குள் பதிவாளர் அந்தச் சங்கத்தைப் பதிவு செய்து தகவல் அனுப்பவில்லை என்றால், 90 நாட்களிலே அந்தச் சங்கம் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும் என்று சொல்வது உண்மையிலேயே இது பதிவாளருக்கு அளிக்கப்பட்ட அதிகாரம் அல்ல, பதிவாளருக்கேகூட கால நிர்ணயம்செய்து நீங்கள் பொதுமக்களுக்காக பணியாற்றியாக வேண்டும் என்ற வகையில் சொல்லப்பட்டிருக்கின்ற நிலைதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

முன்பு ஒரு சங்கத்தைப் பிரிக்கவோ, அல்லது இணைக்கவோ பேரவைக் கூட்டம் கூடுவதற்கு 7 நாட்கள் என்று இருந்தது. அந்த 7 நாட்களிலே தகவல் கூட பெறாத சில உறுப்பினர்கள் கூட இருந்தார்கள். ஆனால், அந்த நிலையை மாற்றி இப்போது 15 நாட்கள் என்று திருத்தம் செய்து இருக்கிறார்கள். இந்த 15 நாட்கள் என்பது அவர்களுக்கு தகவல் போய்ச் சேர்வதற்கும் அவர்கள் சங்கத்தை மீண்டும் சிறப்பாக செயல்படுத்த ஒரு முடிவு எடுப்பதற்கும் மிகவும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல பேரவைக் கூட்டம் கூடுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு அந்தச் சங்க உறுப்பினர்கள் வருகை தரவேண்டும் என்று இதுவரையில் இருந்தது. இதன் காரணமாக பல நேரங்களில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் வரமுடியாத காரணத்தால் அந்தப் பேரவைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு, அந்தச் சங்கம் செயல்பட முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால், இப்போது, அந்தப் பேரவைக் கூட்டத்திற்கு நாலில் ஒரு பங்கு உறுப்பினர்கள் வருகை தந்தால்கூட அந்தப் பேரவைக் கூட்டத்தை நடத்தி முடிவு எடுக்கலாம் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் சிறப்பாக பணியாற்றுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் மிக வரவேற்கத்தக்க ஒன்று. ஒரு கூட்டுறவு ஆண்டு முடிந்து மூன்று மாதங்களுக்குள் தணிக்கை செய்து முடிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். கடந்த 35 ஆண்டுகளாக





கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற நிலைமை சாதாரணமாக 5 ஆண்டுகள் 6 ஆண்டுகள் கூட,—ஒரு சில பிரச்சனையுள்ள சங்கங்களில் 10 ஆண்டுகள் கூட—தணிக்கை செய்து முடிக்க முடியாத நிலை இருந்தது. அதன் காரணமாக அந்தச் சங்கத்தின் இலாப நஷ்டங்களை, அந்தச் சங்கத்திலே ஏற்பட்டு இருக்கின்ற நன்மை தீமைகளை நாம் தெரிந்து கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. அங்கே பணியாற்றுகின்றவர்களுக்கு வரவேண்டிய சரியான சம்பளம் கூட அவர்களுக்குச் சேர வேண்டிய உதவிகளைக் கூட கொடுக்க முடியாத நிலை இருந்தது. இந்த அரசு வேகமாகப் பணியாற்றுகிறது. காலதாமதத்தைத் தவிர்க்கிறது. நிர்வாகத்தை வேகப்படுத்தி திட்டமிட்டுச் செயலாற்றுகிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை. ஒரு கூட்டுறவு ஆண்டு முடிந்து மூன்று மாதத்திலே தணிக்கை முடிக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். இதனால், ஏற்படுகின்றநன்மை, ஒரு சங்கம் தொடர்ந்து தவறு செய்யாமல் இருக்க முடிகின்றது. சிறிய தவறாக இருக்கும்போது ஒரு ஆண்டிலே ஏதேனும் தவறு நடந்து இருந்தால்கூட அடுத்த மூன்று மாதங்களில் அந்தத் தவறைக் களைந்து அந்தச் சங்கத்தைச் சிறப்பாக நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, இந்த அடிப்படையில் மூன்று மாதங்களுக்குள் தணிக்கை முடிக்கவேண்டும் என்று சொல்லியிருப்பது மிகச்சிறப்பானச் சட்டம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நலிந்த பிரிவினர் கூட்டுறவுச் சங்கங்களிலே தலைவராகவும் பஞ்சாயத்துக்காரராகவும் இருப்பதற்கு இங்கே சட்டபூர்வமாக இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் இருக்கின்ற விவசாய சேவா சங்கங்கள் இதுவரையில் சிறப்பாக இயங்க முடியாத சூழ்நிலைக்குக் காரணமே பல கிராமப்புற கூட்டுறவு விவசாய சேவா சங்கங்களிலே தலைவராக மிகவும் வசதி படைத்தவர்கள் அல்லது பொதுமக்களைக் கண்ணாலே பார்க்காமல் இருப்பவர்கள் அல்லது சாதாரண ஏழை மக்களைப் பார்த்துப் பேசுவதே குற்றம் என்று கருதியவர்கள் சாதாரண தாழ்த்தப்பட்ட மக்கள் பக்கம் திரும்பிக் கூட பார்க்காத தலைவர்கள் தான் இதுவரையில் இருந்து வந்தார்கள். தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்கள் ஒரு சிலருக்கு மட்டுமே கடன் கொடுத்து மற்றவர்களைத் திரும்பிக் கூட பார்க்காத நிலை இருந்து வந்தது. ஆனால், இந்தத் திருத்தத்தின் மூலம் தமிழக அரசு பல துறைகளிலே நலிந்த பிரிவினருக்கு ஆதிவாசிகளுக்கு, ஆதித்திராவிடர்களுக்கு, பெண்களுக்கு—அவர்களும் நிர்வாகத்தில் பங்கு பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து இருப்பது, இந்த கிராம கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்துவதிலே பொருளாதாரத்திலே நலிந்த பிரிவினராக இருக்கும் ஆதிவாசிகள், ஆதித்திராவிடர்கள் ஒருவர் இருக்கவேண்டும் என்பதும், பெண் உறுப்பினர் ஒருவர் இருக்க வேண்டும் என்று சொல்வதும், மிகச் சிறப்பான திருத்தமாகும்.

கிறார்கள். அதை மாறுதல் செய்கின்றபோது அதிலேயும் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அதை அரசு ஆலோசித்து அதற்கு ஒரு முடிவு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. அந்தச் சங்கத்திலுடைய செயலாளர்களை இப்படியே வைத்துக்கொண்டு இருப்பது அவர்களுக்கு நாம் துரோகம் செய்வதைப் போன்றதாகும். ஏன் என்றால், அவர்களுக்கு பணிப்பாதுகாப்பு கிடையாது. அந்தத் தலைவர் வேண்டுமென்றால் வைத்துக் கொள்ளலாம், வேண்டாமென்றால் நீக்கிவிடலாம். பணி பாதுகாப்பு இல்லாத தமிழகத்தில் ஏறத்தாழ ஆயிரக்கணக்கான, இதே போன்று கிராமச் சங்கங்களிலே செயலாளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை மாவட்ட அளவிலே கொண்டுவருவதிலே நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

அதே போல் இந்த ஆள் சேர்ப்பு நிலையத்திலே அது யாருடைய பொறுப்பிலே இயங்கப்படுகிறது, மாவட்ட அளவிலே, மாநில அளவிலேயும் சரி, நமது மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்கள் சொன்ன கருத்திலே நான் ஒன்றுகிறேன். அதையும் முழுவதுமாக அதிகாரிகளுடைய மேற்பார்வையிலே, விட்டுவிடாமல், கூட்டுறவுத் துறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்ற அந்தக் கூட்டுறவாளர்களுக்கும் முக்கிய பங்கு இதிலேயும் நாம் உருவாக்கி அங்கே இருக்கின்றவர்களை தேர்வு செய்வதிலே நாம் வழிவகை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அப்படி இந்த ஆள் சேர்ப்பு நிலையம் ஏற்படுத்தி அங்கே அவர்களுக்கு பல புதிய பணித் தகுதிகளை ஏற்படுத்தி அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்ற திட்டம்தான் இது. இதையும் நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

(நண்பகல் 12–00)

கூட்டுறவுத் துறையை அழிக்கவேண்டும் என்று நினைப்பவர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். இன்றைக்கு கூட்டுறவுத் துறை விவசாயிகளுக்கு ஒரு மிகப்பெரிய அமுதசுரபியாக—வேறு எந்தத் துறையும் அவர்களுக்கு இதுபோன்ற நன்மையைச் செய்யவில்லை—ஒரு மிகப்பெரிய பாதுகாப்புப் பெட்டகமாக இந்தக் கூட்டுறவுத் துறை இருக்கிறது. அகவே, நான் இன்றைக்கு இங்கே ஒரு வேண்டுகோளை வைக்கவிரும்புகிறேன். இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்களானாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி, விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தயவு செய்து உங்களை நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கத்திடம் நீங்கள் எவ்வளவு வேண்டுகோளை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் கூட்டுறவுக் கடனைத் திருப்பிக் கட்டாதீர்கள் என்று மாத்திரம்



நீங்கள் பிரச்சாரம் செய்யாதீர்கள். இந்தக் கூட்டுறவுத் துறை மூலம் கடன்பெற்று எத்தனை ஏழை எளிய மக்கள் இன்றைக்கு நல்ல முறையில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கையை இந்தக் கடன்களைப் பெற்று வளமாக்கிக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு துறை அளித்த கடனை, திருப்பிக் கட்டாதீர்கள் என்று மாத்திரம் நீங்கள் பிரச்சாரம் செய்து, அந்தத் துறையை அழித்து விடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே நாம் பேசுகின்ற சமதர்ம சமுதாயம், ஏற்றத்தாழ்வு அற்ற சமுதாயம், சுரண்டல் அற்ற சமுதாயம், ஏழைப் பணக்காரன் என்ற வித்தியாசங்களைப் போக்கி, தனிமனிதன் சுரண்டல் தவிர்க்கப்படவேண்டும் என்ற எண்ணம் ஆகியவை நிறைவேற்றப்படவேண்டும் என்று சொன்னால், கூட்டுறவுத் துறையில் இருக்கும் ஒவ்வொரு சங்கத்தையும் ஆங்காங்கே இருக்கும் அரசியல் வாதிகள், பொதுமக்கள் பேணிக் காக்கவேண்டும். அப்போதுதான் மக்களுக்கு அது நல்லவகையில் நன்மைசெய்யமுடியும் என்று என்னுடைய கருத்தைத் தெரிவித்து இங்கே இந்த சட்டமுன்வடிவின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த சட்ட சம்பந்தமாக சில தகவல்களை நான் உள்ளே சென்று சொல்வதற்கு முன்னால், இன்று இந்தச் சட்டத்திற்கு இருக்கும் முக்கியத்துவத்தைப் பற்றியும், இந்தச் சட்டம் சம்பந்தப்பட்ட துறை எப்படி தற்போது செயலாக்கப்படுகிறது என்பதைப் பற்றியும் இந்த அவையின் கவனத்திற்கும், மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கும் நான் கொண்டு வருவதற்கு விழைகிறேன்.

தற்போது நாட்டிலே உணவு நெருக்கடி அதிகமாக ஏற்பட்டு இருக்கும் நிலைமை, அதேபோல் விவசாயிகள் உற்பத்தி செய்த பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்ற குறைபாடு. அதேபோல் விலைவாசி உயர்வு மேலும் மேலும் உயர்ந்து கொண்டு போகிறது என்பது ஒரு Permanent feature ராக இருக்கிறது. இது நாட்டிலே மாறிமாறி ஏற்பட்டுக் கொண்டு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் நாம் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிறோம்.

விவசாயிகளைப் பொறுத்தவரையிலும், உழைப்பவர்களாக இருந்தாலும் சரி, உணவு வாங்கிச் சாப்பிடுகிறவர்களாக இருந்தாலும் சரி, உணவுப்பொருள்கள் உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு உதவிகளைச் செய்யும் நிறுவனமாக, நிதி உதவியை அளிக்கும் நிறுவனமாக இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செய

இதன் மூலம் எங்கோ எட்டாத இடத்தில் இருந்த அந்தக் கூட்டுறவு சங்கத்திற்கு கீழே இறங்கி வந்து சாதாரண ஏழை எளிய மக்களைப் பார்த்து பணியாற்றுகின்ற வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு சமதர்ம ஆட்சி அரசு போடுகின்ற திட்டம் அனைவருக்கும் சரியாய்ப் போய்ச்சேர வேண்டும் என்று சொல்கின்ற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உறுப்பினர்களைப் பார்த்துச் சொல்லிக் கொள்கிறேன். கிராமப் புறத்தில் அடிமைப்பட்டு கிடக்கும் சாதாரண மக்களுக்கு கூட்டுறவுத் துறையிலே ஒரு சுயாட்சி ஏற்படுவதற்கு இது மிக நல்ல சட்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் சாதாரண ஏழை எளிய மக்கள் நிர்வாகத்தில் பங்குபெற்று சுயேட்சையாகப் பணியாற்ற வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு திருத்தம். முன்பு ஒரு சங்கம் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட 10 நபர்கள் இருந்தால்போதும். இதனால் என்ன நிலை ஏற்பட்டது என்று சொன்னால் ஒரு குடும்பத்திலே இருக்கின்ற அண்ணன், தம்பி, மாமன், மச்சான் என்று 10 பேர்களை உறுப்பினர்களாக வைத்துக்கொண்டு அந்தச் சங்கத்தினுடைய சேவை பரவலாக மற்றவர்களுக்குப் பயன்படாமல் இருந்த ஒரு சூழ்நிலை இருந்தது. ஆனால், 25 உறுப்பினர்கள் கட்டாயமாக இருக்க வேண்டும் என்று திருத்தப்பட்ட இந்தத் திருத்தத்தின் மூலம் மற்றவர்களும் உறுப்பினர்களாக சேர்ந்துதான் அந்தச் சங்கத்தை பதிவு செய்ய வேண்டுமென்று ஒரு நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் இதுவும் ஒரு சிறப்பான திருத்தம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் ஒன்று. நிலவள வங்கிகளுக்கு தனியாகச் சட்டம் இருந்தது. ஆனால், இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் நிலவள வங்கிகளின் சட்டங்களையும் இதோடு இணைத்திருக்கிறார்கள். நிலவள வங்கியினுடைய சட்டங்களை இதோடு இணைத்ததன் காரணமாக விவசாயிகளுக்கு இன்னும் சிறப்பான நன்மைகள் ஏற்பட இருக்கின்றன. இதுவரை நிலவள வங்கிகள் மூலம், கிணறு வெட்டுவதற்கும், பம்ப்செட் வைப்பதற்கும், சாலை அமைப்பதற்கும் இன்னும் இதுபோன்ற காரியங்களுக்கும் கடன் வழங்கப்பட்டது. இப்போது 1 ஆண்டுக் காலமாக அரசு கறவை மாடுகள் வாங்குவதற்குக்கூட கடன்கள்கூட வழங்கலாம் என்று திருத்தத்தைக் கொண்டுவந்தார்கள். இப்போது இன்னும் கொஞ்சம் அதிகமாக விவசாயப் பொருள்கள், உற்பத்தி செய்வதுடன் பட்டுத் தொழிலும் நடத்துகிறார்கள். இன்னும் பல விவசாய அடிப்படையிலே வருகின்ற பொருள்களை அங்கேயே அவர்கள் சிறு தொழிலாக, உற்பத்தி செய்ய முடியும். மேலும், அதை ஒரு சிறு தொழிலாக இங்கேயே செய்து பொருட்களை விற்பனை செய்கின்ற அளவுக்கு அதற்குத் தேவையான தொழில் கருவிகள் வாங்குவதற்கும், அதைச் சேமித்து வைத்து, விலை வரும் போது விற்பதற்கும் சரக்கீட்டுக் கடன்கள் என்ற அடிப்படையிலே கடன் கொடுப்பதற்கும் முழுமையான விவசாயிகளான அவர்கள்



விரும்பிய நியாயவிலை கிடைக்கக்கூடிய வகையில் அல்லது அந்தத் தொழில் செய்கின்ற வகையில் இந்தச் சட்டத்திலே திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அதன் மூலம் விவசாயக் குடும்பம், சாதாரணமாக 5 ஏக்கர் நிலம் வைத்திருந்தால் அனைத்து வசதிகளைப் பெற்று மற்ற விவசாயிகளைப் போல சிறப்பாக இயங்குவதற்கு இந்தச் சட்டத் திருத்தம் வழிவகை செய்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், மாநில அளவில், மாவட்ட அளவில், ஆள் சேர்ப்பு நிலையம் ஏற்படுத்துவது என்ற ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்போது இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பனகூட கிராம கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கின்ற அந்தச் செயலாளர்கள் அவர்கள் மாற்றப்படக்கூடாது. அந்த இடத்திலே இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் மிகத் தெளிவாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே—மத்திய சங்கத்திலே—தலைவராக இருக்கின்ற காரணத்தால் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப்புறங்களில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற கடனைத் திருப்பி வசூல் செய்யப் போகின்ற நேரத்திலே அங்கே செயலாளர்களாக இருக்கின்ற பலர் எங்களுக்கு உதவுவதில்லை. என்ன காரணம் என்றால் அவர்கள் அந்தத் தலைவரால் நியமிக்கப்படுகிறார். அந்தத் தலைவர் சொல்கிற அந்தப் பணியைச் செய்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. அந்த அளவிலே அவர்கள் எங்களுக்கு எந்தவிதமான, நம்முடைய நிர்வாகத்திற்கோ, வங்கிக்கோ அல்லது அரசாங்க நிர்வாகத்திற்கோ கட்டுப்படாதவர்களாக இருக்கின்ற காரணத்தால், சரிவர அந்தச் சங்கங்களினுடைய வளர்ச்சியிலே அவர்கள் அக்கறை காட்டுவதில்லை. ஒரு கிராம கூட்டுறவுச் சங்கம் அந்தக் கிராமத்திலே இருக்கின்றவர்களுக்கு முழுமையான நன்மையை செய்ய முடியும். அவர்கள் பயிர் கடன் கொடுக்க முடியும். நகைக் கடன் கொடுக்க முடியும், வண்டி மாடுகள் வாங்குவதற்கு கொடுக்க முடியும். கறவை மாடுகள் வாங்குவதற்குக் கொடுக்க முடியும். இப்படி அனைத்து வகையான வசதிகளைச் செய்வதோடு, குடோன் வசதிகளையும் ஏற்படுத்தி அந்தச் சரக்கீட்டுக் கடன் கொடுக்க முடியும். அப்படிப்பட்ட அனைத்து வசதிகளையும் செய்யக்கூடிய கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் பல இடங்களில் ஏதோ சாதாரணமாக இந்தக் கிராம நியாய விலைக் கடைகளின் வேலைகளை மட்டும் செய்துகொண்டு, இதைப்போன்ற பணிகளை கவனிக்காமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்த நிலைகளை எல்லாம் மாற்றுவதற்கு இது நிச்சயமாக மாவட்ட அளவில், அவர்களுக்கு மாறுதல் வழங்குகின்ற அளவில் இதைக் கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டு வருகின்றபோது சில சிக்கல்கள் இருக்கிறது. ஒரு சங்கத்தில் 200 ரூபாய் சம்பளம் பெறுகிறவர்கள் இருக்கிறார்கள். 500 ரூபாய் சம்பளம் பெறுகிறவர்கள் இருக்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1983 பிப்ரவரி 12

மாற்றும் நிலைமை இருக்கிறதா, அந்த வகையில் இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களைப் பார்க்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றை நாம் மறந்து விடக்கூடாது. ஐ. எம். எப். லோன் வாங்கியதால் மத்திய அரசு ஒரு சில நிபந்தனைகளை ஏற்படுத்தி இருப்பதால், இந்தச் சங்கங்களைச் செயல்படுத்துவதில் மேலும் சிரமங்கள் இந்த நாட்டு மக்களுக்கு அதிகமாகியிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இந்த நாட்டிலே ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அந்தச் சங்கங்கள் எந்த அளவிற்குப் பயன் உள்ளதாகச் செயல்பட முடியும், எந்த முறையில் அவர்கள் செயலாற்றி அதனாலே அந்த உறுப்பினர்களுக்கும், ஒட்டுமொத்தமாக மக்களுக்கும் நன்மை ஏற்படுத்த முடியும் என்பதைப் பார்க்கவேண்டும். இன்று அந்தக் கூட்டுறவு சங்கங்கள் செயலாற்றிக்கொண்டு இருக்கும் முறை சரியானதாக இல்லை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் ஏற்கெனவே 1969 ஆம் வருஷம் தமிழ்நாட்டிலே அரசால் நியமனம் செய்யப்பட்ட கூட்டுறவு சம்பந்தமான கமிஷன் ஒரு சிபாரிசு செய்திருக்கிறது. அந்த சிபாரிசில் ஒரு சிறிதளவுகூட இன்று நல்லமுறையிலே செயலாக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஏனென்றால் பருத்தி உற்பத்திச் செய்யக்கூடிய விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்பது நாடறிந்த உண்மை. அந்த சந்தானம் கமிட்டி என்ன சிபாரிசு செய்தது என்றால் கூட்டுறவு சொசைட்டியிலிருந்து கூட்டுறவு நூற்பாலைகள் பஞ்சு வாங்க வேண்டும். ஆனால் இன்றைக்கு 10 சதவீதம் பஞ்சுதான் அப்படி வாங்கப்படுகிறது.

இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்களை அபிவிருத்தி செய்து, கூட்டுறவுச் சங்கங்கள் வழியாக இந்த கூட்டுறவு நூற்பாலைகள் தேவையான பஞ்சை வாங்கவேண்டுமென்று கமிட்டி சிபாரிசு செய்த பிறகும், இன்றைக்கு பல ஆண்டுகள் ஆன பின்னாலும் என்ன நிலைமையைப் பார்க்கிறோம்? வியாபாரிகளிடமிருந்து சில அதிகாரிகள் கமிஷன் பெற்றுக்கொண்டு, அவர்களுடைய உறவை நீட்டிப்பதற்காக இன்று கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து அந்தச் சங்கங்களை அபிவிருத்தி செய்து, அந்தச் சங்கங்களிலிருந்து வாங்குவதற்குப் பதிலாக வியாபாரிகளோடு உறவை வைத்துக்கொண்டு, அவர்களிடமிருந்து வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அரசுப் பொறுப்பிலே இருக்கக்கூடிய நூற்பாலைகளிலேயே இப்படிப்பட்ட நிலைமை என்றால் எப்படி கூட்டுறவுச்சங்கங்கள் வளர்ச்சியடைய முடியும்? எப்படி ஏழை எளிய விவசாயிகளுக்கு நடுத்தர விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும்? கூட்டுறவு இலாகா இது சம்பந்தமாக ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்றால் இல்லை.



1983 பிப்ரவரி 12] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அதைப்போன்று மற்றொரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால் இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மிஸ்அப்ரோபிரியேஷனுக்கும் லஞ்சத்திற்கும் ஒரு அஸ்திவாரமாக மாறிக்கொண்டு வருகின்றன. அதற்கு இரண்டு காரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். போதுமான அளவுக்கு சூப்பர்வைசர்கள் கிடையாது என்பது ஒன்று. சந்தானம் கமிட்டி என்ன சிபாரிசு செய்திருக்கிறது?

சென்ட்ரல் கோவாபரேட்டிவ் பாங்க் தான் இன்று கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பணம் கொடுக்கிறது. அந்த ஃபைனான்சிங் பாங்க் தான் அந்த கூட்டுறவுச் சங்கங்களை கண்காணிக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு அந்த முறையில் போதிய கண்காணிப்பு இருக்கிறதா என்றால் கண்காணிப்பு மிகவும் கம்மி. கடன் கொடுக்கிறபோது, லோன் வாங்குகிறபோது எல்லாம் கவனிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. நன்றாக விசாரித்து அவர்களுடைய 'கபாசிட்டி டு ரீப்பே' என்பதைப் பார்த்துதான கொடுக்க வேண்டுமென்ற கொள்கை இருந்தாலும் கூட அது பற்றி நல்லமுறையில் விசாரிப்பது இல்லை. ஏனென்றால் விசாரிப்பதற்கு தேவையான சூப்பர்வைசர் இல்லை.

என்னுடைய ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர் சொன்ன மாதிரி சூப்பர்வைசர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பது உண்மையல்ல. ஒரு சூப்பர்வைசருக்கு 10 சங்கங்கள், 12 சங்கங்கள் என்று பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ட்ரல் பாங்கில் பணம் கொடுக்கும்போது எல்லோருக்கும் ஒரே நேரத்தில் கொடுக்கப்படுகிறது. 12 சங்கங்களிலிருந்தும் ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான மனுக்கள் போடுகிறார்கள் அப்படி மனு போட்டவர்கள் எல்லாம் உண்மையிலே தகுதி படைத்தவர்கள் தானா, அவர்கள் கடன் பெற உரிமை இருக்கிறதா என்பதை இன்றைக்கு நடைமுறையில் பார்ப்பதில்லை. சங்கத் தலைவர் ஒரு சில ஆட்களை கூட்டிவைத்து, சூப்பர்வைசரிடம் இவர்கள்தான் அப்ளிகன்ட்ஸ் என்று சொல்லி, அந்த அடிப்படையில் சிபாரிசு செய்யப்பட்டு அவர்களுக்கு பணம் கொடுக்கப்படுகிறது. அது பற்றி நான் தெளிவாகச் சொல்ல முடியும்.

நாகர்கோவில் (கன்னியாகுமரி மாவட்டம்) பல ஆட்களுக்கு இப்படி கடன் கொடுக்கப்பட்டதாகச் சொல்லி பின்னால் என்ன ரிப்போர்ட் வந்தது தெரியுமா? அவர்கள் கடன் திருப்பிக் கட்டவில்லை. செக்ஷன் 81-ன்படி என்குயரி நடந்தது. கடன் வாங்கியதாகச் சொல்லப்பட்ட அந்த நபர்களைப் போய் கேட்டால், செக்ஷன் 81-ன்படி நோட்டீஸ் போகும்போது, நாங்கள் பணம் வாங்கவில்லை; எங்களுக்குத் தெரியாது என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் எப்படி இந்த கூட்டுறவுச் சங்கங்களிலே கண்காணிப்பு இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

[திரு. ஜே, ஹேமச்சந்திரன்] [1983 ப்பிரவரி 12

(பிற்பகல் 12–10)

இந்தமாதிரியான தவறுகள் ஏற்படுகின்றன என்பதால் சந்தானம் கமிட்டி ரெக்கமென்டேஷன் செய்திருப்பதைப்போல சரியான கண்காணிப்பு இருக்க வேண்டும். கண்காணிப்பைப் பொறுத்தவரையில், (It is a legal guardian and guiding administrator) என்று சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையில் என்ன லீகல் கார்டியனாக இருக்கலாம். ஆனால் கைடிங் அட்மினிஸ்ட்ரேட்டராக இல்லை. அப்படிச் செயலாற்றுகிறதா என்று நாம் பார்க்கவேண்டும். நான் எதற்கு சொல்கிறேன் என்றால், இந்தச் சட்டத்திலே மீண்டும் அந்த இலாகாவிற்கும், இலாகாவினுடைய தலைமைப் பொறுப்பிலே இருக்கும் ரிஜிஸ்திராருக்கும் எனார்மஸ் பவர்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. நான் அந்தப் பிரச்னைக்கு பின்னாலே வருகிறேன். இதில் ரிஜிஸ்திரார் அவர்களுடைய இந்த பவர்ஸ் யார் மூலமாக செயலாற்றப்படுகிறது என்று பார்த்தால், கீழே இருக்கும் சிப்பந்திகள் மூலமாகத்தான் செயலாற்றப்படுகிறது. அந்தச் சிப்பந்திகளின் உதவியோடுதான் இப்படிப்பட்ட மிஸ் அப்பிரோப்பிரியேஷன் கரப்ஷன் எல்லாம் நடக்கிறது. என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆகவே, அதை தடுத்து நிறுத்தக்கூடிய முறையிலே அந்தச் சட்டத்தை அமுல் படுத்த வேண்டிய நிலை நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தான் சூப்பர்வைஸ் பண்ணுவதற்கு தேவையான ஆட்களை நியமிக்க வேண்டும். அதை மிக அவசியமான விஷயமாகப் பார்க்க வேண்டும். பொருளாதாரப் பிரச்னை என்ற அடிப்படையிலே மட்டும் அதைப் பார்க்கக்கூடாது.

இன்னொரு முக்கியமான பிரச்னை, சந்தானம் கமிட்டியிலே இருக்கிற ரெக்கமண்டேஷன்களில் ஒன்று ஏழை விவசாயிகளுக்கு, நடுத்தர விவசாயிகளுக்கு நகைகளில் மீது கடன் கிடைப்பதற்கான வழி வகைகளைச் செய்யவேண்டும் என்பது. கூட்டுறவுச் சங்கங்களில் கூட இந்தக் கடனை இன்னறக்கு நல்ல முறையில் பெற்றுக் கொள்ள முடியாத ஒரு நிலை இருக்கிறது. நான் இந்தச் சட்டத்தினுடைய வரம்புகளிலே நேஷனலைஸ்டு பாங்கு வராததினால் அதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. நமது நேஷனலைடு பாங்குகளில் இந்த நகை மீது கடன் கொடுக்கிற பணி நிறுத்தப்பட்டதற்குப் பிறகு, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலும் கூட இது நல்ல முறையில் நடத்தப்படாததன் விளைவாகத்தான், சந்தானம் கமிட்டி எந்த நோக்கத்தோடு இந்த சிபாரிசை கொடுத்திருக்கிறதோ, அது இதுநாள் வரைக்கும் சரியான முறையில் தமிழகத்திலே நிறைவேற்றப்படவில்லை.

ஏனென்றால் இந்தக் கடனைப் பொறுத்த வரையில் தனியார்களிடம் போய் கேட்டால் 40 சதவீதம், 50 சதவீதம் வட்டிக் கொடுத்து வாங்க வேண்டிய நிலை இருக்கிறது, ஆகவே, கூட்



983 ப்பிரவரி 12] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

டுறவு சங்கங்களின் வாயிலாக ஏழை விவசாயிகளுக்கு, நடுத்தர மக்களுக்கு, உழைப்பாளர்களுக்கு இந்த வகையில் கடன் கொடுப்பதற்கான ஒரு வசதியைச் செய்துகொடுக்க வேண்டிய ஒரு நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல ஆதித்திராவிடர்களுக்கு, அரசு வழங்கக்கூடிய பல உதவிகளை, சலுகைகளைக் கூட, அவர்கள் தனி நபராகச் சென்று அரசின் பல்வேறு துறைகளில் கேட்டு பெற முடியாத நிலை இருப்பதால், பல பேர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவு முறையில் சங்கமாக அமைத்துக்கொண்டு, அதன் மூலமாக இந்த வசதிகளைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படிபட்ட சூழ்நிலையில் அவர்களுக்கு என்னென்ன முறைகளில் எல்லாம் நன்மை செய்ய முடியுமோ, அந்த வகையில் எல்லாம் செய்வதற்கு இந்தச் சட்டத்தை அமுல் படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது.

இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்போது லேபர் கான்ட்ராக்ட் சொசைட்டி என்று ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. என்னுடைய மாவட்டத்தில் இருக்கும் சொசைட்டியைக் குறித்து எனக்குத் தெளிவாகத் தெரியும். அது போலவேதான் பல இடங்களிலும் இருக்கிறது. இந்த லேபர் கமிட்டி சொசைட்டிகளின் மூலமாகத்தான், பஞ்சாயத்து யூனியன்களிலே வரக்கூடிய வேலைகளுக்கு கான்டிராக்ட் கொடுக்கப்படுகிறது. அதிலே இதற்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்றும் இருக்கிறது. ஆனால் உண்மையில் நடப்பது என்னவென்றால், லேபர் கான்டிராக்ட் சொசைட்டி உண்மையிலேயே நடப்பது கிடையாது. அவர்களிடத்திலே தொழிலாளர்களே கிடையாது. என்னுடைய மாவட்டத்திலே நான் பார்க்க முடிந்த விஷயம் என்னவென்றால், இந்த லேபர் கான்டிராக்ட் சொசைட்டி, பஞ்சாயத்துக்களில் காண்டிராக்டுகளை எடுத்து, அவைகளை சப்-காண்டிராக்ட் மூலம் புரொஃபஷனல் லேபர்களுக்கு கமிஷன் வாங்கிக் கொண்டு கொடுக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இது ரெஜிஸ்டிராருக்கும், அந்த இலாகாவினருக்கும் தெரியாதா ? அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரிகள் இருக்கக்கூடிய நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னாலே வயர்சனம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இன்னமும் அதே நிலை தான் தொடர்ந்து அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. துரதிருஷ்டவசமாக அரசியல் தலைவர்கள் இந்தச் சங்கங்களின் தலைவராக இருப்பதன் காரணமாகவோ அல்லது வேறு எந்தக் காரணமாகவோ இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து இருக்கிறது. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்களில் அரசியல் தலையீடுகளை எந்த அளவுக்கு கட்டுப்படுத்த வேண்டியது அவசியமோ அந்த அளவுக்கு கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்படுத்தி இருக்கிறார்கள். உதாரணமாக 7-வது ஷரத்திலே அவர்களின் பார்வைக்கு வந்த நாளிலிருந்து 90 நாட்கள் என்று இருப்பதை மாற்றி 'That may be prescribed' என்று போடப்பட்டிருக்கின்றது. ஆனால் செலக்ட் கமிட்டியின் விவாதத்தைப் பார்த்தால் அதிலே என்ன இருக்கின்றது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

ஒரு சங்கம் ரிஜிஸ்டர் செய்வதற்கு மனு கொடுக்கப்பட்ட 90 நாட்களுக்குள் அந்த சங்கத்திற்கு பதில் கிடைக்கவில்லை என்றால் அந்த சங்கம் ஆட்டமேட்டிக்காக ரிஜிஸ்டர் செய்யப்பட்டது என்று வைக்கப்பட வேண்டும் என்பது பொதுவான கருத்து. 90 நாட்கள் அவகாசத்திற்கு பிறகு அவர்கள் கடிதம் கொடுக்கப்படவில்லை என்றால் 90 நாட்கள் முடிந்தவுடன் அந்த சங்கம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டதாக கருத வேண்டும் என்ற இடத்திலே 90 நாளை மாற்றி 'தட் மே பி பிரஸ்கிரைப்டு' என்று போட்டு இருப்பது தேவையில்லை. அதே போன்று ஷரத்து 7, 9, லே 90 நாள் என்று இருந்ததை 120 நாட்கள் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. இது எல்லாம் கூட்டுறவு சங்கங்கள் பொறுத்த அளவிலே நிலைமையிலே எப்படிப்பட்ட தடைகள் ஏற்படுவதற்கு, காலதாமதம் ஏற்படுவதற்கு காரணமாக இருக்கும் என்பதற்காக சொல்கிறேன்.

ஒரு கூட்டுறவு சங்கத்திற்கு அலுவலகத்தை வைப்பதற்கு இடம் கேட்ட நேரத்தில் அந்த இடம் வாங்குவதற்கு விலை அதிகமாக இருக்கிறது, ஆகவே நீங்கள் ஒரு புறம்போக்கு இடத்தை கேளுங்கள், அதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கிறோம் என்று அதிகாரிகள் சொல்லி புறம்போக்கு இடத்திற்கு சிபாரிசு செய்யக்கூடாது. மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்யப்பட்டதற்கு பிறகு கூட, டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கமிட்டி 3 தடவை சிபாரிசு செய்யப்பட்ட பிறகு கூட அதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு வருடத்திற்கு மேல் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஏன் என்றால் இன்றைக்கு அரசு கூட்டுறவு சங்கங்களை எந்த முறையில் வளர்க்க வேண்டுமோ அந்த முறையில் வளர்ப்பதற்கு பதிலாக காலதாமதம் ஏற்படுத்துகிற முறையில் திருத்தங்கள் உள்ளன. செலக்ட் கமிட்டி சிபாரிசுக்கு மேலே கொடுக்கப்படுவது நியாயம் அல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



இடத்தில் நியாயம் ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பை எடுத்துவிடக்கூடிய முறையில் செலக்ட் கமிட்டி சிபாரிசுக்கு மேலே அமைச்சர் அவர்கள் ஒரு திருத்தம் கொண்டு வந்து இருக்கிறார். அந்த கலெக்டர் அதிகாரம் இப்போது ரிஜிஸ்ட்டிராருக்கு கொடுப்பதாக இது ஜனநாயக பூர்வமானது அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் ஸ்பெஷல் ஆபீசர் நியமனம் செய்வதற்கான அதிகாரம் பிரைமரி சொசைட்டிகளில் இந்த ஸ்பெஷல் ஆபீசர்களை நியமனம் செய்வது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏன் என்றால் ஒரு அரசு அதிகாரிக்கு ஊதியம் கொடுப்பதற்கு கூட முடியாத நிலைமையில் பல பிரைமரி சங்கங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த அதிகாரிகளை நியமனம் செய்யக் கூடிய விஷயத்தில் பிரைமரி சங்கங்களுக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சந்தானம் கமிட்டி சிபாரிசு கொடுத்திருக்கிறது. நாமினேஷன் என்பது ஒரு கொள்கையாக அரசு எப்போதுமே கடை பிடிக்கக்கூடாது. எந்த அளவுக்கு எலெக்டட் போர்டுகளை கொண்டுவர முடியுமோ அந்த முறையில் போர்டுகளை ஏற்படுத்த வேண்டும். ஆனால் இங்கே பலயிடங்களிலே போர்டை நாமினேட் பண்ணக்கூடிய அதிகாரம் ரிஜிஸ்ட்டிராருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. முதல் 3 வருடம் 5 வருடம் காலம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி 3 வருட காலம், 5 வருட காலம் எல்லாம் கொடுப்பது நியாயம் அல்ல. ஒரு வருட காலம் அல்லது 2 வருட காலம் கொடுக்கலாம். 5 வருட காலம் எல்லாம் அந்த சங்கத்தில் எலக்டட் போர்டு இருந்து அங்கத்தினர்களாக இருக்ககூடிய நேரத்தில் அவர்கள் விரும்பினால் ஒரு சில அரசு அதிகாரிகளை நியமனம் செய்து கொள்ளட்டும். ஆனால் முழுமையாகவே இன்று நாமினேஷன் போர்டு என்று சொல்வது சரி அல்ல. அது ஜனநாயக ஏற்பாடாக இருக்காது.

**மாண்புமிகு திரு சி. பொன்னையன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிரைமரி கூட்டுறவு சங்கங்களுடைய பணியாளர்களை 'காமன் கேட்டகரி' என்ற பிரிவுக்குள் கொண்டு வரக் கூடாது என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'காமன் கேட்டகிரி' அமைப்பை நாங்கள் வரவேற்கிறோம். காமன் கேடர் சம்பந்தமாக ஒரு பிரச்சினையை நான் பின்னாலே சொல்கிறேன். காமன் கேடர் ஊழியர்களை பொறுத்த அளவிலே பெய்ட் அபிசியல்ஸ் பொறுத்த அளவிலே வரும். ஆனால் போர்டிலே ரிஜிஸ்திரார் என்ற அபிஷியல் நாமினேட் செய்யக்கூடிய முறை பல வருடங்களுக்குத் தொடர்ச்சியாக ஏற்படுவது கூடாது என்பது எங்களுடைய கருத்து. சங்கம்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1983 பிப்ரவரி 12

இந்தச் சட்டத்திலே இண்டஸ்ட்ரியல் கோவாப்பிரேட்டிவ் சொசைட்டிக்கும், அதே போல மற்ற சொசைட்டிகளுக்கும் நாமினேட் பண்ணுவதற்கான பூரணமான அதிகாரம் ரிஜிஸ்டிராருக்கு முதல் 3 வருஷம், 5 வருஷம் என்று காலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னைக் கேட்டால் இண்டஸ்ட்டிரியல் கோவாப்பிரேட்டிவ் சொசைட்டியிலே உண்மையிலேயே அதிகமான இடங்களை வகிப்பவர்கள் யார் என்று கேட்டால் அரசியல் வாதிகள் தான் என்று சொல்வேன். அரசியல் வாதிகள் அதில் அதிகமாக இருக்கிறார்கள் என்னும்போது, நியாயமாக பிரதிநிதித்துவம் பெற வேண்டிய உற்பத்தியாளர்கள் குறைவாக இருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது. நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால்—இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் என்னும் அமைப்பினை அமைப்பதன் முக்கியமான நோக்கம் அந்த தொழிலிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு, எந்த அளவுக்கு அதிகமான அளவிற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க முடியுமோ, அவ்வளவையும் நல்ல முறையில் அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதுதான். ஆனால் அந்த இலக்கு எந்த வகையில் பூர்த்தியாகும் வகையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தற்போது நம்முடைய அவையிலே போதுமான அளவுக்கு உறுப்பினர்கள் இல்லாததால் கோரம் இல்லாமல் இருக்கின்றது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு ஆர். டி. கோபாலன்) : இப்போது வந்துகொண்டும், போய்க்கொண்டும் இருக்கிறார்கள், எனவே அதனால் ஒன்றும் இல்லை.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : சங்கங்களைப் பொறுத்த வரையிலே அரசியல் பாகுபாட்டோடு இந்த விஷயத்தைப் பார்க்கக் கூடாது என்று சொல்ல விரும்புகிறேன். விக்கிரமசிங்கபுரத்திலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கத்திலே, அதாவது தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கத்திலே எப்படி அரசியல் விளையாடுகின்றது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்த விஷயத்தின் உள்ளே நான் வரவில்லை. ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அதிகமான டிவிடெண்ட் கொடுக்கப்படுகின்ற சங்கத்திற்கு ப்ரைஸ் கொடுக்கவேண்டும் என்று.........

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விக்கிரமசிங்கபுரத்திலே இருக்கின்ற கூட்டுறவு அமைப்பிற்கு அரசியல் தலையீடு இல்லாமல் இருக்கின்ற வகையிலே முழுப் பாதுகாப்பையும் நான் தந்திருக்கிறேன் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன்.



1983 பிப்ரவரி 12]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதற்காக நன்றி. எனக்கும் தெரியும். ஆகவேதான் அதன் உள் விஷயத்திற்கு நான் போகவில்லை என்று முதலிலேயே தெளிவாகச் சொல்லிவிட்டேன். ஆனால் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைச் கொண்டுவர விரும்புகிறேன். இந்தச் சங்கம் அதிகமாகன டிவிடெண்ட் கொடுத்திருப்பதன் காரணத்தால் அந்தச் சங்கத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய ப்ரைஸ் ஏன் கொடுக்கவில்லை.? எனவே இதிலே எல்லாம் அதிகாரிகள் உடந்தையாக இருக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது. எனவே கூட்டுறவுச் சங்கங்கள் என்பது அடானமஸ் பாடி என்று முறையில் செயலாற்ற வேண்டியது மிக முக்கியமான தேவை. எனவே அதிகாரிகள் இப்படிப்பட்ட விஷயங்களில் உடந்தையாக இருக்கக்கூடாது. இதனை ஒரு உதாரணமாகத் தான் நான் சொல்ல விரும்பினேனே தவிர, அந்த உள் விஷயத்திற்கு நான் போகவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு முக்கியமான பிரச்சினை இன்றைக்கு ரெஜிஸ்ட்ராரைப் பொறுத்தவரையில் இன்று அதிகமாக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

'provided that if the general meeting does not approve of the budget before the commencement of the year ever after the budget is placed before it, the Board shall refer the budget to the Registrar for approval.

நாம் தெளிவாக இவற்றைப் பார்க்க வேண்டும். ஒரு ஜெனரல் பாடி அங்கே வைத்திருக்கின்ற பட்ஜெட்டிற்கு அங்கீகாரம் வழங்குகின்ற அதிகாரம் ரெஜிஸ்ட்ராருக்குக் கொடுக்கப்படுகின்றது. ரிஜிஸ்ட்ரார் எவ்வளவு தான் நல்லவராக இருந்தாலும் உறுப்பினர்கள் எல்லாரும் ஒத்துக்கொண்ட பட்ஜெட்டினை அங்கீகாரம் செய்கின்ற அதிகாரத்தினை ரிஜிஸ்ட்ராருக்குக் கொடுப்பது என்பது சரியல்ல. உறுப்பினர்களின் தலைக்கு மேலே இப்படி ஒரு நிலைமை இருப்பது சரியல்ல. அந்த சங்கத்தின் அஸ்திவாரமாக இருக்கின்ற ஒரே ஏற்பாடு பட்ஜெட். அதைக் கூட தடைபண்ணுவதற்குரிய அதிகாரம் ரெஜிஸ்ட்ராருக்குக் கொடுப்பது என்பது சரியாக இருக்குமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அடானமஸ் பாடி என்று சொல்கின்ற தன்மைக்கே உகந்ததாக அது இல்லை என்பதைப் பார்க்க வேண்டும்.

அடுத்து இன்னொரு பிரச்சினை. ரெஜிஸ்ட்ராரைப் பொறுத்த வரையில் ஒரு சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. செலக்ட் கமிட்டியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களில் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருத்தம் கொண்டு வந்து, ரிஜிஸ்ட்ராருக்கு அதிகாரம் கொடுக்கக்கூடிய நிலைமையை

ஆரம்பிக்கப்படுகிற நேரத்திலே 1, 2 வருடங்களுக்கு அப்படி வைத்துக் கொள்ளலாம், ஆனால் 3, 5 வருடங்கள் என்றெல்லாம் போர்டிலே நாமினேஷன் இருப்பது சரியல்ல. இதை நான் சொல்லவில்லை. சந்தானம் கமிட்டியே சிபாரிசு செய்திருக்கிறது. கூட்டுறவு நூற்பாலையில் நாமினேடட் போர்டு இருக்கக் கூடாது, அங்கே எலக்டட் பாடி இருக்க வேண்டுமென்று அந்த கமிட்டி சிபாரிசு செய்து இருக்கிறது. அந்தக் கொள்கையைப் பாதுகாக்க வேண்டுமென்ற முறையிலே நான் இதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்திலே ஒரு குறைபாடு என்று நான் பார்ப்பது ஊழியர்களுக்கு என்று இருக்கின்ற சில பிரச்சினைகளைப் பற்றி தெளிவாக இதிலே போடப் படவில்லை. அவைகள் எல்லாம் தெளிவாகப் போடப்பட வேண்டும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். கூட்டுறவுச் சட்டத்தின் மூலமாக கூட்டுறவு சங்கங்கள் வளருகின்ற நிலைக்கு ஊழியர்கள் ஒரு முக்கியமான பாத்திரமாக இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. அந்த ஊழியர்களுக்கு நாம் நியாயம் செய்யக் கூடிய பொறுப்பு, இந்தச் சட்டம் நிறைவேற்றப்படக் கூடிய இந்த நேரத்திலே இந்த அவைக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காமன் கேடர் கொண்டுவருகின்ற இந்த நேரத்திலே காமன் கேடரிலே ஏதேனும் ஒரு காரணத்திலே ஒரு ஊழியருக்கு ஆப்ட் பண்ணமுடியாத நிலை இருந்தால் அந்த நபரின் சர்வீஸ் டெர்மினேட் செய்யப்படவேண்டுமென்ற ஒரு ஷரத்து இருக்கிறது. அது சரியாக இருக்காது. ஒரு ஊழியர் ஏதேனும் ஒரு காரணத்தினால் ஆப்ட் பண்ணமுடியவில்லையென்றால் வேலையை இழக்க வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்பது மட்டும்தான் இதிலே என்னுடைய கருத்து. காமன் கேடரை நாங்கள் இந்த நேரத்திலே வரவேற்கிறோம் என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறோம்.

சர்வீஸ் கண்டிஷன்ஸ் சம்பந்தமாக இந்த சட்டத்திலே ஒரு ஷரத்து ஏற்படுத்தப்பட வேண்டும். இன்று பல இடங்களிலே ஊழியர்களைப் பொறுத்த அளவிலே நிரந்தர வேலையில்லாமல் இருக்கிறது. அவர்களுக்குப் போதுமான ஊழியம் கிடைக்காத நிலை, கிடைக்கக்கூடி உத்திரவாதம், இல்லை, வேலைக்கு உத்திரவாதம் இல்லை. எந்தச் சலுகைக்கும் உத்திரவாதம் இல்லை. அங்கே இருக்கக்கூடிய தலைவருடைய, செயலாளருடைய வேலைகளை, அவர்கள் சொல்லக்கூடிய வேலைகளையெல்லாம் செய்துதான் அவர்கள் தங்களுடைய பணிகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற துரதிருஷ்டவசமான நிலை பல கூட்டுறவு சங்கங்களிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய சர்வீஸ் கண்டிஷன்ஸ், அவர்களுடைய ஸ்கேல்ஸ் ஆப் பே என்ன என்பதையெல்லாம் இந்த சட்டத்திலே அனுபந்தமாக சேர்க்கவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். கூட்டுறவு நூற்பாலை



களைப் பொறுத்த அளவிலே லேபர் கமிஷனர் சர்டிபை செய்த ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் இருப்பதையெல்லாம் சேர்த்திருக்கிறார்கள். அதுபோல் கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றுகின்ற ஊழியர்கள் இருக்கிறார்கள். பிரைமரி சொசைடி முதல் சென்ட்ரல் பாங்க் வரையிலும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இருக்கிறார்கள் அவைகள் அவர்களுக்கும் பொருந்தும்படி செய்ய வேண்டும். கூட்டுறவு ஊழியர்களுக்கும் லேபர் கமிஷனரால் சர்டிபை செய்யப்பட்ட ஸ்டாண்டிங் ஆர்டர்களின் விதிகள் சட்டத்திலே சேர்க்கப்படக்கூடிய முறையிலே ஒரு சட்டதிருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30).

அதேபோல ஊதியத்தைப் பொறுத்தவரையில் எனக்குத் தெரிந்த அளவிலே கேரள மாநிலத்தில் அங்கே இருக்கிற கூட்டுறவு சட்டத்திலே ஊழியர்களுடைய ஸ்கேல் ஆப் பே அரசே நிர்ணயித்திருக்கிறது. கவர்ன்மென்ட் இன் கன்சல்டேஷன் வித் ரெஜிஸ்ட்ரார், எம்ப்ளாயர் அண்ட் எம்ப்ளாயிஸ் ரெப்ரசெண்டேட்டிவ்ஸ் அதைப்போல இங்கே ஒரு விதி அந்த முறையில் கொண்டு வர வேண்டும். குறிப்பாக சொல்லவேண்டுமென்றால் இது ஒரு அடானமஸ் பாடி என்ற முறையில் தமிழகத்தில் அரசினுடைய பல்வேறு செமி-இண்டஸ்ரியல் அண்டர்டேகிங்ஸ் மற்றும் கவர்ன்மென்ட் அண்டர்டேகிங்ஸில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களை போலதான் இந்த கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் என்று பார்த்து அந்த முறையில் விதிகளை கொண்டு வருவதற்கு இந்த சட்டத்திலே உத்தரவாதம் செய்ய வேண்டும்.

அதேபோல போனஸ். ஊழியர்களுக்கு குறைந்தபட்ச 10 சதவீத போனஸ் கொடுக்கக்கூடிய உத்தரவாதம் இந்த சட்டத்திலே கொண்டு வர வேண்டும் . இன்று அந்த முறையில் இல்லை; நீங்கள் நெட் பிராபிட் பங்கு போடுவதற்கு முன்னால் ஊழியர்களுக்கு குறைந்தபட்ச போனஸ், தமிழக அரசு ஏற்றுக் கொண்டிருகிற வகையில் குறைந்த பட்ச போனஸ் கொடுக்கிற வகையில் ஏற்பாடுகள் இதில் கொண்டு வரப்பட வேண்டும்.

பிராவிடண்ட் பண்ட் சம்பந்தமாக 'மே பி பிரிஸ்கிரைப்ட்' என்று போட்டிருப்பதற்கு பதிலாக ஒரு ஊழியருடைய மொத்த ஊதியத்தில் 8 சதவீதம் கொடுக்கப்பட வேண்டுமென்றும், அதே போல கூட்டுறவுச் சங்கமும் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே இதிலே திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கிராச்சுட்டி சம்பந்தமாகவும் தெளிவாக இல்லாத முறையில் இருக்கிறது ; ஒரு ஊழியர் ஒரு வருட காலம் வேலை செய்தால் அவருக்கு 15 நாள் ஊதியம் கிராச்சுட்டியாக கொடுக்கப்படும் என்பது கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்தபின்னணியில் ஒரு திருத்தத்தை இதிலே கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1983 பிப்ரவரி 12

கடைசியாக நான் சொல்ல விரும்புவது இந்த சட்டத்திலே எந்த சொசைட்டி வேண்டுமானாலும், அபெக்ஸ் சொசைட்டியாகவோ, சென்ட்ரல் சொசைட்டியாகவோ டெக்லேர் பண்ணுவதற்கு அதிகாரம் அரசிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை மிக கேர்புல்லாக டீல் பண்ணவேண்டும். எந்த சங்கத்தையும், சென்ட்ரல் சொசைட்டியாகவோ அல்லது அபெக்ஸ் சொசைட்டியாகவோ மாற்றக்கூடிய நிலை ஏற்படக்கூடாது. அபெக்ஸ் சொசைட்டி என்றால் என்னவென்று இந்த சட்டத்திலே தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இதையும் அரசாங்கம் கவனித்து செயல்படவேண்டும்.

அதைப்போல இன்னொரு விஷயம் என்னவென்றால் இந்த சட்டத்தின் 88-வது ஷரத்திலே 76-வது ஷரத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் மிகவும் கேர்புல்லாக டீல் பண்ணவேண்டியவை; அதற்கான ஏற்பாடுகள் தேவை என்று தெரிவித்துக் கொள்கிறேன். சூப்பர்செஷன் ஆப் போர்டு என்பதை பொறுத்த வரையில் இன்றைக்கு கொடுத்திருக்கிற ஷரத்தை பார்த்தால் ரெஜிஸ்ட்ராரோ அல்லது அவருடைய அதிகாரத்தை அமல்படுத்துகிற எந்த ஒரு அதிகாரியோ அவர்கள் விருப்பு வெறுப்பிற்கு தகுந்த அளவில் எந்த சங்கத்தையும் சூப்பர்சீட் பண்ணுகிற நிலை ஏற்படாமல், இந்த புரொவிஷனை செயலாக்கும் நேரத்தில் விதிகளை அரசு கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல செக்ஷன் 76-ஐ பொறுத்தவரையில் ஏற்கனவே அரசு கவனமாக அமல்படுத்த வேண்டிய ஒரு ஷரத்து என்ற முறையில் அதை அமல் படுத்தும் நேரத்தில் முறைகேடுகள் உள்ள முறையில், அதிகாரிகளின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ற முறையில் கூட்டுறவுச் சட்டங்களைப் பாதிக்கும் முறையில் அமலாக்காத நிலையை ஏற்படுத்துவதற்கு தெளிவான விதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று தெரிவித்து வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

*திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள்பற்றிய சட்டமுன்வடிவை வரவேற்று சில கருத்துக்களை நான் கூறவிரும்புகிறேன். கூட்டுறவுத் துறை ஆரம்பகாலத்திலேயே சேவை மனப்பான்மைக்காக service oriented Institution ஆக ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது அது business oriented institution ஆக மாறக்கூடிய சூழ்நிலை இயற்கையாகவே ஏற்பட்டிருக்கிறது. இந்தத் துறை ஒருசிலருடைய சொந்தச் செல்வாக்குக் காரணமாக, அவர்கள் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் ஆதிக்கம் செய்து சாதாரண ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கவேண்டிய வசதிகளை, கூட்டுறவுத் துறையினுடைய நன்மைகளைப் பெற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை உணர்ந்து, நம்முடைய மாண்புமிகு கூட்டுறவு—சட்ட துறை அமைச்சர் அவர்கள் நல்லதொரு சட்டத்தை—முழுச் சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத் திருத்தத்தினை நான் மனதார வரவேற்கிறேன். அதிலும், குறிப்பாக, கூட்டுறவுத் துறை பதிவு செய்யப்படுகிற நேரத்தில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், கிட்டத்தட்ட 90 நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும் என்று clauses 8 and 9-ல் கூறப்பட்டிருக்கிறது. 90 நாட்களுக்குள் அந்தச் சங்கத்தைப் பதிவு செய்வதற்கான வழிவகைகளைச் செய்திருப்பதை நான் மனதார வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அது போன்று ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் குறைந்தபட்சம் எவ்வளவு இயக்குநர்கள் இருக்கவேண்டுமென்றும், அதிகபட்சம் எவ்வளவு இயக்குநர்கள் இருக்கவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.



1983 பிப்ரவரி 12] [திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்]

இங்கே, நாமினேஷன்ஸ் பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள் அதிகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நாமினேஷன் காலத்தை, நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் வரையறை செய்து, 5 ஆண்டுகளுக்கு மேல் அந்த நாமினேஷன் இருக்க முடியாத சூழ்நிலையைச் சட்டத்திலே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தினுடைய பிரிவின் காரணமாக, 5 ஆண்டுகளுக்குப் பிறகு நிச்சயமாக ஜனநாயக முறையிலே, அந்தக் கூட்டுறவுச் சங்கம் நடைபெற வழிவகை செய்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் இருக்கிற சங்கம், ஆரம்பகட்டத்திலே பல்வேறு உதவிகளைப் பெறுவதற்காக, அந்த நாமினேஷன் இருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

இதுபோன்று கூட்டுறவுத் துறையின் நிர்வாகத்திற்கு வருகிறவர்கள் குறைந்தபட்சம் எழுதப்படிக்க தெரிந்தவர்கள்தான்—இயக்குநர்களாக வரவேண்டுமென்று, அதற்கான திருத்தத்தையும் சட்டத்திலே clause 34 sub-clause 1 இல் கொண்டு வந்திருக்கிறார்கள்.

பொதுவாக, கூட்டுறவுத் துறையிலே தலைவராக இருப்பவர், அவருக்குப் பிடிக்காத இயக்குநர்களை, நீக்க ஒரு வழி இருந்தது. ஏற்கனவே இருந்த சட்டத்திலே 3 கூட்டங்களுக்கு வருகை தரவில்லையென்றால் அவர்களை நீக்கிவிடலாம் என்ற பிரிவு இருக்கிறது. அந்தப் பிரிவினால் பாதிக்கப்படுபவர்கள் பலர் இருக்கிற காரணத்தினால், நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்தக் கூட்டங்கள் விரைவாக, உடனுக்குடன் கூட்டப்படாமல் இருக்க, அதற்கென்று காலவரையறை நிர்ணயம் செய்து clause 34 sub-clause (2) (d) இல் அதற்கென்று ஒரு வரன்முறையை நிர்ணயித்திருக்கிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன். அதே போன்று மகாசபை நடத்தவேண்டுமென்றால், ஏற்கனவே இருந்த சட்டத்திலே குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கினர் கலந்து

[திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்] [1983 பிப்ரவரி 12

கொள்ளவேண்டுமென்று இருக்கிறது. இப்பொழுது இருக்கிற திருத்தச் சட்டத்திலே நான்கில் ஒரு பங்கினர் இருக்கவேண்டுமென்றுநிர்ணயித்திருப்பதால், ஏற்கனவே இருப்பதை விட நல்லமுறையில் அந்த மகாசபை நடக்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதுவும் ஒரு வாரத்திற்குள் நோட்டீஸ் வழங்கமுடியாத நிலை இருக்கிற காரணத்தினால், பலருக்குத் தெரியாத நிலை ஏற்படலாம் என்று கருதி, அதை 15 நாள் என்று உயர்த்தியிருக்கிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன்.

கிளாஸ் 80-ன்படி, தற்போதிருக்கிற கூட்டுறவுச் சட்டத்திலே, பொதுவாக, ஆடிட்டை அந்தந்த ஆண்டே முடிக்கும் பழக்கம் இல்லை. அந்தப் பழக்கத்தின் காரணமாக, பல கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்துவிடக்கூடிய வாய்ப்பு இருப்பதை உணர்ந்து, கூட்டுறவுத் துறையில் ஆடிட்டுகளுக்குக் குறைந்தபட்சம் 3 மாதங்களுக்குள் ஒவ்வொரு ஆண்டும் ஆடிட்டை முடிக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

அதுபோன்று ஒவ்வொரு சங்கத்திலேயும் இருக்கின்றவர்கள் ஏதேனும் ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டால், அந்த உறுப்பினருக்குப் போதுமான அவகாசம் அளித்து, அவர்களுடைய கருத்துக்களையும் அறிந்து, அதற்குப் பிறகுதான் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய சூழ்நிலையை இந்தச் சட்டத்திலே ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அது போலத்தான் கூட்டுறவுத் துறையிலே முதன்முறையாக, கிராச்சுட்டி பண்ட் under payment of gratuity Act 1972-ன் படி பெறுவதற்கான வாய்ப்பினை நம்முடைய மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்கள் clause 79-ல் தமிழகத்திலே அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன்.

ஒரு கூட்டுறவுச் சங்கம், பொதுவாக நடைபெற முடியாத சூழ்நிலை ஏற்படுகிறபொழுது, அந்தச் சங்கத்தைப் பற்றி விசாரணை செய்து காலத்தோடு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் எத்தனையோ கூட்டுறவுச் சங்கங்கள் இன்று நடைபெற முடியாத நிலைமை ஏற்பட்டு ஸ்தம்பித்திருக்கிறது. அந்த நிலையைப் போக்குவதற்காக 81 பிரிவின் கீழ் விசாரணை அலுவலர்கள் 3 மாத காலத்திற்குள் விசாரணை செய்துஅந்த அறிக்கையினை அரசுக்கு அளிக்கவேண்டுமென்ற ஒரு விதிக்கும் clause 81-ல் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தப் பிரிவு 81-ன்படி பல கூட்டுறவுச் சங்கங்கள் உயிர் பெறும் வாய்ப்பிருக்கிறது என்பதால் நான் இந்தப் பிரிவை வரவேற்கிறேன்.



1983 பிப்ரவரி 12] [திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்]

(பிற்பகல் 12-40)

மாவட்ட அளவிலே வேலைவாய்ப்பு பெறுவது என்பது பற்றி இக் கூட்டுறவுச் சட்ட மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கிறது. இதுபற்றி ஒரேயொரு கருத்தைச் தெரிவிக்க விரும்புகிறேன். கிராமங்களில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இந்தப் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வேலை வாய்ப்பு நிலையத்தின் மூலமாக அளிக்கப்படும் சிப்பந்திகளுக்குப் போதுமான அளவிற்குச் சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதுபோன்றே பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சங்கடமான சூழ்நிலை உள்ளன எனவே இச்சங்கங்களுக்கு இந்தப் பிரிவினை விஸ்தரிப்பதை நிறுத்தி வைப்பது குறித்து அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்சார்ஜ், சூப்பர்சிஷன் பற்றி பிரிவுகள் 87 மற்றும் 88 ஆகியவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு கூட்டுறவு சங்கத்தை எடுத்துக்கொண்டால், அந்தக் கூட்டுறவுச் சங்கதின் சொத்துக்களை அவர்கள் தங்களது சொத்துக்களாகவே பாவித்து அதை முழுவதும் அனுபவித்துக்கொண்டிருக்கும் சூழ்நிலை கடந்த காலத்திலே இருந்தது. அந்த நிலையைப் போக்க வேண்டுமென்பதற்காக, சர்சார்ஜ் புரொசீடிங்க்ஸை நடவடிக்கை எடுப்பதை குறைந்தபட்சம் மூன்று மாத காலத்திற்குள்ளாக முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் விரும்புகிறார்கள். அது நல்ல வழிவகை என்பதைக் கூறி அதனை நான் வரவேற்கிறேன்.

சூப்பர்சிஷனைப் பொறுத்தவரையில் ஒரு காலத்தில் சூப்பர்சீட் செய்யப்பட்டால் பல ஆண்டுகாலமாக அச் சங்கங்கள் புதுப்பிக்க முடியாத நிலை இருக்கிறது. சூப்பர்சிஷன் காலத்தில், உறுப்பினர்களுக்குச் சேர வேண்டிய பலனை அவர்கள் பெற முடியாத நிலைமை தற்போது இருக்கிறது. அதை மாற்றுவதற்கு பிரிவு 88-இன்படி அதிகபட்சம் மூன்றாண்டுக் காலத்திற்குள் சூப்பர்சிஷன் பீரியடை முடிக்க ஏற்பாடு செய்திருப்பதை வரவேற்கிறேன்.

ஒரு கூட்டுறவுச் சங்கத்தை மூட வேண்டுமென்றால் அல்லது அதைப் பயனற்றதாகச் செய்ய வேண்டுமென்றால் அந்தச் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்கள் கருத்தைக் கூறுவதற்கு clause 137-வது பிரிவின்படி சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது. பிரிவு 142-லே, கூட்டுறவுத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள், சென்ட்ரல் கோவாப்பரேட்டிவ் பேங்குகள் போன்ற ஸ்தாபனங்களை விசாரிக்கவும் ஆலோசனை பெறவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இதன்மூலம் தங்களுடைய சங்க நிர்வாகம் எந்தக் காரணத்தால் மூடப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது என்பதைத் தெரிந்து கொண்டு அந்தச் சங்கம் நல்லமுறையில்

அவர்களுக்கு அளிக்கப்படுகிறது, அந்தமுறை மாற்றப்பட்டு அந்தந்த கூட்டுறவு நெசவாளர் சங்கங்களின் இயக்குநர்களுக்கு மட்டும்தான் குறைந்தபட்சம் ஒரு வாய்ப்பை அளிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனவே இப்புதிய பிரிவினால் ஏற்படுகின்ற நடைமுறை சங்கடங்களை கருதி தற்போதுள்ள நடைமுறையே நீடித்தால் நல்லது.

அடுத்து, போனஸ் பிரிவைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. இந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் கல்வி நிதி என்று ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், அந்தக் கல்வி நிதியில் இருந்து அங்கே உழைக்கின்ற அந்த நெசவாளர்களுடைய குடும்பங்களுக்கு, அல்லது அவர்களுடைய வாரிசுகளுக்கு, அந்தச் சங்கம் எந்தவிதமான சலுகையும் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்தக் குழந்தைகள் கல்விபெறும், வாய்ப்பை இந்நிதியில் இருந்து தற்போது செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சங்கங்களுக்கு பொது நலநிதியையும் கல்வி நிதியையும் பயன்படுத்த அதிகாரம் அளிக்க வேண்டும்.

அதேபோன்று இங்கே பகுதி 33-லே நலிந்த பிரிவினருக்கு வாய்ப்பு அளிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கின்ற உறுப்பினர்கள் அனைவருமே பெரும்பாலும் நலிந்த பிரிவினர்களாக இருக்கிறார்கள். அவர்களையும் நலிந்த பிரிவினராக கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த 33-வது பிரிவிலே எல்லாவிதமான அதிகாரங்களும் ஓரிடத்திலே குவியக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதை மாற்றி "டி சென்ட்ரலைசேஷன் ஆப் பவர்ஸ்" என்ற முறையிலே அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு மறுபரிசீலனை செய்யக் கூடிய வகையிலே கீழ்மட்டத்திலே இருக்கக் கூடியவர்களுக்கு அந்த அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

பிரிவு 33-ன் கீழ் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் அரசு அலுவலர்களை நியமிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இந்தப் பிரிவின் கீழ் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டு வந்தால் அந்தக் கூட்டுறவு சங்கங்கள் மிகவும் நலிந்த நிலையில் இருக்கின்ற காரணத்தால், அவர்கள் அந்தப் பணியாளர்களுக்கு சம்பளம் கூட கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. இதனால் அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் உடனடியாக மூடப்பட வேண்டிய நிலை ஏற்படும். பதிவாளருக்கு அளவுக்கு அதிகமாக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நிர்வாகத்தினருக்கு ஒரு அதிகாரமுமில்லை. எனவே இதையும் அமைச்சர் அவர்கள்



மறுபரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமாறு விரும்பி வேண்டி கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12-50)

*திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு 1980-ஆம் ஆண்டு கூட்டுறவு மசோதா மீது கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு நான் விரும்புகிறேன். இந்த மசோதா பொறுக்குக் குழுவினுடைய ஆய்வை முடித்து சட்டமன்றத்திலே பொறுக்குக் குழுவின் திருத்தங்களோடு, பொறுக்குக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்களோடு இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் கூட மாண்புமிகு அமைச்சர் அந்த பொறுக்குக்குழுவின் திருத்தங்களுக்குப் பிறகு, பொறுக்குக் குழு சமர்ப்பித்து இருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவிற்கு கூட சில மாறுதல்களை, திருத்தங்களை அவையின் முன்பு வைத்திருக்கிறார்கள். ஆகவே அந்த முறையிலே பொறுக்குக் குழு ஆய்வு செய்து ஒரு சட்டமுன்வடிவை வைத்ததற்குப் பிறகு பல்வேறு திருத்தங்கள் இந்த அவையின் முன்னால் அரசின் தரப்பிலே வைக்கப்படுவது சரியல்ல என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த சட்டத்தினுடைய தன்மைகள், அது எந்த அளவிற்கு நாட்டில் கூட்டுறவு இயக்கத்தை, ஜனநாயகப்படுத்தி இந்தச் கூட்டுறவு இயக்கத்தின் நோக்கங்களை நிறைவேற்ற கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகங்களை, ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல நிர்வாக அமைப்புகளின் மூலம், நடைமுறையிலே தங்களுடைய கடமைகளை நிறைவேற்றி, விவசாயிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மற்றும் இதனால் பயன்பெற விரும்பி அங்கம் வகிக்கும் மக்களுக்கும் சரியான பயனை விளைவிக்கக்கூடிய முறையில் இந்த மசோதா எந்த அளவிற்கு வழி வகைகளை செய்யும் என்பதை முழுமையாக பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சட்டம் என்ற சட்டம் முதலாவதாக நம் நாட்டில் 1904 ஆம் ஆண்டு மத்திய அரசாங்கத்தால் இயற்றப் பட்டது. நம்முடைய தேசத்தில், நம்முடைய தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் 1892 ஆம் ஆண்டிலே துவக்கப்பட்டது என்பதும் ஆரம்பத்திலே துவக்கப்பட்ட சங்கங்கள் அனைத்தும் கிராமப் புறங்களிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு கடனை

[திரு. வெங்கடசுப்பிரமணியம்] [1983 பிப்ரவரி 12

நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு நல்க இந்தத் திருத்தம் சங்க உறுப்பினர்களுக்கும் வங்கிக்கும் பெரிய உதவியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன் மெம்பர் ட்ரிப்யூனல் பற்றி கிளாஸ் 151-லே குறிப்பிடப் பட்டிருக்கிறது. இது நல்ல முறையில் பணியாற்றினால் கூட்டுறவுச் சொத்துக்களைச் சூறையாடிய பலபேர்களை தண்டிக்கும் சூழ்நிலை இருக்கிறது. இந்த ட்ரிப்யூனலை மேலும் அதிகப்படுத்தி, அந்த ட்ரிப்யூனல் அதிகாரிகள் நல்ல முறையில் பணியாற்றி அரசுக்கு ஒத்துழைப்பு தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டமுன்வடிவில் சில மாற்றங்களைச் செய்தால் மேலும் இந்தக் கூட்டுறவுத் துறை வலுவானதாக இருக்கும் என்ற காரணத்தினால் நான் சில கருத்துக்களை மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சரவர்களின் முன்பு வைக்க விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தின்படி, பிரதம கூட்டுறவுச் சங்கத்தில் தலைவராக இருப்பவர் அதனுடைய மேல் அமைப்புக்குச் செல்லக்கூடிய வாய்ப்பில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், பிரதம காட்டன் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தை எடுத்துக்கொண்டால் அதிலே தலைவராக இருப் பவர் மத்திய வங்கியிலே இயக்குநராக இருப்பதற்கு வாய்ப் பளிக்கும் முறையில் இப்பொழுது இருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தின் மூலம் அந்த வாய்ப்பை எடுத்துவிட்டால் பிரதம கூட்டுறவுச் சங்கத்திலிருப்பவர்கள் மத்திய வங்கிக்குச் சென்று அங்கு தங்களுக்குள்ள சங்கடங்களை பற்றி எடுத்துச் சொல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடும். இப்பொழுது தேர்ந்தெடுக்கப்படுகின்ற மத்திய கூட்டுறவுச் சங்கத் தலைவர் மாநிலத்தில் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி இயக்கு நராகவும், தலைவராகவும் வருகின்ற வாய்ப்பு இருக்கிறது. அந்த நிலை மாற்றப்பட்டால் குருடன் மற்றவர்களுக்கு வழி காட்டக் கூடிய நிலையைப் போன்றுதான் ஏற்படும். ஆகவே, பிரதம கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருப்பவர், அதாவது ஒரு துறையைச் சேர்ந்த பிரதம கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருப்பவர் அதே துறையைச் சேர்ந்த மேல் அமைப்புக்குச் செல்லக்கூடிய வகையில் இந்தச் சட்டத்தில் விதிவிலக்கு அளித்தால் மேலும் இந்தத் துறை வலுப்பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும், ஏரியா ஆப்பரேஷன் என்று சொல்லுவார்களே அதை வரையறை செய்துவிட்டால், அந்த ஏரியா ஆப்பரேஷனிலே இருப்பவர்கள் மட்டும் அந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராகப் பணியாற்ற முடியும். தற்போதுள்ள சூழ்நிலையில் வெவ்வேறான வகை



1983 பிப்ரவரி 12] [திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்]

களில் ஏற்பாடுகளைச் செய்துகொண்டு சங்கங்களில் உறுப் பினர்களாகி, அந்தச் சங்கத்தை நடத்த முடியாத சூழ்நிலை களைச் சில நேரங்களில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, Every Primary Society rendering a particular service or engaged in a particular activity should have a clearly defined territorial Jurisdiction.

அடுத்து membership is opened to those who are actually engaged in the profession only. இந்த வரைமுறையினை நிச்சயமாக ஒவ்வொரு பிரதம கூட்டுறவுச் சங்கத்திற்கும் செய்தால், இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையிலே பணியாற்ற வழி இருக்கும் இதே போன்று ஒவ்வோரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் எவ்வளவு உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டும் என்று விரும்புகிறார் களோ அவர்களுக்கு வேண்டிய வழிவகைகளைச் செய்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை இந்த மத்திய கூட்டுறவு வங்கிகளிலே வழிவகை செய்யவேண்டும்.

There should be no admission of individuals as members of Central Bank and individual membership in all banks and societies should be abolished.

ஒவ்வொரு மத்திய கூட்டுறவு வங்கியிலேயும் தனியார் உறுப் பினர்கள் இருப்பதைத் தவிர்க்கவேண்டும். தவிர்த்தால்தான் அவர்களுடைய ஆதிக்கத்தை ஒழிப்பதற்கு வழிவகை செய்ய முடியும்.

அதேபோன்று தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் சங்கத்தை எடுத்துக் கொண்டால், அதிலே தனிப்பட்டவர்கள் தலைவராக வந்து, அந்த மாநில கூட்டுறவுச் சங்கம் செயல் படாத நிலை ஏற்படும். அந்த மாநில கூட்டுறவுச் சங்கத் தில், அந்தப் பிரதம சங்கத்திலே தலைவராக இருக்கிற வர்களுக்கு மட்டும்வாக்களிக்கும் உரிமையளித்தால் தான் அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் நல்லமுறையிலே செயல்பட வாய்ப்பு இருக்கிறது. அதேபோன்று ஒவ்வொரு மத்திய வங்கியிலேயும் இதுபோன்ற நிலை ஏற்படவேண்டும். பிரதம கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்களுக்குத்தான் மேலமைப்புக்கு வாக்களிக்கவும், இயக்குநராகவும் வாய்ப்பளிக்க வேண்டும்.

அடுத்து, ஒப்பன் அட்மிஷன் என்று ஒரு கிளாஸ் இந்தக் கூட்டுறவு சட்டத்திலே செய்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே பல நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக் கின்றன. ஒரு கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராக இருக்கிறவர்கள், அங்கே உள்ள 'ரா மெட்டீரியல்களை' எடுத்துச் சென்றுவிட்டு, அதையும் சாப்பிட்டுவிட்டு, மற்றொரு கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராக சேர்ந்தால் பல சங்கங்கள் ஏமாற்றப்படக் கூடிய சூழ்நிலை சட்டப்பூர்வமாக

[திரு. இரா. கருப்பையா] [1983 பிப்ரவரி 12

வழங்கக்கூடிய வகையிலே செய்வதற்கான முறையிலே அந்தச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டது என்பதும், ஆகவே அதை ஒழுங்குபடுத்தக்கூடிய முறையிலேதான் 1904 ஆம் ஆண்டு சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற, கூட்டுறவுத் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடனைப் பெற்றுத் தருவதற்கு, மற்ற நிதி ஆதாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வழிவகை செய்யக்கூடிய மத்திய சங்கங்கள், மத்திய வங்கிகள், மத்திய அமைப்புகள் தோன்றிய காலத்திலே இந்தச் சட்டத்தை திருத்துவதும் அவசியம் என்ற நோக்கத்தில் மீண்டும் 1912 ஆம் ஆண்டிலே இந்தச் சட்டம் மத்திய அரசாங்கத்தால் திருத்தப்பட்டது என்பதும் அனைவரும் அறிவோம். நம்முடைய தமிழகத்தில் இந்தக் கூட்டுறவு இயக்கம் 1892 ஆம் ஆண்டிலே இது துவக்கப்பட்டாலும் தமிழகத்திலே முதலாவதாக 1932 ஆம் ஆண்டிலேதான் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் என்ற 1932 ஆம் ஆண்டின் 6—வது சட்டம் என்ற அடிப்படையிலே அந்தச் சட்டம் இங்கு உருவாக்கப்பட்டது, இயற்றப்பட்டது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதற்குப் பிறகும் 30 ஆண்டுகள் கழித்து நம்முடைய சட்டமன்றத்திலே 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டம் இந்த சட்டமன்றத்திலே அன்றைய தினம் கூட்டுறவு அமைச்சராக இருந்த இன்றையதினம் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சராக இருக்கின்ற—மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன் அவர்களால் இந்தச் சட்டமன்றத்திலே அது தாக்கல் செய்யப்பட்டு, அது சட்டமாக இயற்றப்பட்டது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு 30 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு 1961 ஆம் ஆண்டிலே அந்தச் சட்டம் இயற்றப்பட்டது. அன்றையதினம் சட்ட அமைச்சராக, கூட்டுறவு அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இந்த அவையிலே பேசியது, இது ஒரு முற்போக்கான சட்டம் என்ற ஒரு கருத்தை இந்த அவையிலே அன்றையதினம் அவர்கள் கூறி அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

இன்றையதினம் 1982 ஆம் ஆண்டில், 20 ஆண்டுகள் கழித்து நாம் இந்தச் சட்ட முன்வடிவை பரிசீலிக்கக்கூடிய நேரத்திலே பழைய சட்டத்திலே பல மாற்றங்கள் செய்ய வேண்டியது அவசியம் என்று கருதி கூட்டுறவு இயக்கத்தின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக இந்தச் சட்ட முன்வடிவு இந்த அவையிலே, இன்றைய தினம் புதிதாக, புதிய உருவத்தைப் பெற்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.



1983 பிப்ரவரி 12] [திரு. இரா. கருப்பையா]

ஆனால் இந்த 20 ஆண்டு காலத்தில் இந்தச் சட்டத்தை மாற்றுவதற்கான அவசியம் மற்றும் தேவை எதற்கு என்று நாம் கருதினோமோ, எந்தெந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக அந்தச் சட்டத்திலே மாறுதல்கள் கொண்டு வரவேண்டும் என்று நாம் விரும்பினோமோ அந்த மாறுதல்களை முழுமையாகக் கொண்டு வரக்கூடிய அளவிற்கு இந்தச் சட்ட முன்வடிவிலே மாற்றங்கள் கொண்டு வரப்பட்டு இருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை என்றுதான் நான் கூற வேண்டும்.

சித்த வைத்தியத் த ஆராய்ச்சி செய்து எந்த எந்த வகையில் அந்த மருந்துக ளைச் சாப்பிட்டால் மக்களுக்கு நல்லமுறையில் பயனளிக்க கூடியதாக இருக்கும் என்ப தப் பார்க்கவேண்டும். அதை நல்லமுறையில் விளம்பரப்படுத்தி, இன்னும் சொல்லப் போனால் ஒவ்வொரு ஒன்றியத்திலும் கிராமங்கள் தோறும் பயிற்சி பெற்ற டாக்டர்களை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த வகையில் சித்த, யுனானி, ஆயுர்வேதிக் ஆகிய வற்றில் பதிவு செய்தவர்களை மத்திய சங்க தேர்தலில் வாக்களிக்கிற உரிமை அளிக்கிற இந்த சட்டத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் சொன்னேன். A point of order may be raised in relation to the business before the House at the moment. இப்போது என்ன பிசினஸ், நீங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கிறபோது அட்ஜெர்ன்மெண்ட்

நம்முடைய மாநிலத்தில் இன்றையதினம் 16 கூட்டுறவு மத்திய வங்கிகள் இருக்கின்றன. கிராம விவசாய சேவை சங்கங்கள் நடைமுறையிலே கிட்டத்தட்ட 5,000 சங்கங்கள் இருக்கின்றன. நிலவள வங்கிகள் 223 இருக்கின்றன. கூட்டுறவு நகர வங்கிகள் 131 இருக்கின்றன. எம்ப்ளாயீஸ் கிரிடிட் சொசைடீஸ் 1,205 இருக்கின்றன. நகர கடன் சங்கங்கள் 74 இருக்கின்றன. கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் 29 இருக்கின்றன. பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள் 3,492 இருக்கின்றன. லிப்ட் இர்ரிகேஷன் சொசைடீஸ் பெயரளவிற்கு இருந்தாலும் 162 சொசைடிகள் இருக்கின்றன. மார்க்கெட்டிங் சொசைடீஸ் விற்பனை சங்கங்கள் 114 இருக்கின்றன. அச்சகங்கள் 16 இருக்கின்றன. கூட்டுறவு காண்டின்கள் 79 இருக்கின்றன. தொழில் துறை கூட்டுறவுச் சங்கங்கள் 559 இருக்கின்றன. காதி கிராம கைத்தொழில் நிறுவனத்தின் மூலம் நிர்வகிக்கக்கூடிய கூட்டுறவு சங்கங்கள் 3,312 இருக்கின்றன. நெசவாளர் சங்கங்கள் 1,100 இருக்கின்றன. இதைத் தவிர பால் வழங்கும் சங்கங்கள் நம்முடைய மாநிலத்தில் கிட்டத்தட்ட 4,800 சங்கங்கள் இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் 20,000-க்கும் அதிகமான கூட்டுறவு சங்கங்கள் இன்றைய தினம் நம்முடைய மாநிலத்தில் இருக்கின்றன.

இந்த 20,000 சங்கங்களிலும் இன்றைக்கு தேர்ந்தெடுக்கப் பட்ட அமைப்புகள் இல்லை. அனைத்து மாவட்ட மற்றும் மத்திய அமைப்புகளிலும், அனைத்து தொழில் கூட்டுறவு சங்கங்களிலும் இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்புகள் கிடையாது. நிலவள வங்கிகளில் கிடையாது. விற்பனை சங்கங்களில் கிடையாது. அபெக்ஸ் சொஸைசடிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்புகள், நிர்வாகக் குழுக்கள் இல்லை.

அதேநேரத்தில் கிராமச் சங்கங்கள், விவசாயக் கடன் சங்கங்கள் ஆகியவற்றில், அந்தச் சங்கங்களுக்கு தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள் பல ஆண்டுகாலமாக அந்த நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறார்கள். ஏற்கனவே தேர்ந்தெடுக்கப் பட்ட அடிப்படையில் அவர்கள் தொடர்ந்து அந்தப் பத்வியில் நீடித்து இருந்து கொண்டு இருக்கிறார்கள்.

ஒரு வேளை அமைச்சர் அவர்கள் சொல்லலாம், இதை மொத்தமாக எடுத்துக்கொண்டால், ' அவர்களின் பதவிக் காலத்தை நீட்டித்திருந்தாலும் மாநிலத்திலே கிட்டத்தட்ட 10,000 அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சபை இருக்கி றது என்று கூறலாம். ஆனால் இதிலே உண்மையென்னவென்று சொன்னால், இந்த 10,000 கிராம விவசாய சங்கங்களுக்கு நிதி ஆதாரம் பெற்றுத் தருகிற, அவைகளுக்கு ஊற்றுக் கண்போல் இருக்கின்ற மத்திய வங்கிகளிலோ அல்லது விற்பனை சங்கங் களிலோ அல்லது நிலவள வங்கிகளிலோ, அல்லது மையமாக நிதி ஆதாரத்தை முழுமையாகப்பெற்று செயலாற்றும் அத்தகைய அமைப்புகளிலோ தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபை கிடையாது. அவைகள் எல்லாம் இப்போது தனி அதிகாரி களின் நிர்வாகத்தின் கீழ் தான் இயங்கி வருகின்றன என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1—00.)

அது மட்டுமல்ல. இன்டஸ்டரியல் கோவாப்பரேடிவ்ஸ் என்று சொல்லக்கூடிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. கூட்டுறவு சர்க் கரை ஆலைகள் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் என்ன? தனியார் ஆதிக்கத்தில் இருக்கிற சர்க்கரை ஆலைகளின் கொடுமை யிலிருந்து கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளைப் பாது காக்க வேண்டும்; கரும்புக்கு கட்டுப்படியாகும் நியாயமான விலை, மலிவான விலையில் இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் சர்க்கரை வழங்க வேண்டும் ; அந்தப் பொறுப்பை நம்முடைய கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூலம் நடைமுறைப்படுத்த வேண் டும் என்ற எண்ணத்தோடுதான் நம்முடைய நாட்டிலே கூட்டுறவு





சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்தினார்கள். அந்த கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தோன்றிய காலத்திலிருந்து இன்றையதினம் வரையில் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபை இல்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இந்த நிலைமை களைப் போக்குவதற்காக இந்தச் சட்டத்திலே என்ன மாற் றம் வருகிறது என்பதைப் பார்க்கும்போது மேலும் 5 ஆண்டு காலத்திற்கு இந்தச் சட்டத்தின் மூலம் அந்த கூட்டுறவு சர்க் கரை ஆலைகளின் நிர்வாகத்தை நடத்த, இயக்குநர்களை நிய மிக்கக்கூடிய அதிகாரத்தை கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு கொடுக்க வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப் பிட விரும்புகிறேன். (குறுக்கீடு) தேர்தல் வருகிறது என்று சொல்கிறார்கள் ; வந்தால் சந்தோஷம். அதுதான் எங்கள் விருப்பம்.

அதைப்போன்று இலட்சக்கணக்கான நெசவாளர்களின் துயரைப்போக்க, நூல் விலையேற்றத்தைத் தடுக்க, நியாயமான விலையில் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்கச் செய்ய கூட்டுறவு நூற்பாலைகளை ஏற்படுத்தினோம். அந்த நூற் பாலைகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபை இல்லை என்பதை வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட ஒரு சட்டம் இல்லாத காரணத்தாலே அந்த ஸ்தாபனங்களுக்கு தேர்தல் நடத்தவில்லை என்று இப்போது யாரும் நினைக்கமாட்டார்கள். சட்டம் வந்தாலும் இந்த நிலைதான். 1976 ஆம் ஆண்டு அன்றையதினம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர வையின் பதவிக்காலத்தை நீடிக்காமல் நிறுத்தப்பட்ட பிறகு நம்முடைய மாநிலத்திலே நேரடியாக அட்வைசர்ஸ் ஆட்சி ஏற்பட்ட காலத்தில் இதற்கான தேர்தல்கள் முழுமையாக நிறுத்தப்பட்டன. அப்போது தேர்தல் நடைபெறவில்லை என் றாலும், அதைத் தொடர்ந்து சட்டம் இயற்றப்பட்டு, முழுமை யாக நல்லமுறையில் தேர்தலை நடத்தலாம் என்று கூறியே தேர்தல் இதுவரை ஒத்திவைக்கப்பட்டது. மேலும் இவற்றிற் கான தேர்தலை ஒத்திவைக்கக்கூடாது என்பதற்காகவே இந்த அவையிலே இந்த சட்டமன்றத் தொடர் கூட்டத்திலே எப் படியும் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற உணர்வோடு மாண்புமிகு அமைச்சரவர்களும் மற்றும் இங்கே இருக்கிற அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைத்து, இந்தச் சட் டத்தை நிறைவேற்றி, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபை எப்படியும் இந்த ஆண்டு ஜூலை 1-ந்தேதி அமைக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தச் சட்டத்தை இங்கே நாம் விவாதித்துக்கொண்டிருக்கிறோம்.

இன்றையதினம் இந்தச் சட்டத்தை இங்கே விவாதிக்கின்ற போது ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கனவே மாநிலத்திலும் சரி, மத்திய அரசின் சார்பிலும் சரி, இந்த கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்ற நடைமுறைகளைப் பற்றியும் அதற்கான சட்டங்களை இயற்றுவதைப் பற்றியும் விதிகளை இயற்றுவதைப்பற்றியும் அதிகாரங்கள் கொடுப்பது சம்பந்தமாக பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன. முதலிலே டி. எம். நாராயணசாமி பிள்ளை குழு அமைக்கப்பட்டது. அதன் பிறகு சந்தானம் கமிட்டி அமைக்கப்பட்டது. இந்த சந்தானம் கமிட்டி பல்வேறு பரிந்துரைகளைக் கொடுத்திருக்கிறது. அதிலும் குறிப்பாக சந்தானம் கமிட்டி இந்த கூட்டுறவுச் சங்கங்கள் ஜனநாயக முறையில் செயல்பட, சுயேச்சையாக செயல்பட வழிவகை ஏற்பட வேண்டும் என்றும் அரசுத்துறை நிர்வாக மேற்பார்வை செய்வதை மட்டும் மேற்கொள்ள வழிமுறைகள் இருக்க வேண்டும் என்றும் சந்தானம் கமிட்டியில் கூறியிருக்கிறார்கள். அந்தவகையிலே சட்டங்களும் விதிகளும் இயற்றப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

நாம் பல்வேறு சந்தர்ப்பங்களிலே இந்த கூட்டுறவுத் துறை பற்றி விவாதித்திருக்கிறோம். மீண்டும் மீண்டும் பேசியும் பல ஆண்டுகளாக தேர்தல் நடைபெறவில்லை. கூட்டுறவுத் தத்துவத்தை, கொள்கையை நிலைநாட்ட கூட்டுறவுச் சங்கங்கள் சுயேச்சையாக இயங்க வேண்டும்; ஜனநாயக முறையில் இயங்க வேண்டும். அதிலே இருக்கின்ற அங்கத்தினர்கள் அனைவருக்கும் நியாயமான உரிமைகளைக் கொடுத்து, அந்த அடிப்படையிலே இந்த கூட்டுறவுச் சங்கங்களை இயக்குவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும். இடைத்தரகர்களின் குறுக்கீடுகளை, சுரண்டலை ஒழித்து, எக்ஸ்பிளாயிட்டேஷனை ஒழித்து, மக்களின் பொதுவான நலன்களை — அவர்கள் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி, அல்லது நகரப்புறங்களிலே இருக்கிற மக்களாக இருந்தாலும் சரி, அந்த மக்களுடைய பொதுவான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான முறையிலே இந்தச் சங்கங்கள் இயங்க வேண்டும் என்பதுதான் அதனுடைய குறிக்கோளாக இருந்திருக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் ஒரு ஊர் பிரச்சனையைப் பற்றி தெரிந்துக் கொள்ள விரும்புவதெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, 1-4-1983 முதல் தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடு இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஏதாவது தேதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? சீக்கிரமாக தேர்தலை நடத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?





மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய நல்ல எண்ணத்தை வெளியிட்டார். அவ்வளவுதான். என்னுடைய உரையிலே இறுதியிலே நான் கூறுகிறேன்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுக் கொள்கை தத்துவம் சம்பந்தமாக குறிப்பிட்டு வந்தேன். (குறுக்கீடு) ஆமாம். Intermediary Exploitation அதிலே சுரண்டல் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் முக்கியமான தத்துவம். என்னுடைய பையிலே யாரும் கை வைக்க வேண்டாம். அடுத்தவர்களுடைய பையிலே நானும் கை வைக்கக்கூடாது என்பதை அடிப்படையாக கொண்டு அவரவர்கள் நல்ல முறையிலே மற்றவர்களோடு--அவர்களுடைய ஒத்துழைப்புப் பெற்று, கூட்டாக இருந்து வாழவேண்டும் என்று பொதுவான தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு உருவாகி அந்த வகையிலே நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையிலேதான் அதை நிறைவேற்றுவதற்காக இந்த இயக்கமும், இந்தச் சட்டமும் அமைக்கப்பட வேண்டும். அதுதான் கருப்பொருளாக இன்றையதினம் அமைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஆனால் எந்த அளவுக்கு நடைமுறையிலே இந்தச் சட்டத்தின் மூலமாக நாம் விரும்புகிற ஜனநாயக முறை இன்றையதினம் செயல்படுகிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு சட்டம் இருக்கிறது. அதிலே தேர்தல்கள்—3 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபை அமைக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சட்டத்தின் மூலமாக விதிகள் இயற்றப்பட்டிருக்கிறது. அங்கத்தினர்கள் தகுதி, அல்லது தகுதியின்மை என்பதைப் பற்றி பின்னாலே எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அதே நேரத்தில் அங்கத்தினர்கள் வாக்களிப்பது, எப்படி தேர்தல் நடத்துவது என்பவை போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்து விதிகள் இயற்றப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக போர்டுகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபைக்கு இருக்கின்ற அதிகாரம் என்ன? ஜனநாயக முறையில் அவர்கள் செயல்படுவதற்கு அதிகாரம் இருக்கிறதா என்பதை சற்று அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நிர்வாக சபை—ஒரு குறிப்பிட்ட கிராம விவசாய சேவா சங்கமாக இருந்தால் அதனுடைய அலுவல்களை இன்றைய தினம் யார் தீர்மானிப்பது. தேர்ந்து எடுக்கப்பட்ட போர்டு இருக்கிறது. அல்டிமேட் அத்தாரிட்டி, ஜெனரல் பாடி என்று சட்டத்திலே மற்றும் விதிகளிலே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த சொசைட்டியிலே என்னென்ன-பை-லாக்கள்

[திரு. இரா. கருப்பையா] [1983 பிப்ரவரி 12

என்னென்ன விதமான ஆபரேஷன்கள், என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்று அந்த சொசைட்டியிலே திர்ணயித்து இருக்கக்கூடிய காரியங்களை நிறைவேற்றுவதற்கு அந்த நிர்வாக சபைக்கோ அல்லது அங்கத்தினர்களுக்கோ அதிலே அங்கம் பெறக்கூடிய அங்கத்தினர்களுக்கோ கருத்துச் சொல்லக்கூடிய அல்லது முடிவு செய்யக்கூடிய உரிமை இருக்கிறதா என்றால் நிச்சயமாக கிடையாது.

இந்த சொசைட்டி இன்னச் செயல்களைத்தான் செய்ய வேண்டும், இன்னின்ன காரியங்களைத்தான் செய்ய வேண்டும் என்று நடைமுறையின் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, அதை மீறி—பை-லாவில் இருந்தாலும் சரி—அதன்படிகூட செயல்பட முடியாத நிலை இன்றையதினம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த சொசைட்டியை இயக்குவதற்கான பை-லாக்கள் இருக்கின்றன. அந்த பை-லாக்களை உருவாக்கியது யார்? அந்த கூட்டுறவுச் சங்கத்தை சேர்ந்தவர்கள் மகாசபையிலே வைத்து, அங்கீகாரம் செய்து, பதிவாளர்களுக்கு அனுப்பி, அந்த பைலாக்கள் ஏற்றுக் கொள்ளப்பெற்று இயற்றப்படுகின்றன.

ஆனால் அந்த பை-லாக்களிலே குறிப்பிடப்பட்டிருக்கிற காரியங்களைச் செய்வதற்கு இன்றையதினம் அவர்களால் முடியாது. பதிவாளர்கள் அவர்கள், என்னென்ன ஆப்ரேஷன்கள், என்னென்ன காரியங்களை அந்த சொசைட்டியிலே செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ, உத்தரவு இருக்கிறதோ அதைத்தான் நிறைவேற்றவேண்டும். பதிவாளர்கள் உத்தரவு இடுதல் என்பதை அவருடைய இன்ஸ்டிரக்ஷன்களை சர்க்குலர் வாயிலாக அனுப்புவார். அதை எடுத்துக்கொண்டு துணை பதிவாளர் ஆக்ஷன்ஸ் எடுக்கின்ற உப பதிவாளருக்கு அனுப்புவார்.

(பிற்பகல் 1-10)

சார் பதிவாளர் வருவார், வந்து ரிஜிஸ்ட்ராருடைய இன்ஸ்ட்ரக்ஷன் இருக்கின்றது, சர்குலர் இருக்கின்றது என்று சொல்லி பைலாவிலே இருக்கிறது என்று அதன்படி ஏதாவது செய்தீர்கள் என்றால் அது சட்ட விரோதம் ஆகவே உடனே பைலாவை மாற்றுங்கள் என்று உடனே சொல்லிவிடுவார்கள். ஆகவே பைலாவை இயற்றுவதற்கான, பைலாப்படி செயலாற்றுவதற்கான அதிகாரம் இன்றையதினம் கூட்டுறவு சங்கங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகச் சபைக்கும் மகா சபைக்கும் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கடன் வழங்குவது சம்பந்தமாக, கடனை வசூலிப்பது சம்பந்தமாக வட்டி விகிதங்களை நிர்ணயிப்பது சம்பந்தமாக மற்ற அனைத்து காரியங்களுக்கும் அதாவது உரம் வழங்குவது சம்பந்தமாக அனைத்து பிரச்சனைகளிலும் பதிவாளருடைய உத்தரவை



1983 பிப்ரவரி 12] [திரு. இரா. கருப்பையா]

நிறைவேற்ற வேண்டும். அந்த சங்கங்களின் தலைவர்கள் அவற்றைதான் நிறைவேற்ற வேண்டும், அவற்றை நிறைவேற்ற செய்வதற்கு இன்றையதினம் கூட்டுறவு இலாக்காவின் அதிகாரிகள் அதாவது சி. எஸ். ஆர்-களும் டெபுட்டி ரிஜிஸ்ட்ரார் இருக்கிறார்கள். தவிர இன்றைக்கு பெரிய சங்கங்களை எல்லாம் எடுத்துக் கொண்டால் அனைத்து பெரிய சங்கங்களிலும் நிர்வாகப் பொறுப்பினை மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கான முறையிலே அரசு அதிகாரிகள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது யதார்த்தமான உண்மை. ஆகவே அந்த அடிப்படையில்தான் கூட்டுறவுச் சட்டம், விதிகள், உப விதிகள் இவை அனைத்தும் இயற்றப்பட்டு நிறைவேற்றப்படக்கூடிய நிலை இன்றையதினம் இருக்கின்றது.

ஜனநாயகம் என்று சொல்லப்படுகிறது ஆனால் கட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம். ஜனநாயகம் என்ற பெயரை வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் இன்னின்ன முறையிலேதான் நிர்வாகம் செயல்படவேண்டும் என்ற முறையில் நிர்வாக ஆணைகளையும், உத்தரவுகளையும் போட்டு அந்த முறையில் இன்றையதினம் இதைத்தான் செய்ய வேண்டும் என்றும், நடைமுறையில் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் இப்படித்தான் செயல்பட வேண்டும் என்றும் இன்று நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன். அது எந்த வகை சங்கமாக இருந்தாலும் சரி, இதுதான் நடைமுறை கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை கிராமங்களிலே விவசாயிகள், நலிந்த பிரிவினைச் சார்ந்தவர்கள், வேலை வாய்ப்பு இல்லாதவர்கள், கறவை மாடுகளை வாங்கி பால் உற்பத்தி சங்கங்களை உருவாக்கி அந்த அடிப்படையிலே அந்தச் சங்கங்கள் செயல்பட்டு வந்தன. ஆனால் திடீரென்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த பால் உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் அனைத்தும் பால் உற்பத்திச் சங்கங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. இது யாருடைய உத்தரவு? சென்ற ஒரு மாதத்திற்கு முன்பு திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், எனக்கும் கடுமையான சண்டை. கிராமங்களிலே இருக்கின்ற விவசாயிகளுக்காக பால் உற்பத்தி சொசைட்டி பதிவு செய்தாகிவிட்டது. கடன் வாங்கிவிட்டார்கள். பாலை உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் நாங்கள் உற்பத்தி செய்யக்கூடிய பாலை திருச்சி, ஸ்ரீரங்கம் பால் உற்பத்தியாளர்கள் விற்பனைக் கழகம் எடுத்து விற்பனை செய்ய மறுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே நாங்கள் உள்ளூரிலே கறந்த பாலை விற்பனை செய்வதற்கான அதிகாரம் கொடுங்கள் என்ற முறையிலே அனுமதி கேட்டபோது அதைக் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள் சொசைட்டி வரவேண்டும், பால் உற்பத்தியாக வேண்டும் ஆனால் உற்பத்தி ஆகக்கூடிய பாலை வினியோகிக்கின்ற பொறுப்பை.. ..

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச்
சங்கத்தைப் பொருத்தவரையிலே அதனுடைய அங்கத்தினர்கள்
பிரைமரி சொசைட்டிக்கு பாலைத் தரவேண்டும் என்று
கட்டாயப்படுத்துவது விதியிலே இருக்கிறது. ஆனால் கொடுக்
கின்ற பாலை எடுக்கமாட்டோம் என்று அவர்கள் சொல்வார்
களேயானால் அது விதிக்கு மாறுபட்டது. அது கண்டிக்கத்
தக்கது. எனவே அரசு கண்டிப்பாக அது குறித்து நடவடிக்கை
எடுக்கும்.

**திரு. இரா. கருப்பையா :** மாற்றுத்தலைவர் அவர்களே,
இதுமாதிரி பல்வேறு நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்பதைச் சுட்டிக்
காட்டுவதற்காகத்தான் சொன்னேன். நேரடியாகத் தெரிந்த பல்
வேறு நிகழ்ச்சிகள் உள்ளன. அந்த முறையிலே பால் உற்பத்தி
யாளர் விற்பனைச் சங்கங்களாக இருந்தவை திடீரென்று ஒரு
குறிப்பிட்ட காலத்திலே உற்பத்தியாளர்கள் சங்கமாக மாற்றப்
பட்டிருக்கின்றது. அவற்றின் நிலைமை என்ன? யார் முடிவு
செய்தார்கள்? அங்கத்தினர்களின் ஜெனரல் பாடியோ மற்ற
வர்களோ முடிவு செய்யவில்லை. மேலே இருந்து உத்தரவு
வருகின்றது. மில்க் கமிஷனர் இருக்கிறார்கள். டீ.எம்.சி.
இருக்கிறார்கள். அந்த ஆணையாளர்களிடத்திலே இருந்து உத்
தரவு வருகின்றது.

பால் உற்பத்தியாளர் சங்கங்கள் தான் இனிமேல் தோற்று
விக்க வேண்டும் என்கிறார்கள். குளித்தலை போன்ற நகரங்
களிலே பால் கிடைக்கவில்லை. ஒரு சங்கம் ஆரம்பிக்கவேண்டும்
என்றால் முதலில் உற்பத்தியாளர் சங்கம் ஆரம்பிக்கவேண்டும்
என்று சொல்கிறார்கள். நீங்கள் திருச்சியிலிருந்து பால் கொண்டு
வந்து விற்பனை செய்யுங்கள் என்றால் அது முடியாது என்
கிறார்கள். இது மாதிரியாக பல்வேறு சங்கங்கள் ஏற்படுத்தப்
பட்டு இருக்கின்றன. ஒரு ரெஜிமென்டெட், ராணுவ படுத்தப்
பட்ட முறையில் ஆணைகள் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு
அந்த உத்தரவுகளை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு இன்
றையதினம் கூட்டுறவு சங்கங்களுக்கு — அதைத்தான் நிறை
வேற்றவேண்டும் என்ற நிலை இருக்கிறது. மற்ற
சங்கங்களை எடுத்துக் கொண்டால், மேல் இருந்து 'பைலா'
திருத்தம் போட வேண்டும் என்று வருகிறது, எடுத்துக்
கொண்டு வருகிறார்கள். இந்த திருத்தம் போட
வில்லை என்றால் மேற்கொண்டு சங்கங்கள் செயல்பட முடி
யாது. ஆகவே பதிவாளர் சொல்லக்கூடிய அந்த 'பைலா'
திருத்தங்களை அந்த சங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால்
அதற்கான 30 நாள் கொடுத்து நோட்டீஸ் வரும் அதை இப்போது
90 நாள் என்று மாற்றியிருக்கிறார்கள். இந்த சட்டத்திலே
அதற்கு பிறகு பதிவாளர் 'பைலாவை' திருத்தம் செய்து அவர்
அறிவிக்கலாம், என்றால் நாம் விரும்பும் ஜனநாயக அமைப்பு
நெறிமுறைகள், தன்மைகள் எங்கே இருக்கின்றன, என்பதை





நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே அந்த அடிப்படையில் இன்
றைய தினம் நிலைமைகள் சென்று கொண்டிருக்கின்றன. தேர்ந்
தெடுக்கப்பட்ட சபைகளை அமைக்க வேண்டும்,
அங்கத்தினர்கள் தகுதியை நிர்ணயிப்பது யார்?
அவர்களுக்கு இருக்கக்கூடிய தகவின்மையை நிர்ணயிப்பது யார்?
ஆகவே தகவின்மை என்று சொல்லி பதிவாளர் உத்தரவு
போட்டு அங்கத்தினர்களை சேர்ப்பது சம்பந்தமாக நிலைமைகள்
எல்லாம் வரலாம். சங்கங்கள் பதிவு செய்ய வேண்டும். அந்த
பதிவு செய்ய வேண்டிய அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது.
அதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அதே நேரத்தில்
பதிவாளர் என்ன முறையில் 'பைலா' கொண்டுவர விரும்பு
கிறாரோ, என்ன என்ன மாதிரி சொல்கிறாரோ, என்ன என்ன
தீர்மானம் சொல்கிறாரோ அதை எல்லால் நிறைவேற்றி சரியாக
இருக்கிறது. ஆகவே இதைப்பதிவு செய்வோம் என்று பதிவு செய்
வார் தேர்ந்தெடுக்கபடக்கூடிய சபைகள் ஒவ்வொரு போர்டுக்கும்
எத்தனை பேர்? டைரக்டர்ஸ் தீர்மானிப்பது யார்? ஏற்கனவே
இருந்த சட்டத்தின்படி சட்டவிதிகளின்படி 7பேர், 9 பேர், 15
பேர் என்று ஒவ்வொரு அமைப்புக்கும் ஒரு முறையில் அந்தந்த
சங்க பைலா, வைத்து அந்த அடிப்படையில் தேர்தல்கள் நடந்து
வந்தன. 1974 ஆம் ஆண்டு என்று நான் கருதுகிறேன், மீண்டும்
அந்த மாதிரியான நிலமை தமிழகத்தில் ஏற்படக்கூடாது என்று
குறிப்பிட விரும்புகிறேன். 1974ஆம் ஆண்டு அன்றைய தினம்
தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகள் நிர்வாக சபைகள் அனைத்தும்
கலைத்தார்கள், உத்தரவு போட்டுக் கலைக்கவில்லை. தேர்தல்
ஒரு குறிப்பிட்ட தேதியில் நிர்ணயிக்கப்பட்ட அந்தத் தேதியில்
தேர்தல்களை நடத்த வேண்டும் என்று அரசு உத்தரவு போட்டது
அன்றைய தினம் இருந்த அரசு. ஒவ்வொரு சங்கத்திற்கும்
எத்தனை பேர் டைரக்டர் இந்தச் சட்டத்தின் படி இயற்றப்பட
இருக்கிற விதிகளின்படி 1961-ம் ஆண்டு கூட்டுறவு சட்டத்தின்படி
விதிகளின்படி அன்றைய தினம் மறைந்த ஆதித்தனார் அவர்கள்
கூட்டுறவு அமைச்சராக இருந்தார். அந்த நேரத்தில் மத்திய
வங்கிகளில் யார் தலைவராக வர வேண்டும் ஒவ்வொரு மத்திய
வங்கியில் இன்னார் தலைவராக வரவேண்டும், பெயர் உட்பட
தீர்மானித்து அதற்குத் தகுந்த மாதிரி டைரக்டர்கள் எண்ணிக்கை,
அதற்குத் தகுந்த மாதிரி எந்த எந்த இடத்திலிருந்து எவ்வளவு
பேர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும், யார் யார் தேர்ந்தெடுக்கப்
பட வேண்டும் என்பது தீர்மானித்து அதிகாரிகளிடம் கூறி அன்
றைய தினம் அதை நிறைவேற்றும் முறையில் தேர்தல் நடந்தன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கிட்டத்தட்ட நியமன உறுப்பினர்கள் அங்கத்தினர்கள்
ஆதரவைப் பெற்றவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் நம்பிக்கை
உள்ளவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் பழுத்த அனுபவம்
உள்ளவர்கள் அது எல்லாம் போய் ஆகி விட்டது. அங்கத்
தினர்களுக்கு ஒருவரைத் தலைவராக தேர்ந்தெடுக்க வேண்டும்
என்று விருப்பம் இருந்தால் அது எங்களுக்கு விருப்பம் இல்லை
ஆகவே, மத்திய வங்கியில், லிப்டு இரிகேஷன் சங்கத்தில்

[திரு. இரா. கருப்பையா] [1983 பிப்ரவரி 12

கூடாது என்று எண்ணுகிறோமோ, விரும்புகிறோமோ அதற்கு இடம் அளிக்கிற வகையிலே தான் இது கொண்டு செல்லும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், ஆகவே எண்ணிக்கையை பொறுத்த வரையில் தெளிவான ஒரு முடிவிற்கு வரவேண்டும். கிராம சங்கங்களுக்கு ஒன்பதிற்கு மேலே போகக் கூடாது; அபெக்ஸ் சொசைட்டிக்கு 15-க்கு மேலே போகக் கூடாது. மாவட்ட வங்கிகள் போன்ற அமைப்புகள் என்றால் அதற்கு 21ற்கு மேலே போகக்கூடாது என்ற அடிப்படையில் எண்ணிக்கையை தீர்மானித்து இந்த சட்டத்தை நிறைவேற்றுவது சரியாக இருக்கும். 5-ல்லிருந்து 15, 7-லிருந்து 21 என்கிற அளவிற்கு இடம் அளிக்கக்கூடாது ஏனென்றால் பின்னாலே இவர்கள் 7 பேர்கள் என்று நிர்ணயிப்பார்கள்; 10 பேர்கள் என்று நிர்ணயிப்பார்கள்; ஒரு குறிப்பிட்ட நபர் அந்த பதவிக்கு வரமுடியவில்லை என்றால் பை-லாவிலே ஏதாவது திருத்தத்தை போட்டு கொஞ்சம் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாம் என்ற நிலைமைகள் உருவாகும் என்கிற காரணத்தாலே, எண்ணிக்கையை திட்டவட்டமாக நிர்ணயிக்கவேண்டும். ஆதார சங்கங்களிலிருந்து மாநில சங்கம் வரையில் இருக்கிற அமைப்புகளுக்கு எண்ணிக்கை தீர்மானமாக வைத்து, அதற்கு மேல் போகக்கூடாது என்ற அடிப்படையில் சட்டத்தில் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மணி 1-28 ஆகிவிட்டது; இன்னும் ஒரு நிமிஷத்தில் முடித்துவிடுங்கள். ஒரு அறிவிப்பு ஒன்றை அவைக்கு அளிக்க வேண்டும். சீக்கிரத்தில் முடித்து விடுங்கள்.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே நான் ஒருவன் தான் என் கட்சியில் பேசுகிறேன். நாளைக்கு தொடர்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நீங்கள் பில்லை பற்றி மட்டும் பேசி இருந்தால் முடித்திருக்கலாம்; மீண்டும் நாளைக்கு வாய்ப்பு என்பது நாளைக்கு வருகிற நிகழ்ச்சி நிரலை பொறுத்துத்தான். எந்த இடையூறுகளும் இன்றி தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தீர்கள். ஆகவே நேரம் இருந்தால் பார்க்கலாம்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) (i) ஷெரீப் நியமனத்திற்கு வகை செய்யும் முத்திரைப் பத்திர (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

(ii) பச்சையப்பன் பொறுப்புக் கழக (நிருவாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1983.

(iii) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.**



1983 பிப்ரவரி 12] [பேரவைத் தலைவர்]

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்ட
மன்றப் பேரவைச் சட்ட முன் வடிவுகள், திருத்தம் ஏதுமின்றி
நிறைவேற்றப்பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்
களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது:—

(i) 1983-ஆம் ஆண்டு ஷெரிப் நியமனத்திற்கு வகை
செய்யும் முத்திரைப் பத்திர (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்
வடிவு (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1983).

(ii) 1983-ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழக
(நிருவாகத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட
முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1983).

மேலும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், தமிழ்நாடு
1983-ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட
மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1983 ) ஆய்வு செய்யப்
பெற்று, பரிந்துரை ஏதுமின்றி, திருப்பி அனுப்பப் பெற்றதாகவும்,
மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்
றுள்ளது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று,
14—2—1983-ஆம் தேதி காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும்
கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

—ஏதுவுமில்லை—

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

29. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு மதுவிலக்கு திருத்தச்
சட்ட முன்வடிவின் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு
எண் 3/1983) நகலும், இணைப்பும்.

30. 1983-ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்ற (விசா
ரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல் சட்ட முன்வடிவு (சட்ட
மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1983).

அதில் 3 பேர் டைரக்டராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது அதேமாதிரி ஒவ்வொரு வகைச் சங்கங்களுக்காக தேர்ந்தெடுக கப்படக் கூடிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை தீர்மானித்து எது எதில் எப்படி போட்டால் தாங்கள் விரும்பக்கூடிய வகையில் நிர்வாக சபையில் தலைவராகவும், மற்ற பொறுப்பில் வரமுடியும் என்பதை கணக்கிட்டுஅந்த வகையில் விதிகள் இயற்றப்பட்டன. அதனுடைய அலங்கோலத்தை நாம் பார்த்தோம்.

(பிற்பகல் 1-20)

பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல்கள், அது சம்பந்த மான விசாரணைகள் நடைபெற்றது எல்லாம் எல்லோருக்கும் தெரியும். சட்டத்தின்படி, விதிகளின் படி தான் தேர்தல் நடை பெற்றது. ஆனால் அந்தச் சட்டத்தின்படி விதிகளின்படி உருவாகி இருக்கின்ற சங்கங்களின் உறுப்பினர்கள் விரும்பக்கூடியவர் தலைவராக வரக்கூடிய வாய்ப்பு இருந்ததா என்றால் இல்லை. ஜனநாயகத்திலே இதுவும் ஒரு மாதிரியான ஜனநாயகம் அந்தப் பரிசோதனையும் நாம் பார்த்திருக்கிறோம். இதிலே இன்னும் ஒரு புதிய பரிசோதனையும் இருக்கிறது. கொஞ்சம் அமைச்சர் அவர்கள் திறந்த மனத்தோடு என்ன என்ன திருத்தங்கள் வேண்டுமோ அவற்றை எல்லாம் முழுமையாகக் கூறுங்கள் என்று கூறியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு இந்தச் சட்டம் அரசியல் சாதி, இன உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு இந்தக் கூட்டுறவு இயக்கம் மக்களுடைய இயக்கம், பாதுகாக்கப்படவேண்டும் என்ற உணர்வோடு இந்த சட்டத்தின் ஷரத்துக்களை எல்லாம் நிறைவேற்றக்கூடிய நேரத்தில் முழுமையாக இந்த நோக்கம் நிறைவேறக்கூடிய முறையில் நான் கொஞ்சம் அதிக நேரம் எடுத்துகொண்டு பேசுகிறேன்.

இந்த சட்டத்திலே உள்ள பல்வேறு ஷரத்துக்களைப்பற்றிப் கிறேன். ஜனநாயகம் என்ற வார்த்தை ஒரு வார்த்தைதான், பேச விரும்புஆனால் ஒவ்வொரு காலத்திலேயும் ஜனநாயகத்தின் பேரிலேநடந்த தேர்தல்கள் முறைகள் இவைகளை வைத்துப் பார்க்கிறபோது அன்றைக்கு எல்லோருக்கும் சரியாகக் கூட தென் பட்டிருக்கலாம். இன்றைக்குப் பார்க்கிற நேரத்திலே அது கேலிக்கூத்தாக இருப்பதைப் பார்க்கமுடியும். இன்றைய தினம் இயற்றப்படுகிற இந்தச் சட்டத்தில் ஜனநாயகம் என்பது சங்கத் தினுடைய அங்கத்தினர்கள் முழுமையாக தாங்கள் விரும்பக் கூடியவர்களை எந்தவிதமான தங்குதடையுமின்றி தேர்ந்தெடுப் பதற்கு உரிமையை அளித்து அவர்கள் விருப்பத்தை நிறைவேற்று கிற நிர்வாகசபையைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிவகைகளை உண்டாக்குகிற முறையில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.

நான் குறிப்பிட்டதைப்போல் இடையிலே ஏற்பட்ட 1974 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மாற்றங்கள், அதற்கான விதிகள் எல்லாம் அரசியல் நோக்கத்தோடு ஏதாவது ஒரு அரசியல்.



நோக்கத்தோடு ஆளுங்கட்சியாக இருக்கும் நம்முடைய கைகளிலே பஞ்சாயத்துக்கள் இருக்கவேண்டும், ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கவேண்டும், கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கவேண்டும் என்ற உணர்வோடு—அந்த உணர்வு வருவதிலே தப்பு இல்லை—பெரும்பான்மையான மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று ஒரு கட்சி ஆளுங்கட்சியாக வருவதிலே ஆட்சேபணை இருக்கமுடியாது. ஆனால் அதே நேரத்திலே எப்படியாவது வரவேண்டும் என்ற நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அரசியல் நோக்கத் தோடு அரசியல் லாபத்திற்காக கூட்டுறவுச் சங்கங்களில் பெரு வாரியான முறையிலே தங்களைச் சேர்ந்தவர்கள் பொறுப்பில் இருக்கவேண்டும் என்ற தங்களது முடிவை நிறைவேற்றுகின்ற முறையில் ஜனநாயக விரோத நடைமுறைகள் இருக்கக்கூடாது. அதற்கான முறையிலே திருத்தங்களோ விதிகளோ வருவது கூடாது அந்த நடைமுறைகள் மாற்றப்பட வேண்டும் என்ற டணிவோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அதே பின்னணியில் பார்க்கிறபோது இன்றைக்கு இந்த சட்டத்தைப்பற்றி ஆரம்பத்தில் அமைச்சர் அவர்கள் குறிப் பிட்டார்கள். இந்த சட்டம் பொறுக்குக்குழு ஆய்ந்து சபையிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது; இந்த மசோதாவில் ஒவ்வொரு வில்லேஜ் சொசைட்டிக்கும் 5 முதல் 15 நபர்கள் வரை நிர் வாக இயக்குநர்களாக இருக்கலாம் என்றும், மத்திய அமைப்பு களுக்கு 7-லிருந்து 25 வரையில் இருக்கலாம் என்றும் குறிப் பிட்டார்கள். ஆனால் இன்றைக்கு பார்க்கிறபோது, அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற திருத்தத்தை வைத்து பார்க்கிறபோது, 21 வரையில் சாதாரண கிராம சங்கங்களி லிருக்கிற இயக்குநர்கள் நிர்வாக சபைக்கான எண்ணிக்கையை தீர்மானிக்கலாம் என்கிற அடிப்படையிலே-கிராம சங்கங்கள் அலுவலகம் எப்படி இருக்கும் என்று அமைச்சர் அவர்கள், அறி வார்கள், நாம் 21 பேர்கள் ஒரு சங்கத்திற்கு இயக்குனர் களாக இருக்கவேண்டுமென்று தீர்மானித்தால் 21 பேர்கள் உட்கார்ந்து சொசைட்டியிலே போர்டு மீட்டிங் நடத்துவதற்கு இடம் கூட கிடையாது. இன்றைக்கு பெருவாரியாக சங்கங் களில் இந்த நிலை இருக்கிறது. அரசாங்கம் சமீபத்திலே விவ சாய சேவை சங்கங்களுக்கு கட்டிடம் அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு டைப்-டிசைன் கொடுத்திருக்கிறார்கள். சங்கங்கள் தங்களுக்கு 15 சென்ட் நிலம் இருக்கிறது; அல்லது ஒரு ஏக்கர் நிலம் இருக்கிறது; கொஞ்சம் பணமும் இருக்கிறது.; கட்டிடம் வசதியாக கட்டிக் கொள்கிறோம் என்றால் அப்படி செய்ய முடியாது; அரசு சொல்லியிருக்கிற டைப்-டிசைனில் தான் கட்டிடம் கட்ட வேண்டும்; அப்படி இருக்கிறபோது இவ்வளவு பேர்கள் உட்கார்ந்து நிர்வாக சபை நடத்த இடம் இருக்குமா என்பதையும் பார்க்க வேண்டும். சங்கம் இயக்குனர் குழுவில் ஏழு பேரை வைத்துக் கொள்ளலாம், அல்லது ஒன்பதாக வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்ளாது. அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்துவதன் மூலமாக எந்த காரியம் நடைபெறக்

ட
Y2M,31 N83
N83.42.1ஓ2
135983
600 005.

31. 1983-ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல்-தமிழ் நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவின் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1983) நகலும், இணைப்பும்.

32. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு மீன் பிடித்தலை முறைப் படுத்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 10/1983).

இணைப்பு

[154 ஆம் பக்க அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத் தின் கீழ் இயங்கி வரும் தமிழ்நாடு மாநில பனைவெல்ல கூட் டுறவு இணையம், பனந்தும்பை, வெளிநாடுகளுக்கு நேரடியாக ஏற்றுமதி செய்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட விபரங்கள் கீழ் வருமாறு:—

| ஆண்டு. | | | தும்பு. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1979-80 | .. | .. | 43.97 |
| 1980-81 | .. | .. | 27.50 |
| 1981-82 | .. | .. | 28.25 |

2. மாநில பனைவெல்ல கூட்டுறவு இணையம் பனை மரத் திலிருந்து உற்பத்தியாகும் பனை வெல்லப்பாகையும், பனை ஓலைப் பொருட்களையும் வெளிநாட்டு ஏற்றுமதிக்கு ஏற்றுமதி யாளர்கள் மூலம் ஏற்பாடு செய்கிறது. இவ்வாறு கடந்த மூன்று ஆண்டுகளில், ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் விபரங்கள் பின்வருமாறு:—

| ஆண்டு. | | | பனை வெல்லப்பாகு. | பனைஓலைப் பொருட்கள். |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1979-80 | .. | .. | இல்லை | 8.24 |
| 1980-81 | .. | .. | 2.66 | 9.13 |
| 1981-82 | .. | .. | இல்லை | 2.88 |

135983
V8 11,31 N83
N83 42142